

66


# வடநாட்டுத் திருப்பதிகள்




பேராசிரியர்:
டாக்டர் ந.சுப்புரெட்டியார்



வேங்கடம் வெளியீடுகள்
AD-13 (PLOT. 3354)
அண்ணா நகர் - சென்னை-600 040




**VENKATAM PUBLICATIONS**

AD-13 (PLOT. 3354)

ANNA NAGAR - MADRAS-600 040.

# வடநாட்டுத் திருப்பதிகள்




பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்

## கோவிந்தா!

*என்கண்ணை மறந்துனிரு கண்களையே*
*என்னகத்தில் இசைத்துக் கொண்டு*
*நின்கண்ணாற் புவியெல்லாம் நீயெனவே*
*நான்கண்டு நிறைவு கொண்டு*
*வன்கண்மை மறதியுடன் சோம்பர்முதல்*
*பாவமெலாம் மடிந்து நெஞ்சிற்*
*புன்கண்போய் வாழ்ந்திடவே, கோவிந்தா!*
*எனக்கமுதம் புகட்டு வாயே!*[1]

—**பாரதியார்**

---

1. பா. க: தோ. பா. கோவிந்தன் பாட்டு—3

# வடநாட்டுத் திருப்பதிகள்

[ஆசிரியரின் 75-வது அகவை நினைவாக]


'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீசடகோபன் பொன்னடி'

**பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்**

[எம்.ஏ., பி.எஸ்.சி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி.]

முன்னாள் : தமிழ்ப் பேராசிரியர்-துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்;
திருப்பதி-2

இந்நாள் : தகுநிலைப் பேராசிரியர் (கண்ணியப்
பொறுப்பு), தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-5



விற்பனை உரிமை :

பாரி நிலையம்

184. பிராட்வே · சென்னை-600108

First Edition : September - *1980*
Second Edition : June - *1991*

© Dr. S. RAMAKRISHNAN, M.D.
Author's Second son.
AD-13, (Plot No. 3354)
Anna Nagar, Madras-600 040
Phone: 62 11 583

**விலை : ரூ. 20-00**

**VENKATAM PUBLICATIONS**
AD-13, (Plot. No. 3354)
Anna Nagar, Madras-600 040
Phone: 6211583

அச்சு அமைப்பு :
ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்
7/40, கிழக்கு செட்டி தெரு,
பரங்கிமலை, சென்னை-600 016 [33]

## அன்புப் படையல்

திருவரங்கம் தனித்துயிலும் பெரியபெரு மாளின்
திருவருள்போல் மிகவுயர்ந்து, சடகோப ரிசைத்த
பெருவரங்கள் தருகின்ற நம்திருவாய் மொழிபோல்
பீடுற்று, யதிராஜன் பாஷியம்போல் ஓங்கிக்,
குருவரங்கள் படர்கின்ற பெருந்தம்ப மாகிக்
குலவுபெருங் கோபுரத்தை அரங்கத்தே வளர்க்கும்
ஒருவருங்கொள் ளாச்சீரைப் பணிவுடனே தாங்கி
உருக்கங்கொள் அழகியசிங் கருக்கிந்நூல் உரித்தே.

## நெஞ்சிற்கு!

பீளை சோரக் கண்இடுங்கிப்
    பித்துஎழ மூத்து இருமி
தாள்கள் நோவத் தம்மில்
    முட்டித்தள்ளி நடவாமுன்
காளை யாகிக் கன்று மேய்த்துக்
    குன்றெடுத் தன்று நின்றான்
வாளை பாயும் தண்த
    டஞ்சூழ் வதரி வணங்குதுமே![2]

— **திருமங்கையாழ்வார்**

தாட்கடிமை என்றுதமை
    யுணரார்க்கு எட்டெழுத்தும்
கேட்கவெளி இட்டருங்
    கேசவனை — வேட்கையொடு
போவதரி தானாலும்
    போய்த்தொழுவோம் நெஞ்சமே!
மாவதரி யாச்சிர
    மத்து[3]

— **பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்**

தாயாய் வந்த பேயுயிரும்
    தயிரும் விழுதும் உடன்உண்ட
வாயான் தூய வரியுருவிற்
    குறளாய்ச் சென்று, மாவலியை
ஏயான் இரப்ப 'மூவடிமண்
    இன்றே தா'என்று உலகேழும்
தாயின் காயா மலர்வண்ணன்
    சாளக் கிராமம் அடைநெஞ்சே![4]

—**திருமங்கையாழ்வார்**

---

2. பெரி. திரு. 1.3:4
3. நூற். திரு. அந். 101
4. பெரி. திரு. 1.5:6

# அணிந்துரை

## (ஜஸ்டிஸ் எஸ். சூரியமூர்த்தி)

திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலங்களாக இருப்பவை அர்ச்சாவதார எம்பெருமான்கள் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்களாகும். இங்கு எம்பெருமான் தன்னுடைய சுவாமித்துவத்தையும் சௌலப்பியத்தையும் புலப்படுத்திக் கொண்டு, அடியவர்கள் தம் உடம்பினால் கைங்கரியம் செய்து மகிழ்வதற்குப் பாங்காக எழுந்தருளியுள்ளான். வைணவர்கள் இவற்றை 108 என்று கணக்கிட்டுள்ளார்கள். இவற்றுள் சோழ நாட்டிலுள்ளவை 40; பாண்டிய நாட்டிலுள்ளவை 18; மலைநாட்டிலுள்ளவை 13; நடுநாட்டிலுள்ளவை 2; தொண்டை நாட்டிலுள்ளவை 22; வடநாட்டிலுள்ளவை 12; திருநாடு ஒன்று. இந்தக் கணக்கைப் பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்,

ஈரிருப தாம்சோழம்;
 ஈரொன்ப தாம்பாண்டி;
ஓர்பதின்மூன் றாம்மலைநா(டு);
 ஓரிரண்டாம்—சீர் நடுநாடு;
ஆறோடு ஈரெட்டுத்தொண்டை
 அவ்வடநா(டு) ஆறிரண்டு;
கூறுதிரு நா(டு)ஒன் றாக்
 கொள்.

என்ற வெண்பாவால் அறியலாம், இந்த வடநாட்டுத் திருப்பதிகட்கு நம்மை இட்டுச் செல்லுகின்றார் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் இந்த நூலின் மூலமாக.

சைவ சமயத்தைச் சார்ந்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பல்லாண்டுகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில், ஆழ்வார்கள் பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டுத் தம் மனத்தைப் பறிகொடுத்தவராதலால் வைணவ தத்துவத்தைப் பேசும்போதும், எம்பெருமானின் அநந்த கல்யாண குணங்களை எடுத்துரைக்கும் போதும், அவனுடைய வெற்றிச் செயல்களையும் வீரச் செயல்களையும் எடுத்துக் கூறும்போதும், வியக்கத்தக்க ஈடுபாட்டோடும், தோய்ந்த உள்ளத்தோடும், விரிந்த மனநிலையோடும் தம்மையே மறந்த நிலையை எய்தி விடுகின்றார். திருவேங்கடத்தில் தொடங்கும் இவர் தம் பக்திப் பயணம் சிங்கவேழ் குன்றம், நைமிசாரண்யம் துவாரகை, அயோத்தி, வடமதுரை, ஆயர்பாடி, பிருந்தாவனம், கோவர்த்தனம், கண்டம் கடிநகர், திருப்பிரிதி, பதரிகாச்சிரமம் ஆகிய திருத்தலங்களைச் சேவித்த வண்ணம் சாளக்கிராமத்தில் நிறைவு பெறுகின்றது; பாற்கடலையும் பரமபதத்தையும்கூட இப்பயணத்தில் தரிசனம் செய்து வைத்து விடுகின்றார்; நாமும் இவருடன் பயணத்தை மேற்கொண்டு இத்திருத்தலங்களையெல்லாம் சேவித்த பேற்றைப் பெற்றுவிட்டதான திவ்விய அநுபவத்தைப் பெறுகின்றோம்.

இத்திருத்தலப் பயண நூலில் திருத்தலங்களின் இயற்கைச் சூழ்நிலைகள், அங்குத் திருக்கோயில் கொண்டிலங்கும் எம்பெருமான்களின் சிறப்புகள் இவற்றையும்; பிருந்தாவனம் கோவர்த்தனம் இவ்விடங்களில் கண்ணன் கன்றுகளை மேய்க்கும்போது ஆற்றிய வீரச் செயல்கள், ஆயர்பாடியில் வளரும்போது ஆற்றிய அருஞ் செயல்கள் ஆகியவற்றையும்; திருப்பாற்கடலிலும் பரமபதத்திலும் எம்பெருமானின் இருப்பையும் கண்டு மகிழ்கின்றோம். இத்தனைக்கும் மேலாகப் பிரபத்தியின் பெருமை, புருஷகாரத்தின் மகிமை, எம்பெருமானின் திருவடிகளின்

சீர்மை, பிரணவத்தின் அருமை, திருமந்திரத்தின் சிறப்பு இத்தத்துவங்களில் ஈடுபடுகின்றோம். இத்திருத்தலப் பயணத்தில் எம்பெருமான்களைப் பற்றிக் காட்டப் பெறும் ஆழ்வார் பாசுரங்கள் ஆராவமுதமாய் இனிப்பதையும் உணர்கின்றோம்.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பலதுறை அறிவை முறையாகப் பயின்று பெற்றவர்; அரும்பாடுபட்டு அத்துறைகளிலெல்லாம் பல நூல்களை எழுதிப் புகழ் அடைந்தவர். பதினேழு ஆண்டுகள் திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர். அங்கு அரும்பாடுபட்டுத் தமிழ்த் துறையை உருவாக்கியிருக்கும் அவரது உரன், திறன் வியந்து மகிழ்ந்து போற்றுதற்குரியவை. இதனைத் தவிர உழைப்பின் உருவமாய்த் திகழும் பேராசிரியர் ரெட்டியார் பல உயர்நிலைப் பள்ளிகளை உருவாக்கியவர். ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கும் தகுதியும், திறமையும் உடையவர். என்ன செய்தாலும் இவர் அதனைத் தாம் செய்ததாக ஒப்புக்கொள்வதில்லை. இறைவன் திருவுள்ளக் குறிப்பினால் நடைபெற்றதாகக் கொண்டு மகிழ்வர். சுமார் இருபதாண்டுகள் திருப்பதியில் பணியாற்றும் பேறு பெற்றமையால் ஏழுமலையானின் திருவருள் இவர்மீது பாய்கின்றதாகக் கொள்வதே சரியாகும். ஓய்வுக் காலத்தில் சமய, தத்துவ நூல்களை எழுதிக் கண் போன்ற காலத்தைப் பொன் போன்று போற்றுவர். இவர்தம் முயற்சி வெல்க! வாழ்க!

—எஸ். சூரியமூர்த்தி

# நூல் முகம்

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்,
காடுவாழ் சாதியும் ஆகப் பெற்றான்,
பற்றி உரலிடை யாப்பும் உண்டான்,
பாவிகாள்! உங்களுக்கு ஏச்சுக் கொலோ?
கற்றன பேசி வசவு உணாதே
காலிகள் உய்ய மழை தடுத்துக்
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற
கோவர்த் தனத்து என்னை உய்த்திடுமின்![5]

—ஆண்டாள்

இறைவனுடைய அடியார்கள் இறைவனை அநுபவித்தல் பலவகைப்பட்டிருக்கும். சிலர் அவனுடைய திரு நாமங்களைச் சொல்லி அநுபவிப்பர்; சிலர் அவனுடைய திருக்கல்யாண குணங்களைச்சொல்லிச்சொல்லி அநுபவிப்பர்; இன்னும் சிலா இறைவனுடைய வடிவழகை வருணித்துப் பேரின்பம் கொள்வர்; மேலும் சிலர் இறைவன் கோயில் கொண்டருளின திவ்விய தேசங்களின் சிறப்புக் களைப் பேசியும், அவ்விடங்களில் அபிமானமுள்ள வைணவர்களின் பெருமையைப் பேசியும் அநுபவிப்பர். இறுதியாகக் கூறிய முறையே நம்மை வடநாட்டுத் திருப்பதி திருத்தலப் பயணத்தைத் தொடங்க வைக்கின்றது. 'அவனருளாலே அவன்தாள் வணங்கும் பேறு' பெற்றமையால் மகிழ்வுடன் பயணத்தை மேற்கொள்ளுகின்றோம்.

இந்த வடநாட்டுத் திவ்விய தேசத் திருப் பயணத்தை என் துணைவியாருடன் செப்டம்பரில் (1968) தொடங்கினேன் காசியாத்திரையாக. அயோத்தியை மட்டிலும்

5. நாச். திரு. — 12:8

சேவித்தோம். இதற்கு முன்னரே சிங்கவேழ் குன்றத்தைச் சேவித்து விட்டேன். 1974-டிசம்பரில் குருட்சேத்திரா வில் (ஹரியானா) நடைபெற்ற கீழ்த்திசை மாநாட்டின் போது நானும் என் ஆராய்ச்சி மாணாக்கர் திரு. ந. கடிக சலமும், அரிய நண்பர் பண்டித வி. நடேசனாரும் வட மதுரை, பிருந்தாவனம் இவை இரண்டைமட்டிலுமே சேவித்தோம். திருப்பதியில் பணியாற்றிய காலமாதலால் ஏழுமலையான் திருவடிவாரத்திலிருந்தே பயணங்கள் தொடங்கின. திருவேங்கடம், சிங்கவேழ் குன்றம், வட மதுரை, பிருந்தாவனம் இந்த நான்கைத் தவிர ஏனைய வற்றைமானசீகமாகவே சேவித்துப்பேரின்பம் பெற்றேன். ஆயர்பாடி, கோவர்த்தனம் என்ற இரு இடங்கள் பற்றிய தகவல்களை என் அரிய நண்பர்—வடமதுரையைச் சார்ந் தவர்— சி. பி. ராவத் (ரீடர், இந்தித்துறை, திரு வேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி) அன்புடன் உதவினார். அவருடன் உரையாடினபோது என்னை மறந்து மானசீகமாகவே திவ்விய தேசங்களில் நடையாடி னேன்.

இந்தத் திவ்விய தேசப் பயணங்களில் (நேரிலும் மான சீகமாகவும் சென்றவைகளில்) யான் பெற்ற அநுபவம் 14 கட்டுரைகள் கொண்ட **"வடநாட்டுத் திருப்பதிகள்"** என்ற பெயருடன் நூல் வடிவம் பெறுகின்றது. இவற்றுள் முதல் கட்டுரை "நெடியோன் குன்றத்து நீல முகில்" என்ற தலைப்பில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் குடமுழுக்கு விழா மலரில் (1976) வெளி வந்தது; அஃது ஈண்டு சிறிது மாற்றத்துடன் வேங்கடம் மேவிய விளக்காக இடம் பெற்றுள்ளது. இரண்டாவது கட்டுரை 'சிங்கவேழ் குன்றுடை ஈசன்' அரசு இதழாகிய **திருக்கோயில்** (1979 டிசம்பர் இதழ்) வெளிவந்தது. ஏனையவை நேராகவே நூலில் இடம் பெறுகின்றன. ஏற்கனவே, திவ்விய தேசத் திருப்பயணத்தைப் பற்றி **'மலை நாட்டுத் திருப்பதிகள்'** (1971), **'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்'** (1973)

**'பாண்டிநாட்டுத் திருப்பதிகள்'** *(1977)* என்ற மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன.

இந்த நூலிலுள்ள 14 கட்டுரைகளிலும் ஆழ்வார் பெருமக்களின் பக்தியுணர்ச்சியின் கொடுமுடிகளைக் காணலாம். பாசுரங்களின் சொல்வளம், உரையாசிரியர்கள் பாசுரங்களை அநுபவித்த பாங்கு, என் சிறிய உள்ளம் ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட முறை முதலியவற்றைக் கண்டு மகிழலாம். இந்நூலைப் படிப்போரின் உள்ளங்களையும் இக்கட்டுரைகள் ஆழ்வாரின் திருப்பாசுரங்களைச் சேவித்து அநுபவிக்கத் தூண்டும் கருவிகளாக அமையின் அதனை யான் பெற்ற பெரும் பேறாகக் கருதுவேன்.

இத்தகைய பக்தி நூல்களை வெளியிடும் நிறுவனம் தமிழகத்தில் அரியனவாகவே உள்ளன. காரணம், நூல்களை வாங்கிப் படித்து அநுபவிப்பார் சிலரே. இந்நிலையில் ஏழுமலையான் திருவருள் பாலித்தான். திருமலை திருப்பதி தேவஸ்தானம் சமய நூல்களை வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதி உதவியது. ஆகவே, இந்நூல் தமிழ் கூறு நல்லுலகில் நடையாட வாய்ப்புக் கிட்டியது. இங்ஙனமே "பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலின்" திருவருளால் **'சோழ நாட்டுத் திருப்பதிகள்'** (2 தொகுதிகள்), **'முத்தி நெறி'** என்ற மூன்று நூல்களும் வெளிவரும் என்ற நம்பிக்கை என்றும் என்பால் உண்டு. நிதி உதவிய தேவஸ்தானத்தாருக்கு என் அன்பு கலந்த நன்றியதலைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

சென்னை உயர்நீதி மன்றத்து மாண்புமிகு நீதிபதி திரு எஸ். சூரியமூர்த்தி என் ஒருசாலை மாணாக்கர் (College mate); என் இனிய நண்பர். நாங்களிருவரும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கல்லூரி வாழ்வில் முதலாண்டிலேயே பல்கலைக்கழக ஆங்கிலப் பேச்சுப்

போட்டியில் முன்னின்று **சீநிவாச சாஸ்திரி பொற் பதக்கம்** பெற்றவர். இவர்தம் இனிமையாக ஆங்கிலம் பேசும் பாணி ''கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாதாரும் வேட்ப மொழிவதாக'' அமைந்திருப்பதைக் கேட்க வாய்ப்பு பெற்ற அனைவரும் அறிவர். சமயம், தத்துவம் இத்துறைகளில் மிக்க ஈடுபாடுடையவர்; சலியாது நூல்களை மேய்பவர்; பழகுவதற்கு இனிமையானவர்; இவர்தம் அன்பும் பண்பும் இவரை அண்மியவர்கள் அனைவரை ஈர்க்கும் தன்மையவை. 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்ற தொல்காப்பியத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவர். இத்தகைய உயர்குணச் செம்மல் இந்நூலுக்கு அணிந்துரை நல்கியது இந்நூல் பெற்ற பேறாகும்.

வைணவ உலகில் அகோபிலம் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகளின் சமயத் தொண்டு, மொழித் தொண்டு இவற்றை இந்திய நாடு, குறிப்பாகத் தமிழகம், ஆந்திரம் நன்கறியும். பல இடங்களில் வடமொழிப் பாடசாலைகளும், மதுராந்தகத்தில் ஒரு வடமொழிக் கல்லூரியும் இவர்தம் கண்காணிப்பில் நடைபெற்று வருகின்றன. கல்லூரியை வடமொழிப் பல்கலைக் கழகமாக்க முயன்று வருகின்றார். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாகத் திருவரங்கம் பெரிய கோயிலின் தெற்குவாயிலிலுள்ள முற்றுப் பெறாதிருக்கும் இராயர் கோபுரத்தை எழுப்பும் பணியில் சுமார் 62 இலட்சம் செலவில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பெரிய பெருமாள் பணித்த பணியெனக் கொண்டு இப் பெரும்பணியைச் சிரமேற் கொண்டிருக்கின்றார்கள் ஜீயர் சுவாமிகள். உபநிடத முனிவர்போல் நமக்கெல்லாம் காட்சிதரும் ஜீயர் சுவாமிகளின் பொன்னார் திருவடிகளில் இந்நூலை அன்புப் படையலாக்குகின்றேன். அன்னாரது ஆசியால் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும், ஆசாரியர்களின் உரைகளிலும், இரகசியக் கிரந்தங்களிலும் எனக்குத் தெளிவும் பக்தியும் மேலும் மேலும் பெருகும் என்பது என் திடமான நம்பிக்கை.

இந்நூலை யான் எழுதி வெளியிடுவதற்கு என்னுளே தோன்றாத் துணையாக நின்று,

என்சொல்லால் யான் சொன்ன
இன்கவி என்பித்து,
தன்சொல்லால் தான்தன்னைக்
கீர்த்தித்த மாயன்.[6]

என்று நம்மாழ்வார் கூறுவதுபோல் எம்பெருமான் என்னைக் கருவியாகக் கொண்டு தன் புகழை நிலை நிறுத்திக் கொண்டான் என்பது என் நம்பிக்கை. இங்ஙனம் எனக்கு எல்லா நலன்களையும் ஈந்து என்னை இயக்கி நன்னெறிப்படுத்தும் திருவேங்கடவாணனை மனம் மொழி மெய்களால் வாழ்த்தி இறைஞ்சி வணங்கு கின்றேன்.

வாள்கெண்டை ஒண்கண்
மடப்பின்னை தன்கேள்வன்
தாள்கண்டு கொண்டு
என்தலைமேல் புனைந்தேனே.[7]

—நம்மாழ்வார்

சென்னை-40
15-9-1980

ந. சுப்பு ரெட்டியார்

6. திருவாய் 7.9:2
7. ஷை 10.4:3

# இரண்டாம் பதிப்பு

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு*[8]

—வள்ளுவர்

*எம்பெருமான் ஏழுமலையப்பனின் கருணையால் திருமலை-திருப்பதி தேவஸ்தானம் நிதிஉதவி பெற்று இந்தப் பதிப்பு வெளிவருகின்றது. இந்தப் பதிப்பின் அட்டையில் பதரி நாராயணன் சேவை சாதிக்கின்றான். இதனை உருவாக்குவதற்குப் 'பகீரதப் பிரயத்தனம்' எடுத்துக் கொள்ளலாயிற்று. ஓரளவு மனநிறைவும் பெற்றேன். எல்லாம் அவனது திருவருள்.*

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவ னடிசேரா தார்.*[9]


'வேங்கடம்'
AD-*13*, அண்ணாநகர்
சென்னை—*600 040.*
*1—6—1991*

**ந. சுப்பு ரெட்டியார்**
தொ. பே: *621 15 83*


---

8. திருக்குறள் - 1
**9.** **டை** **- 10**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | அன்புப் படையல் | v |
| | அணிந்துரை | vii |
| | நூல் முகம் | x |
| | இரண்டாம் பதிப்பு | xv |
| 1. | வேங்கடம் மேவிய விளக்கு | 1 |
| 2. | சிங்கவேள் குன்றுடை ஈசன் | 22 |
| 3. | அயோத்தி நகர்க் கோமான் | 37 |
| 4. | நைமிசாரணியத்து எந்தை | 46 |
| 5. | சாளக்கிராமத்து அடிகள் | 55 |
| 6. | பதரிநாதன்—நரநாராயணன் | 66 |
| 7. | கண்டம் கடிநகர் புருடோத்தமன் | 79 |
| 8. | திருப்பிரிதி எம்பெருமான் | 89 |
| 9. | வடமதுரைப் பிறந்த மாயன் | 97 |
| 10. | பிருந்தாவனத்தில் கண்ணன் | 110 |
| 11. | வண்துவராபதி மன்னன் | 138 |
| 12. | ஆயர்பாடி அணிவிளக்கு | 147 |
| 13. | பாற்கடல் கிடக்கும் பதுமநாபன் | 163 |
| 14. | வைகுண்டநாதன் | 171 |


## பின்னிணைப்புகள்


| | | |
|---|---|---|
| 1. | ஆழ்வார்கள் மங்களாசாசனப் பாசுரங்கள் | 179 |
| 2. | நூற்றெட்டு வைணவத் திருத்தலங்கள் | 184 |
| 3. | பேராசிரியர் ரெட்டியார் நூல்கள் | 189 |

# 1. வேங்கடம் மேவிய விளக்கு

'நீலத்திரைக் கடல் ஓரத்திலே
நித்தம் தவம் செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு'[1]

என்று பாடினார் தேசிய கவி பாரதியார். இந்த 'மாலவன் குன்றமே' திருவேங்கடம் என்பது. சிலப்பதிகாரம் குறிப்பிடும் 'நெடியோன் குன்றமும்' இதுவேயாகும். ஆயின் தொல்காப்பியப் பாயிரத்திலும், சங்க இலக்கியங்களிலும் குறிப்பிடப்பெற்றுள்ள 'வடவேங்கடம்' என்னும் மலைத் தொடர் இதனினின்றும் முற்றிலும் வேறுபட்டது என்பதை ஆழ்ந்து கற்றோர் நன்கு அறிவர்.[2] இன்றுள்ள திருப்பதி மலை மிகவும் புகழ் அடைந்தது சமயச்சார்பு பற்றியதேயாகும் என்பதை நாம் அறிவோம். இடைக் காலத்தில் இது திருத்தலப் பயணிகளின் முக்கிய இடமாக அமைந்ததற்குக் காரணம் சமயச் சார்பு பற்றியதே யாகும்.

**திருப்பதி புகழோங்கிய காலம் :** இன்று பெரும்பான்மையோர் திருப்பதி மலையைத் 'திருப்பதி' என்றே வழங்குகின்றனர். விவரம் அறிந்தோர் இதனைத் 'திருமலை' என்று கூறுகின்றனர்.[3] இம்மலை 'ஏழுமலை'

1. பாரதியார் கவிதைகள்—செந்தமிழ் நாடு—5.
2. இவ்வாசிரியரின் 'திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்' (பாரி நிலைய வெளியீடு) என்ற நூலில் காண்க.
3. மலையைத் 'திருமலை' என்றும், மலையின் கீழுள்ள நகரைத் 'திருப்பதி' என்றும் வழங்குவதே சரியாகும்.

என்றே வழிவழியாக வழங்கப் பெறுகின்றது. இன்று பேருந்து வழியாகச் செல்வோர் இந்த ஏழுமலைகளையும் வரிசையாகக் காணலாம். இப்பொழுது பேருந்துகள் மலையிலிருந்து இறங்கும் வழியில் இம்மலைகளின் பெயர்ப் பலகைகளைக் காணலாம். ஒன்றிரண்டு ஆண்டுகட்கு முன்னர் இதுவே ஏறும் வழியாகவும் அமைந்திருந்தது. இந்த வழியில் கீழிருந்து மேலே செல்லுங்கால் முதலில் காண்பது எருத்துமலை (விருஷபாத்திரி).[4] அடுத்து முறையே நீலமலை (நீலாத்திரி), மைவரை (அஞ்சனாத்திரி), பாம்புமலை (சேஷாத்திரி), கருடமலை (கருடாத்திரி), நாராயணமலை (நாராயணாத்திரி), வேங்கடமலை (வேங்கடாத்திரி) என்ற மலைகளைக் காணலாம்.

ஆழ்வார் பெருமக்களால் (6-8 நூற்றாண்டுகள்) மங்களாசாசனம் செய்யப்பெற்ற நூற்றெட்டுத் திருப்பதிகளுள் இதுவும் ஒன்று. 'வடநாட்டுத் திருப்பதிகள்' என்ற பகுதியில் அடங்கும் பன்னிரண்டில் இது முதலாவதாக இடம் பெறுவது. கோயில் (திருவரங்கம்), திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சி) என்று வைணவப் பெருமக்களால் போற்றப்பெறும் மூன்று திவ்விய தேசங்களுள் இது நடுநாயகமாகத் திகழ்கின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த திருவேங்கடத்தைப்பற்றி 213 பாசுரங்கள் நாலாயிரத்தில் காணப்பெறுகின்றன. இவற்றைப் பாடியவர்கள் பத்து ஆழ்வார் பெருமக்கள்; பாடிய விவரம்:

| | | |
|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | 10 பாசுரங்கள் |
| 2. | பூதத்தாழ்வார் | 9 பாசுரங்கள் |
| 3. | பேயாழ்வார் | 19 பாசுரங்கள் |
| 4. | திருமழிசையாழ்வார் | 15 பாசுரங்கள் |
| 5. | திருப்பாணாழ்வார் | 2 பாசுரங்கள் |
| 6. | குலசேகராழ்வார் | 11 பாசுரங்கள் |

4. அத்திரி-மலை (வடசொல்)

| | | |
|---|---|---|
| 7. | பெரியாழ்வார் | 7 பாசுரங்கள் |
| 8. | ஆண்டாள் | 16 பாசுரங்கள் |
| 9. | திருமங்கையாழ்வார் | 62 பாசுரங்கள் |
| 10. | நம்மாழ்வார் | 62 பாசுரங்கள் |
| | மொத்தம் | 213 |

இப்பாசுரங்களைத் திருவேங்கடக் கலம்பக ஆசிரியர் முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்[5] "பதின்மர் செந்தமிழ்"[6] என்று போற்றிப் புகழ்வர்.

**திருவேங்கடத்தின் புகழ் :** ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் பெற்ற திருவேங்கடம் பதினொன்றாம் நூற்றாண்டில்தான் பெரும்புகழ் அடையத்தொடங்கியது. இராமாநுசர் திருவேங்கடமுடையான் திருக்கோயிலின் பால் காட்டிய அக்கறையும் அவருடைய சொந்தப் பெருமையும் சிறப்புமாகச் சேர்ந்து திருக்கோயிலின் புகழை மிகவும் உயர்த்தி விட்டது. இராமாநுசர் திருமலைக்கு மூன்று தடவை வந்ததாக அவர் வரலாற்றால் அறியக் கிடக்கின்றது. இன்று திருமலையில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் யாவும் இராமாநுசர் வகுத்தவையே என்று 'திருமலையொழுகு' என்ற நூலால் அறிகின்றோம். இராமாநுசர் திருவேங்கடமுடையானுக்குக் கைங்கரியம் செய்யும் அர்ச்சகர்கட்குக் குடியிருப்பு வசதிகள், பிற வசதிகள் இவற்றைச் செய்தார். தன் தாய் மாமனாகிய திருமலை நம்பியையே இவற்றையெல்லாம் கண்காணிக்கும் மேலாளராகவும் நியமனம் செய்தார். இராமாநுசருடைய சமூகச் சீர்திருத்தமும் அவருடைய தத்துவ ஞானமும் பாமர மக்கள் மனத்தையும் கவர்ந்தன. அவருடைய

5. இவர் அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் மகன் வழிப்பேரர். செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர்.

6. திருவேங். கலம்—24.

வடமொழி அறிவு அவருக்குப் பலவகையில் கைகொடுத்து உதவியது. அவருடைய கீதைப் பேருரையும், பிரம்ம சூத்திரப் பேருரையும் அவரை வடநாட்டினர்க்கும் அறிமுகம் செய்து வைத்தன. இதனால் இராமாநுசரின் புகழ், நாட்டின் நாலாபுறங்களிலும் பரவியது. இதனால் அவர் மிக நெருங்கிய உறவுடன் கைங்கரியம் செய்து வந்த திருவேங்கடமுடையானின் பெருமையும் சிறப்பும் எங்கும் பரவி, திருவேங்கடத்திற்கும் ஒரு முக்கியத்துவம் ஏற்படலாயிற்று. இவற்றைத் தவிர, சைவ வைணவ வாக்குவாதம் பற்றிய வரலாறும் திருமலையின் புகழ் எங்கும் பரவக் காரணமாக இருந்தது. இந்த வரலாற்றைச் சுமார் 700 ஆண்டுகட்கு முன்பிருந்த பின்பழகிய பெருமாள் சீயர் அருளிய ஆறாயிரப் படிக் குருபரம்பரையிலும் இராமாநுசாசாரியாரின் திவ்விய சரிதையிலும் காணலாம்.

**திருவேங்கடத்தின் சிறப்பு :** வைணவ தத்துவம் சித்து, அசித்து, ஈசுவரன் என்று மூவகைப்பட்டிருக்கும். இதனைத் 'தத்துவத் திரயம்' என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்திருக்கும். இந்த உறவினைச் 'சரீர-சரீரி பாவனை' என்று போற்றியுரைப்பர் அப்பெருமக்கள். அசித்தும் எம்பெருமானுடைய படைப்பாகி அவனுடைய திருமேனியாகத் திகழ்வதால் அதுவும் வழிபாட்டிற்குரியது.

> **'சென்று சேர்திரு வேங்கட மாமலை**
> **ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே'**[7]

என்ற நம்மாழ்வாரின் பாசுரம் இக்கருத்திற்கு அரண் செய்வதாக அமைகின்றது. அசித்தின் பெயரைச் சொன்ன உடனேயே எம்பெருமான் மனமகிழ்ந்து

7. திருவாய், 3.3; 8.

நமக்குத் திருவருள்பாலிக்கும் பெருமை பேசப்பெறு கின்றது.

> 'திருமா லிருஞ்சோலை
> மலைஎன்றேன்; என்னத்
> திருமால் வந்துஎன்
> நெஞ்சுநிறையப் புகுந்தான்'[8]

என்ற திருவாய்மொழி இதற்குச் சான்றாக நிற்கின்றது.

இயற்கை எழில் நிறைந்த திருவேங்கடத்தை ஆழ்வார் பெருமக்கள் தம்முடைய பாசுரங்களில் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இவை யாவும் கல் நெஞ்சத்தையும் கரையச் செய்யும் இன்பப் பாசுரங்கள்: கவி நயமும் இசையேற்றமும் பொருட் செறிவும் பொருந்திப் பொலிபவை. இறைவனிடம் அன்பு கொண்டு ஈடுபட்டு நெஞ்சம் நெக்குருகிப் பாடுபவன் சாதாரண மனிதனாக இருப்பினும் அவன் பாட்டு எவர் உள்ளத்தையும் எளிதில் கவரும். ஆனால் பரம்பொருளின் பேரருளை நிறைவாகப் பெற வேண்டுமென்று பேரவாக்கொண்டு மனம் உருகி நெஞ்சம் கசிந்து பாடும் பக்தர்கள் இசைக் கவிஞர்களாக இருப்பின், அவர்களின் தோத்திரப் பாக்கள் எவ்வளவு உயர் சிறப்பை உடையனவாயிருக்கும்!

திருவேங்கடமலை திருவரங்கத்தைக் காட்டிலும் முதலாழ்வாரின் உள்ளத்தைக் கவர்ந்தது. பொய்கையாழ்வார்,

> 'வினைச்சுடரை நந்துவிக்கும்
> வேங்கடமே வானோர்
> மனச்சுடரைத் தூண்டும்
> மலை'[9]

[நந்துவிக்கும் - உருத்தெரியாமல் நசிப்பிக்கும்]

---

8. திருவாய். 10. 8 : 1. 9. முதல் திருவந்-26

என்று கூறித் தம் உள்ளத்தை அதில் ஈடுபடுத்துவர். மனமாகிய சுடரை இதயம் என்னும் விளக்கைத் தூண்டி ஒளிரச் செய்யும் மலை என்று சொல்லும்பொழுதே இவரது உள்ளத்தில் சுடர் விட்டெரியும் பக்தி விளக்கு நமக்கு ஓரளவு புலனாகின்றது. மண்ணவர்க்கு மட்டுமன்று விண்ணவர்க்கும் மனச் சுடரைத் தூண்டுகின்றது இம்மலை என்கின்றார் ஆழ்வார். பக்தி என்ற ஒரு நெருப்பை மூட்டி மற்றொரு நெருப்பை அணைக்கின்றது திருவேங்கடம் என்று சமத்காரமாகக் கூறும் கவிதையில் பக்திச் சுடர் கவின் பெறுகின்றது. பேயாழ்வாரோ பரமபதத்தோடும் பாற்கடலோடும் இம்மலையைச் சேர்த்துப் பேசுகின்றார்.

**'பண்டுஎல்லாம் வேங்கடம்**
**பாற்கடல் வைகுந்தம்**
**கொண்டுஅங்கு உறைவார்க்குக்**
**கோயில்போல்'**[10]

என்பது அவரது திருவாக்கு.

சேரர்கோன் குலசேகரப் பெருமாளுக்குத் திருவேங்கடமலையின்மீது ஏற்பட்ட கழிபெருங் காதல் அற்புதமானது. ஓர் இனிய திருமொழியில் அந்த ஆழ்வாரின் எண்ணக் கோவைகளைக் கண்டு களிக்கலாம்.[11] திருவேங்கடத்தில் பிறத்தலும் அங்கு ஏதாவது ஒரு பொருளாக இருத்தலும் போதும் என்று கூறுகின்றார் இந்த ஆழ்வார். திருவேங்கட மலையில் வாழும் பேறு கிடைக்கப் பெற்றால் அறிவற்ற விலங்குப் பிறவியும் தமக்குப் போதும் என்கின்றார். கோனேரியில் வாழும் குருகு, திருவேங்கடச் சுனைமீன், வேங்கடக்கோன் உமிழும் பொன் வட்டில், செண்பக மரம், புதர், பொற்குவடு,

10. மூன். திருவந்-61
11. பெரு. திரு-4

மலையில் பாயும் கானாறு, காட்டு நெறி, கருவறைப்படி என்ற நிலை தமக்கு அமையின் போதும் என்று ஒன்றொன்றாகப் பிரித்துக் கூறுகின்றார். இறுதியாக 'எம்பெருமான் திருமலையில் ஏதேனும் ஆவேனே' என்று சொல்லித் தம் ஆசைக்குத் தலைக்கட்டி விடுகின்றார். இந்தத் திருமொழியை அடியொற்றியே முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்,

**'மாடாக நிழற்றுசெழு**
**மானாகத் தவச்சிறிய**
**பூடாக குழைத்தநறும்**
**புதலாக வழிப்படுவார்**
**ஓடாகப் பெறுவமெனில்**
**உயிர்காணற் கதிபெறலாம்**
**வீடாகத் திருநெடுமால்**
**வீற்றிருக்கும் வேங்கடத்தே'**[12]

[மாடு - விலங்கு; நிழற்றும் - நிழல் தரும்; தவச்சிறிய- மிகச்சிறிய; பூடு - புல் பூண்டு; புதல் - புதர்]

என்ற பாடலை அருமையாக அமைத்து ஆழ்வாரிடமும் அவர்மூலம் திருமலையின்மீதும் தமக்குரிய ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றார்.

**திருமலையின் இயற்கைக் காட்சிகள் :** எங்கெல்லாம் அழகு உள்ளதோ அங்கெல்லாம் இறைவனும் இருப்பதாகக் கொள்வது தமிழரது கொள்கை. இக்கொள்கையே 'முருகன்' என்ற தமிழ்க் கடவுளின் தத்துவம் என்பதைத் திரு. வி. க. போன்ற இறையன்பு கொண்ட அறிஞர்கள் விளக்கிப் போந்துள்ளனர். இக் கொள்கையை ஒட்டியே பக்தர்களும் இயற்கையில் தோய்ந்து இறைவனை அநுபவிக்கின்றனர். காட்டிலும், நாட்டிலும், மண்ணிலும், விண்ணிலும் எல்லா இடங் களிலும் காணும் இயற்கையழகுகளில் எம்பெருமானின்

12. திருவேங். கலம்-72

அழகுக் கூறுகளில் மனத்தைப் பறிகொடுக்கின்றனர். இத்தகைய மனநிலையைக் கொண்ட ஆழ்வார்களும் இயற்கை அழகினைத் தம் உள்ளத்து அழகுடன் குழைத்து தன் மனம் விரும்பும் கடவுள் வடிவத்தின் தெய்விக அழகாகக் காண்கின்றனர். இத்தகைய இயற்கை அழகு வாய்ந்த தலங்கள்தாம் 'திவ்விய தலங்கள்' என்றும் 'திருப்பதிகள்' என்றும் மதித்து அங்குள்ள திருக்கோயில் களில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்களை வழி படுவது முக்கியம் என்று கருதினர் பக்தர்கள். இத்தகைய தலங்களில் 'திருப்பதி' என வழங்கப்பெறும் திருவேங்கட மலை ஆழ்வார்கள் காலத்தில் சிறந்த தலமாக இருந்திருத் தல் வேண்டும்.

பூதத்தார் காட்டும் காட்சி ஒன்றினைக் காண்போம். திருமலையில் மதப்பெருக்கால் செருக்கித் திரியும் ஆண் யானை ஒன்று. அது தன் காதலியாகிய பெண் யானை யைக் காண்கின்றது. அதனைக் கடந்து அப்பால் செல்ல மாட்டாது அதற்கு இனிய உணவு ஈந்து அதன் மனம் நிறைவிக்க விரும்புகின்றது. அம்மலையிலுள்ள மூங்கிற் குருத்தொன்றினைப் பிடுங்குகின்றது. அதனை அருகி லுள்ள மலை முழைஞ்சிலிருந்த ஒரு தேனடையில் தோய்த்து அப்பிடியின் வாயில் ஊட்டுகின்றது 'குளோப் ஜாமுனை' ஊட்டுவது போல. இதனை ஆழ்வார்,

> ''பெருகு மதவேழம்
> மாப்பிடிக்கு முன்னின்று
> இருகண் இளமூங்கில்
> வாங்கி—அங்கிருந்த
> தேன்கலந்து நீட்டும்
> திருவேங் கடம்கண்டீர்
> வான்கலந்த வண்ணன்
> வரை.''[13]

---

13. இரண். திருவந்—75

[வேழம் — யானை; பிடி— பெண்யானை; இருகண் — இரண்டு கணுக்கள்; வண்ணன்—நிறத்தன்; வரை— மலை]

என்ற சொல்லோவியமாகக் காட்டுவர். இத்தகைய ஒரு காட்சியைத் திருமங்கையாழ்வார் திருப்பிரிதியை வருணிக்கும்போது இமயமலையில் காட்டுவர்.[14] கம்ப நாடனும் சித்திர கூடமலையில் இத்தகைய காட்சியொன்றினை மேலும் அழகு படுத்திக் காட்டுவன்.[15]

இன்னொரு யானையின் செயலைப் பொய்கையாழ்வார் புது முறையில் காட்டுவர். திருமலையின் கொல்லைகளில் இராக்காலத்தில் யானையொன்று பட்டி மேய்கின்றது. ஒரு கையில் கொளுத்திய தீவட்டியும் மறறொரு கையில் அம்பு தொடுத்த வில்லையும் கொண்டு அந்த யானையைவெருட்டிச் செல்லுகின்றனர் குறமக்கள். இதனால் யானை வெருவியோடுகின்றது. ஆயின், எதிர் பாராத விதமாக அஃது ஓடும் வழியில் விண்ணினின்றும் எரிமீன் ஒன்று விழுகின்றது. யானை அதனை நட்சத்திரம் என்று ஓராது குறவர்கள் தம் தீவட்டியையே கீழெறிந்தனர் என்று கருதித் திகைத்துக் கற்சிலைபோல் நின்று விடுகின்றது.

''பெருவில் பகழிக்
  குறவர்கைச் செந்தீ
வெருவிப் புனந்துறந்த
  வேழம்—இருவிசும்பில்
மீன்வீழக் கண்டஞ்சும்
  வேங்கடமே மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான்
  குன்று.''[16]

14. பெரி. திரு. 1.2:5
15. கம். அயோத்—சித்திரகூட—10
16. முதல் திருவந்—40.

[பகழி—அம்பு; வெருவி—அஞ்சி; புனம்—கொல்லை; வேழம்—யானை; விசும்பு—ஆகாயம்; மீன்—நட்சத்திரம்; அசுரர்கோன்—இரணியன்; உகந்தான்—மகிழ்ந்தான்.]

என்பது பொய்கையாழ்வார் காட்டும் சொல்லோவியம்.

பேயாழ்வார் காட்டும் யானையோ 'ஆதிமூலமே!' என்று ஓலமிட்டழைத்த கஜேந்திரன் மரபு வழி வந்தது போலும். இது புரியும் வழிபாட்டுச் செயலை ஒரு சமத்காரம் பொலியப் பேசுகின்றார் ஆழ்வார். வழிபாட்டுக்குச் செல்லும் அடியார்கள் வாய் கொப்பளித்துக் கைகால்களை நீரால் கழுவித் தூய்மை செய்து கொண்டு மலர்களை எடுத்துப்போவது வழக்கமாகும். திருமலையிலுள்ள ஆண் யானை யொன்று இந்நெறியை மேற்கொள்ளுகின்றது. இக்காட்சியினை ஆழ்வார்.

**''புகுமதத்தால் வாய்பூசிக்**
**கீழ்தாழ்ந்து அருவி**
**உகுமதத்தால் கால்கழுவிக்**
**கையால்—மிகுமதத்தேன்**
**விண்டமலர் கொண்டு**
**விறல்வேங் கடவனையே**
**கண்டு வணங்கும்**
**களிறு''**[17]

[புகு—வாயில் புகும்; வாய்பூசுதல்—கொப்பளித்தல்; மிகுமதம்—அதிகமதம்; விறல்—மிடுக்கு; களிறு—ஆண் யானை]

என்ற பாசுரத்தால் காட்டுவர். கன்னத்தினின்றும் மத்தகத்தினின்றும் பெருகியொழுகும் மத நீரால் வாய் கொப்பளிக்கின்றது யானை. அருவிபோல் கால் வரையிலும் பெருகி வழியும் மதநீரால் கழுவுகின்றது. இங்ஙனம்

17. மூன். திருவந்—70

திருமலையிலுள்ள ஐயறிவுடைய விலங்கு தன்னை வழிபடும் ஞானத்தைத் தரக் கூடியவன் திருமலையப்பன் என்பது ஆழ்வார் நமக்கு உணர்த்தும் செய்தியாகும். இன்னொரு யானையின் செயலையும் அதன் முடிவையும் காண்போம். 'மதயானைபோல் எழுந்த மாமுகில்காள்''[18] என்று ஆண்டாள் வருணித்ததை நாம் அறிவோம். ஆண் யானையொன்று கரியமாமுகிற் படலத்தை எதிரி யானை என்று நினைத்துத் துதிக்கையைத் தூக்கிக் கொண்டு வேகமாக ஓடிக் குத்துகின்றது. இதனைக் கண்ட யாளி ஒன்று அந்த யானையின்மீது பாய்ந்து ஓங்கி அறைந்து அதன் கொம்புகளை முறிக்கின்றது. யானையும் வாய்விட்டு பிளிறிக்கொண்டு மடிந்தொழிகின்றது. ஆயினும் யானை சினந்தணியாமல் அங்கேயே நின்ற வண்ணம் பெருமுழக்கம் செய்து மலையையே அதிரவைக்கின்றது[19]. இப்படி ஒரு காட்சி.

பூதத்தாழ்வார் திருமலையிலே வாழும் வானரங்கள் எம்பெருமானுக்குச் செய்யும் பூசனைகளைக் காட்டுவர்.

> **'போதறிந்து வானரங்கள்**
> **பூஞ்சுனைபுக்கு ஆங்கலர்ந்த**
> **போதரித்து கொண்டேத்தும்'**[20]

[போது—விடியற்காலம்; சுனை—நீர் நிலை; ஏத்தும்—துதிக்கும்.]

அதிகாலையில் முனிவர்கள் துயில் விட்டெழுமாப் போலே குரங்குகளும் எழுந்து பூத்த சுனைகளிலே சென்று நீராடி அங்குள்ள செவ்வியப் பூக்களைப் பறித்துக்கொண்டு போய் ஏதேனும் ஒன்றைச் சொல்லித் துதிசெய்து பணியா நிற்கும் என்கின்றார் ஆழ்வார். இதனை அடியொற்றியே கம்பநாடன் சித்திரகூடக் காட்சிகளை எடுத்துக்

18. நாச். திரு—8:9
19. மூன். திருவந்—71
20. இரண். திருவந்—72

காட்டுவன். இங்குள்ள குரங்குகள் மூப்படைந்து கண் இடுகிப்போய் வழியறியாது வருந்தும் மாதவர்க்கு அவர்கள் செல்லவேண்டிய அருநெறிகளைக் காட்டு கின்றன.[21] இது போன்ற பல காட்சிகளை அங்குக் காணலாம். பேயாழ்வாரும் ஒரு குரங்கின் செயலைக் காட்டி மகிழ்வர். தெளிவான கற்பாறையின்மீது உட் கார்ந்து கொண்டுள்ளது பெண் குரங்கொன்று. அது தனக்கு நட்பாகவுள்ள ஓர் ஆண் குரங்கை நோக்கி விண்ணில் வெண்ணிறமாகத் தோன்றும் தண்மதியைப் பிடித்துத்தருமாறு வேண்டுகின்றது.

**'தெளிந்த சிலாதலத்தின்**
**மேலிருந்த மந்தி**
**அளிந்த கடுவனையே**
**நோக்கி—விளங்கிய**
**வெண்மதியம் தாவென்னும்**
**வேங்கடமே!'[22]**

[சிலாதலம் — கற்பாறை; மந்தி — பெண் குரங்கு; கடுவன்—ஆண் குரங்கு; மதியம்—திங்கள்]

என்பது பேயாழ்வாரின் சொல்லோவியம்.

திருவேங்கட மலையின் உயர்ச்சியைக் காட்டும் போக்கில் மூங்கில்களின் வளர்ச்சியையும் காட்டுகின்றார் பேயாழ்வார். திருமலையின் மூங்கில் சந்திர மண்டலத் தளவும் உயர்ந்து வளர்ந்துள்ளது. அது மதியைப்பற்றிக் கொண்டிருக்கும் இராகுவையும் தகர்த்துக் கிரகணத் தையே விடுவித்து விடுகின்றது. 'தீங்கழைபோய் வென்று விளங்குமதி கோள்விடுக்கும் வேங்கடமே!''[23] என்பது ஆழ்வாரின் திருவாக்கு. இத்தகைய பல காட்சிகளை திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அற்புத

21. அயோ. சித்திர—30.
22. மூன். திருவந்—58
23. டி—72

மாகக் காட்டுவார்;[24] இங்ஙனம் குறிஞ்சிநிலக் காட்சிகள் வழிவழியாகப் புதிய புதிய கற்பனைப் போக்குகளுடன் இலக்கியங்களில் புலவர்களால் காட்டப்பெற்று அறிவுக்கு விருந்தாக அமைகின்றன; தத்துவ ஞானியர் இந்த அசித்துக் காட்சிகளிலும் ஆழங்கால்படுகின்றனர்.

**ஏழுமலையானின் சிறப்பு :** திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் திருமலையின் இயற்கை எழிலும் மலையின் உயர்ச்சியிலும் ஈடுபட்டாலும் அங்குத் திருக்கோயில் கொண்டுள்ள இறைவன்பால் தம் மனத்தைப் பறிகொடுக்கின்றனர். பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் எம்பெருமானின் பெருமையைப் பலவாறு பேசி இனியவராகின்றார். எம்பெருமான் பல்வேறு அவதாரங்கள் எடுத்து மக்களுக்காகச் செய்த பல்வேறு நற்செயல்களை எடுத்துக் காட்டி அகமகிழ்கின்றார். திருவேங்கட முடையான் குருந்தம் ஒசித்த கோபாலனாக வந்தவர்; கொக்கின் வடிவமாகப் பகாசுரனை வாய் பிளந்து வானுலகத்திற்கு அனுப்பிய வித்தகர்;[25] கல் நெஞ்சத்தை உடைய பூதனையிடம் பாலமுதம் பருகியதுடன் அவள் உயிரையே குடித்த அற்புதச் செயலைப் புரிந்தவர்; கிருதயுகத்தில் வெள்ளை நிறத்தையும், கலியுகத்தில் கறுப்பு நிறத்தையும் துவாபர யுகத்தில் நீலமணி நிறத்தையும் கொண்டிருப்பவர்.[26] கண்ணனாக இருக்கும் பொழுது மருதிடைத் தவழ்ந்து நளகூபர மணிக்ரீவர்களின் சாபத்தை நீக்கிய பெருமையுடையவர். குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்து ஆநிரைகளின் துன்பத்தைப் போக்கியவர்[27] பார்த்தனுக்குச் சாரதியாக நின்று தேரோட்டியவர்; ஆயர்பாடியில் கோபியருடன் குரவைக் கூத்து ஆடிய கோவலர்.[28] மாணியாய்ச் சென்று மண்ணிரந்து கொண்

24. 'திருவேங்கட மாலை' என்ற நூலை நோக்கி அறிக.
25. பெரிய-1. 8 : 1
26. பெரி. திரு-1. 8:2
27. பெரி. திரு-1. 8: 3
28. டி 1. 8: 4

டவர், இராமனாக நின்று மராமரங்கள் ஏழினையும் ஓரம்பினால் எய்து அற்புதச் செயலைப் புரிந்தவர்.[29] பாலனாய் ஏழுலகுண்டு ஆலிலையில் துயின்றவர்; திண்திறல் அரியாகி ஒண்திறல் அவுணன் உயிர் குடித்த திறலுடையவர்.[30] பஞ்ச பூதங்களின் வடிவமாக நின்று பேராயிரம் பெயர்கள் கொண்ட பெம்மான்.[31]

இன்னும், எம்பெருமான் இராவணனின் திண் ஆகம் பிளக்க அம்பு கோத்தது, இலங்கை அரக்கர்களை மடியச் செய்தது, நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு ஆலிளந் தளிர்மேல் துயில் கொண்டது, உரிமேல் நறுநெய்யை அமுது செய்தது, குறளுருவாய் நின்று ஈரடிகளால் நிலமனைத்தையும் கவர்ந்தது, அரியாய்த் தோன்றி அவுணன் உடல் பிளந்தது முதலிய செயல்களில் ஆழங்கால்பட்ட வண்ணம்[32] பல வேண்டுகோள்களை விடுக்கின்றார். 'அடியேனுக்கு அருளாயே' என்றும், 'அடியேனுக்கு அருள் புரியாயே' என்றும், 'குறிக்கொள் எனைநீயே' என்றும் பிரார்த்திக்கின்றார். அடுத்து, திருவேங்கட முடையான் அவருடைய திருவுள்ளத்தில் வந்து புகுந்த பெருஞ் செயலைப் பேசி அநுபவிக்கின்றார்.[33] 'திருவேங்கடம் மேய என் ஆனை என் நெஞ்சில் உள்ளானே' என்றும், 'திருவேங்கடமாமலை மேய கோனே! என்மனம் குடி கொண்டு இருந்தாயே' என்றும் பேசி இனியராகின்றமையையும் காண்கின்றோம்.

எம்பெருமான் திறத்தை எடுத்துரைத்த ஆழ்வார் தம் குற்றங்களையெல்லாம் விரித்துக்கூறித் தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டிச் சரண் புகுகின்றார். "எம்பெருமானே, உறவினரல்லாதாரை உறவினர்கள் என்று நம்பிக் கெட்டொழிந்தேன்.[34] அநுபவிக்கத் தகாதவற்றை அநு

29. பெரி. திரு-1. 8: 5
30. ஷை 1. 8:6
31. ஷை 1. 8:7
32. பெரி. திரு-1. 10:1 to 5
33. ஷை 1. 10:6,7
34. ஷை 1. 9: 3

பவித்த[35] எண்ணற்ற பாவங்களைச் செய்தேன். பல உயிர்களைக் கொன்று பலவகைப் பாவங்களைப் பண்ணினேன்.[36] எண்ணற்ற யோனிகளில் பிறந்து இளைத்தேன்; ஒருவிதமான நற்செயல்களையும் புரிந்தேன் இலேன்.[37] பஞ்ச பூதங்களாலான யாக்கையில் புகுந்து புலம்பித் தளர்ந்தொழிந்தேன்.[38] அறியாப் பருவத்தே பல அவச் செயல்களை செய்துவிட்டேன். இளமைப் பருவத்தில் பெண்டிற்காகவே அலைந்து சதிர்கேடனானேன்.[39] இங்ஙனம் பாவமே செய்து பாவியான அடியேன் உன்னை விட்டுத் தரிக்கமாட்டாத அன்பு பிறந்து உன்னையே அடைக்கலமாகப் பற்றிக் கொண்டேன். முன்னைத் தீவினைகளை எண்ணி என்னைக் கைவிடாது ஆட்கொள்ளவேண்டும் என்று கூறி[40] அவனைச் சரணமடைகின்றார் ஆழ்வார்.

ஆழ்வார்களுள் தலைவராகக் கருதப்பெறும் நம்மாழ்வாரின் அருளிச் செயல்களில் திருவேங்கடத்தைப் பற்றி வரும் செய்திகள் மிக அற்புதமானவை. விசிட்டாத்வைத தத்துவத்தின் உயிர் நாடியாகவுள்ள சரணாகதியின் அருமையை உலகுக்கு உணர்த்தும் பெருமையை இங்குக் காணலாம். திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் இந்த ஆழ்வாருக்குத் 'தாள் பரப்பி மண் தாவிய ஈசனா'கவும், [41] 'என் கண், பாசம் வைத்த பரஞ்சுடரா'கவும்,[42] 'வேதியர் முழுவேதத்து அமுத'மாகவும், [43] காட்சி அளித்து அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றான். இத்தகைய எம்பெருமானின் திருவடியில்,

35. பெரி. திரு-1. 9:2
36. டை. 1. 9:3
37. பெரி. திரு-1.9:4,5
38. டை. 1. 9;6
39. டை 1. 9:7
40. பெரி. திரு-1.9:9
41. திருவாய் 3-3:11
42. டை 3.3:4
43. டை 3.3:5

**'அகல கில்லேன் இறையும்' என்று**
**அலர்மேல் மங்கை உறைமார்பா**
**நிகரில் புகழாய் உலகம்மூன்று**
**உடையாய் என்னை ஆள்வோனே!**
**நிகரில் அமரர் முனிக்கணங்கள்**
**விரும்பும் திருவேங் கடத்தானே!**
**புகல்ஒன்று இல்லா அடியேன்உன்**
**அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.'[44]**

*[இறை—கணநேரம்; நிகர்—ஒப்பு; புகல் ஒன்று—வேறு வழி]*

*என்று சரண்புகுகின்றார். சேதநன் ஈசுவரனைப் பற்றுவதற்கு அவனுடைய திருக்குணங்களுள் வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம் ஆகிய நான்கும் துணை செய்யக் கூடியவை. 'நிகரில் புகழாய்' என்பதால் வாத்சல்யத்தையும், 'உலகம் மூன்றுடையாய்' என்பதால் சுவாமித்துவத்தையும், 'என்னை ஆள்வானே' என்பதால் சௌசீல்யத்தையும், 'திருவேங்கடத்தானே' என்பதால் சௌலப்பியத்தையும் தெரிவிக்கின்றார் ஆழ்வார். 'புகழ் ஒன்று இல்லா அடியேன்' என்பதால், பிரபத்திற்கு அதிகாரமான ஆகிஞ்சந்யம் (கைமுதல் இல்லாமை-நம்காரியத்திற்கு நாம் கடவோம் அல்லோம் என்றிருக்கை), அநந்யகதித்வம் (வேறு புகல் இல்லாமை—இறைவன் ஒருவனே காப்பாற்றுபவன் என்றிருக்கை) ஆகியவற்றைத் தெரிவித்தபடி.. 'அலர்மேல் மங்கை' என்பதால் புருஷகாரம் (சேர்ப்பிக்கும் தன்மை) போதருகின்றது. இந்தப் பாசுரம் வைணவர்கட்கு 'சரம சுலோகம்'[45] போல் இனிப்பது; அதுபோல் ஆன்மாவை ஈடேற்றும் புணைபோல் இருப்பது. இதுதான் எம்பெருமானைக் 'கால்கை' பிடித்து (காக்கை பிடித்து?) உய்யும் வழியாக இருப்பது. வைணவ தத்துவ மொழியில் கூறினால்*

44. திருவாய் 6.10:10 45. கீதை 18:66

'சரணாகதியாக' இருப்பது. இப்பாசுரத்திற்கும் இப்பாசுரம் அடங்கிய பதிகத்திற்கும் ஈட்டாசிரியர் கூறும் சொற்பொருள்கள் சிந்தைக்கும் செவிக்கும் இனிப்பவையாகும். இத் திருவாய்மொழியின் ஒன்பதாம் பாசுரத்தின் இறுதியடி 'அந்தோ அடியேன் உன்பாதம் அகலகில்லேன் இறையுமே'[46] என்பது. ஆழ்வார் பாசுரங்கட்கு உரை சொல்லும்போதே வைணவ தத்துவம் அனைத்தையும் குழைத்துத் தந்துவிடுவார்கள்—அன்னை பிள்ளைக்கு முலைப்பாலுடன் மருந்தைக் குழைத்துத் தருவதைப்போல. அன்னை உடலுக்கு மருந்து ஊட்டுகின்றாள்; ஆசாரியர்கள் உயிருக்கு மருந்து ஊட்டுகின்றனர். அவ்வளவுதான். இப்பாசுரம் சரணாகதியைக் குறிப்பதால் இத்திருவாய்மொழி முழுவதும் சரணாகதி சாரமாயிருக்கும் என்று வைணவ ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுவார்கள். அதற்கேற்ப இந்த ஆறாம் பத்து முழுவதிலும் 'உலகளந்த திருவடி அடிக்கடி கூறப்பெறுவதையும் காணலாம். 'நெடியோன் என்ற பெயர் திரிவிக்கிரமனைக் குறிப்பது; மூன்று ஆச்சரியமான செயல்களைச் செய்தவன் திரிவிக்கிரமன் இத் திருப்பாசுரத்தைத் துவய மந்திரத்தின் பதங்களோடு ஒப்பிட்டுப் பொருள் கூறுவர் ஈட்டாசிரியர்.

ஏழுமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடம் பொலியும் திருக்குணத்தை **ஆசாரிய ஹ்ருதயம்,**

> **"மண்ணோர் விண்ணோர் வைப்பில், போகின்ற**
> **ஏழுலகுக்கும் உயிர்பாசம் வைத்த நிகரில்**
> **வாத்சல்யம் உஜ்வலம்"[47]**

[வைப்பு—திருமலை; வாத்சல்யம்—கன்றினிடத்தில் பசு இருக்கும் இருப்பு; உஜ்வலம்—மிக்குப்பொலிதல்]

46. திருவாய் - 6, 10:9
47. ஆசா. ஹ்ரு - 161 (புருடோத்தமநாயுடு பதிப்பு)

என்ற நூற்பாவால் குறிப்பிடுகின்றது. அன்று ஈன்ற கன்றின் உடம்பிலுள்ள வழுவை ஆதரித்து உண்ணும் பசுவைப் போன்று அடியார்களுடைய குறைகளை இனியனவாகக் கொள்ளும் குணம் (வாத்சல்யம்) இந்த எம்பெருமானிடம் மிக்குப் பொலிகின்றது என்று காட்டுவர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

கால வெள்ளத்தில் திருமலையின் பெயரும் திருவேங்கடமுடையானின் பெயரும் மக்கள் மனத்தில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டன.

**''கண்ணனடி யிணை எமக்குக் காட்டும் வெற்பு;**
**கடுவினையர் இருவரையும் கடியும் வெற்பு;**
**திண்ணமிது வீடுஎன்னத் திகழும் வெற்பு;**
**தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு;**
**'புண்ணியத்தின் புகல்இது' எனப் புகழும் வெற்பு;**
**பொன்னுலகின் போகமெலாம் புணர்க்கும் வெற்பு;**
**விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு;**
**வேங்கடவெற்பு எனவழங்கும் வேத வெற்பே''[48]**

[கடியும்-ஒழிக்கும்; திண்ணம்-உறுதி; செறிந்த-நிறைந்த புகல்-இருப்பிடம்; பொன்உலகு-பரம பதம்; புணர்க்கும்-அடைவிக்கும்]

என்ற வேதாந்த தேசிகரின் பாடல் மலையின் பெயரை மக்கள் மனத்தில் ஆழப்பதித்து விட்டது.

ஆழ்வார் பெருமக்களாலும் இராமாநுசராலும் அவர்பின் வந்த ஆசாரியப் பெருமக்களாலும் திருவேங்கடம்—நெடியோன் குன்றம்—பெரும்புகழ் பெற்றதைக் கண்டோம். இதனால் கற்றவர்கள், கல்லாதவர்கள், பக்தர்கள், சுற்றுலாச் செல்வோர் முதலிய எண்ணற்ற மக்கள் நாடோறும் திருமலைக்கு வருவதும் போவதுமாக உள்ளனர். திருவேங்கடமுடையான்மீது—வேங்கட

48. தேசி. பிரபந் - 82

மேவிய விளக்கின்மீது—எண்ணற்ற கதைகள், செவிவழிச் செய்திகள் எழுகின்றன. இவை தலபுராணத்திலும் இடம் பெற்று விடுகின்றன. சில தனிப்பாடல்களும் திருவேங்கட மலையைப் பற்றிப் புனையப் பெறுகின்றன. இவை மேலும் மேலும் மக்களிடையே பக்திச் சுடர் கிளர்ந்தெழுவதற்குக் காரணமாக அமைகின்றன. சில பாடல்கள் அழியா வாழ்வும் பெற்றுவிடுகின்றன.

''கூன்கொண்டு சென்றவன் கூன்நிமிர்ந்து ஓட,
குருடன் கொம்பில்
தேன்என்று காட்ட, முடவன்
அத்தேனை எடுக்க, அயல்
தான்நின்ற ஊமை எனக்கென்று
கேட்க தருவன்வரம்
வான்நின்ற சோலை வடமலை
மேல்நின்ற மாதவனே!''[49]

என்பது அங்ஙனம் அழியா வாழ்வு பெற்ற ஓர் அழகிய பாடல். மக்கள் மனத்தில் மலைமேலிருக்கும் மாதவன் நிலையான இடம் பெற்றிருப்பது போலவே பக்திச் சுவை கிளர்ந்தெழச் செய்யும் இப்பாடலும் நிலையான இடம் பெற்றுவிட்டது. இன்று மக்கள் மனமாகிய தேசப் படத்தில் மலையின் பெயரும் மலையன் பெயரும்—நெடியோன் குன்றமும் குன்றத்துக் கோயில் கொண்டுள்ள முகில் வண்ணனும்-அழியா வாழ்வு பெற்றுத் திகழ்கின்றன. திருப்பதியும் உலகத்திருத்தலப் பயணிகளின் பேரிடமாகத் திகழ்கின்றது.

இத்தனைச் சிறப்புகளுக்கும் காரணம் என்ன? திருவேங்கடமுடையான்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையேயாகும். இந்த நம்பிக்கையைத் திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்,

49. பழம் பாடல்

**"தானே சரணமுமாய்த்**
**தானே பலமுமாய்த்**
**தானே குறைமுடிக்கும்**
**தன்மையோன்—தேனேய்**
**திருவேங் கடந்தொழுதேம்**
**தீய விபூதிக்குள்**
**மருவோம்; கடந்தனெம்**
**வாழ்வு."**[50]

[சரணம்—உபாயம்; பலம்—பயன்; தேன்ஏய்—தேன் நிறைந்த; தீய விபூதி—லீலா விபூதி; மருவேம்—பொருந்தமாட்டோம்; கடந்தனெம்—கடந்து விட்டோம்].

என்று அழகாகக் கூறுவர். திருவேங்கடமுடையானை அடைவதற்கு அவனே உபாயமாக இருக்கின்றான்; அவனை அடைந்தவர்களுக்குப் பயனை அளிப்பவனாகவும் திகழ்கின்றான்; அவனை அடையவொட்டாமல் குறுக்கே வருகின்ற விரோதிகளையும் போக்குகிறவனாகவும் அமைந்து விடுகின்றான். இவன் வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கும் கலியுகவரதனாக இருப்பதால்தான் நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்து 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கு'கின்றனர். அவனும் குன்றின் மேலிட்ட விளக்காக இருந்து கொண்டு மக்களை ஈர்க்கின்றான். எண்ணற்ற அடியார்கள்—சைவர்கள், வைணவர்கள் உட்பட எல்லோரும்—நாள்தோறும் குவிந்த வண்ணம் உள்ளனர். இவர்கள் மனத்திற்குகந்த,

**"திருப்பதி மிதியாப் பாதம்**
**சிவனடி வணங்காச் சென்னி**
**இரப்பவர்க்கு ஈயாக் கைகள்**
**இனியசொற் கேளாக் காது**

50. நூ. திருப். அந் - 96

**புரப்பவர் தங்கள் கண்ணீர்**
**பொழிதரச் சாகாத் தேகம்**
**இருப்பினும் பயனென்? காட்டில்**
**எரிப்பினும் இல்லை தானே.''[51]**

என்ற 'பக்தி அவியல்' பாடலும் எழுந்து அழியா வாழ்வைப் பெற்றுவிட்டது.

51. விவேக சிந்தாமணி—28

# 2. சிங்கவேழ் குன்றுடை ஈசன்

வைணவ சமயத்தின் கொடுமுடியாகத் திகழ்வது சரணாகதி தத்துவம். இதனைப் பிரபத்தி எனவும் வழங்குவர். பிரபத்தியாவது பகவானை உபாயமாகப் பற்றுதல்.

**''சரணம் ஆகும்தன தாள்அடைந்**
**தார்க்கு எலாம்**
**மரணம் ஆனால்வை குந்தம்**
**கொடுக்கும் பிரான்.''[1]**

என்பது நம்மாழ்வார் திருவாக்கு. இறைவனிடம் சரண் புகுந்துவிட்டாலும், இருப்பூர்தி நிலையத்தில் வண்டி வரும் வரையில் காத்திருக்குமாப்போலே, மரணம் ஏற்படும் வரையில் (அதாவது, பிராரப்த கர்மம் முடியும் வரை) காத்திருக்க வேண்டியதுதான். பிராரப்தகர்மத்தை அநுபவித்தே கழிக்க வேண்டும். இறைவன் சஞ்சித கர்மத்தை 'தீயினில் தூசாகும்'படி செய்து விடுகின்றான் என்பது இத்திருவாய் மொழியின் கருத்தாகும்.

சாதி வேற்றுமை கருதாது எல்லோரும் எளிதாகப் பின்பற்றக் கூடிய வழி இப் பிரபத்தி.

**''பிரபத்திக்குத் தேசநியமமும், பிரகார நியமமும், அதிகாரி நியமமும் பல நியமமும் இல்லை.''[2]**

---

1. திருவாய் 9. 10 : 5
2. ஸ்ரீவச. பூஷ - 24 (புருடோத்த நாயுடு பதிப்பு)

என்பது ஸ்ரீவசன பூஷண சூத்திரம். நியமம் என்பது வரையறை. தேச நியமமாவது, தூயவிடங்களில் செய்ய வேண்டும், மற்றைய விடங்களில் செய்யலாகாதென்பது. கால நியமமாவது, வேனிற்காலம் முதலான காலங்களிலே செய்ய வேண்டும், மற்றைய காலங்களிலே செய்யலாகாது என்பது. பிரகார நியமமாவது, நீராடல் கால் கழுவுதல் என்பன முதலானவற்றை முன்னாகக் கொண்டு செய்ய வேண்டும். வேறுவகையில் செய்யவொண்ணாது என்பது.. அதிகாரி நியமமாவது, முதல் மூன்று வருணத்தவர்கள் அல்லாதவர்களாக இருக்கலாகாது என்பது. பல (பயன்) நியமமாவது, இம்மை மறுமைப் பலன்களில் இன்ன பலத்திற்கு இது சாதனம், மற்றைய பலன்களுக்கு இது சாதனம் அன்று என்பது.

"விஷய நியமமே உள்ளது"[3]

என்று கூறிய பிள்ளை உலக ஆசிரியர் "குணபூர்த்தியுள்ள விடமே விஷயமாகை"[4] என்று விளக்குவர். விஷய நியமம் என்பது 'இன்ன விஷயத்திலே செய்ய வேண்டும் என்ற நியமமே இந்தப் பிரபத்திக்கு உள்ளது' என்றபடி. 'குணபூர்த்தியுள்ள இடமே விஷயமாகை' என்பது பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளிலும் சௌலப்பியம் முதலிய குணங்கள் நிறைந்துள்ள இடமே விஷயமாகை என்றபடி.

"இங்குச் சொன்ன சௌலப்பியத்திற்கு எல்லை நிலம்
அர்ச்சாவதாரம்"[5]

என்பது முமுட்சுப்படி. இதனை விளக்கும் முறையில் பொய்கையாழ்வாரும் "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே"[6] என்று மொழிவர்.

3. ஸ்ரீவச. பூஷ—25
4. ஸ்ரீவச. பூஷ—37
5. முமுட்சு—139
6. முதல் திருவந்—14

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்டவண்ணம் சிங்கவேழ் குன்றம் திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றோம். நம் அருமை நண்பர் டாக்டர் வரதாச்சாரியாரின் திருக்குமாரன் நாராயணனும் உடன் வருகின்றான். சிங்கவேழ் குன்றம் என்ற இத்திருத்தலம் ஆந்திர மாநிலத்தில் உள்ளது. சென்னை—பம்பாய்இருப்பூர்திப் பாதையிலுள்ள கடப்பையிலிருந்து பேருந்து வசதியுண்டு; நந்தியால், கர்நூல் என்ற இடங்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. கடப்பையிலிருந்து ஆர்லகட்டா வரையில் பேருந்தில் போகவேண்டும்; அங்கிருந்து சற்றேறக் குறைய 15கி.மீ. தொலைவிலுள்ளது சிங்கவேழ் குன்றம். பேருந்து வசதி உண்டு; அடிக்கடி இல்லை. திருப்பதியிலிருந்து பேருந்து மூலமாகவே இத்திருத்தலத்தை வந்தடைகின்றோம். ஆர்லகட்டாவிலிருந்து பேருந்தில் வருங்கால் மலையருகில் வந்துவிடுகின்றோம். அச்சத்தை விளைவிக்கும் அடவி தென்படுகின்றது. சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகள் வாழும் இடம்போல் காட்சியளிக்கின்றது மலையிலுள்ள அடவி. முட்புதர்களும், முள் மரங்களும் நெருங்கிக் கிடக்கும் காட்சி எம்மருங்கும் காணப்படுகின்றது.

பேருந்தில் வந்து கொண்டிருக்கும் பொழுதே இத்திருத்தலத்தின் பெயரில் ஆழங்கால் படுகின்றோம். இத்திருப்பதி இப்பொழுது 'அகோபிலம்' என்று வழங்கப் பெறுகின்றது, இது புராணப் புகழுடன் ஏற்பட்ட பெயர். வடநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று இது. ஆழ்வார் பாசுரத்தில் இது சிங்கவேழ் குன்றம் என்று குறிப்பிடப் பெறுகின்றது. சிங்கவேள் குன்றம் என்றும் வழக்குவதுமுண்டு. இப்படி வழங்கும்போது சிங்கம்-நரசிம்ம வடிவாய், வேள்-யாவராலும் விரும்பப்பெறுகின்ற கட்டழகுடையவரான பெருமான், குன்றம்-திருமலை எனப் பொருள்படும். சிங்கவேழ் குன்றம் என்னும்போது நரசிங்கப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஏழு குன்றங்

களையுடைய தலம் எனப் பொருள்படும். ஸ்ரீபர்வதம் அல்லது நல்ல மலைத்தொடரில்தான் இக்குன்றம் அமைந்துள்ளது. தொடரின் தலைப்பகுதியே ஏழுமலையான் திருக்கோயில் கொண்டுள்ள திருமலை; உடற்பகுதி அகோபிலம்; வால்(கால்) பகுதி ஸ்ரீசைலம் என்ற திருத்தலம்.

சிங்கவேள் குன்றம் கருடாத்திரி, வேதாத்திரி, வீர க்ஷேத்திரம், அகோபலம், அகோபிலம் என்ற திருப்பெயர்களாலும் வழங்கப்பெறுகின்றது. பிறப்பிலேயே விஷ்ணு சித்தனாகப் பிறந்த கருடன் பல்லாண்டுகள் பரமபத நாதனை நோக்கித் தவம் செய்து தனக்கு 'கருடவாகனன்' என்ற பெயர் வழங்கவேண்டும் என்றும், தான் தவம் புரிந்த மலை '**கருடாத்திரி**' (அத்திரி—மலை) என்ற பெயர் பெறவேண்டும் என்றும் இரண்டு வரங்களைப் பெற்றதால் கருடாத்திரி என்ற பெயர் பெற்றது. சோமகன் என்ற ஓர் அசுரன் நான்முகனிடமிருந்து நான்கு மறைகளையும் அபகரித்துச் சென்றான். திருமால் அவ்வசுரனைக் கொன்று மறைகளை மீட்டார். பின்னர் நான்மறைகளும் இந்த மலையில் நீண்ட காலம் திருமாலை நோக்கித் தவம் புரிந்து தமக்கு ஒருகாலத்திலும் ஒருவராலும் ஒருவிதத்திலும் ஆபத்து நேரிடாது என்ற வரத்தைப் பெற்றன. இனி இத்திருமலையும் '**வேதாத்திரி**' என்ற பெயரால் வழங்கப்பெறும் என்ற வரத்தையும் ஈந்தார். எம்பெருமான் தூணில் நரசிங்கமாக அவதரித்து அப்பொன் பெயரோன் மார்பினைத் தம் வள்ளுகிரால் வகிர்ந்து தம் வீரத்தினை வெளிப்படுத்தினதால் வீரக்ஷேத்திரம் என்றும், அகோபிலம் என்றும் தாமே உகந்து இப்பெயர்களை இடுகின்றார். அகோபிலம் என்பது புராணப் புகழால் ஏற்பட்ட பெயராகும்.

மலை அடிவாரம் 'கீழ் அகோபிலம்' என்றும், அடிவாரத்திலிருந்து சுமார் எட்டு கிலோ மீட்டர்

தொலைவிலும் கடல் மட்டத்திற்கு 3000அடி உயரத்திலும் உள்ள மலை உச்சிப்பகுதி 'மேல் அகோபிலம்' என்றும் வழங்கப் பெறுகின்றன. கீழ் அகோபிலத்தினருகில் எந்தச் சிற்றூரும் இல்லை. திருத்தலப் பயணிகட்குப் பால், தயிர், மோர் முதலியன வழங்குவதற்காக ஒரு சில மலைவாசிகள் அடிவாரத்திலுள்ள திருக்கோயிலின் வெளிப்பகுதிகளில் தங்கியுள்ளனர். சில ஆண்டுகளாக திருமலை - திருப்பதி தேவஸ்தானம் கட்டியுள்ள பல அறைகளுடன் கூடிய விடுதி வசதி திருத்தலப் பயணிகட்குக் கிடைக்கின்றது. நல்ல வசதிகளுடன் கூடிய உணவு விடுதிகள் இல்லை. திருப்பதி நண்பர் திரு தி. கி. கோபாலசாமி அய்யங்கார் முன்னதாகக் கடிதம் எழுதியதால் நாம் தங்குவதற்குத் திருக்கோயில் மேலாளர் திரு. இலக்குமிநரசிம்மன் தம் வீட்டிலேயே வசதிகள் செய்து தருகின்றார். மேல் அகோபிலத்திற்குச் செல்வதற்கு அவரே மாட்டு வண்டி ஒன்றினையும் அமர்த்தித் தருவதுடன் மலைமேல் பகலுணவுக்கு பிரசாதவகைகளை வழங்கவும் ஏற்பாடு செய்துவிடுகின்றார்: அர்ச்சகர், நாராயணன், நான் ஆகிய மூவரும் காலைச் சிற்றுண்டிக்குப் பின்னர் புறப்படுகின்றோம் மலையை நோக்கி.

வண்டியில் போகும் போதே இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ள திருமங்கையாழ்வாரின் திருப்பாசுரங்களில் ஆழங்கால் படுகின்றோம். சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்றும் வைணவ சமய தத்துவங்கள். சித்து என்பது உயிர்; அசித்து மக்கள், விலங்கு முதலியவற்றின் உடம்பு முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான பிரகிருதி; இதனை மூலப்பகுதி என்றும் வழங்குவர். ஈசுவரன், இறைவன். இவை மூன்றும் தனித்தனி இயல்புடைய வேறு வேறு பொருள்கள்; என்றும் அழிவில்லாதவை. ஆயினும் எக்காலத்தும் இவை மூன்றும் சேர்ந்தே உள்ளன.

ஆழ்வாரின் ஒவ்வொரு பாசுரத்திலும் இம்மூன்று தத்துவங்களும் நன்கு பொருந்தி அமைந்திருப்பதனைக் காணலாம்.

> "அங்கண்ஞாலம் அஞ்ச அங்கு
> ஓர்ஆள்அரியாய் அவுணன்
> பொங்கஆகம் வள்உகிரால்
> போழ்ந்த புனிதன்இடம்;
> பைங்கண்ஆனைக் கொண்டு
> பத்திமையால் அடிக்கீழ்
> செங்கண்ஆளி இட்டுஇறைஞ்சும்
> சிங்கவேழ் குன்றமே"[7]

[ஞாலம்-பூமி; அரி-சிங்கம்; அவுணன்-அரக்கன் உகிர்-நகம்; ஆளி-சிங்கம்]

என்பது பாசுரம். ஆழ்வார் பாசுரங்கள் ஒவ்வொன்றிலும் முன்னடிகளில் நரசிம்மாவதார வரலாறும், பின்னடிகளில் சிங்கவேழ் குன்றத்தின் நிலைமையும் வருணிக்கப்பெற்று வைணவ தத்துவங்கள் குழைந்து பெய்யப் பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம்.

முதலில் ஆழ்வார் காட்டும் மலையின் சூழலில் ஆழங்கால் படுவோம். அடர்ந்த காடுகள் நெருங்கி இருப்பது இத்திருமலை. ஆழ்வார் அச்சந்தரும் ஒரு நிலையைக் காட்டுகின்றார். நாம் வண்டியில் செல்லுங் கால் இத்தகைய ஒரு சூழ்நிலையைக் காணத்தான் செய்கின்றோம். "வண்டினம் முரலும் சோலை, மயிலினம் ஆலும் சோலை, கொண்டல்மீது அணவும் சோலை, குயிலினம் கூவுஞ்சோலை"[8] என்று தொண்டரடிப் பொடிகள் காட்டும் அரங்கநகர்ச் சூழ்நிலை இங்கு இல்லை. பிறகு என்னதான் அங்கிருந்தது?

7. பெரி. திரு. 1. 7:1
8. திருமாலை-14

**''ஓய்ந்தமாவும் உடைந்தகுன்றும்**
**அன்றியும் நின்றழலால்**
**தேய்ந்தவேயும் அல்லதுஇல்லாச்**
**சிங்கவேழ் குன்றமே''[9]**

*[ஓய்ந்த- களைத்துப்போன; மா-விலங்குகள்; அழல் நெருப்பு; வேய்-மூங்கில்]*

என்கின்றார் ஆழ்வார். ''அலைந்து திரிந்து களைத்துப் போன மிருகங்களை அங்குக் காணலாம்; மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புப் பற்றி எரிந்து குறை கொள்ளியாக இருக்குமாற்றைச் சிறப்பாகக் காணலாம். இன்னும்,

**''காய்த்தவாகை நெற்றொலிப்பக்**
**கல்லதர்வேய்ங் கழைபோய்**
**தேய்த்ததீயால் விண்சிவக்கும்**
**சிங்கவேழ் குன்றமே.''[10]**

*[காய்த்த-காய்கள் நிறைந்த; ஒலிப்ப-ஒலியுண்டாக்க; கல் அதர்-கல்வழி; வேய்கழை-குழல் மூங்கில்]*

என்று காட்டுவார் ஆழ்வார் ''வாகை நெற்றுகள் காற்று வீசுவதால் ஒலிக்கின்றன. மூங்கில்கள் உராய்வதால் உண்டான செந்தீ விண் முழுவதையும் சிவக்கச் செய்கின்றது'' என்கின்றார். சில சமயம் சுழல் காற்று சிவந்த நெருப்பை வாரிக்கொண்டு விண் முழுவதும் ஓடிப் பரவுகின்றது.[11] மூங்கில்கள் நெருப்பில் வேகின்றபோது ஒலி உண்டாகின்றது; அந்த நெருப்பில் கற்களும் வேகின்றன.[12] மேலும் அந்த மலைச் சூழ்நிலையில் நெல்லி மரங்கள் கல்லிடைகளில் முளைத்து வளர்ந்து அவற்றினிடையே வேரோடு-கையினால் அந்த வேர்கள் பருத்துப் பாறைகளையும்

9. பெரி. திரு. 1. 7:3
10. டி. 1.7 : 8.
11. டி. 1.7 : 5
12. டி. 1.7 : 7

பிளந்து தள்ளுகின்றன.[13] நாம் வண்டியில் செல்லும் போது ஆழ்வார் காலத்தில் நிலவிய சூழ்நிலையை இன்றும் காணலாம்படி உள்ளதே என்று வியப்பில் ஆழ்கின்றோம்.

இங்ஙனம் அச்சத்தை விளைவிக்கும் அடவியில் யானை, சிங்கம், புலி முதலிய கொடிய விலங்குகள் இங்கு மங்கும் ஓடியலைந்து ஓய்ந்து நிற்கின்றன.[14] மூங்கில் புதர்களினின்றும் புலிகள் பெருவழியில் வந்து சேர்ந்து யானைகள் நடமாடின அடையாளங்களைக் கூர்ந்து ஆராய்கின்றன.[15] அவை உலாவின இடங்களைத் தேடித் திரிகின்றன. மற்றும் இங்கு நடுப்பகலில் பகலவன் காலும் வெப்பம் தாங்கமாட்டாது நாய்களும், கழுகுகளும் அவ்விடத்தில் நடக்கும்பொழுது கால் தடுமாறித் திண்டாடுகின்றன.[16] எம்பொருமானின் சந்நிதான மகிமையினால் அவ்விடத்து மிருகங்களும் பகவத் பக்தியில் திளைக்கின்றன. சிங்கங்கள் களிறுகளைக் கொன்று அவற்றின் கோடுகளைப் பிடுங்கிக்கொண்டு வந்து எம்பெருமான் திருவடிகளில் வைத்து பகவதாராதனம் நடத்துகின்றன[17]. "இவற்றுக்கு ஆனைகளின் மேலே சீற்றம் மாறாதே யிருக்கச் செய்தேயும், பகவத் பக்தி ஒரு படிப்பட்டுச் செல்லுமாயிற்றே; சீற்றம் விக்ருதியாய் (தோன்றியது) பகவத் பக்தி ப்ரகிருதியாய் (மூலகாரணமாய்) இருக்குமாயிற்று" என்ற வியாக்கியானப் பகுதி அநுபவித்து மகிழத் தக்கது. எம்பெருமானுடைய வரலாறு எதுவாயிருந்தாலும் அஃது ஆழ்வார்களுடைய நெஞ்சைக் கவர்வதுபோல் அப்பெருமான் உகந்தருளின நிலங்களில் உள்ளவை எதுவாயிருப்பினும் 'அவ்விடத்தவை' என்ற காரணத்தினால் எல்லாம் இந்த ஆழ்வாருக்கு

13. பெரி. திரு. 1.7 : 9
14. ஷை. 1.7 : 3
15. ஷை. 1.7 : 2
16. ஷை. 1.7 : 4
17. ஷை. 1.7 : 1

இன்பம் தருவனவாகும். "பிறர்க்குக் குற்றமாய்த் தோன்றுபவையும் உபாதேயமாய்த் தோற்றுகையிறே ஒரு விஷயத்தை உகக்கையாகிறது"[18] என்ற வியாக்கியான பகுதி சிந்திக்கத் தக்கது.

இந்தச் சூழ்நிலையில் மக்களின் நடமாட்டத்தையும் பற்றிப் பேசுகின்றார் ஆழ்வார்.

> **"மலைத்தசெல் சாத்தெறிந்தபூசல்**
> **வன் துடி வாய்கடுப்ப**
> **சிலைக்கே வேடர் தெழிப்பறாத**
> **சிங்கவேழ் குன்றமே."[19]**

[மலைத்த-ஆக்கிரமிக்கப் பெற்ற; சாத்து-திருத்தலப் பயணிகளின் கூட்டம்; பூசல்-போர், பேரொலி; துடி-பறை; வாய்கடுப்ப - ஒலிக்க; தெழிப்பு-ஆரவாரம்]

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. திருத்தலப் பயணமாகப் பலர் அந்த அடவியில் செல்லுகின்றனர். அவ்விடத்து வேடர்கள் அவர்களைத் தகைந்து போரிடுவர். ஒருவரோ டொருவர் பெரும்போர் நடத்துவர். அப்போரில் வேடர் களின் வில்லோசையும், பறையோசையும் இடைவிடாது இருந்துகொண்டே இருக்கும். இப்பொழுது இம்மலையில் வாழும் வேடர்கள் 'செஞ்சு' என்ற பெயர்களால் வழங்கப் பெறுகின்றனர். இவர்கள் மரபில் பிறந்த மங்கை யொருத் தியை எம்பெருமான் உகந்து மணந்துகொண்டதாகத் தல வரலாறு கூறுகின்றது. இதனால் இப்பகுதி மகளிருக் குச்செஞ்சுலட்சுமி என்று பெயரிடும் வழக்கமும் இருந்து வருகின்றது.

இனி, பாசுரங்கள் தோறும் நரசிம்மாவதாரப் பெருமையில் ஆழ்வார் ஆழங்கால் படுவதையும் காண் போம். இரணியனை மாய்க்கும் பொருட்டும், அவன்

18. பெ. 1.7 : 3 இன் உரை.
19. பெ. 1.7 : 2

மகன் பிரகலாதனை காத்து ஆட்கொள்ளும் பொருட்டும் நரசிங்கப் பெருமான் அவதரித்தனன் என்பதை நாம் அறிவோம்.

''எங்கும் உளன்கண்ணன் என்ற
மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால் என்று
இரணியன் தூண்புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன்
வீயத் தோன்றியஎன்
சிங்கபிரான் பெருமை
ஆராயும் சீர்மைத்தே.''[20]

[காய்ந்து-சினந்து; புடைப்ப-தட்ட; வீய-இறக்க]

என்று நம்மாழ்வார் இந்த அவதாரத்தில் ஆழங்கால் படுவர். பெரியாழ்வாரும்,

''அளந்திட்ட தூணை அவன்தட்ட, ஆங்கே
வளர்ந்திட்டு வாள்உருச் சிங்க உருவாய்.''[21]

என்று அந்த அவதாரத்தை அநுபவித்து மகிழ்வர். கம்பநாடனும்,

''நசைதிறந் திலங்கப் பொங்கி
நன்றுநன் றென்ன நக்கு
விசைதிறந் துருமு வீழ்ந்த
தென்னவே தூணின் வென்றி
இசைதிறந் துயர்ந்த கையால்
எற்றினன்; எற்ற லோடும்
திசைதிறந் தண்டங் கீறி
சிரித்தது செங்கட சீயம்''[22]

20. திருவாய் - 2. 8 : 9
21. பெரியாழ். திரு. 1. 6 : 9
22. கம்ப. யுத்த-இரணி-127

[நசை-விருப்பம்; நக்கு-சிரித்து; உருமு-இடி; இசை-புகழ்; எற்றினன் - அறைந்தனன்; திசை-திக்கு; கீறி-பீறி]

என்று நரசிங்கப்பெருமான் தூணினின்றும் வெளிப்போந் தன்மையைக் காட்டுவான். இத்தகைய பெருமான் திருக்கோயில் கொண்ட இடம் சிங்கவேழ் குன்றமாகும்.

இந்த சிங்கவேழ் குன்றத்தில் எம்பெருமான் ஒன்பது இடங்களில் ஒன்பது நரசிம்மர்களாக எழுந்தருளியுள்ளான். ஒன்பது நரசிம்ம சந்நிதிகளுள் முதன்மையானதும் முக்கியமானதுமான கஜதீர்த்தக்கலையில் எழுந்தருளியிருக்கும் **அகோபில நரசிம்மர்** (1) சந்நிதி. இவர் சக்கராசனத்தில் எழுந்தருளியுள்ளார். திருக்கைகளில் பஞ்சாயுதங்கள். இந்த எம்பெருமானை நான்முகனும் சிவனும் நாத்தழும்ப முறையால் ஏத்தினதாகப் புராண வரலாறு. மேல் அகோபிலத்துக்கு வண்டியில் போகும்போதே வண்டியினின்றும் இறங்கி வழியிலுள்ள இரண்டு நரசிம்மர்களைச் சேவிக்கின்றோம். இவர்கள் கீழ்அகோபிலத்தினின்று சுமார் இரண்டரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளனர். ஒருவர் **சத்ர வட நரசிம்மர்** (2) இவர் ஒரு அரச மரத்தடியில் கிழக்கே திருமுகமண்டலத்துடன் அரவணை மேல் வீற்றிருந்த திருக்கோலமாய் அதிகாம்பிரியத்துடன் சேவை சாதிக்கின்றார். இவ்வெம்பெருமானுக்கு இசையில் திருவுள்ளம் அதிகம் என்று சொல்லப்பெறுகின்றது. மற்றொருவர் **யோக நரசிம்மர்** (3). இவர் ஒரு சிறிய திருக்கோயிலில் கால்மீது கால்போட்டுக்கொண்டு முன்னிரண்டு கைகளும் முழங்கால்களின்மீது தங்கிய வண்ணம் யோகம் செய்யும் பாவனையில் எழுந்தருளியுள்ளார்.

மேல் அகோபிலத்திலுள்ள திருக்கோயில் கருடாத்திரி, வேதாத்திரி என்ற இரண்டு குன்றுகளுக்கிடையேயுள்ள பாவநாசினி என்ற நதியருகில் அமைந்துள்ளது. தெற்குப்

புறத்தில் மூன்று குகைகள் உள்ளன. நடுவிலுள்ள குகையில் கற்பாறையில் குடைந்தெடுக்கப்பெற்ற திருக்கோயிலில் எழுந்தருளி யிருப்பவரே **உக்கிர நரசிம்மர்** (4); இருந்த திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலம் கொண்டவர். இவரே இத்திருத்தலத்தின் நாயகர். தாயார் இலக்குமி நாச்சியார். இவர் இரணியனின் மார்பைத் தம் நகங்களால் கிழிக்கும் நிலையில் காட்டப் பெற்றுள்ளார். இவரைத்தான் ஆழ்வார் 'அவுணன், பொங்க ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன்' (1), 'கொலைக் கையாளன் நெஞ்சு இடந்த கூருகிராளன்' (2), 'அவுணன் வாய்ந்த ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த அம்மான்' (3), 'பொன்பெயரோன் இன்னுயிரை வவ்வி ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த அம்மான்' (4), 'அவுணன் பொன்ற ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன்' (5), எரிந்த பைங்கண் இலங்கு பேழ்வாய் எயிற்றோடு இது எவ்வுரு என்று, இரிந்து வானோர் கலங்கியோட இருந்த அம்மான்' '(6), 'மூவுலகும் பிறவும் அனைத்தும் அஞ்ச ஆளரியாய் இருந்த அம்மான்' (7) என்று[23] மங்களா சாசனம் செய்துள்ளார். பாசுரங்கட்குக் குரல் கொடுத்து இவரைச் சேவிக்கின்றோம். இத்திருக் கோயிலுக்குக் கீழ்த் திசையில் சுமார் முக்கால் கிலோ மீட்டர் தொலைவில் கோயில் கொண்டிருப்பவர் **வராக நரசிம்மர்** (5); இவர் பூமிப்பிராட்டியைத் தம் மடியில் தாங்கிக்கொண்டு சேவை சாதிக்கின்றார். இங்கிருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் செங்குத்தான கண்டாத்திரி எனப் படும் குன்றில் கோயில் கொண்டிருப்பவர் **பிரகலாத நரசிம்மர்** (6); இவர் குகையொன்றில் இலக்குமி தம் மடியி லிருந்த வண்ணம் சாந்தமூர்த்தியாகக் காட்சி அளிக் கின்றார். இங்கிருந்த உற்சவமூர்த்தி ஆதிவண் சடகோப ரால் (மடத்தை நிறுவியவர்) அகோபில மடத்தில் வைக்கப்

23. பெரி. திரு. 1.7:1-7.

பெற்றுள்ளதாக அறிகின்றோம். பிரகலாத நரசிம்ம னருகில் 'பிரகலாத பாறை' என வழங்கும் கல்மேடை ஒன்றுள்ளது. இதிலமர்ந்துதான் பிரகலாதன் எம்பெருமானிடம் பாடங்களைப் பயின்றான் என்பது புராண வரலாறு. இங்கிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் 'உக்குஸ்தம்பம்' வன வழங்கும் தூண் உள்ளது. இதுவே இரணியன் புடைத்த தூண்; எம்பெருமான் நரசிம்ம உருவமாய் வெளிப்பட்ட தூண். இங்கிருந்து சுமார் இரண்டரை கிலோ மீட்டர் தொலைவில் சேவை சாதிப்பவர் **ஜுவால நரசிம்மர்** (7); இப்பெருமானுக்குக் கார்த்திகைத் திங்களில் நெய்யில் அல்லது எண்ணெயில் திரு விளக்கு ஏற்றும் வழக்கம் இருந்து வருகின்றது. இங்கிருந்து (அல்லது கீழ் அகோபிலத்திலிருந்து) சுமார் ஏழரை கிலோ மீட்டர் தொலைவில் ஸ்வேதாத்திரி குன்றில் எழுந்தருளி இருப்பவர் **பாவன நரசிம்மர்** (8); இவரைப் **பார்முலிடி நரசிம்மர்** என்றும் வழங்குவதுண்டு. மலை அடிவாரத்தில் எழுந்தருளியிருப்பவர் **மாலோல நரசிம்மர்**. இவரை ஆராதன தெய்வமாகக் கொண்டுதான் பிற்காலத்தில் அகோபில மடம் நிறுவப்பெற்றதாக வரலாறு. மலையடிவாரத்திலிருந்து சற்றுத் தொலைவில் அட்சய தீர்த்தத்திற்கு அருகில் எழுந்தருளி இருப்பவர் **பார்க்கவ நரசிம்மர்** (9); வடக்கு நோக்கிய திருமுக மண்டலத்தர். அட்சய தீர்த்தத்தில் என்றும் நீர் அமுத தாரையாய் வற்றாது இருக்கும்; திருத்தல பயணிகட்கு நீர் வசதியை நல்குவது.

இந்த ஒன்பது நரசிம்மர்களையும் சேவித்த நாம் 'சென்று காண்டற் கரிய' (5), 'தெய்வமல்லால் செல்ல வொண்ணா' (4) என்ற ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்டு அநுபவிக்கின்றோம். 'அல்லி மாதர் புல்க நின்ற ஆயிரந் தோளனை'[24] சேவித்த களிப்பில் மூழ்கி

24. பெரிய. திரு. 1.7:9

யுள்ள நாம். "இவளனைத்தால் (பெரிய பிராட்டியார்) இவளைக் கட்டிக்கொள்ள ஆயிரந்தோள் உண்டாமா யிற்று" என்ற பெரியவர்ச்சான் பிள்ளையின் உரை நயத்திலும் ஆழங்கால் படுகின்றோம்.

எம்பெருமானை அநுபவித்த பிறகு அவன் அருளிய பிரசாதங்களையும் உண்டு பசியாற்றிக்கொள்ளு கின்றோம். இந்த வசதிகளைச் செய்து தந்த இலக்குமி நரசிம்மன் என்ற திருக்கோயில் மேலாளரையும் நன்றி யுடன் நினைக்கின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நிறைவுக்கு வர அதனையும் ஓதி உளங்கரை கின்றோம்.

"வாழ்குமரன் மேற்கனக
 வஞ்சகன்மேல் ஓர்முகத்தே
சூழ்கருணை யும்முனிவும்
 தோன்றியவால்—கேழ்கிளரும்
அங்கவேள் குன்ற
 அழல்சாபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி
 னார்க்கு"[25]

[வாழ்குமரன் - பிரகலாதன்; ஓர்முகம் - ஒருபால்; கருணை - பேரருள்; முனிவு-சினம்; கேழ் - நிறம்; அங்கவேள்-மன்மதன்; குன்ற-சாம்பலாதல்; அழல்-கோபித்த; பிளந்த-பிளந்து அழித்த]

இரணியன்மீது சினமும் பிரகலாதன்மீது திருவருளும் நரசிங்மூர்த்திக்கு ஒருங்கே தோன்றின அற்புதச் செயலை எண்ணி எண்ணி வியக்கின்றோம்.

ஆண்டுதோறும் மாசி மாதம் பத்து நாட்கள் பெரு விழா (பிரம்மோத்சவம்) நடைபெற்று முழுமதியம் அன்று

25. நூற். திருப். அந் - 97

நிறைவு பெறுகின்றது. பாஞ்சராத்ர ஆகமப்படிகீழ் அகோபிலத்தில நாளொன்றுக்கு மும்முறையும், மேல் அகோபிலத்தில் ஒரு முறையும் (உச்சிக்கால மட்டிலும்) பூசை நடைபெறுவதாக அறிகின்றோம். திருத்தலப் பயணம் நன்னிலையில் நிறைவு பெற்ற மகிழ்வுடன் மாலையில் வந்த வண்டியிலேயே கீழ் அகோபிலம் வந்து சேர்கின்றோம்.

# 3. அயோத்தி நகர்க் கோமான்

அயோத்தியை நினைக்கும்பொழுது அந்த நகர்க் கோமான் இராமனே நம் நினைவுக்கு வருகின்றான். நம்மாழ்வாரும்,

> **"கற்பார் இராமபிரானை அல்லால்**
> **மற்றும் கற்பரோ?"[1]**

என்றல்லவோ கூறிப் போந்தார்? தசரத சக்கரவர்த்தியின் கட்டளைப்படி காட்டிற்குப் புறப்பட்ட இராமபிரானைத் தேரிலேற்றிக் கொண்டு போய்க் கங்கைக் கரையில் விட்டுத் திரும்பிய சுமந்திரன் சக்ரவர்த்தியிடம் சொல்லு கிறான்: "பெருமானே, உம்முடைய திருக்குமாரன் நாட்டைவிட்டுக் காட்டுக்குச் செல்லுகின்றானே என்ற துயரத்தினால் மரங்களெல்லாம் வாடியுலர்ந்து போயின; நதிகள், குளங்கள், குட்டைகள் இவை யாவும் கரை யருகில் அடிவைக்க வொண்ணாதபடி கொதிப்படைந்தன; பொழில்கள் யாவும் இலையுலர்ந்து அழகழியப் பெற்றன" என்கின்றான். இப்படி உயிரற்ற பொருள் களையும் விகாரப்படுத்திக்கொண்டு காட்டுக் கெழுந் தருளினவன் பதினான்கு யாண்டுகள் கழிந்து மீண்டும் திருவயோத்திக்கு எழுந்தருளுகையில், பொழில்கள் யாவும் செழிப்புற்றோங்கின என்கின்றார் வால்மீகி பகவான். இங்ஙனம் இராமபிரானின் குணப்பெருமை பேசப் பெறுகின்றது இராமாயணத்தில்.

---

1. திருவாய் - 7.5 : 1

இராமனது கதையைக் கூறுவது இராமாயணம். என்றாலும், இராமகாதை சிறையிருந்தவளின் பெருமையைப் பரக்கப் பேசுகின்றது.

**"இதிகாச சிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால்**
**சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகின்றது"[2]**

என்பது பிள்ளை உலக ஆசிரியரின் திருவாக்கு. நம்மாழ்வாரின் "தனிச்சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள்"[3] என்ற திருவாய்மொழித் தொடரே இங்ஙனம் இவர் அருளிச் செய்ததற்கு மூலம். பிராட்டியினுடைய பேரருளின் மிகுதியைத் தெளிவு படுத்துவதற்காகவே 'பிராட்டி' என்னாது **'சிறையிருந்தவள்'** என்று அருளிச் செய்கின்றார். தன் அடியவர்களான தேவமகளிரின் சிறையை விடுவிக்கும் பொருட்டுத் தன் அருளாலே, தேவதேவனுடைய பட்டத்துத் தேவியான தன்னுடைய பெருமையையும் பாராது, தானே வலியச் சிறைப் பட்டாள். குழவி கிணற்றினிலே விழுந்தால் உடன் குதித்தெழும் தாயைப்போலே, இவ்வுயிர்கள் விழுந்த பிறவிப் பெருங்கடலிலே தானும் ஒக்கவந்து பிறந்து இவர்கள் பட்டவற்றை எல்லாம் தானும் பட்டுக் காப்பாற்றுகையாலே, ஒரு காரணம்பற்றி வாராத தாயாகிற சம்பந்தத்தால் வந்த அளவற்ற அன்பு என்ற திருக்குணத்திற்கு இச்சிறையிருப்பு ஒரு விளக்கமாகும். திருவருள் புரிதலையே காரணமாகக் கொண்டதாகையாலே இவளுக்குப் பேரொளியைத் தருகிறது இச்சிறையிருப்பு. அநுமனும் இவள் பெருமையை.

**"விற்பெருந் தடந்தோள் வீர!**
**வீங்குநீர் இலங்கை வெற்பில்**
**நற்பெருந் தவத்த ளாய**
**நங்கையைக் கண்டேன் அல்லேன்;**

2. ஸ்ரீவச. பூஷ—5 (புருடோத்தம நாயுடு பதிப்பு)
3. திருவாய். 4. 8:5

இற்பிறப்பு என்ப தொன்றும்
இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்.''[4]

[வேற்பு-மலை; பொறை-பொறுமை]

என்று 'தவம் செய்த தவமாம் தையலின்' பெருமையை எடுத்தோதுகின்றான். ''இராமாயண காவியம் முழுவதும் பிராட்டியின் பெருமை பொருந்திய சரிதமே''[5] என்று வால்மீகி பகவானும் வாயோலையிட்டு வைக்கின்றான். இதனைத் திருவுளங்கொண்ட பராசரபட்டர்[6] ''என் தாயே, ஸ்ரீமத் ராமாயணமும் உன்னுடைய சரிதையைச் சொல்லியே வாழ்கின்றது''[7] என்று அருளிச் செய்தார்.

வாரணாசியில் நகரத்தார் விடுதியில் தங்கியிருக்கும் நம்முடைய மனத்தில் இந்த எண்ணங்கள் அலையிட்டு எழுகின்றன. இந்த நிலையில் பகலுணவிற்குமேல் திருவயோத்திக்குப் புறப்படுகின்றோம். இந்தத் திவ்விய தேசம் வாரணாசிக்கும் இலக்னோவிற்கும் இடையில் கிழக்கு இருப்பூர்திப் பாதையில் உள்ளது. இதுவும் ஓர் இருப்பூர்தி நிலையமே இது பைசபாட் என்ற நிலையத்திலிருந்து ஏறக்குறைய மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அயோத்தி இருப்பூர்தி நிலையத்திலிருந்து ஊருக்குச் செல்வதற்குத் தோங்காக்கள் (ஒருவகையான குதிரை வண்டிகள்) கிடைக்கும். நமக்குத் துணை செய்வதற்கென்றே அன்று காலையிலேயே விடுதியிலிருந்து, விடுதித் தொண்டர் ஒருவரை அனுப்பியிருந்தார் விடுதிப்

4. கம்ப சுந்தர. திருவடிதொழு—62
5. ஸ்ரீராமா. பால—4:7
6. இவர் கூரத்தாழ்வானுடைய புதல்வர்; எம்பாருடைய மாணாக்கர் நஞ்சீயருக்கு ஆசிரியர்.
7. ஸ்ரீ குணரத்ந கோசம்—14

பொறுப்பாளர் வினை தீர்த்தான் செட்டியார். இத் தொண்டர் நிலையத்திலிருந்து தோங்காவில் அயோத்தி யிலிருக்கும் நகர விடுதிக்கு நம்மை இட்டுச் செல்லு கின்றார். மாலை நேரமாதலின் எங்கும் வெளிச்செல்ல வில்லை. இரவு சிற்றுண்டி கொண்டு விடுதியில் துயில் கொள்ளுகின்றோம்.

அதிகாலையில் எழுந்து சரயு நதிக்கு நீராடச் செல்லு கின்றோம். விடுதியிலிருந்து நடந்து செல்லக்கூடிய தொலைவில்தான் உள்ளது இந்தப் பேராறு. இந்த ஆற்றைக் கண்டதும்,

**சரயு என்பது தாய்முலை அன்னதிவ்**
**உரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம்**[8]

[உரவுநீர்-உலாவும் தன்மையுள்ள

என்ற கம்பன் வாக்கு நினைவிற்கு வருகின்றது. சிறு குழந்தைக்குத் தாய்முலை பயன்படுவதைப்போல் சரயு நதி பிராணிகட்குப் பயன்படுகிறது. தாயின் முலைப்பால் குழந்தையை வளர்த்தல் போல், சரயு தன் நீரை இவ்வுலகத்தாரை உண்பித்தும், உணவுப் பொருள்களை உண்டாக்கியும் வளர்க்கின்றது. இந்நதி கோதாவரியைப் போல் மிக அகன்றது. கங்கையைப்போல் இதன் நீரோட்டம் வேகமாக இல்லை; மிக மெதுவாகவே செல் கின்றது. இதில் நீராடுவோருக்கு யாதொரு ஆபத்தும் இல்லை. இதில் நீராடுவது மனத்திற்கு மிகவும் மகிழ்ச்சி யைத் தருகின்றது. நீராடிய பின்னர் விடுதிக்குத் திரும்புகின்றோம்.

அயோத்தி என்ற திருத்தலத்தைக் குலசேகராழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் என மூன்று ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

8. கம்ப. பால. ஆற்று-12

அயோத்திக்கு அரசனான இராமன் சுற்றமெலாம் பின் தொடரத் தொல்கானம் அடைதல், தனக்கே அற்றுத் தீர்ந்த அடியார்கட்கு அருமருந்து போலிருத்தல்[9], வாலியை வானுலகுக்கு ஏற்றிக் கதிரவன் மைந்தனுக்கு அரசு அளித்தல்,[10] வெங்கதிரோன் குலத்துக்கு ஒரு விளக்காய்த் தோன்றுதல்,[11] இராவணனைக் கொன்ற பின் அயோத்தி அரசை ஏற்றல். அகத்தியன் வாயிலாக இராவணன் வரலாற்றைக் கேட்டல், மிதிலைச் செல்வி பெற்ற குசலவர்களின் வாயிலாகத் தன் வரலாறு கேட்டல்[12] ஆகிய நிகழ்ச்சிகளில் ஆழங்கால்படுகின்றார் குலசேகரப் பெருமாள். நாட்டுக்குத் திரும்ப அழைத்துவர எண்ணிய பரத நம்பிக்கு பாதுகைகளை அளித்தல்[13], பரதாழ் வானுக்கு அடிசூடுகையாகின்ற அரசு ஈதல், கைகேயி சொற்கேட்டு தண்டகாரண்யம் அடைதல், சூர்ப்பணகை யின் 'மூக்கும், காதும் வெம்முரண் முலைக் கண்களும்' போக்குதல்.[14] சேது கட்டுவித்தல், இராவணனைக் கொன்று அவன் தம்பிக்கு அரசு ஈதல்,[15] 'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்றவர்க்கு இன் அருள் சுரந்து' குகனைத் தோழமை கொள்ளல்,[16] சுக்ரீவன் வைதேகியைத் தேட நான்கு திசைகட்கும் ஆட்களைப் போக்குதல்,[17] வடமதுரை சாளக்கிராமம் துவரை என்ற திவ்விய தேசங்களுடன் அயோத்தியையும் சிந்தித்தல் ஆகியவற்றை நினைந்து உருகுகின்றார் பெரியாழ்வார். அரக்கர்கள் 'சூழமணி தூரம்' என்ற கூத்தை இராமபிரான் முன்னர் ஆடுவதாக அமைந்த பாசுரத்தில் 'அயோத்தி காவலன் தன் சிறுவனை' நினைந்து போற்றுகின்றார் திருமங்கை மன்னன்.

9. பெரு. திரு. 8:6
10. டிை. 8 : 7
11. டிை. 10: 1
12. டிை. 10 : 8
13. பெரியாழ். திரு. 3.9:5.
14. டிை. 3.9:8
15. டிை. 3.9:10
16. டிை. 3.10:4
17. டிை. 3.10:8

இங்ஙனம் ஆழ்வார்கள் போற்றும் அயோத்தி நகர்க் கோமானின் திருக்கோயிலையும் பிற இடங்களையும் சுற்றிப்பார்க்க எண்ணுகின்றோம். முக்கியமான இடங்களைப் பார்ப்பதற்காக வாரணாசியிலிருந்து வந்த தொண்டர் ஒரு தோங்காவை அமர்த்தித் தருகின்றார். தோங்கா ஒரு மசூதியருகில் வருகின்றது. முகம்மதியர்கள் படையெடுப்பின் பொழுது பழைய திருக்கோயிலை இடித்து அவ்விடத்தில் இம்மசூதி எழுப்பப் பெற்றுள்ளதை அறிகின்றோம். மசூதியின் ஒரு பகுதி இராமன் பிறந்த இடம் எனக் காட்டப் பெறுகின்றது. அம்மி, ஆட்டுக்கல், மருந்தரைக்கும் கல்வம் போன்ற அடையாளங்கள் இங்கு வைக்கப் பெற்றுள்ளன. இவையெல்லாம் பிற்காலத்தில் முகம்மதியர் பழைய திருக்கோயிலை இடித்த பிறகு வைக்கப்பெற்றவை. இதுவே இன்று 'இராமசன்மபூமி பாபர் மசூதி' என்ற பிரச்சினைக்குரிய இடமாகும். இந்து முஸ்லீம் மோதல் நேரிடாத வண்ணம் முந்நூருக்கு மேற்பட்ட போர் வீரர்கள் காவலுக்காக வைக்கப் பெற்றுள்ளார்.

இம்மசூதிக்கு அருகில் சரயு நதிக் கரையில் தென்னிந்தியப் பாணியில் 'அம்மாஜி மந்திர்' என்ற ஒரு புதிய கோயில் கட்டப்பெற்றுள்ளது. இங்கு இராமன், பிராட்டி, தம்பியர், சிறிய திருவடி சூழ மகுடம் சூட்டிய கோலத்தில் காட்சி அளிக்கின்றான். கோயில் மிகத் தூய்மையாகவைக்கப் பெற்றுள்ளது. மூர்த்தியின் கோலம் கைபுனைந்தியற்றிய வனப்பெலாம் திரண்டு அமைந் துள்ளது; கண்டாரை ஈர்க்க வல்ல பெற்றியுடன் திகழ் கின்றது. நாமும் இராமனின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டுள்ளோம் என்ற மனநிறைவைக் கொள்ளு கின்றோம்.

இவ்விடத்தில் திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின் திருப்பாசுரம் நினைவிற்கு வர அதனையும் ஓதி உளங்கரைகின்றோம்.

"ஆர்க்கும் இதுநன்று தீதானாலும் நெஞ்சேநீ
பார்க்கும் பலகலையும் பண்ணாதே—சீக்கும்
திருவையோத் திப்புயலைச் சீரியமெஞ் ஞானத்
துருவை யோத்திறபொருளை யோர்."[18]

[ஆர்க்கும்-எல்லோருக்கும்; பார்க்கும்-காணப்பெறும்; பண்ணாது-கண்டபடி கற்காமல்; அயோத்திப்புயல்-அயோத்தியில் எழுந்தருளியிருக்கும் காளமேகமாகிய இராமன்; மெஞ்ஞானத்துஉரு - தத்துவ ஞான சொரூபி; ஓத்து-திருமறை; ஓர்-தியானிப்பாயாக.]

இப்பாசுரம் நெஞ்சை விளித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. தருக்கம் வியாகரணம் முதலிய உலகியல் பற்றிய நூல்கள் பலவற்றையும் படித்துப் பழுதே பல காலும் போக்காமல், தத்துவஞான சொரூபியாகிய இறைவனையே தியானம் செய்யுமாறு மனத்தை ஆற்றுப் படுத்துகின்றார் அய்யங்கார் இத்திருப்பாசுரத்தில். இதில் ஆழங்கால் பட்டிருக்கும் நிலையில்,

"மும்மைசால் உலகுக்கு எல்லாம்
மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கு
மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னை"[19]

[தமர்க்கு - அடியார்கட்கு; பதம்-செல்வம்; மருந்து-(பிறவிநோய்க்கு) மருந்து.]

என்ற கம்பனின் வாக்கு நினைவிற்கு வருகின்றது. இராமனைவிட இராம நாமத்தின் பெருமையினை நன்கு உணர்கின்றோம். அயோத்தியில் மட்டிலும் 2700

18. நூற். திருப். அந். 98
19. கம்ப. கிட்கிந்தை-வாலிவதை— 71

இராமனின் திருக்கோயில்கள் உள்ளனவென்று கேள்வியுறு கின்றோம். அயோத்தியில் இல்லங்கள்தோறும் இராமன் திருவுருவத்தை வழிபடுகின்றனர். இவற்றையும் திருக்கோயில்களாகக்கொண்டு கணக்கிட்டனர் போலும். என்றாலும், திருவயோத்தியில் இராம பக்தி உச்ச நிலையில் உள்ளது என்பதை மறுத்தற்கில்லை.

இத்திருக் கோயிலிருந்து சற்றேறக்குறைய ஆறு கிலோ மீட்டர் தொலைவில் சரயுநதியில் குப்தர் படித்துறை உள்ளது. இராமன் சரயுநதியில் மூழ்கித் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின இடம் இதுதான் என்று சொல்லு கின்றனர். இந்த இடம் வந்ததும்,

**"அன்றுசரா சரங்களை வைகுந்தத் தேற்றி**
**அடலரவப் பகையேறி அசுரர் தம்மை**
**வென்றிலங்கு மணிநெடுந்தோள் நான்கும் தோன்ற**
**விண்முழுதும் எதிர்வரத்தன் தாமம் மேவி"**[20]

[சரம்-இயங்குதிணை; அசரம்-நிலைத்திணை; விண் முழுதும் - பரமபதத்திலுள்ளவர்கள் அனைவரும்; தாமம்-இடம்]

என்ற குலசேகரப் பெருமாளின் திருமொழிப் பகுதி நம் நினைவுக்கு வருகின்றது. இந்நிலையில் நாம் நம்மையும் மறந்து நாமும் முக்தராக வைகுந்தத்திற்குச் செல்லும் அநுபவத்தைப் பெறுகின்றோம். சரயுநதியில் மூழ்கினால் இருவினைகளும் கழன்று போகின்றன என்ற அநுபவத் தையும் பெறுகின்றோம்.

இங்கிருந்து சரயுநதிக் கரையிலுள்ள 'அநுமான் தேக்ரி' என்று வழங்கப்பெறும் ஆஞ்சநேயர் கோயிலுக்கு வருகின்றோம். இங்கு எழுந்தருளியிருக்கும் சிறிய திருவடி பேருருவம் கொண்டவர். தலைப்பகுதி மட்டிலும் வெளி

20. பெரு. திரு. 10 : 10.

யில் தெரியுமாறு அமைக்கப்பெற்றுள்ளது. இதனைக் காணுங்கால் அநுமன் அசோகவனத்தில் சீதாப்பிராட்டிக்குக் காட்டின பேருருவம் நினைவிற்கு வருகின்றது. இத்திருக் கோயிலெங்கும் இராம பக்தர்கள் துளசி ராமாயணத்தைப் படித்த வண்ணம் உள்ளனர். தாம் கோரிய யாவற்றையும் அளிக்க வல்லவன் மாருதி என்ற நினைப்பில் இச்சீரிய பணியில் ஈடுபட்டுள்ளனர் போலும். இச் சொல்லின் செல்வனை வணங்கி விடைபெற்று நம் இருப்பிடத்தை அடைகின்றோம்.

அயோத்தி — பகைவர்களால் போர் செய்து வெல்ல முடியாதது என்பது பொருள். அரண் முதலியவற்றால் மிக்க பாதுகாவலையுடையது. பழங்காலத்திய அயோத்தி இப்பொழுதுள்ள தீர்த்தங்களில் ஒன்றாகிய சகஸ்திர தாரையில் மேற்குத் திக்கில் ஒரு யோசனையும், கிழக்குத் திக்கில் ஒரு யோசனையும், வடக்குத் திக்கில் சரயு நதியும், தெற்குத் திக்கில் தமசா நதி வரையிலும் இருக்குமாறு பரவியிருந்தது என்று சொல்லப் பெறுகின்றது. இதனையும் அறிந்துகொள்ளுகின்றோம். இராம காதையில் ஈடுபாடுகொண்ட அனைவருக்கும் திருவயோத்தியின் திருத்தலப் பயணம் மிக்க மனநிறைவினைத் தரும் என்பதற்கு ஐயம் இல்லை. இன்று தமிழ் நாடெங்கும் கொண்டாடப் பெறும் 'கம்பன் விழா' 'கம்பன் திருநாள்' நிகழ்ச்சிகளில் இராமபிரானின் கீர்த்தியே மகிழ்ச்சியுடன் பேசிப் போற்றப் பெறுகின்றது.

# 4. நைமிசாரணியத்து எந்தை

**வை**ணவ சமயத்தில் எம்பெருமான் கருணை நிறைந்த திருவுள்ளத்தவன் என்று கருதப் பெறுகின்றான். ஆனால் ஆருயிர்களின் அளவு கடந்த குற்றங்கள் குளிர்ந்த நீரில் நெருப்புப் பிறத்தல்போன்று அவனுக்குச் சீற்றத்தை உண்டாக்குகின்றன. ஆனால் **''அகலகில்லேன் இறையும்''** என்று இருக்கும் பெரிய பிராட்டியார் ஆருயிர்களின் தாயாதலால் எம்பெருமானுக்கு ஏற்ற பற்பல இனிய சொற்களைப் பகர்ந்து, அவன் சினத்தை மாற்றி அவனுக்குச் சீவர்களிடம் அருள் பிறக்குமாறு செய்வர். ஆதலின் பிராட்டியைப் **''புருஷகார பூதை''** என்று கொள்வர்; அதாவது தகவுரை கூறுபவர் என்பதாகக் கொள்வர். ஆகவே, வைணவர்கள் 'அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை மார்பனையே' சரணம் புகுவர்; அடைக்கலமாகக் கொள்வர். சீநிவாசனையே-திருவாழ் மார்பனையே-பிரபத்தி செய்வர். இதனை,

> **''இவள் தாயாய், இவர்கள் க்லேசம் பொறுக்கமாட்டாதே அவனுக்குப் பத்நியாய், இனிய விஷயமாக இருக்கை யாலே கண்ணழிவற்ற புருஷகாரம்.''**

என்று 'முட்சுப்படி'[1] குறிப்பிடுகின்றது. நைமிசாரணியத்தை நோக்கி இருப்பூர்தியில் பயணம் செய்யும் நம் மனத்தில் இந்த எண்ணங்கள் குமிழியிடுகின்றன.

இந்தத் திவ்விய தேசம் கிழக்கிந்திய இருப்பூர்திப் பாதையில் பலமு—சீதாபூர் கிளை பாதையில்—உள்ளது.

---

1. முமுட்சு - 128

நிலையத்திலிருந்து மூன்றரை கிலோ மீட்டர் தொலைவி லுள்ள இந்த ஊருக்கு மாட்டு வண்டியில்தான் செல்ல வேண்டும். வேறு ஊர்தி வசதிகள் இல்லை. இங்கு எம்பெருமான் ஆரணிய வடிவத்திலேயே சேவை சாதிக் கின்றான் என்று பெரியோர்கள் பணிப்பர். ஒரு காலத்தில் முனிவர்கள் நான்முகனை நோக்கித் 'தவம் செய்வதற்குச் சரியான இடம் இப் பூவுலகில் யாங்குளது?' என்று தங்கட்குக் காட்டுமாறு வேண்டினர். அந் நான்முகனும் ஒரு தர்ப்பைப் புல்லைச் சக்கரம்போல் செய்து மண்ணு லகில் உருண்டோடச் செய்து அது சென்று நின்ற இடமே சிறந்தது என்று காட்டினதாகப் புராண வரலாறு. ஆகவே 'நைமிசம்' எனப் பெயர் பெற்றது. நைமிசம்- நேமி விழுந்த இடம். நேமி-சக்கரம்; ஆரணியம்-காடு எனவே, இத்திருத்தலம் 'நைமிசாரணியம்' என்று திருநாமம் பெற்றது.

ஹரிபிரபந்ந இராமாநுசசாம் என்ற வடநாட்டு வைணவ சமயத்தைச் சார்ந்த அந்தணர் ஒருவர் திருக்கோயிலை எழுப்பித் தென்னாட்டு முறைப்படி உற்ச வங்களை நடத்தி வருகின்றார். திருத்தலப் பயணிகட்கு எல்லாவித வசதிகளும் இங்கு செய்யப்பெற்றுள்ளன. இங்கு இராமாநுச கூடம் என்ற பெயருடன் ஒரு மடம் உள்ளது. இங்கும் திருத்தலப் பயணிகட்கு எல்லாவித வசதிகளும் செய்யப்பெற்றுள்ளன. பெரும்பாலும் பதரிகாச்சிரமத்திற்குச் செல்லும் திருத்தலப் பயணிகள் திரும்பும்போது இத் திருத்தலத்திற்கு வருகின்றனர். இவர் கள் முதலில் சக்கர தீர்த்தத்திலும், பின்னர் அருகிலுள்ள கோமுகி நதியிலும் நீராடி அவற்றிற்கு முன்னருள்ள ஆரணியத்தை நோக்கிச் சேவிக்கின்றனர். வியாசர் இங்குத் தவம் செய்ததாக ஒரு புராண வரலாறு வழங்கி வருகின்றது. பழங்காலத்தில் இங்கு இருடிகள் கூடிப் புராணச் சொற்பொழிவுகள் செய்து வந்ததாக ஒரு வரலாறும் உண்டு.

இங்குள்ள திருக்கோயிலில் உள்ள எம்பெருமானின் திருநாமம் தேவராசன், ஸ்ரீ ஹரி; தாயார் இலக்குமி,புண்டரீகவல்லி; எம்பெருமான் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். அகோபில மடத்து 43-வது ஜீயர் இங்கு எழுந்தருளினபோது திருநாடு அலங்கரித்துவிட்டார். இவருடைய சமாதி இங்கு உள்ளது. அகோபில மடத்துக் கிளை ஒன்று இங்கு நிறுவப்பெற்றுள்ளது.

இத் திருத்தலத்து எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியால் மங்களாசாசனம் செய்துள்ளார்.[2] பெரிய பிராட்டியாரின் முன்னிலையாகச் சரணம் புகுகின்றார் ஆழ்வார். **'தேனுடைக் கமலத் திருவினுக்கரசே! திருவடி அடைந்தேன்'**[3] என்று பிராட்டியாரை முன்னிட்டுப் பிரபத்தி பண்ணுவதைக் காண்க. இத்திருமொழியில் எம்பெருமானுடைய மேன்மைகளையும் தம்முடைய தாழ்வுகளையும் வெளியிட்டுக் கொள்கின்றார் ஆழ்வார். எம்பெருமானிடம் அடைக்கலம் புகும்போது இங்ஙனம் செய்யவேண்டும் என்பது சாத்திர விதி. ஆர்த்தியின் கனத்தாலே தம்முடைய குறைகளெல்லாம் நினைவுக்கு வருமாகையால் தம்முடைய குற்றங்களையெல்லாம் விரிவாகப் பேசிக்கொண்டு சரணாகதி பண்ணுகின்றார்.

இத் திருத்தலத்திற்கு வந்து சேர்ந்ததும் ஆழ்வார் பாசுரங்களில் உள்ள கருத்துகள் நம் சிந்தையில் குமிழியிடத்தொடங்குகின்றன. செய்யவேண்டிய வினைகள் என்று விதிக்கப்பெற்றுள்ள நல்வினைகளைச் செய்யாதொழிதலும், செய்யலாகாதென்று விலக்கப்பெற்றுள்ள தீவினைகளைச் செய்தலும் ஆகிய இருவகைக் குற்றங்கள் சாத்திரங்களில் கூறப் பெற்றுள்ளன. இந்த இருவகைக்

2. பெரி. திரு. 1.6
3. டிை 1.6:9

குற்றங்களும் தம்மிடம் நிறைந்திருப்பனவாகச் சொல்லிக் கொள்ளுகின்றார் ஆழ்வார்.

**''வால்நிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள்**
**மாதரார் வனமுலைப் பயனே**
**பேணினேன்; அதனைப் பிழைஎனக் கருதி**
**பேதையேன் பிறவிநோய் அறுப்பான்**
**ஏண்இலேன் இருந்தேன்; எண்ணினேன் எண்ணி**
**இளையவர் கல்வியின் திறத்தை**
**நாணினேன்''[3]**

*[வால்நிலா-ஒளி பொருந்திய; நுதல்-நெற்றி; வன-அழகிய; பேணினேன் - ஆதரிந்திருந்தேன்; ஏண் இலேன்-எண்ணாதவனாக; நாணினேன்-வெட்கித் துறந்தேன்.]*

என்று சிந்திக்கத் தொடங்குகின்றார். ''மாதர்களுடைய முறுவல் அழகையும், தோள் அழகையும், முலை அழகையும் வாய் வெருவிக்கொண்டு நெடுநாள் வரையில் சபலனாய்த் திரிந்தேன். இந்நிலையில் சம்சார நோயைத் தீர்த்துக் கொள்வதற்கு வழி தேடாமல் இருந்துவிட்டேனே'' என்கின்றார். இந்த முறையில் அவர் சிந்தனை செல்கின்றது. மேலும், ''மாதர்களின் சிலம்பணிந்து செம்பஞ்சுச் சாறு பூசிய கால் அழகிலும், மைதீட்டிய கண்ணழகிலும் தோற்று, அறத்தையே மறந்தேன்; பாவங்களைச் செய்து பணத்தைத் திரட்டிப் புலன்கள் புசித்துக் களிக்கும்படியான தீய செயல்களை அநுபவித்துப் பழுதே பலபகலும் போக்கினேன் (2); முதலில் சூதாட்டம் ஆடத் துவங்கினேன்; பகல் காலம் முழுவதும் அதில் கழியும். ஏராளமான பொருள்கள் கிடைக்கும். பெரும் செல்வனாதலால் இப்படிப் பொருள்களை இழக்கின்றான் என்று

3. பெரி. திரு 1.6:1

எண்ணினேன்; குறுக்கு வழியில் பொருள் திரட்டி விடலாம் என்று திட்டம்போட்டு அவன் வீட்டில் புகுந்து கொள்ளை அடித்தேன்; அப்பொருளைச் செலவிட வேண்டிச் சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுந்து கண்டவாறு திரிந்தேன்; மனம்போனவாறெல்லாம் பொருள் திரட்டத் தொடங்கினேன் (3); மனைவியைத் துறந்து பிறர் பொருள் தாரத்தை நாடித் திரிந்தேன் (4); கவளச் சோற்றுக்கு இரங்கிக் கேட்டவர்கட்கு இல்லையே என்று சொன்ன நீசனானேன் (5); நான் உயிர்க்கொலை புரிந்ததற்கும் ஓர் எல்லை இல்லை. (6); நெஞ்சினால் நினைந்தும், வாயினால் மொழிந்தும், நீதியில்லாதன செய்தும் அர்ச்சிராதி மார்க்கத்தினின்றும் வழிவிலகி, தூமாதி மார்க்கமே நித்தியம் என எண்ணிவிட்டேன் (7); இங்ஙனம் பல வழிகளிலும் கெட்டுழந்த ஆழ்வார்க்கு 'அவனருளாலே அவன் தாள் வணங்கும்' பேறு கிட்டத் தொடங்குகின்றது. நல்வழியில் சிந்திக்கத் தொடங்குகின்றார்.

இருள் தருமா இவ்வுலகில் தோன்றிய உடல் ஒரு குடிசைபோல் தோன்றுகிறது. இக்குடிசையில் எலும்புகள் தூண்களாக நடப்பெற்று இடைஇடையே மாமிசத்தாலான சுவர்கள் வைக்கப்பெற்றுள்ளன. உரோமங்கள் மேலே வேயப்பெற்ற இக்குடிசைக்கு ஒன்பது வாயில்கள் உள்ளன. இக் குடிசையில் ஆன்மா குடிசையை விட்டு வெளிக்கிளம்பும் காலமே மரணம் ஆகும். இங்ஙனம் மரணம் நேர்ந்த பிறகு இவ்வான்மா அடைய வேண்டிய இடம் எம்பெருமானின் திருவடிகள் என்ற எண்ணம் ஆழ்வார் சிந்தையில் எழுகின்றது (9). இதனைத் தவிர யம பயமும் அடிக்கடி இவர் சிந்தையில் எழுகின்றது. "நமன் தமர் செய்யும் வேதனைக் கொடுங்கி நடுங்கினேன்" (3) என்கின்றார். எமபடர்கள் செய்கின்ற கொடுமைகளை விட அவர்தம் சொற்கள் கூரியவை. "கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால்

படுவதோர் கொடுமிறைக்கு அஞ்சி'' (5) என்கின்றார் ஆழ்வார். பிறர் மனை நயப்பவர்களை யமபடர்கள் என்ன செய்வார்கள் என்பதை,

**''வம்புஉலாம் கூந்தல் மனைவியைத் துறந்து**
**பிறர்பொருள் தாரம்என்று இவற்றை**
**நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி**
**எற்றிவைத்து எரிஎழு கின்ற**
**செம்பினால் இயன்ற பாவையை, பாவீ**
**தழுவு[4]''**

*[வம்பு-மணம்: நம்பினார்-விரும்பினவர்கள்; எற்றி-துன்பப்படுத்தி; பாவையை-படிமத்தை]*

என்று தம் கற்பனையில் சிந்திக்கின்றார். இதற்கு இன் சுவை மிக்க பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் சுவைக்கத் தக்கது; ''அவர்தாங்கள் (யமபடர்கள்) ஒரு கைக்கு ஆயிரம் பேராக வந்து பற்றுவார்களாய்த்து; பிறகு இவனுடம்பு தன்னோடே எற்றுவார்கள்: அநந்தரம் தங்கள் கை சலித்தவாறே பொகட்டிவிட்டு வைப் பார்கள்: இவர் இத்தனை போது ஸ்த்ரீகளை யொழிய இருக்க வல்லரோ! அவளை அழைப்பியும் என்பார்கள். இவனும், 'நம்மை நலிவதெல்லாம் நலிந்தார்களாகிலும் இனி அவர்களை அழைக்கிறார்களிறே' என்று குறுவிழி கொண்டு கிடக்கும். எரியெழா நிற்பதாய் செம்பாலே செய்யப்பட்ட பாவையைப் 'பாவீ, தழுவு' என்பார் களாய்த்து. கெடுவாய்! அவர்களொழிச்சினவன்றாகிலும் அநுதாபம் பிறந்து உகந்தருளினதொரு திருவாசலிலே ஒதுங்கினாயாகில் இன்று எங்களுக்குக் கைசலியா தொழியலாமே என்பர்களாய்த்து. அவர்கள் பண்ணும் நலிவைப் பொறுக்கலாம்; க்ரூரமான பேச்சாய்த்துப் பொறுக்கப் போகாதது.''

4. பெரி. திரு. 1.6:4

இங்ஙனம் நன்ஞானம் தலை எடுக்கப்பெற்றதும ஆழ்வார் நைமிசாரணியத்து எம்பெருமானிடம் அடைக்கலம் புகுகின்றார். பாசுரந்தோறும் ஒரு முறைக்கு ஒன்பது முறையாக "வந்துன் திருவடி யடைந்தேன், நைமிசாரணியத்துள் எந்தாய்!" என்று முறையிடுகின்றார்.

'ஆழ்வார் அற்ப விஷயங்களைப் பெரியனவாகப் பேசலாமா?' என்ற வினா எழுகின்றது. இதற்குப் பெரியவாச்சான் பிள்ளை வேறோர் இடத்தில்[5] அருளிச் செய்திருப்பதை ஈண்டுச் சிந்திப்போம். உலகத்தில் சொல் வன்மையுடையர்கள் பலவகைப்படுவர்; சிலர் உள்ளதை உள்ளபடி பேசுவர்; சிலர் பெரிய பொருள்களைப் பேசத் தொடங்கினாலும் சொல்திறம் போதாமையினால் குறைபடப் பேசுவர்; சிலர் நாவீறு உடைமையினால் சிறிய பொருளையும் கனக்கப் பேசுவர். இப்படிப் பேச்சில் பல வகைகள் உண்டு. பேசுவோரின் வாக்குவன்மைக் கேற்பப் பொருள்கள் சிறுத்துப் போவதும் உண்டு; பெருத்துப் போவதும் உண்டு. திருமங்கையாழ்வாரின் சொல்வன்மை புகழ் பெற்றது. அவர் சிறிய பொருள்களைப் பேசும் பொழுதும் பெருக்காறு பெருகுமாப்போலே இருக்குமேயன்றி அப்பொருள்களின் சிறுமை கேற்பச் சிறந்திராது இவர்தம் சொற்போக்கு. ஆகவே, இவர் பேசும் பொருள் சிறுமைப்பட்டது என்பதற்குத் தடை இல்லை; இவர்தம் வாக்கு கம்பீரமாகையால் சிறுபொருளும் கனக்கப் பேசுகின்றது—என்பதாக அருளிச் செய்வர் அந்த உரை மாமன்னன்.

ஆழ்வார் தம் குற்றங்களை அடிக்கடி வெளியிட்டுக் கொள்ளுகிறாரே, மாஞானி எனக் கொண்டாடப் பெறும் அவரிடம் குற்றங்களும் உளவோ? என்றும் சிலர் வினவுவதுண்டு. இதற்குப் பலவிதமான சமாதானங்கள்

5. பெரி. திரு. 6.3:4 (வியாக்கியானம்).

சொல்வது முண்டு. ஒன்று: எம்பெருமான் கூட இவ்விருள் தருமா ஞாலத்தில் திருவவதரித்ததால் சோகம் மோகம் முதலானவை அப்பெருமானுக்கும் தோன்றுவதாகச் சாத்திரங்கள் பேசும். அதுபோல ஆழ்வார்கட்கும் இப் பிரகிருதி வாசனையின் கொடுமையினால் சில குற்றங்கள் சம்பவிப்பதுண்டு. சிறிய குற்றங்களையும் அவர்கள் தம்மைத் தாழ்த்திப் பேசும் பாங்கில் பெரியனவாகப் பேசுகிறார்கள். இஃது ஒரு சமாதானம். இரண்டு: பகவத் சந்நிதியில் தம்முடைய குற்றங்களைச் சொல்லிக்கொள்ள வேண்டியது அவசியம் என்கிற சாத்திர மரியாதையைக் காட்டுவதற்காகவே பூருவர் தோஷாநுசந்தானம் செய்து கொண்டனர் என்பது மற்றொரு சமாதானம். உண்மையில் மகான்களிடம் குற்றங்கள் இருந்தனவா? அன்றா? என்ற ஆராய்ச்சி நமக்குத் தேவை இல்லை. குற்றமே வடிவெடுத்த நமக்கு அது சந்திப்பதற்குப் பாங்கான பாசுரங்களை அருளிச் செய்தனர் என்று கொள்வதே பொருந்தும். மேலும் நம்போலோரின் சார்பாக அவர் இறைவனிடம் முறையிடுகின்றார் என்றும் கொள்ளலாம்.

இங்ஙனம் நம் சிந்தனை ஓடிக்கொண்டிருக்கும் பொழுது திவ்விய கவியின் பாசுரம் நினைவுக்கு வருகின்றது.

''ஓரறிவும் இல்லாத
 என்போல்வார்க்கு உய்யலாம்
பேரறிவு உண்டேனும்
 பிறர்க்குஅரிது—பார்அறிய
நைம்மிசா ரண்யத்து
 நாதர்அடி யாரோடும்
இம்மிசார் வுண்டா
 யினால்''[6]

6. நூற். திருப். அந்-99.

[ஓர் அறிவு-சிறிது அறிவு; உய்யலாம்-ஈடேற லாம்; பிறர்-பாகவத சம்பந்தம் பெறாதவர்; பேர்-அறிவு- சிறப்பான ஞானம்; அரிது — ஈடேறுதல் முடியாது; அடியார்—பாகவதர்; இம்மி-மிகச் சிறிய அளவு]

வீடு பேற்றுக்கு அறிவு முக்கிய காரணம் அன்று; பாகவத சம்பந்தமே முக்கிய காரணமாகும் என்பது இதன் கருத் தாகும். இதன் பிறகு ஆரணியத்தை நோக்கிய நிலையில் இத் திருமொழிப் பாசுரங்கள் அனைத்தையும் ஒருங்கே ஓதி உளங்கரைகின்றோம். நைமிசாரணியத் தெந்தையை சிந்தையுள் வைத்துள்ள கலியனின் இப்பாமாலையை ஓது கின்றவர்கள்,

**''ஓதநீர் வையகம் ஆண்டு**
**வெண்குடைகீழ் உம்பராகுவர் தாமே''**[7]

[ஓதம்-கடல்; வையகம்-பூமி; உம்பர்-நித்திய சூரிகள்]

என்ற பல சுருதிப் பாடற்பகுதியை நினைந்து பரிபூரண பிரம்மானந்தம் பெற்ற அநுபவத்துடன் நம்மிருப்பிடத் திற்குத் திரும்புகின்றோம்.

7. பெரி. திரு. 1.6.10.

# 5. சாளக்கிராமத்து அடிகள்

பகவத் விஷயத்தில் ஓர் இதிகாசம். வைணவ அடியார் ஒருவரிடம் இணைபிரியா நண்பர் ஒருவரைப் போல் தாம்பூலம் வைத்துக்கொள்ளும் பை ஒன்று இருந்து வந்தது. இதில் சாளக்கிராம வடிவத்தில் எம் பெருமானும் தங்கி இருந்தார். 'தமர் உகந்தது எவ்வுருவம் தானே... ஆம்'[1] என்று பொய்கையாழ்வார் அர்ச்சாவதார சௌலப்பியத்தை அருளிச் செய்துள்ளாரன்றோ? தமர்கள் கல்லையோ, மண்ணையோ உலோகங்களையோ எதை உருவமாக்கினாலும் அதனையே எம்பெருமான் தன்னுடைய ஒப்புயர்வற்ற திருமேனியாகப் பாவித்து அதில் சந்நிதானம் பண்ணி எழுந்தருளியிருப்பன் என்பது இதன் கருத்து. அடியார் தாம்பூலம் தரிக்கையில் சில சமயம் தற்செயலாகச் சிறிய கோலி போன்ற சாலிக்கிராம எம்பெருமான் பாக்குகளுடன் கலந்திருப்பதால் அதனைப் பாக்கு என்று வாயில் இட்டுக் கொள்வதுமுண்டு. கல்போன்ற சாலிக்கிராம எம்பெருமான் வாயில் மசியாததால் தம் தவற்றை உணர்ந்து கொள்வார் அடியார். உடனே மிக்க பயபக்தியுடன் அந்த எம்பெருமானைத் தம் வாயினின்றும் அகற்றித் தம் கமண்டலத்திலுள்ள நீரைக் கொண்டு நீராட்டி தம் ஆடையால் துவட்டி, அதனைப் பட்டுத் துணியால் போர்த்தி, நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம் ஒன்றை கைத்தாளம் கொண்டு பாடி பின்னர்த் தாம்பூலப் பெட்டியிலேயே அவரைக் கண்வளரச் செய்வார். இங்ஙனம் பல சமயம் இக் குழப்பம் நேரிடுவதுண்டு.

1. முதல் திருவந்.—44

சடங்கு முறைச் சம்பிரதாயத்தை மேற் கொண்டிருந்த வைணவர் ஒருவர் இக் குழப்பத்தை அடிக்கடிக் காண நேர்ந்தது. இஃது அவருக்கு தெய்வத்தைப் பழிப்பதாகத் தோன்றியது. அவர் அந்த அடியாரை அண்மி "மதிப் பிழந்த" அந்தச் சாலிக்கிராம எம்பெருமானைத் தம் மிடம் தருமாறு வேண்டினார். அவருடைய வேண்டு கோளுக்கிணங்க அடியாரும் அந்தச் "தெய்விகச் சொத்தினை" அந்த வைணவரிடம் மகிழ்ச்சியுடன் தந்து விட்டார். அந்த வைணவர் அந்த எம்பெருமானை இல்லத்திற்கெடுத்துச் சென்று, மந்திரங்களால் தூய்மைப் படுத்தி, சாத்திர மரியாதைகள் சிறிதும் குறையாது எல்லாவிதச் சடங்குகளும் திகழும் முறையில் வழிபாடுகள் நடத்தினார். எம்பெருமான் அவருடைய கனவில் தோன்றி, "மூடனே, நான் அடியாரின் தாம்பூலப் பெட்டி யாகிய திருக்கோயிலில் மகிழ்வுடன் தங்கியிருந்தேன்; அவர் நம்மாழ்வாரின் திருவாய்மொழியை உயிராகவும் ஆன்மாவாகவும் கொண்டவர். அவருடைய தூய்மை யான திருவாயில் அமுதம் போன்ற எச்சிலில் நீராடும் வாய்ப்பு எனக்கிருந்தது. நம்மாழ்வாரின் திருவாய் மொழியிலிருந்து தேனும் பாலும் கன்னலும் அமுதமும் எனத் தித்திக்கும் திருப்பாசுரங்களைக் கேட்டு மகிழும் பேறும் இருந்தது. நீ அவற்றையெல்லாம் எனக்குக் கிடைக்காமல் செய்ததுடன் சோர்வைத் தரும் பூசனை கட்கு என்னை உட்படுத்துகின்றாய்" என்று கூறினார். வைணவர் இந்தக் கனவால் திடுக்கிட்டெழுந்து தடுமாற்றத்திற்குள்ளானார். உடனே அவர் விரைந் தோடி அடியாரை அடைந்து அந்தச் சாலிக்கிராம எம் பெருமானை அவரிடம் சேர்த்துவிட்டார். எம்பெருமானும் மனநிறைவுடன் தாம்பூலப் பெட்டியிலேயே திருக்கோயில் கொள்ளலானார்[2]. இந்த நிகழ்ச்சி அர்ச்சாவதாரத்தின்

2. பகவத் விஷயம்—தொகுதி vi 6.8:10 'வந்திருந்து' என்ற பாசுரத் தின் வியாக்கியானம் காண்க.

சௌலப்பியக் குணத்தை விளக்குவதற்காக எடுத்துக் காட்டப் பெற்றது.

சாலிக்கிராமம் 12 அல்லது 12க்கு மேல் கொண்டுள்ள இல்லத்தை திவ்விய தேசம் என்று போற்றப்பெறுத் என்பது வைணவ சம்பிரதாயம். இந்த இடத்திற்கு 'ஸ்பர்ச தோஷம்' என்றுமே இல்லை. ஸ்வயம் வியக்தத் தலங்களுள் சாளக்கிராமம் என்ற திருத்தலம் மிகவும் சிறந்தது. இங்கு எம்பெருமானின் நித்திய சாந்நித்தியம் இருப்பதாக ஐதிகம் என்று சொல்லப் பெறுகின்றது. ஆகவே, ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பகவதாரா தனம் நிறுத்தப்பெற்றால், பிற இடங்களைப்போல் இந்த இடத்திற்கு சம்புரோக்ட்சணம் செய்யத் தேவை இல்லை. ஒவ்வொரு திருக்கோயிலிலும் பகவதாராதனத்திற்காக சாலிக்கிராமங்கள் இருக்க வேண்டியது இன்றியமை யாதது. திருக்கோயிலைத் தவிர வேறு இடங்களிலும் சாலிக்கிராமங்களை வைத்து வழிபாடு செய்யலாம். சாதாரணமாக சாலிக்கிராமங்களை 2, 6, 8, 10, 12... என்ற இரட்டைப்படை எண்களில் இருக்குமாறு வைத்து வழிபடுவதே வழக்கமாக இருந்து வருகின்றது. ஆனால், இரண்டு சாலிக்கிராமங்களை வைத்து வழிபடுதல் ஆகாது என்ற போதிலும் உண்மையான சாலிக்கிராமங் கள் கிடைப்பது அரிதாகையால், மேற்குறிப்பிட்ட எண் ணிக்கையைத் தவிர வேறு எண்ணிக்கைகளில் அவை இருப்பினும், அவற்றை வழிபடுவது குற்றமாகாது என்றும் பெரியோர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

உண்மையான வைணவர்களின் இல்லத்தில் செப்புப் பாத்திரத்தில் நீரில் சாலிக்கிராமங்கள் வைக்கப்பெற்று வழிபாடுகள் நடைபெற்று வரும். இந்தப் பன்னிரண்டு எம்பெருமான்களும் கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விட்டுணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், சிரீதரன், இருடீகேசன், பற்பநாபன்,

தாமோதரன் என்ற பன்னிரு திருநாமங்களைப் பெற்று இலங்குவர். குடும்பப் பாகப் பிரிவினையின்போது இந்த எம்பெருமான்களும் பிரிவதுண்டு. இந்த எம்பெருமான் களின் திருநாமங்களையே தம் மக்கட்கும் பெயராகச் சூட்டுவது வைணவர்களின் வழக்கமாகவும் இருந்து வருகின்றது.

சாளக்கிராமத் திருத்தலப் பயணத்தின்போது இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்டு எழுகின்றன. சாளக்கிராமம் நேபாளத்தில், காட்மாண்டு என்னும் தலைநகருக்கு 90 மைல் மேற்குத் திசையில் கண்டகி நதிக் கரையில் உள்ளது. முக்தி நாராயண க்ஷேத்திரத்திற்குப் போகும் வழியில் உள்ளது; இந்த க்ஷேத்திரம் பெருஞ் சாலைக்கு 100 மைல் தொலைவில் உள்ளது. குறுகிய மலையிடுக்குகளிலுள்ள ஒற்றையடிப் பாதை வழியாகத் தான் இத் திருத்தலத்தை அடைதல் வேண்டும். நெடுஞ் சாலைக்கு 10 மைல்கட்கு அப்பால் அங்கும் இங்குமாகப் பல சிற்றூர்கள் உள்ளன. இங்கும் அங்கும் சிறுத்தைப் புலிகள் நடமாடுகின்றன. இத் திருத்தலத்திற்குப் போகிற வர் நேபாள அரசிடம் இசைவு பெறுதல் வேண்டும். 50க்குக் குறைவான எண்ணிக்கையுள்ள திருத்தலப் பயணி கட்கு இசைவு வழங்கப்பெறமாட்டாது காட்மாண்டு நகரே இந்திய இருப்பூர்தி எல்லை நிலையமாகிய இரக்சூலி லிருந்து 75 மைல் தொலைவில் உள்ளது. இரக்சூலிலிருந்து அம்ப்லாக் கஞ்ச் வரையில் 25 மைல் தொலைவிற்கு 'நேரோ காஜ்' நேபாள இருப்பூர்தி வசதி உள்ளது; இங்கிருந்து 25 மைல் லாரிகளில் சென்றாக வேண்டும். எஞ்சிய 25 மைல் தொலைவினை மலைப் பாதைகளில் 'நடராஜா' சர்வீஸில்தான் செல்ல வேண்டும். இத்தகைய போக்கு வசதிக் குறைவு திருத்தலப் பயணிகட்குப் பெருந் தடையாக உள்ளது. எனினும், மலையில் பனிக்கட்டி உருகத் தொடங்கிய பிறகே இந்திருத்தலப் பயணத்தைத்

தொடங்க வேண்டும். பட்டாளத்தில் தெரிந்த பெரிய அலுவலர்கள் இருந்தால் அவர்கள் உதவியால் சற்று எளிதாகப் பயணத்தை அமைத்துக் கொள்ளலாம்.

பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் இத்திருத் தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளனர். பல வட நாட்டுத் திருப்பதிகளின் பெயர்களைக் கூறும்போது சாளக்கிராமத்தையும் சுட்டுகின்றார் பெரியாழ்வார்.[3] இளம்பிராயத்தில் கண்ணன் செய்த சிறு குறும்புகளைப் பட்டியல் இட்டுக் காட்டும்போது,

**"சாளக்கிராமம் உடைய நம்பி**
**சாய்த்துப் பருகிட்டுப் போந்துநின்றான்"[4]**

என்று ஓர் இடைப்பெண் கறந்து அடுப்பேற வைத் திருந்த பாலைத் திருவமுது செய்ததை எடுத்துக் காட்டு கின்றார் இந்த ஆழ்வார்.

திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியில்[5] இத் திருத் தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்து அநுபவிக்கின்றார். பாசுரங்கள்தோறும் இத் திருத்தலத் தின் சூழ்நிலையைக் காட்டுவதுடன் அங்கு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானைப் பற்றியும் தெளிவாக எடுத்து ரைக்கின்றார் ஆழ்வார். இத் திருத்தலம் நீர் நிலங்களால் சூழப்பெற்று வனப்புடன் திகழ்வது (3); எங்கும் தடாகங் கள் நிறைந்திருப்பது (5); சந்தன மரங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்தது (8); தடாகங்கள் தோறும் "உரம் பெற்ற மலர்க்கமலம் உலகு அளந்த சேவடிபோல் உயர்ந்து காட்டும்"[6]; சோலைகளில் வண்டுகள் களித்து இசைபாடும்; அருகிருக்கும் கழனிகளில் கயல் மீன்கள் நிறைந்து கிடக்கும்; இம்மீன்கள் துள்ளிப் பாய்ந்து தடாகங்களிலும் ஏனைய நீர் நிலைகளிலும் தாமரை

3. பெரியாழ். திரு. 4.7:9
4. பெரியாழ். திரு. 2.9:5
5. பெரி. திரு. 1.5
6. ஷை. 4.9:8

மொட்டுகளின்மேல் விழ, அவை மலர்ச்சிபெறும்(9); தாரா என்ற பறவைக் கூட்டங்கள் வயல்களில் காணப் பெறும் (4).

இத்தலத்து எம்பெருமானைக் கூறுங்கால,

**''உலவு திரையும் குலவரையும்**
**ஊழிமுதலா எண்திக்கும்**
**நிலவும் சுடரும் இருளும்ஆய்**
**நின்றான்; வென்றிவிறலாழி**
**வலவன்.''[7]**

[திரை-அலைகள் (கடல்); வரை-மலை; ஊழி-காலம்; சுடர்-சூரியன், சந்திரன்; ஆழி-சக்கரம்; வலவன்-வலத் திருக்கையில் உடையவன்]

என்கின்றார் திருமங்கை மன்னன். உலவுகின்ற அலைகளையுடைய கடலும், காலம் முதலான சகல தத்துவங்களும், எட்டுத் திசைகளும் சூரியனும், சந்திரனும், இருளும் ஆகிய இப்பொருள்கட்கெல்லாம் அந்தர்யாமியாய் இருப்பவன்; வெற்றியையும், மிடுக்கையும் உடைய திருவாழியை வலக்கையிலே கொண்டவன், மேலும் இவனை,

**''இருசுடராய்**
**வானாய் தீயாய் மாருதமாய்**
**மலையாய் அலைநீர் உலகனைத்தும்**
**தானாய் தானும் ஆனான்.''[8]**

[இருசுடர்-சூரிய சந்திரர்கள்; வான்-ஆகாயம்; மாருதம்-காற்று; அலை நீர்-கடல் நீர்]

என்றும் காட்டுவர். சந்திர சூரியர்களாயும், ஆகாயமாயும், தீயாயும், காற்றாயும், மலைகளாயும், கடல்

7. பெரி. திரு. 1.5:3
8. ஷை. 1.5:7

சூழ்ந்த எல்லா உலகங்களாயும் இருப்பவன் இவன்தான் என்கின்றார். அந்தர்யாமியாக இருக்கும் இறைவனின் இருப்பைக் காட்டிய ஆழ்வார் அவதார தத்துவத்தையும் காட்டுவர். மான்களும், யானைகளும், குதிரைகளும் திரியும் காடும் கடந்து, வில்லையும் அம்பையும் துணையாகக் கொண்டு, சேது கட்டி, மதில் நீர் இலங்கை வாள் அரக்கர் தலைவனின் பத்துத் தலைகளையும் அறுத்தெறிந் தவனும் (1); மதநீரை யுடையனவாய் மலைகள் வடி வெடுத்து நடந்தாற்போன்றுள்ள யானைத் திறள்களும், குதிரைக் கூட்டங்களும் முழக்கம் செய்யும் பெரிய தேர் களும், காலாட்களுள் ஒன்றாகத் திரண்டு பெரிய கிளர்ச்சி யுடன் தோற்றிய இலங்கையைச் சுடுகாடாக்கியவனும்(2) இவனே. சூர்ப்பணகையின் மூக்கையறுத்து அவளைப் பிலம் போன்ற வாயைத் திறந்துகொண்டு கதறச் செய்த வனும்(5) இவனே. தாயாய் வந்த பேயாம் பூதனையின் உயிரையும், தயிரையும், வெண்ணெயையும் ஒன்று சேர்த்து அமுது செய்தவனும், அழகொழுகும் வாமன உருவத்துடன் சென்று 'இன்றே மூவடி மண் தா' என இரந்து எல்லா உலகங்களையும் தானாக அளந்து கொண்டவனும் (6); நரசிம்மனாய் அவதாரம் செய்து இரணியனுடன் கடும் போரிட்டு, அவனுடைய நெஞ்சைப் பிளந்து உயிர் குடித்தவனும் (7); 'எந்தாய் சாபம் தீர்' என வேண்டிய சிவனின் சாபத்தைத் தன் திருமார்பில் இலங்கும் அமிர்த நீரைக்கொண்டு தீர்த்தவனும் (8) இந்த எம்பெருமானேயாவான்.

இங்ஙனம் இராமனாயும், கிருட்டிணனாயும், திரிவிக் கிரமனாயும், நரசிம்மனாயும், எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாயும் உள்ள எம்பெருமானே அர்ச்சை வடிவாய் சாளக்கிராமத்தில் எழுந்தருளியுள்ளான். இந்த எம்பெருமானை அடியார் கூட்டமும், நித்திய சூரிகளும், பூணூல் இலங்கும் மார்பையுடைய அந்தணர்களும்,இவன் திருக்கோயிலைச் சூழ்ந்து நின்று இவனைச் சேவிக்

கின்றனர். ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்'[9] என்று இடைவிடாது அடிமை செய்யப் பாரித்திருக்கின்ற அடியார் திருக்கூட்டமும், பரமபதத்தில் பரத்துவத்தை அநுபவிப்பதைக் காட்டிலும் இங்குள்ள செளசீல்யம் செளலப்பியம் போன்ற எம்பெருமானின், திருக்குணங்களை அநுபவிப்பதில் பேரவாக் கிளர்ந்து இங்கு வந்து திரண்டிருக்கும் நித்திய சூரிகளின் திரள்களும், சாதிச் செருக்கே இயல்பாகவுடைய பார்ப்பனக் கூட்டமும், ஒரு சேர நிற்பது அகில ஒருமைப்பாட்டைக் (Universal integration) காட்டி நிற்கின்ற தன்றோ?

இந்தத் தலத்து எம்பெருமானின் திருநாமம் ஸ்ரீமூர்த்தி பெருமாள் என்பது; தாயார், ஸ்ரீதேவி நாச்சியார். எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் வடக்கே திருமுகமண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றார். இவர் சந்நிதியில் இத்திருமொழிப் பாசுரங்களை மிடற்றொலியால் ஓதி உளங்கரைகின்றோம்; இறையநுபவமும் பெறுகின்றோம். இத்திருமொழியின் பலசுருதிப் பாசுரம் நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

'சாளக்கிராமம் அடைநெஞ்சே!' என்று ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக தம் நெஞ்சை ஆற்றுப்படுத்திய ஆழ்வார் நமக்கும் உபதேசம் செய்கின்றார்.

**''தாராஆரும் வயல்சூழ்ந்த**
**சாளக்கிராமத்து அடிகளை**
**காரார்புறவின் மங்கைவேந்தன்**
**கலியன்ஒலிசெய் தமிழ்மாலை**
**ஆர்ஆர்உலகத்து அறிவுடையார்**
**அமரர்நன்னாட்டு அரசுஆளப்**
**பேராயிரமும் ஓதுமின்கள்;**
**அன்றிஇவையே பிதற்றுமினே.''[10]**

9. திருவாய் 3.3:1 10. பெரி திரு—1.5:10

[தாரா - ஒருவகைப் பறவை இனம்; கார் - மேகம்; புறவு - தோட்டம்; கலியன் - திருமங்கையாழ்வார்; ஒலி செய் - அருளிச்செய்த; அமரர் - நித்தியசூரிகள்]

என்பது அவர்தம் உபதேசம். வைகுண்ட பதவியில் நாட்டமுள்ளவர்களை நோக்கி, ''அறிவுடை மாந்தீர்! எம்பெருமானின் பேராயிரத்தை (சகஸ்ர நாமத்தை) ஓதுங்கள். முரட்டு சமஸ்கிருத மொழியிலுள்ள அவற்றை ஓத வல்லமை இல்லையேல் தேனினும் இனிய செந்தமிழில் அமைந்த இத்திருப் பாசுரங்களை ஓதுங்கள். இதனாலும் பேற்றிற்குக் குறை இல்லை'' என்கின்றார். ''அன்றி யிவையே ஓதுமின்கள்'' என்னாமல் பிதற்றுமினே என் றருளிச் செய்தமை சிந்திக்கத் தக்கது. பாசுரங்களை வாயில் வந்தபடி தப்பும் தவறுமாகச் சொன்னாலும் பலன்கிட்டத் தடை இல்லை என்பது இதன் கருத்து. ''சொல்லும் சிரமம் ஒழியச் சொன்னாலும் (திருமந்திரம்) தன் சொரூபம் கெடநில்லாது'' [11] என்ற முமுட்சுப் படியின் வாக்கியம் ஈண்டு நினைவுகூறத் தக்கது.

இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரமும் நினைவுக்கு வர, அதனையும் ஓதி உளங்கரைகின்றோம்.

**''உண்டாம் முறைமை**
**உணர்ந்தடிமைப் பேர்பூண்டேன்**
**பண்டாம் குடிகுலத்தால்**
**பன்மதத்தால்—கொண்டாட்டால்**
**ஆளக் கிராமத்தால்**
**அல்லல்பேர் பூணாமல்**
**சாளக் கிராமத்தார்**
**தாட்கு.''** [12]

[உண்டாம் - பொருத்திய; முறைமை - சம்பந்தம்; அடிமைப் பேர் - தாஸ்ய நாமம்; ஆள்ஆ - உரிமை-

11. முமுட்சு-17 12. நூற். திருப். அந்-100

கொண்டு வாழும்; அல்லல்-துன்பம்; பூணாமல்-தரித்துக் கொள்ளாமல்; தாள்கள் - திருவடிகள்]

குடி, குலம், சமயம், தொழில் ஏற்றம், வாழ்ந்துவரும் ஊர் இவற்றின் சம்பந்தமாக வரும் பேர்கள் தன் முனைப்புக்கு இடனாகி அழிதற்கே உரியனவாதலோடு தாமும் நிலையாதனவாதலால், அவற்றை நல்லாசிரியனது உபதேசம் முதலியவற்றால் அறவே நீத்து ஆன்மாவிற்கு நிலைநின்ற பேராகிய வைணவதாசன் என்ற அடிமைப் பெயரைப் பூண்டு கொண்ட நல்லுணர்ச்சி பெற்றிருத்தலை வெளியிடுகின்றார் திவ்விய கவி.

இவ்விடத்தில் ஸ்ரீவசன பூஷணத்தின்,

> **''அகங்காரமாகின்ற ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்துமாவிற்கு அழியாத பேர் அடியான் என்றிறே,''**
> **''கிராம குலாதிகளால் வரும்பேர் அநர்த்த ஏது''**[13]

[ஆர்ப்பு-அழுக்கு, துகள்; அநர்த்தம்-கேடு; ஏது-காரணம்]

என்ற வாக்கியங்கள் நினைவுகூரத் தக்கவை. குடிகுலம் முதலியவற்றால் வரும் பெயர்கள் உடலைப்பற்றி வருவனவாதலால் அவற்றிற்கும் ஆன்மாவிற்கும் யாதொரு தொடர்பும் இல்லாது நின்று உடல் ஒழியும்போது அவை தாமும் அழியும்; ஆதலால் அவற்றால் ஆன்மாவிற்கு யாதொரு பயனும் விளையாது; அடிமைப் பெயரோ என்றும் உளதாகையால் அதனை உணர்ந்து பூண்டோர்க்கு எம்பெருமானின் பேரருள் கிட்டும் என்க. குடியால் வரும் பெயர்களாவன: கந்தாடையார், பிரதிவாதி பயங்கரத்தார், சக்கரவர்த்தியார் என்றாற் போல்வன. குலத்தால் வரும் பெயர்களாவன: பிராமணன், வைசியன், என்றாற்போல்வன. சமயத்தால் வரும் பெயர்

---

13. ஸ்ரீவசன பூஷ. 78, 79

களாவன: சைவன், வைணவன், பௌத்தன், சமணன், கிறித்தவன் என்றாற்போல்வன. கொண்டாட்டால் வரும் பெயர்களாவன: அட்டாவதானி, சதாவதானி, சமய கோளரி, மகாமகோபாத்தியாயன் என்றாற்போல்வன. கிராமத்தால் வரும் பெயர்களாவன: திருமலையார், நாவற்பாக்கத்தார், ஆர்க்காட்டார், அரியக்குடியார் என்றாற் போல்வன.

இங்ஙனம் பல்வேறு செய்திகளை அறிந்தவண்ணம் பகவதநுபவம் பெற்ற நிலையில் மனநிறைவுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

# 6. பதரிநாதன் - நரநாராயணன்

**வை**ணவ சமயத்தின் மூலமந்திரமாக இருப்பது திருமந்திரம். தன்னை ஜபிக்கின்றவர்கட்கு இரட்சகமாயிருத்தலின் 'மந்திரம்' என்ற திருநாமத்தைப் பெற்றது. முன் ஒரு காலத்தில் சமுசாரிகள் பகவானுக்கு அடிமைப்பட்டிருத்தலாகிய தங்கள் நிலையையும், தங்கட்கு ஒரு காரணமுமின்றி ஆட்கொள்பவனாகிய பகவானுடைய தன்மையையும் மறந்தனர். இங்ஙனம் மறந்ததனால் ஈசுவரனுக்குத் தாங்கள் புரிய வேண்டிய அடிமைத் தொழிலாகிய சிறந்த பலனையும் இழந்தனர். இந்த இழப்பைப் பற்றிய சிந்தனை சிறிதுமின்றி சமுசாரமாகிய பெருங்கடலில் விழுந்து ஆதியாத்மிகம் (தன் உடலையும் மனத்தையும் பற்றி வருவன), ஆதி பௌதிகம் (பேய், துட்ட விலங்குகள், மனிதர், இராக்கதர் முதலியவர்களால் ஏற்படுவன), ஆதி தைவிகம் (காற்று, மழை, வெயில், இடி முதலியவற்றால் நிகழ்வன) என்னும் மூவகைத் துன்பங்களால் உழன்று கொண்டிருந்தனர். இந்நிலையைக் காணப் பொறுக்கமுடியாத 'தாயும் தந்தையுமான' எம்பெருமான் இச் சேதநர்கள் தங்களையும் (ஆன்ம சொரூபம்), தன்னையும் (பரமான்ம சொரூபம்) அறிந்து தானாகிய மரக்கலத்தைக் கொண்டு தங்கள் பிறவிப் பெருங்கடலைக் கடந்து வீடுபேறாகிய கரையை அடைவதற்கேற்ற அறிவைப் பெறும் பொருட்டுத் தானே சீடனும் ஆசாரியனுமாய் நின்று அநாதியானதும் அர்த்த பஞ்சக ஞானத்தைச் சுருக்கமாகத் தெரிவிப்பதுமான திருமந்திரத்தைச் வெளியிட்டருளினான். சீடனுடைய

இலக்கணங்களை உலகினர் நன்கு அறிந்து கொள்ளாமை யின் இவற்றைத் தன் செயல்களினால் (Learning by doing) அறிவித்தற் பொருட்டே தான் சீடனாய் நின்றான்.

சத்திய யுகத்தில் பதரிகாச்ரமத்தில் தர்மதேவனுக்கும் தட்சப் பிரஜாபதியின் மகளாகிய மூர்த்தி தேவிக்கும், நரன், நாராயணன் என்ற பெயர்களுடன் விஷ்ணுவின் அவதாரங்களாகப் பிறந்தனர். பிறந்தவுடனே குழந்தைப் பருவம் நைமிசாரணியத்தில் முதலில் கழிந்தது; பின்னர் கந்தமாதன பருவதத்தில் தம் தவ வாழ்க்கையைத் தொடங் கினர். பின்னர் தேவர்கள், முனிவர்கள், மக்கள் இவர் கட்கு குருசிஷ்ப முறையை நன்கு விளக்கும் பொருட்டுப் பதரிகாச்ரமத்திற்கு வந்தனர். நாராயணன் நரனுக்குத் திருமந்திரத்தை உபதேசித்தருளினான். துவாபரயுகத்தில் இவர்களே கண்ணனாகவும் அர்ச்சுனனாகவும் பிறந்தனர்

இந்த வரலாற்று எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட நம் பதரிகாச்ரமத் திருத்தலப் 'பயணம் தொடங்குகின்றது. திருவதரி இமய மலையில் கடல் மட்டத்திற்கு 10380 அடி உயரத்தில் உள்ளது. ஹரித்து வாரத்திலிருந்து 202 மைல் தொலைவிலுள்ளது. அண்மையில் உத்திரப்பிரதேச அரசு வதரிவரை மலைச் சாலையை அமைந்துள்ளது. வதரி செல்லும் நாம் இருப் பூர்தி மூலம் வந்து ஹரித்துவாரத்தில் இறங்குகின்றோம். பேருந்து வசதியும் உண்டு. இது கடல் மட்டத்திற்குமேல் 924 அடி உயரத்தில் உள்ளது. ஹரித்துவாரம் ஒரு பெரிய ஊர். தங்குவதற்கு எல்லா வசதிகளையுமுடைய சத்திரங் கள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் தங்குகின்றோம். பின்னர் விஷ்ணு பாதம் எனப்படும் கங்கையின் படித் துறையில் நீராடுகின்றோம்; பின்னர் திருக்கோயிலில் எம்பெருமான்களைச் சேவிக்கின்றோம். இந்த விஷ்ணு பாதம் பிரம்மகுண்டம் என்ற பெயராலும் வழங்கப் பெறுகின்றது. இங்கிருந்து கங்கை தெளிவான நீருடன்

சமவெளிக்கு இறங்குகின்றது. இங்கு நாம் கங்கா தீர்த்தத்தைச் சிறிய செப்புப் பாத்திரத்தில் எடுத்து அடைத்துக் கொள்ளுகின்றோம்.

இங்கிருந்து 20 கி. மீ. தொலைவிலுள்ளது இருஷிகேசம் என்ற திருத்தலம். இதுவும் கங்கைக் கரையில் தான் உள்ளது; கடல் மட்டத்திற்குமேல் 1116 அடி உயரத்திலுள்ளது. இங்கு, திரிவேணி முதலிய பல படித் துறைகள் உள்ளன. இங்குள்ள சத்திரம் ஒன்றில் தங்கி, தென்னாட்டு உணவு விடுதியொன்றில் உணவு கொள்கிறோம். திரிவேணியில் நீராடி இருஷிகேசவரைத் சேவிக்கிறோம். சிவாநந்த ஆச்ரமம், பிர்லா குடும்பத்தினரால் நிறுவப் பெற்ற சீதாபவனம் என்ற இடங்களைச் சென்று காண்கின்றோம். இங்கிருந்து அரசுப் பேருந்துகள் திருவதரியை நோக்கிப் புறப்படுகின்றன. இவற்றுள் ஒன்றில் ஏறிக் கண்டம் கடிநகர் (தேவப் பிரயாகை), திருப்பிரிதி (ஜோஷி மடம்) ஆகிய திருத்தலங்களைச்[1] சேவிக்கின்றோம். பின்னர் வதரிக்கு வருகின்றோம்.

வழியில் வதரியிலிருந்து 8 கி. மீ. தொலைவிலுள்ள அநுமன் சட்டி என்ற இடத்தைக் காண்கின்றோம். இது கடல் மட்டத்திலிருந்து 8000 அடி உயரத்திலுள்ளது. பாண்டவர்கள் வனவாசத்தின் பொழுது இந்த இடத்தில் தான் வீமன் அநுமனைக் சந்தித்ததாகவும், இருவரும் போரிட்டுத் தம்தம் பலத்தைத் சோதித்துக் கொண்டதாகவும், இறுதியில் தாம் வாயுவின் மக்கள் என்று அறிந்து கொண்டதாகவும் வரலாறு.

அநுமன் சட்டியிலிருந்து மூன்று கி. மீ. பயணம் செய்தவுடன் திருவதரியின் திருக்காட்சியைக் காணத் தொடங்குகின்றோம். இக்காட்சி கண்ணில் பட்டதும், பல்வேறு இடையூறுகட்குப் பிறகு,

1. தனித் தனிக் கட்டுரைகள் காண்க.

"பிண்டிஆர் மண்டை ஏந்தி
பிறர்மனை திரிதந் துண்ணும்
முண்டியான் சாபம் தீர்த்த
ஒருவன் ஊர்"[2]

*[பிண்டிஆர் - உளுத்த பொடிகள் உதிருகின்ற; பிறர் மனை - அயலார் வீடு; திரிதந்து - திரிந்து; முண்டியான் - மொட்டையாண்டியாகிய சிவன்]*

என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடும் வதரியை அடைந்த பேரின்பம் முகிழ்க்கத் தொடங்குகின்றது; மனமும் அமைதியடைகின்றது. திருக்கோவிலிலிருந்து 2 ஃபர்லாங் தொலைவில் பேருந்து நிலையம் உள்ளது; இஃது இருப்பது அழகாநந்தா நதிக்கரையில். இதன் அருகில் பல சத்திரங்கள், தங்கும் விடுதிகள், நீண்ட கடைத்தெரு ஆகியவை உள்ளன.

வதரியை அடைவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாகவே பருத்தியாடையை நீக்கிக் கம்பள ஆடையை உடுத்திக் கொள்ள வேண்டும். கோடைக் காலத்தில் ஒரு கம்பள மேலங்கி (Coat), கம்பளச் சால்வை, தடித்த கம்ளி இவை இருக்கவேண்டும். விடுதியொன்றில் தங்குகின்றோம். திருக்கோயிலுக்கும் அழகாநந்தா நதிக்கும் இடையில் '**தப்த குண்டம்**' உள்ளது. நாள் முழுவதும் வெந்நீர் ஊற்றுகளிலிருந்து வரும் வெந்நீரால் அடிக்கடி இது நிரப்பப் பெறுகின்றது. இதில் நீராடியதும் நமக்கு ஒருவித புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. நர-நாராயணனின் சேவைக்குத் தயாராகிவிடுகின்றோம். இதனையடுத்து சில அடி தூரத்தில் உள்ள "**சிம்ம துவாரத்**" தைச் சேவித்த பிறகுதான் திருக்கோயிலுக்குப் போக வேண்டும்.

பதரி என்பது வடமொழியில் இலந்தை மரத்தின் பெயராகும். அம் மரங்கள் அடர்ந்து கிடக்கும் இடம்

2. திருக்குறுந்—19

வதரி. வதரிநாதன் எழுந்தருளியிருக்கும் திருமலை முழுதும் வதரியாகும்; அவன் எழுந்தருளியிருக்கும் இடம் வதரிகாச்ரமம் ஆகும். இலந்தைப் பழம் பெரிய பிராட்டியாரின் திருவுகப்புக்குரியது. திருக்கோயில் முழுவதையும் சூழ்ந்த நிலையில் ஒரு பெரிய இலந்தை மரம் உள்ளதென்றும் கலியுகத்தில் அது மக்கட் கண்கட்குப் புலனாகாது என்றும் சொல்லப் பெறுகின்றது. இந்த மரத்தின் அடியில்தான் வதரி நாராயணன் சடைமுடி கொண்ட தவசி வடிவில் இரு திருக்கைகளில் திருவாழி திருச்சங்கு தாங்கிய நிலையிலும், மற்ற இரு கைகளில் அபய முத்திரையுடனும், பத்மாசனத்தில் இருந்த திருக்கோலத்தில், கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றான். தாயாரின் திருநாமம் அரவிந்தவல்லி நாச்சியார். இவரை வணங்கி பிரம்மாநந்தம் பெறுகின்றோம்; தாயாரின் திருவருளுக்கும் பாத்திரர்களாகின்றோம்.

வதரி நாராயணனின் திருக்கோயிலின் சுற்று 100 அடி நீளமும் 60 அடி அகலமும் உள்ளது. திருக்கோயில் கண்ணுக்குப் பெருமிதமாகத் தோன்றாவிடினும், பெருங் கற்களாலும், மரத்தாலும், துத்தநாகத் தகட்டாலும் கட்டப் பெற்றுள்ளது. ஆகவே பராமரிப்புச் செலவு சிக்கனமாத் உள்ளது. திருக்கோயிலில் பயணிகளை ஆண்கட்குத் தனியாகவும் பெண்கட்குத் தனியாகவும் "குயூ" வரிசையில் தான் விடுகின்றனர். ஒவ்வொருவரும் ஐந்து மணித்துளிகள் நர-நாராயணனைச் சேவிக்கலாம். அதற்குமேல் சேவிக்க விரும்புவோர் மீண்டும் வெளியில் வந்து குயூ வரிசையில் சேர்ந்து போகலாம். அபிஷேகம், அருச்சனை, கர்ப்பூரார்த்தி முதலியவற்றிற்குக் கட்டணம் செலுத்துவோர் கருவறையின் அருகில் அநுமதிக்கப் பெறுகின்றனர். இப்பொழுது உள்ளம் விரும்பும்வரையில் எம்பெருமானைச் சேவித்து மகிழலாம். தலைமை அருச்சகரை இரவல்ஜி என வழங்குகின்றனர். இவர் கேரள நம்பூதிரி அந்தணர்களிடமிருந்தே தேர்ந்தெடுக்கப்

பெறுவார். திருத்தலப் பயணிகளில் வேண்டுவோருக்கு இவர் இறைவனின் திருமுகம், திருமேனி முதலியவற்றை விளக்குவார்.

திருக்கோயிலின் பிராகாரத்திற்குள்ளேயே இலக்குமி தேவி, ஆதிசங்கரர் இவர்கட்குத் தனித்தனி சிறுகோயில்கள் உள்ளன. திருக்கோயிலின் இடப் புறத்தில் என்றும் பஜனைக் குழாம்கள் இருந்துகொண்டே இருக்கும். உருத்திர வீணைக் கலைஞர் ஒருவர் தலைமையில் சதா இசை விருந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும். இப்பெரிய கோயிலின் பின் புறத்தில் இலக்குமி நரசிம்மருக்கு ஒரு தனிக்கோயில் உள்ளது. இங்கு வேதாந்த தேசிகர், இராமாநுசர் இவர்களுடைய திருமேனிகள் நிறுவப் பெற்றுள்ளன. திருக்கோயிலின் அருகில் 'பிரம்ம கபாலம்' என்ற திருநாமத்துடன் ஒரு பெரும் பாறை உள்ளது. இங்குத் திருத்தலப் பயணிகள் தம் முன்னோர் கட்குப் பிண்டம் சமர்ப்பித்துத் தர்ப்பணம் செய்வர்.

இத்திருக்கோயில் உள்ள இடத்தை 'விசாலபுரி' என வழங்குவர். எல்லாப் பக்கங்களிலும் திருக்கோயில் பனி வரைகளால் சூழப்பெற்றுள்ளது; திருக்கோயில்ன் முன் புறமிருப்பது நர-நாராயண மலையாகும்; வலப்புறம் இருப்பது நீலகண்ட மலையாகும். வழியில் திருத்தலப் பயணிகள் ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது ''போலோ பதரி விசால் கி ஜை; ''போலோ பதரிநாராயணன் கி ஜை'' என்று குரல் எழுப்பி வரவேற்றுப் புகழ் பாடி மகிழ்வர்.

வதரி நாராயணனைப் பெரியாழ்வார்,

''வடதிசை மதுரை சாளக்கிராமம்
வைகுந்தம் துவரை அயோத்தி
இடம்உடை வதரி இடவகைஉடைய
எம்புரு டோத்தமன் இருக்கை''[2]

2. பெரியாழ் திரு. 4. 7: 9.

என்று கண்டம் திருப்பதி எம்பெருமானை மங்களா சாசனம் செய்யுங்கால் குறிப்பிடுவர். திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில்,

"பாரோர் புகழும் வதரி"[3]

என்று குறிப்பிடுவதுடன் திருவதரித் திருமலையைத் திருவுள்ளம் பற்றி ஒரு திருமொழியாலும்[4] வதரி நாராயணன் தவம் புரிந்த இடமாயும் தானே சீடனாயும் ஆசாரியனாயும் நின்று திருமந்திரத்தை வெளியிட்டருளின இடமாயும் உள்ள வதரிகாசிரம சிறப்பைத் திருவுள்ளம் பற்றி ஒரு திருமொழியாலும்[5] மங்களாசாசனம் செய்கின்றார்.

நர-நாராயணன் உகந்தருளின இடம் வதரித் திருமலை. அதுவும் ஆழ்வாருக்கு உகப்பாகின்றது. "திருவேங்கட மாமலை, ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே"[6] என்று கூறிய நம்மாழ்வாரைப் பின்பற்றி இவரும் மலையையே சேவிக்கின்றார். பாசுரந்தோறும் "வதரி வணங்குதுமே' வதரி வணங்கிதுமே" என்று குறிப்பிடுகின்றார். வதரி இருக்கும் இமயமலைப் பகுதியோ "கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை"[7] என்னும் திருப்பதிகள் போலன்றி மிகச் சிரமத்துடன் அடையக்கூடிய இடமாதலால் உடல் பாங்காக இருக்கும்பொழுதே சென்று சேவிக்க வேண்டுமென்று ஆற்றுப்படுத்துகின்றார். வதரியை "மது உண் வண்டு பண்கள் பாடும் வதரி"[8], "ஆயிரம் நாமம் சொல்லி, வெளி கொள் வண்டு பண்கள் பாடும் வதரி"[9], "வாளைபாயும் தண்தடம் சூழ் வதரி"[10], என்று மலையின் இயற்கைக் காட்சியில் மனத்தைப் பறிகொடுக்கின்றார். "வண்டு பாடும் தண்துழாயான் வதரி"[11]

3. சிறிய திருமடல்—கண்ணி 47
4. பெரி திரு 1.3
5. பெரி. திரு. 1.4
6. திருவாய். 3.3:8.
7. திருக்குறுந்—19
8. பெரி. திரு. 1.3:2
9. ஷை 1 . 3 : 3
10. ஷை 1 . 3 : 4
11. ஷை 1 . 3 : 5

என்று எம்பெருமான் திருக்கோயில் கொண்டுள்ள இடம் வதரி என்பதையும் குறிப்பிடுகின்றார். எம்பெருமானை யும் "வைப்பும் நங்கள் வாழ்வும் ஆனான்"[12] என்றும், "மைத்த சோதி எம்பெருமான்"[13] என்றும், "வாசம் மல்கும் தண் துழாயான்"[14] என்றும் போற்றிப் புகழ் கின்றார்.

வயோதிக பருவத்தை இவர் வருணிக்கும் திறம் நெஞ்சில் நிலைத்து நிற்கும் தன்மையது. உடலுக்குக் கிழத்தனம் வருங்கால் ஊன்றுகோல் அவசியமாகின்றது. முதுகு கூனிட்டுப்போகின்றது. தடியை ஊன்றிக் கொண் டும் நடக்கமுடியாத நிலை. விழுந்தும் எழுந்தும் பெரு மூச்சு விட்டுக்கொண்டும் சிரமநிலை *(1)*; கிழத்தனத்தில் நாலடி நடந்தாலும் முதுகு நோகும்; முன்பக்கம் விழா மைக்காக தண்டூன்றிக் கொள்ள வேண்டிய நிலை. நடக்குங்கால் உடல் நடுங்கும்; கண்கள் சுழலும்; பெரிய ஒலியுடன் இருமலும் உண்டாகும் (2); இளமைப் பருவத் தில் மறைந்து கிடந்த நரம்புகள் முதுமையில் உடல் பசையற உலர்ந்தபடியால், உறிகள்போலே நீண்ட கொத்துக் கொத்தாகக் கிளம்பித் தோன்றும்; தசையும் ஒடுங்கி மனமும் நலிவு படும்; இப்படிப்பட்ட நிலைமை யிலும் கம்புடன் புறப்பட்டு எங்காவது போகத் தோன் றும்; நெடிய வழியைப் பார்த்தவாறே கண்கள் சுழலும்; அடி பெயர்ந்து போகமாட்டாமல் நடுங்கி நிற்கும் நிலை (3); கண்கள் சுருங்கிப்போய் அவற்றினின்றும் பீளை பெருகவும் பித்தம் மேலிட்டுத் தலை சுற்றித் தள்ளம்பாறி நடக்கவும் இயல்பு (4); இளமையில் பாவையர் விரும்பும் நிலையில் இருந்தமையும், அவர்தம் இதழமுதம் பருகி நின்றபடியையும், சிற்றின்பங்களில் ஆழங்கால்பட்ட

12. தை 1 . 3 : 6
13. தை 1 . 3 : 7
14. தை 1 . 3 : 8

நிலையையும் சொல்லுவது, பின்னர் இருமுவதும், மீண்டும் சொல்லுவது, இருமுவது, ஆக இந்நிலையுடன் தடியைக் காலாகக் கொண்டு தடுமாறி நடக்கவேண்டிய நிலை (5).

மேலும் கிழத்தனத்தின் நிலையை எடுத்துக் காட்டுகின்றார், கிழத்தனத்தில் ஒரு சொல்லைப் பகர நேர்ந்தால் அது குதலைச் சொல்லாக வெளிப்படும்; அத்துடன் கபமும் வந்து விழும்; கூடவே இருமலும் வந்து சேரும்; இவ்வளவால் உடலும் அதிகமாகச் சோர்வுறும். இந்நிலையிலும் வாயை மூடிக்கொண்டு சும்மா இராமல் பைத்தியம் பிடித்தவர்கள் போல் எதையாவது உளறிக் கொட்டுவார்கள். பேச முடியாமல் ஆயாசம் மேலிட்டுவிடும்(6); தண்டு காலூன்றி தளர்ந்து நடந்து கொண்டு தாம் நெடுநாள் பழகின மின்னிடை மடவார் வீதியில் செல்லுங்கால் அவர்கள் பரிகசிப்பார்கள் (7); முற்றமூத்துக்கோல் துணையா முன்னடி நோக்கி வளைந்து சென்று குறடேறும்போதே துரத்தி அடிப்பார்கள்; தெருத்திண்ணையில் உட்காரவும் அநுமதியார்கள்; அப்படிவெருட்டும் போதும் பீளைக்கண்களுடன் பாசம் ஒழியாது மயங்கி நிற்பர் (8); கருமேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் சிதிலமான நிலையில் அடியெடுத்து வைக்க முடியாது ஒரு மூலையில் கிடந்து கண்டபடி பிதற்றுவர் (9). இந்த அவல நிலை தோன்றுவதற்கு முன்னர் வதரியை வணங்குமாறு ஆற்றுப்படுத்துகின்றார் ஆழ்வார். இங்ஙனம் வதரிநெடு மாலைப் பாடியும், பாட்டுக்குத் தகுதியாக ஆடியும் அநுபவித்தால் நீள்விசும்பு அருளப்பெறுவர் என்று பலனையும் சொல்லித் தலைக் கட்டுகின்றார். இந்தப் பாசுரங்களில் கிருட்டிணாவதாரத்தில் பேய்ச்சி மூலையூடு உயிரைவற்றவாங்கி உண்டதும் (1), காளையாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத்து நின்றதுமான (4) தீரச்செயல்கள் அநுசந்திக்கப் பெறுகின்றன. ஆழ்கடலைக் கடைந்து

அமுதம் கொண்ட செய்தியும் (6) குறிப்பிடப் பெறு கின்றது.

நர-நாராயணன் எழுந்தருளியிருக்கும் ஆச்ரமத்தைப் பேசும் ஆழ்வார், பாசுரங்கள்தோறும் பொதுவாக ஆச்ரமம் இருக்கும் இடத்தைப் பற்றியும் அங்கு எழுந்தரு ளியிருக்கும் எம்பெருமான் பற்றியும் பேசுகின்றார். இந்த ஆச்ரமம் ஆகாயகங்கைக் கரையிலுள்ளது. தேவர்கள் கற்பகமலர்கள் கொண்டு வந்து சமர்ப்பித்து வணங்கும் இடம் (1); நான் முகனும் ஏனைய தேவர்களும் அடிக்கடி வந்து வழிபடும் இடம்(2); சூரியன் சுற்றி வரும் மேரு மலைவரை முட்டி அங்கிருந்து கங்கை நீர் இழிவதும் மாடமாளிகைகளின் உச்சியில் நாட்டப் பெற்ற தூண் களில் கட்டப் பெற்றுள்ள துணிகள் காற்றில் அசைந்தாடு வதுபோல் தோன்றுவதுமான இடம்(3); இங்குள்ள கங்கை நீரில் அப்சரஸ் மாதர்களின் சேலைகளும், மாலைகளும் திரட்டி வருவதுடன் பல்வேறு இரத்தினக் கற்களையும் உருட்டிக்கொண்டு வருவதைக் காணலாம் (4); இங்குத் தான் அண்டத்தைச் சுமக்கும் மேருமலையின் உச்சி யிலிருந்து கங்கை இழிகின்றது (5).

கபிலமுனிவரின் சாபத்தால் நீறாய்க் கிடந்த தம் முன்னோர்கள் (சகரபுத்திரர்கள்) தூய்மையடைவான் வேண்டி பகீரதன் தவம் புரிந்து கங்கையைக் கொணருங் கால், அது பெரிய தொருமலையைப் பிளந்து கொண்டு அங்குள்ள யானைகளைத் தள்ளிக்கொண்டு வருவதைக் காணக் கூடிய இடம்(6); ஒரு முகமாக வந்து இழிந்தால் பெருவிசையோடு வரும் மிடுக்கைக் கடல் பொறாதென்று கருதிய தேவர்களின் பிரார்த்தனைக் கிணங்க அது பல முகமாகப் பெருகி வருவதைக் காணலாம் (7); இந்தக் கங்கையின் வரலாற்றையே விசுவாமித்திரன் இராமலக்கு மணர்கட்கு சொல்லியதாகும் (8); பகீரதன் கங்கையை அவதரிப்பித்தபோது அது பிரம்மலோகத்தை ஊடறுத்துக் கொண்டு ஆகாயத்தினின்றும் இழிந்து அங்கிருந்து பூமி

நடுங்கும் படியாகப் பிரவகித்துத் தெளிந்த நீரையுடைய கங்கை செல்லும் இடம்(9).

இத்தகைய கங்கைக் கரையின் மீதுள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் யாவன்? பூமிப் பிராட்டியின் பொருட்டு வராக அவதாரம் எடுத்தவன்; பெரிய பிராட்டியின் பொருட்டு இராமனாக வந்தவன்(1); மாயமானாக வந்த மாரீசனை வானுலகிற்கு அனுப்பிய மாவீரன்(2); இராமாவதாரத்தில் இலங்கையரசன் இராவணன், அரக்கர் குலம் இவர்கள் யாவரும் ஒழியும்படியாகத் தீரச்செயல்கள் புரிந்தவன்(3);யசோதை வடிவு கொண்டு வந்து தனக்கு நஞ்சூட்டிய முலையைத் தந்த பூதனையை முடித்தவன் (5): நப்பின்னையின் பொருட்டு அசுராவேசமுடைய ஏழு எருதுகளை அடக்கியவன்(6); தான் கடல்கடைந்த காலத்தில் கடலினின்றும் வெளிப்பட்ட ஐராவதம், அமிர்தம் ஆகியவற்றை இந்திரனுக்கு ஈந்து தேவர்கட்குத் தலைவனாயிருக்கும் தன்மையையும் அருளியவன்(7): இப்பெருமானே மாரீசன் மீது வரிசிலை வளைத்துக் கணை தொடுத்தவன்; இரணியனின் மார்பைக் கீண்டவன்; நான்முகக் கடவுள் சிவன்மீது சீறி அவனுக்குக் கொடுத்த வெந்திறல் சாபத்தைத் தவிர்த்தவன்(8); 'இத்தகைய எம்பெருமான் தொண்டர்களின் பிறவிப் பிணியைப் போக்கி வீடுபேற்றை அருளுபவன்— 'தொழுதெழு தொண்டர்கள் தமக்கு, பிணியொழித்து அமரர் பெருவிசும்பு அருளும் பேரருளாளன்'; மனமே, அவனே உன்னுடைய உறுதிப் பொருளாகும்'' என்று மனத்திற்கு உபதேசம் செய்கின்றார் ஆழ்வார் (4); இந்த எம்பெருமானைப் பற்றிய இத் திருப்பாசுரங்களை ஓதுபவர்கள் மண்ணுலகை நெடுநாள் ஆண்டும் பிரம்மபதத்தை நிர்வகித்தும், அதன் பிறகு நித்திய சூரிகளுடன் ஒருங்கே இருப்பர் (10).

இவ்விடத்தில் ஓர் இதிகாசம். நஞ்சீயர் ஒருநாள் பட்டரை நோக்கி, 'ஏரார் இன்னிசை மாலை வல்லார்

இருடிகேசன் அடியாரே,' 'வைகுந்தம் ஏறுவரே' என்று பரமபுருஷார்த்தத்தைச் சொல்ல வேண்டியிருக்க, 'இருங் கடல் உலகமாள்வதான' தாழ்ந்த பலனைச் சொல்லு வதேன்?'' என்றார். அதற்குப் பட்டர், ரசோக்தியாக, ''திருமங்கையாழ்வார் அவதரித்த பின்பு தியாஜ்யமான (விலக்கப்படத்தக்க) ஐசுவரியமும், பரமபுருஷார்த்தமாய் விட்டது காணும். பணமுள்ளவிடங்களில் சென்று கொள்ளையடித்து பகவத் பாகவத கைங்கரியங்கள் பண்ணுகிறவராகையாலே ஹேயமான (விடத்தகுந்த) ஐசுவரியமும் இவ்வாழ்வார் திருவுள்ளத்தால் உத்தேச்ய மாய் (கருத்தாய்) விட்டதிறே'' என்றாராம். யார் யார் எந்தெந்தப் பலன்களை விரும்பினாலும் அந்தந்தப் பலன் கள் இவ்வருளிச் செயல் மூலமாகக் கிடைக்கும் என்பது இதன் உண்மைப் பொருளாகும்.

நர-நாராயணன் சந்நிதியில் இந்த இரு திருமொழி களையும் மிடற்றொலியுடன் ஓதி உளங்கரைந்த நிலை யில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர அதனையும் ஓதுகின்றோம்.

**''தாட்கு அடிமை என்றுதமை**
**உணரார்க்கு எட்டெழுத்தும்**
**கேட்கவெளி யிட்டருளும்**
**கேசவனை — வேட்கையொடு**
**போவதுஅரி தானாலும்**
**போய்த்தொழுவோம் நெஞ்சமே**
**மாவதரி யாச்சிர**
**மத்து''**[15]

[தாட்கு-திருவடிகட்கு; அடிமை-அடிமைப்பட்டவர்; தமை-ஆன்ம சொரூபத்தை; கேசவன்-திருமால்; வேட்கை-பக்தி]

15. நூற். திருப். அந்—101

இந்தத் திருப்பாசுரம் ஆன்ம சொரூபத்தை உணர்த்த வல்லது. நர-நாராயணன் எழுந்தருளியிருக்கும் திருத்தலத்திற்குப் போய்த் தொழுவதற்கு அரிதாயினும், எப்படியாவது சென்று அப்பெருமானைத் தொழுது உய்வு பெறல் வேண்டுமென்று தமது நெஞ்சிற்கு அறிவுறுத்துவர் அய்யங்கார்.

இத் திருத்தலப் பயணம் என்றும் பெறாத மனநிறைவினைத் தருகின்றது; பெறற்கரிய பெரும்பேற்றைப் பெற்றதாக எண்ணுகின்றது. பரிபூர்ண பிரம்மாநந்தம் பெற்ற களிப்பையும் நல்குகின்றது. இந்த மனநிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

# 7. கண்டம் கடிநகர் புருடோத்தமன்

இமய மலையில் உள்ள திவ்விய தேசங்களுள் முதலாவதாக நாம் சேவிப்பது இந்தத் திருத்தலமே. '**கண்டம்**' என்பதுவே இத்திருத்தலத்தின் திருநாமம். 'கடி' என்னும் சொல் சிறப்புப் பொருளது. கண்டம் கடிநகர் என்பது சிறந்த நகரமாகிய கண்டம் என்ற பொருளைத் தருகின்றது. இந்தத் திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளும் போது மூன்று வைணவ மந்திரங்களுள் முதலாவதாக இருக்கும் திருமந்திரத்தின் அரிய தாற்பரியத்தைச் சிந்திக்கின்றோம். 'ஓம் நமோ நாராயணாய' என்பதே திருமந்திரம். இதில் '**ஓம், நம:, நாராயணாய** என்ற மூன்று சொற்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் முதல் சொல்லாகிய 'ஓம்' என்பதைப் பிரணவம் என்பர். இதன் பொருளையே 'நம:', 'நாராயணாய' என்ற சொற்கள் விரிவுபடுத்துகின்றன. இந்த இரு சொற்களின் பொருளையே **துவயம்** என்ற இரண்டாவது மந்திரம் விரிக்கின்றது; இந்தத் துவயத்தின் பொருளையே மூன்றாவது மந்திரமாகிய **சரமசுலோகம்** விரிக்கின்றது. இதனால் திருமந்திரம் முதன்மையான மந்திரமாகத் திகழ்கின்றது. இது தன்னை உச்சரிப்பவர்கட்கு இரட்சகமாக இருத்தலின் **மந்திரம்** என்று பெயர் பெற்றது. இதனை அருகில் இருப்பவர் செவியிலும் விழாதபடி தனக்கு மட்டிலும் கேட்குமாறு உச்சரிக்க வேண்டும். இங்ஙனம் உச்சரிப்பதையே **ஜபம்** என்று வழங்குவர்.

திருமந்திரத்தின் முதற் சொல்லாகிய **ஓம்** என்பதில் அ, உ, ம என்று மூன்று எழுத்துகள் அடங்கி உள்ளன.

இச்சொல்லிற்கு இரண்டு நிலைகள் உள்ளன. பிரிந்திருக்கும் நிலை சம்ஹிதாகாரம் என்றும், சேர்ந்திருக்கும் நிலை அசம்ஹிதாகாரம் என்றும் வழங்கப்பெறும். இப் பிரணவம் பிரிந்திருக்கும் நிலையில் அ, உ, ம, என்ற மூன்று எழுத்துகளாய், இம்மூன்று எழுத்துகளும், மூன்று சொற்களாய், மூன்று பொருள்களைத் தெரிவிக்கும். சேர்ந்திருக்கும் நிலையில் ஒரே எழுத்தாய், ஒரே சொல்லாய், ஒரு பொருளைத் தெரிவிக்கும். அஃதாவது, அகாரம் பகவானையும், அதில் ஏறி மறைந்துள்ள வேற்றுமை பிறருக்கு அடிமையாயிருத்தலையும் (சேஷத்துவம்), உகரம் அந்த சேஷத்துவத்தின் மற்றவருக்கல்லாமல் இறைவனுக்கே உரித்தாயிருத்தலையும் (அநந்யார்ஹத்துவம்), மகாரம் ஞானவானாகிய சீவனையும் தெரிவிக்கின்றன. 'ஓம்' என்று சேர்ந்திருக்கும் நிலையில் இறைவன் ஒருவனுக்கே அடிமைப்பட்டிருத்தல் (அநந்யார்ஹ சேஷத்துவம்) என்பதைப் புலப்படுகின்றது.

இந்த மூன்று எழுத்துகளின் உற்பத்தி முறையைப் பிள்ளை உலக ஆசிரியர்,

> **"மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டுமாப்போலே, மூன்று வேதத்திலும் மூன்று அட்சரத்தை எடுத்தது"**[1]

[அட்சரம் எழுத்து]

என்று குறிப்பர். இருக்கு, யஜுர், சாமம் என்று மூன்று மறைகளையும் துருவி ஆராய்ந்ததில், இருக்கு வேதத்தின் சாரமாக 'பூ:' என்பது கிடைத்தது. யஜுர் வேதத்தின் சாரமாக 'புவ:' என்பது கிட்டியது; சாம வேதத்தின் சாரமாக 'ஸுவ:' என்பதை அடைய முடிந்தது. இவை மூன்றும் பொன் கட்டிகளைப் போன்றவை. இந்த மூன்று

1. முமுட்சு—32

பொற்கட்டிகளையும் ஒன்றாகச் சேர்த்து உருக்கி அதனைத் தங்கமாக்குவதற்கு ஓடவைத்தல் போன்று, இறைவன் தன் சங்கற்பத்தினால் பூ;, புவ;, ஸுவ;, என்ற மூன்றையும் ஓடவைத்துத் தூய்மையாக்கி அதிலிருந்து முதலில் அகாரத்தையும், இரண்டாவதாக உகாரத்தையும், மூன்றாவதாக மகாரத்தையும் தோன்றுமாறு செய்தான். ஆகவே, அ, உ, ம என்ற மூன்றும் கொண்ட ஓம் என்ற பிரணவம் ''சகல வேத சாரமாகின்றது''[2]

கண்டம் கடிநகரை நோக்கிச் செல்லும் நம்முடைய மனத்தில் இந்த எண்ணங்கள் குமிழியிட்டெழுகின்றன. இன்று தேவப் பிரயாகை என்று வழங்கப்பெறும் இடமே கண்டம் கடிநகராகும். இது பதரிக்குப் போகும் வழியில் கடல் மட்டத்திற்கு மேல் 1700அடி உயரத்தில் இமயமலையிலுள்ளது; ஹரித்துவாரத்திலிருந்து 70 கி. மீ. தொலைவிலுள்ளது. இந்த இடத்தில்தான் விஷ்ணு கங்கையும் (விஷ்ணு படியும்) பாகீரதியும் ஒன்று சேர்ந்து கங்கையாக ஓடத் தொடங்குகின்றது. விஷ்ணு கங்கை என வழங்கும் அழகா நந்தா என்ற நதி அழகாபுரி என்ற இடத்திலும் பாகீரதி கங்கோத்ரியிலும் தொடங்குகின்றன. பூமியின் அடியிலிருந்து சரசுவதி என்ற நதியும், தேவப்பிரயாகையில் சேர்வதாக ஐதிகம். இதனால் இந்த இடம் 'திரிவேணி' என்றும் வழங்கப் பெறுகின்றது. இந்த இடத்தில் ஒரு சிற்றூர் உள்ளது; சத்திரங்களும், சிறு சிறு கடைகளும் அமைந்துள்ள இடம் இது. இரண்டு ஆறுகளும் கூடும் இடத்தில்தான் திருமால் திருக்கோயில் உள்ளது. இதில் தென்னாட்டு வைணவ அந்தணர்கள் கைங்கரியம் புரிந்து வருகின்றனர். தேவப்பிரயாகையில் அரங்கநாதருக்கும் ஒரு திருக்கோயில் உண்டு; இதனை ஆதிசங்கரர் நிறுவியதாகச் சொல்லப்பெறுகின்றது. இந்த ரகுநாத்ஜியின்

2. முமுட்சு—34

திருக்கோயிலை யொட்டியே பதரிநாதர், காளபைரவர், அநுமான் ஆகியோருக்கும் தனித்தனிக் கோயில்கள் எழுந்துள்ளன.

கண்டம் கடிநகர் எம்பெருமானைப் பெரியாழ்வார் ஒரு திருமொழியில் (11 பாசுரங்கள்) மங்களாசாசனம் செய்துள்ளார். இங்குள்ள எம்பெருமான் புருடோத்தமன்; நீலமேகப் பெருமாள் என்ற திருநாமமும் இவருக்கு உண்டு. நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் சேவை சாதிக்கின்றார். தாயார், புண்டரீகவல்லி. இவர்களைக் சேவிக்கின்றோம். பெரியாழ்வார் இவரை,

> **''மூன்றெழுத் ததனை மூன்றெழுத் ததனால்**
> **மூன்றெழுத் தாக்கி மூன்றெழுத்தை**
> **ஏன்றுகொண் டிருப்பார்க்கு இரக்கம்நன் குடைய**
> **எம்புரு டோத்தமன் இருக்கை;**
> **மூன்றடி நிமிர்ந்து மூன்றினில் தோன்றி**
> **மூன்றினில் மூன்றுரு ஆனான்**
> **கான்தடம் பொழில்சூழ் கங்கையின் கரைமேல்**
> **கண்டம் என்னும் கடிநகமே''[3]**

[மூன்று எழுத்து-பிணவம்; மூன்று எழுத்து ஆக்கி-அ, உ, ம ஆக்கி; ஏன்று கொண்டு-தஞ்சமாக நினைத்து அநுசந்தித்து; மூன்று அடி-மூன்று பதம்; கான்-நறு நாற்றம்: தட-பெரிய; பொழில்-சேவை]

என்ற பாசுரத்தால் மங்களா சாசனம் செய்கின்றார்.

கண்டம் என்னும் கடிநகர் எங்குள்ளது? நறு நாற்றம் கமழும் பெரிய சோலைகளினால் சூழப்பெற்ற கங்கையின் கரைமேல் உள்ளது. அங்குக் கோயில் கொண்டிருப்பவர் யார்? புருடோத்தமன் என்ற திருநாமம் கொண்ட எம் பெருமான். அவன் தன்மை யாது? அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்றெழுத்துகளை தன் சங்கற்பத்தினால்

3. பெரியாழ்-திரு.4.7:10

மூன்று வேதங்களினின்றும் தோற்றுவித்தவன்; இந்த மூன்று எழுத்துகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே எழுத்தாக 'ஓம்' என்ற பிரணவ மந்திரமாகச் செய்தவன்; இந்த மூன்று எழுத்துக்களாலான பிரணவத்தை மூன்று சொற்களாய் மூன்று பொருள்கட்கு வாசகமாக இருக்கும் அகார, உகார, மகாரங்களான மூன்று எழுத்துகளாகப் பிரித்தவன்; இவற்றுள் அகாரம் சீவான்மாவுக்குள்ள பகவானுக்கு அடிமைத் தன்மையைக் (பகவச்சேஷத்துவம்) கூறுவதாலும், உகாரம் தேற்றப் பொருளைக் கூறி அந்த அடிமைத் தன்மை பரமபதநாதனாகிய நாராயணன் பக்கலின்றி வேறு ஒருவர் பக்கல் வகிக்கத் தகாதது என்பதைத் தெரிவிக்கையாலும், மகாரம் ஞானத்தைக் கூறுவதாலும் இறைவன் ஒருவனுக்கே அடிமைப் பட்டிருத்தலுக்கு (அநந்யார்ஹ சேஷத்துவம்) உரிய ஆன்மா தேகத்தினின்றும் வேறுபட்டது என்பதைப் புலப்படுத்துவதாக இருப்பதாலும் இம்மூன்றெழுத்து களையுமே தமக்குத் தஞ்சம் என்று கொண்டிருப்பவர்களின் பக்கல் தம் பேரருளைக் கிட்டச் செய்பவன்; பிரணவ பதத்தை நம பதத்துடனும் நாராயண பதத்துடனும் கூட்டி இம்மூன்று பதங்களில் 'ஓம்' என்பதில் இறைவன் ஒருவனுக்கே அடிமைப் பட்டிருத்தல் (அநந்யார்ஹ சேஷத்துவம்) என்ற நிலையையும் 'நம;' என்பதில் இறைவன் ஒருவனையே உபாயமாகப் பற்றியிருத்தல் (அநந்யார்ஹ சரண்யத்துவம்) என்ற நிலையையும், 'நாராயணாய' என்பதில் அவன் ஒருவனையே இனிய பொருளாகக் கொண்டிருத்தல் (அநந்ய போக்யத்துவம்) என்ற நிலையையும் தோற்றுவித்தவன்; இவற்றிற்கு எதிர்த் தட்டாகத் தலைமை நிலையையும் (சேஷித்துவம்), தஞ்ச நிலையையும் (சரண்யத்துவம்), அடையப்படும் நிலையையும் (பிராப்யத்துவம்) கொண்டு திகழ்பவன்.

பாசுரங்கள் தோறும் கங்கையின் தன்மையும், எம்பெருமான் பெருமையும் நுவலப்பெற்றுள்ளன. ஏதேனும்

ஒரு குளத்தில், ஒருவர் நீராடுங்கால் 'கங்கை, கங்கை என்று உச்சரித்தாலே அவர்தம் பெருப்பெருத்த பாவங்களையெல்லாம் ஒழிக்க வல்லது கங்கை நதி(1); கங்கை முதலில் ஓங்கி உலகளந்த உத்தமனாகிய எம்பெருமானின் திருவடியை நான்முகன் தன் கமண்டல நீரால் கழுவிப் பாத பூசை செய்ததனால் அவன் கையிலும், எம்பெருமான் திருவடியிலும் தொடங்கி, அந்நீர் கங்கையாகப் பெருக்கெடுக்கும்போது அது பசுமை நிறமுடைய திருத்துழாயையும், பின்னர் அது சிவபெருமானின திருச்சடையில் தங்கி இழிந்ததால் கொன்றை மலரையும், மலை வழியாக இழிந்ததால் பல்வேறு வகை இரத்தினங்களையும்[4] கொண்டு ஓடுகின்றது (2, 3); இமயமலை முதல் கடலில் கலக்கும் வரையில் அதன் இரு கரைகளிலும் உள்ள உலக மக்கள் ஆரவாரித்துக்கொண்டு நீராடுவதனால் அவர்தம் பாவங்களையெல்லாம் போக்கும் பெருமையுடையது (4); நீராடுவோரின் எழுபிறப்புகளிலும் திரண்ட பாவங்களைக் கணநேரத்தில் போக்கும் தன்மையது(5); அருந்தவ முனிவர்கள் தாம் மேற்கொண்ட வேள்வி முடித்த பிறகு, வேள்வியின் முடிவில் செய்ய வேண்டி நீராடலைச் செய்ய (அவப்பிரதம் என்ற நீராடல்) அதனால் வேள்வி நிலத்திலுண்டான கலப்பை முதலிய எல்லாத் துணைக் கருவிகளையும் அடித்துக்கொண்டு வரும் சீர்மையது(6); தேவேந்திரன் பட்டத்து யானையாகிய ஐராவதத்தின் மதநீரும், இளந் தேவமாதர்கள் நீராடுவதால் அவர்

4. நான்முகன் எம்பெருமானின் திருவடியைக் கழுவுங்கால் அந்த ஸ்ரீபாத தீர்த்தம் கங்கையாகப் பெருக்கெடுத்து ஆகாய கங்கையாக உம்பருலகத்தில் நின்றது. சூரியகுலத் தோன்றலாகிய பகீரதன் என்ற மாமன்னன் கபிலமுனிவரின் கண்ணின் சினத்தீய்க்கு இலக்காகிஉடலெரிந்து சாம்பராகி நற்கதி இழந்த அறுபதினாயிரம்—சகரபுத்திரர்கள் நற்கதி பெரும்பொருட்டு நெடுங்காலம் தவமியற்றி, மேலுலகத்திலிருந்து பூமிக்குக் கொணர்கையில் அவனது வேண்டுகோளால் சிவபெருமான் அந்நதியைத் தன்முடிமீது ஏற்றுச் சிறிது சிறிதாக பூமியில் விட்டனன் என்பது புராண வரலாறு.

களணிந்திருந்த சாந்தும், அவர்கள் தலையில் செருகியிருந்த கற்பகப் பூக்களும் ஒன்று சேர்ந்து வரும் நீரையுடையது(7); வேள்வி நிலத்திலிருந்து யாகப் பசுக்களைக் கட்டுந் தறிகளைத் (யூபஸ்தபங்கள்) திரள்திரளாக அடித்துக் கொண்டு வருகையில் யாகப் புகையையும் உட்கொண்டதால் அந்தப் புகையின் மணமும் கொண்டு இலங்குவது(8); சோலைகளின் வழியே வருவதால் பூக்களின் நறுமணமும் நீரில் கமழ்வது(10); மந்தரம் முதலிய மலைகள் சலிக்கும் படியாகவும், பூமி பிளவுபட்டு இடிந்து விழும்படியாகவும், இருகரைகளிலுள்ள மரங்கள் வேருடன் சாய்ந்து முறியும் படியாகவும், ஒன்றாலும் கலங்காத கடலும் கலங்கும்படியாகவும் வெள்ளப்பெருக்கு இழியும் தன்மையுடையது (9) இதனால் 'பொங்கொலி கங்கை' என்று இதற்குத் திருநாமம் சூட்டுகின்றார் ஆழ்வார்(11).

ஆழ்வார் எம்பெருமானின் பெருமையில் ஈடுபடுவதிலும் நாம் ஆழங்கால் படுவோம். வைணவ தத்துவங்களின் கருவூலமாகத் திகழும் எம்பெருமானின் சிறப்பை மேலே (10) கண்டோம். மேலும், இங்குக் காண்போம். இராமவதாரம், திரிவிக்கிரமவதாரம், பலராமவதாரம், கிருஷ்ணாவதாரம் என்ற அவதார எம்பெருமான்களும், அர்ச்சாவதாரமாக வேறு சில திவ்விய தேசங்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களும் கண்டம் கடிநகர் புருடோத்தம எம்பெருமானாக இருந்து சேவை சாதிப்பதை ஆழ்வார் திருவுள்ளம் எண்ணிக் களிக்கின்றது. இக்களிப்பை "எம் புருடோத்தமன் இருக்கை...கண்டம் என்னும் கடிநகரே" என்று பாசுரங்கள் தோறும் காணச்செய்கின்றார் ஆழ்வார்.

கண்டம் கடிநகரில் திருக்கோயில் கொண்டு சேவை சாதிக்கும் எம்பெருமான் சூர்ப்பணகையின் மூக்கையும்,

அவளுடைய அண்ணன் இலங்கைவேந்தன் இராவணனின் தலைகளையும் அறுத்தொழித்து அயோத்தி நகர் திரும்பி பதினோராராயிரம் ஆண்டு அரசாண்டு தன் புகழ் நிலவச் செய்தவன் (1); மாவலி கையில் நீரேற்று மூவடி மண் பெற்று உலகளக்கத் தொடங்கியபோது சந்திர சூரியர்கள் 'இதுவென் புகுந்தது இங்கு? அந்தோ?' என்றாற்போல அஞ்சி நடுங்கும்படி விம்மி வளர்ந் தோங்கி 'ஓங்கி உலகளந்தவன்' (2); போர் செய்யும் எண்ணத்துடன் எதிர்த்து வந்த அசுரர்களின் தலைகளைப் பாஞ்சசந்நியத்தை திருப்பவளத்தில் வைத்து முழக்கியும். அழல் உமிழ் ஆழி கொண்டெறிந்தும் உருட்டி யருளியவன் (3); அசுரர்களும், அரக்கர்களும் இந்திரன் முதலிய தேவர்களை அமைதியாக இருக்கவொட்டாது அலைத்து அடர்த்து எதிர்த்துப் போர் புரிய வந்த காலத் தில், அவர்கள் பக்கத்தில் துணையாக நின்று அசுரர்கள் மீது நாந்தகம் என்ற வாளை வீசியெறிந்து அவர்களை எமபுரம் கிட்டச் செய்தவன் (4); கலப்பை, உலக்கை, வில், திருவாழி, திருச்சங்கு, மழு, வாள் ஆகியவற்றைப் போர்க் கருவிகளாக உடையவன் (5); இந்திரன் பசிக் கோபத்தால் திருவாய்ப்பாடியில் கல்மாரி பொழிந்து, ஆயர்களையும், ஆநிரைகளையும் அலைத்த பொழுது கோவர்த்தன மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்து அவர்தம் இடர்களைப் போக்கியவன் (6); கண்ணனைக் கொல்லும் பொருட்டு, தான் மேற்கொண்ட வில் பெரு விழாவிற்காகக் கம்சன் அழைத்தபோது, அவன் வழியில் நிறுத்தியிருந்த குவலயாபீடம் என்ற யானையையும், அதன்மீது இவர்ந்திருந்த பாகனையும் கொன்றொழித்து, வழியில் மற்போருக்குத் தயாராக நின்ற சாணூரன் முஷ்டிகன் என்ற மல்லர்களை வானுலகத்திற்கனுப்பி, ஆயுதசாலையிலிருந்த வில்லைப் பிடித்து முறித்தும், உயர்ந்த அரசு கட்டிலின்மீது அமர்ந்திருந்த கம்சன்மீது பாய்ந்து, அவனைக் கொன்றொழித்து அற்புத விளை

யாட்டுகளைப் புரிந்தவன் (7); துவரையை அரசாண்ட பொழுது பாண்டவர்க்குத் துணையாக நின்று கௌரவர் களை அழியச்செய்து பாண்டவர்கட்கு அரசைக் கொடுத் தருளியவன் (8); வடமதுரை, சாளக்கிராமம், வைகுந்தம், துவாரகை, அயோத்தி, பதரி ஆகிய இடங்களில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி யிருப்பவன் (9).

இங்ஙனம் திருப்பாசுரங்களில் ஈடுபட்டு திவ்விய தேசத்தையும், திவ்விய தேச எம்பெருமானையும் அநுசந் திக்கும் நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நினைவிற்கு வர, அதனையும் ஓதி உளங் கரைகின்றோம்.

**''மத்தால் கடல்கடைந்து**
**வானோர்க்கு அமுதுஅளித்த**
**அத்தா! எனக்குஉன்**
**அடிப்போதில்—புத்தமுதை**
**கங்கைக் கரைசேரும்**
**கண்டத்தாய்! புண்டரிக**
**மங்கைக் கரசே**
**வழங்கு.''**[5]

[மத்து - மந்தரை மலை; வானோர் - தேவர்கள் அத்தா - தலைவனே; போது - மலர்; கண்டம் - திருப்பதியின் திருநாமம்; புண்டரிகம் - தாமரை; புண்டரிக மங்கை - பெரிய பிராட்டியார்.]

இதில் அய்யங்கார் எம்பெருமானை நோக்கி, அதில் திரு வடித் தாமரைகளின் பெருமையை அநுபவிக்கத்தக்க நல் லறிவினை வழங்குமாறு வேண்டுகின்றார். அவை தேனே மலருந் திருப்பாதங்களாதலால் அவற்றில் போக்கியதை விஞ்சியிருக்கும் என்பது குறிப்பு. ''சமயம் வந்தபோது பயனைக் கருதி உன்னை வணங்கி நின்ற தேவர்கட்கு பாற்கடலைக் வருந்திக் கடைந்து அதனின்றும் எழுந்த

5. நூற். திருப். அந்—102

அமுதினை அவர்கட்கு அளித்தாய்; பயன் கருதாது நின்னை வணங்கும் அடியேனுக்கு உன் திருவடித் தாமரைகளில் இயற்கையாகவே உள்ள இனிமையைத் தருவது எளிதாகும். 'மத்தால் கடல் கடைந்து வானோர்க்கு அமுது அளித்த அத்தா! எனக்கு உன் அடிப்போதிற் புத்தமுதை வழங்கு' என்ற தொடரில் இக்கருத்து தோன்றுகின்றது. மேலும், ''அமுதம் வேண்டும் என்று கேட்காத தேவர்கட்கு அதனை உண்டாக்கி அளித்தாய். அதனை விரும்பி வேண்டுகின்ற அடியேனுக்கு, இயற்கையாக நின்னிடத்திலுள்ள அந்த அமுதினை அளிக்கலாகாதோ? சமயம் வந்தபோது மாத்திரம் கால்கைப் பிடித்து (காக்கைப் பிடித்து?) காரியங் கொண்டு, பிற சமயங்களில் விலகி நிற்பவர்கட்குத் தான் உதவ வேண்டுமா? எப்போதும் நின்னையே அணுகி நின்று நின்னாலல்லது மற்றை யாவராலும் ஒன்றுங் குறை வேண்டாத அடியேனுக்கு உதவலாகாதோ?' என்பன போன்ற கருத்துகளும் இங்குத் தொனிப்பதைக் கண்டு மகிழ்கின்றோம். புத்தமுது என்பது எத்துணைக் காலம் அநுபவித்தாலும் தெவிட்டுதலில்லாது மேன்மேலும் இன்சுவை பயக்கும் 'ஆரா அமுது'; ''உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேன்''[6] போன்றது.

அவன் சந்நிதியில் மீண்டும் ஒரு முறை பெரியாழ்வார் தேனூறும் திருமொழியை வாய்விட்டு ஓதி பரிபூரண பிரம்மானந்தம் பெற்ற நிலையை அடைகின்றோம். கங்கையாற்றில் நீராடி திருமால் இணையடிகளின் கீழே நிரந்தர சேவை பண்ணும் பயனைப் பெற்றதாகும் என்று கூறும் திருமொழிப் பாசுரத்தைச் (11) சிந்தித்த வண்ணம் நம் இருப்பிடத்திற்கு திரும்புகின்றோம்.

6. பெரி. திரு.—4. 3: 9

# 8. திருப்பிரிதி எம்பெருமான்

மோட்சத்தை அடைய விரும்புகின்றவன், அதாவது முமுட்சு, திருமந்திரம் துவயம் சரம சுலோகம் ஆகிய மூன்று மந்திரங்களையும் அறிதல் வேண்டும். இவற்றுள் முதலாவதாகத் தெரிந்து கொள்ள வேண்டியது திருமந்திரமாகும். இம்மந்திரத்திற்குப் பொருளான நாராயணனைக் காட்டிலும் அவனைக் குறிக்கும் திருநாமத்தின் மேன்மை உயர்ந்ததாகும். இந் நாமத்திற்குரியவனாகச் சொல்லப்பெறும் எம்பெருமான் அருகிலில்லாமல் தொலைவிலிருப்பினும் அவனைப்பற்றிச் சொல்லுகின்ற இத்திருநாமம் அருகிலிருந்து தன்னைப் பக்தியுடன் சொன்னவர்களுடைய விருப்பங்களை முற்றுப் பெறச் செய்யும். ''திரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே''[1] 'என்பது முமுட்சுப்படி. இம் மந்திரம் அவரவர் விரும்பியவற்றைத் தரும் பெருமை யுடையது. பாகவதருக்குக் ததியாராதனம் செய்தற் பொருட்டு வழிப்பறிக் கொள்கையை மேற்கொண்டிருந்த திருமங்கையாழ்வார்முன் திருவாலி மணவாளன் தோன்றி அவர் செவியில் இத் திருமந்திரத்தைச் சாதித்த போது,

> **''குலந்தரும் செல்வம் தந்திடும்; அடியார்**
> **படுதுய ராயின எல்லாம்**
> **நிலந்தரஞ் செய்யும்; நீள்விசும்பு அருளும்**
> **அருளொடு பெருநிலம் அளிக்கும்;**

---

1. முமுட்சு - 16.

**வலந்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"[2]**

என்று சொல்லிப் போற்றுவர்.

நாராயண மந்திரத்தை அநுசந்திப்பவர்க்கு யாவரும் போற்றும் சேஷத்துவ ஞானமாகிய உயர்ந்த குலத்தை நல்கும்; அக்குலத்திற்கேற்ற கைங்கரியமாகிற பெருஞ் செல்வத்தை அளிக்கும்; அடியவர்கள் அநுபவிக்கின்ற துக்கம் என்னும் பெயரையுடைய எல்லாவற்றையும் தரை மட்டமாக்கும்; கைங்கரியத்திற்கு இடையீடின்றி மேன் மேலும் வளர்ந்தோங்கச் செய்யும் பரமபதத்தைக் கொடுக்கும்; இங்ஙனம் பரமபதத்தைக் கொடுத்தலேயன்றி தன் கருணையால் தன்னை அநுபவித்தால் ஏற்படும் பேரானந்தத்தில் திளைக்கச் செய்யும்; தான் செய்யும் கைங்கரியத்திற்குத் தானே கருத்தா என்றும், அதை அநுப விப்பவன் என்றும் நினையாமலிருத்தலாகிய வன்மையை யும் சேஷத்துவ சொரூபத்திற்கேற்ற மற்ற நன்மைகளை யும் தரும்; பெற்ற தாயைக் காட்டிலும் பல நன்மை களைப் புரியும் என்பதை அறிகின்றோம். திருமந்திரத்தின் பொருளுக்கு எல்லை நிலமாக இருப்பவை அர்ச்சை உருவ எம்பெருமான்கள் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங் களாகும். எம்பெருமான் சர்வ சுவாமி என்பதும், சர்வ சுலபன் என்பதும் திருமந்திரத்தின் தேர்ந்த பொரு ளாகும். அடியவர்கள் இவ்வுடம்பினால் அடிமை செய்து மகிழும்படிக்குப் பாங்காக எம்பெருமான் தன்னுடைய சுவாமித்துவத்தையும் சௌலப்பியத்தையும் வெளிப் படுத்திக்கொண்டு இத்திருத்தலங்களில் எழுந்தருளி யுள்ளானாகையால், இத்தலங்கள் திருமந்திரப்

2. பெரி. திரு. 1. 1 : 9

பொருளுக்கு எல்லை நிலங்களாயிற்று. இப்படிப்பட்ட திருத்தலங்களை ஏனைய ஆழ்வார்கள் அநுபவித்தார்களெனினும், திவ்விய தேசாநுபவமே திருத்தலப் பயணமாகக் கொண்டவர் திருமங்கையாழ்வார் ஒருவரேயாவார்.

இமய மலையிலுள்ள திருப்பதிகளை முதலில் அநுபவிக்கத் திருவுளங்கொண்டு முதன் முதலாகத் திருப்பிரிதிக்கு வருகின்றார். இத்திவ்விய தேசம் பதரிகாச்ரமம் என்னும் திருப்பதிக்குச் செல்லும் வழியிலுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 3000 அடி உயரத்திலுள்ள இத் திருத்தலம் ஹரித்துவாரத்திலிருந்து 200 கி. மீ. தொலைவிலுள்ளது. இது ஜோசிமடம்—நந்தப் பிரயாணை என வழங்கப் பெறுகின்றது. இங்குத்தான் அழகாநந்தா, மந்தாகினி என்ற இரண்டு நதிகள் ஒன்று சேர்கின்றன. நந்தர் என்ற மாமன்னர் இங்குப் பல வேள்விகள் இயற்றியதாகவும், அதன் நினைவாகத் தம் பெயரை இட்டதாகவும் சொல்லப் பெறுகின்றது. இந்த இடத்தில் கன்வ முனிவர் இருந்ததாகவும், துஷ்யந்தன் சகுந்தலையை இங்குத்தான் திருமணம் புரிந்து ககாண்டதாகவும் செவி வழிச் செய்திகள் வழங்கி வருகின்றன. குளிர்காலத்தில் பதரி நாராயணன் திருக்கோயில் மூடப் பெறுங்கால் அங்குள்ள உற்சவர் இங்கு வந்து ஆறு திங்கள் தங்கி வழிபாடுகளைப் பெறுவர். இங்குள்ள சங்கர மடத்தில் நரசிம்ம சாலிக்கிராமம் உள்ளது; திருத்தலப் பயணிகள் இதனை வழிபடுவர். திருமங்கையாழ்வார் இத் திருத்தலத்தை ஒரு திருமொழியில்[3] அநுபவித்து மகிழ்கின்றார். ஒவ்வொரு பாசுரமும் திருத்தல வருணனையும் அங்குக் கோயில் கொண்டுள்ள எம்பெருமானையும் கூறுகின்றது. எடுத்துக்காட்டாக ஒன்றினைக் காட்டுவோம்.

3. பெரி.திரு.1-2.

''கரைசெய் மாக்கடல் கிடந்தவன்
கணைகழல் அமரர்கள் தொழுது ஏத்த
அரைசெய் மேகலை அலர்மகள்
அவளோடும் அமர்ந்தநல் இமயத்து
வரைசெய் மாக்களிறு இளவெதிர்
வளர்முளை அளைமிகு தேன்தோய்த்துப்
பிரச வாரிதன் இளம்பிடிக்கு
அருள்செய்யும் பிரிதிசென்று அடைநெஞ்சே''[4]

[மாக்கடல் - திருப்பாற்கடல்; அரை - இடுப்பு; அலர் மகள் - பெரிய பிராட்டியார்; களிறு - ஆண் யானை; வெதிர் - மூங்கில்; பிரசம் - தேன்; பிடி - பெண்யானை]

''திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள எம்பெருமான் (வியூகநிலை) பெரிய பிராட்டியாரோடு தேவர்கள் சேவித்துத் துதிக்கும்படியாக இமயமலையின்கண் உள்ள திருப்பிரிதியில் எழுந்தருளியுள்ளான். நெஞ்சே நீ அங்குச் செல்க'' என்கின்றார். பாசுரத்தின் பிற்பகுதியில் இமய மலையைப் பற்றிய செய்தி உள்ளது. இமயமலையில் ஆண் யானையொன்று தன் காதலியாகிய இளம் பெண் யானையை மகிழ்விக்க வேண்டி நெடுக ஓங்கி வளரும் மூங்கில் முளைகளைப் பெயர்த்து எடுத்து மலை முழைஞ்சுகளில் மிகுதியாக உள்ள தேனிலே தோய்த்து அதன் வாயில் ஊட்டும். திருமலையில் இத்தகைய காட்சியொன்றினை பூதத்தாழ்வார் காட்டுவர்.

''பெருகு மதவேழம்
மாப்பிடிக்கு முன்நின்று
இருகண் இளமூங்கில்
வாங்கி, அருகிருந்த
தேன்கலந்து நீட்டும்
திருவேங்கடம்''[5]

4. பெரி. திரு. 1.2:5
5. இரண். திருவந்—75

[வேழம்-யானை; பிடி-பெண் யானை; இருகண்-இரண்டு கணுக்களையுடைய; தேன்-தேன்கூடு.]

மதம் பிடித்து மனம்போனபடி திரியும் ஒரு யானை தன் பேடையைக் காண்கின்றது. அதனை மீறி அப்பால் செல்ல மாட்டாமல் அதற்கு இனிய உணவு கொடுத்துத் திருப்தி செய்ய விரும்புகின்றது. உடனே அருகிருந்த இளமையான மூங்கிற் குருத்தொன்றைப் பிடுங்கி மலைக்குகையிலுள்ள ஒரு பெருந்தேன் கூட்டில் செருகி குலோப்ஜாமூன்போல் அதன் வாயில் ஊட்டுகின்றது. இந்தப் பாடல் திரு மங்கை யாழ்வாரின் பாடலுக்கு அடியெடுத்துக் கொடுத் திருக்கலாம். இந்த இரண்டு பாடல்களின் தாக்கத்தைக் கம்பநாடன் பாடலொன்றில் காணலாம்.

**"உருகு காதலில் தழைகொண்டு**
**மழலைவண்டு ஓச்சி**
**முருகு நாறுசெந் தேனினை**
**முழைநின்றும் வாங்கி**
**பெருகு சூல்இளம் பிடிக்க ஒரு**
**பிறைமருப் பியானை**
**பருக வாயினில் கையில்நின்று**
**அளிப்பன பாராய்!"[6]**

[முருகு-மணம்: நாறு-வீசுகின்ற; முழை-கல் இடுக்கு; பெருகு சூல்-முதிர்ந்த கருப்பம்; மருப்பு-தந்தம்]

இது சித்திரகூட மலையில் வரும் காட்சி. இங்கு ஓர் ஆண் யானை சூல் கொண்டுள்ள தன் இளம் பிடியின் மீது அளவற்ற அன்பு கொண்டுள்ளது. ஒரு மலை இடுக்கில் ஒரு பெரிய தேன்கூடு; அதில் தேன் ததும்பி நிற்கின்றது. ஆண் யானை அண்மையிலுள்ள மரத்தி னின்றும் ஒரு தழைக்கொத்தினை ஒடித்து அதனைக்

6. கம்பரா. அயோத். சித்திரா—10

கொண்டு அம்மழலை வண்டினை ஓச்சி நிற்கின்றது. பிறகு அந்தத் தேன் கூட்டினை அப்படியே அசையாமல் தன் துதிக்கையினால் வாங்கி சூல் நிறைந்து பருகுவதற்கும் சிரமப்படும் தன் பிடியின் வாயில் பருகுமாறு தந்து நிற்கின்றது—கல்கத்தா ரசகுல்லாவைத் தருவது போல.

இத்திருத்தலம் அமைந்துள்ள இடத்தில் சிறுதுளியையுடைய காள மேகங்கள் அதிர்கின்றன. தோகைகளையுடைய மயில்கள் ஏற முடியாமல் உன்னதமான மலையுச்சியில் கீழ்வயிறு தழுவும்படியாக ஏறிச்சென்று தோகைகளை விரித்துக் கூத்தாடுகின்றன (1). மலை போன்ற வடிவினையுடையவனாய், வடிவுக்கேற்ற மிடுக்கையுடையவனாய், மிடுக்குக்கு உரிய சினத்தை உடையனவாய் மதக் களிறுகள் அஞ்சும்படியாக வாள் போன்ற பற்களையுடைய சிங்கங்கள் திரிகின்றன (2). இந்திர நீல மணிமயமான பாறைகளின்மீது வேங்கை மலர்கள் உதிர்ந்து கிடக்கும் அழகிய படுக்கையின்மீது களிறுகள் தம் பிடிகளுடன் கிடந்து உறங்குவதற்குப் பாங்காக வண்டுகள் இன்னிசை பாடுகின்றன (3). பன்றிகள் தலை குனிந்து மாணிக்கப் பாறைகளைப் பிளக்க அதனால் பெயர்த்த மணிகள் மலையருவிகளுடன் அடித்து வரப்பெறுகின்றன (4). முகில்வரை எட்டி வளர்ந்த குருக்கத்திப் பூஞ்சோலைகளில் வண்டுகள் தேனினைப் பருக நுழைந்து இசை பாடுகின்றன (6). அசோக மலர்கள் விரியும்போது செந்நிறத்தோடு திகழும் அழகைப் பேதை வண்டுகள் நெருப்பென மயங்கி அஞ்சுகின்றன (9). மிளகுக் கொடிகள் விண்ணை எட்டும் வேங்கை மரங்களைத் தழுவிப் படர்ந்து நிற்கும் சிறு மலைகளில் வேங்கை வரிப்புலிகள் நடமாடுகின்றன (7). இருள் சூழ்ந்த மலை முழஞ்சுகளில் பெரும் பசியுடன் மலைப் பாம்புகள் பெருமூச்சு விட்டுக் கொண்டுள்ளன (8). கறுத்த மாமுகில்கள் நீர் கனத்தாலே இயங்க முடியாமல்

ஓரிடத்தில் நின்று இடியோசைகளை எழுப்ப அவற்றை யானைகளின் பிளிறல்கள் என மயங்கி மலைப் பாம்பு கள் மலை பெயர்ந்தாற்போல் பெயர்ந்து காத்துக் கிடக்கின்றன (10).

இத்தகைய சூழ்நிலையில் அமைந்துள்ள திவ்விய தேசத்தில் வாலியை வானுலகிற் கனுப்பியவனும், வானர சேனையின் துணைகொண்டு சேது அமைத்து இலங்கையை நாசம் செய்தவனுமாகிய இராமன் திருக்கோயில் கொண்டுள்ளான் (1, 2). உடுக்கை இடையையும் சுருண்ட கூந்தலையும் பளிச்சென்று இலங்கும் பற்களையும் உடைய பின்னைப் பிராட்டியின் பொருட்டு ஏழு காளைகளையடக்கிய கண்ணன் எழுந்தருளியிருக்கும் இடமும் இதுவேயாகும் (3). ஒப்பற்ற வீரனாகிய இரணியனின் மார்பை பிளந்த நரசிம்மப் பெருமானும் இங்கு எழுந்தருளியுள்ளான் (4). திருவனந்தாழ்வானின் சயனத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெருமானும் இவனே (6). இவன் திருவடிகளை இமையோர்கள் நான்முகனை முன்னிட்டு ஆயிரம் பெயர்களால் அருச்சிக் கின்றார்கள் (7, 8). இங்ஙனம் அர்ச்சை நிலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஆழ்வார் வியூக நிலை எம்பெருமானாகவும், அவதார நிலை எம்பெருமான்களாகவும் கண்டுகளிக்கின்றனர். எந்த நிலைகளில் பாடிப் பரவினாலும் அங்ஙனம் பாடிப் பரவப் பெறுபவன் பரமபத நாதனே என்பது வைணவக் கொள்கையாகும்.

இங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் திருநாமம் பரமபுருடன்; தாயார் பரிமளவல்லி நாச்சி யார். கிழக்கு நோக்கிய நிலையில் எம்பெருமான் புயங்க சயனத்தில் சேவை சாதிக்கின்றார், இவர் சந்நிதியில் ஆழ்வார் திருமொழியை ஓதி உளங்கரை கின்றோம் இந்நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுர

மும் நினைவிற்கு வருகின்றது. அதனையும் ஓதுகின்றோம்.

வழங்கும் உயிரனைத்தும்
    வாரிவாய்ப் பெய்து
விழுங்கும் கவந்தன்
    விறல்தோள் — கிழங்கைப்
பொருப்பிருதிக் குங்கிடந்தால்
    போல் துணித்து வீழ்ந்தான்
திருப்பிரிதிக் கென்னெஞ்சே
    செல்''[7]

[பெய்து - தள்ளி; விறல்-வலிமை; கிழங்கு-மூலபாகம் வேர்; பொறுப்பு-மலை; துணித்து-வெட்டி]

''திருமால் எழுந்தருளியிருக்கும் திருப்பிரிதி என்னும் திருத்தலத்தைப் போய் அடைவாயாயின் உன் எல்லா விரோதிகளும் நீங்கி நற்கதி பெறுவது திண்ணம்'' என்ற கருத்து நம் சிந்தை நிறைந்த நிலையில் நம் வினைகள் யாவும் தீயினால் தூசாகி விட்டன என்ற மன நிறைவு பெற்று நம் இருப்பிடத்திற்கு ஏகுகின்றோம்.

7. நூற். திருப்-103

# 9. வடமதுரைப் பிறந்த மாயன்

"மகா பாரதத்தால் தூது போனவன் ஏற்றம் சொல்லுகிறது[1] என்பது ஸ்ரீவசன பூஷணத்தில் ஒரு வாக்கியம். இதனைச் சிந்திக்கின்றோம். இங்கு சர்வே சுவரன் என்று சொல்லாமல் 'தூதுபோனவன்' என்று கூறியதால் அவன் அடியார்களுக்குப் பரதந்தரப் பட்டிருக்கும் தன்மை தெளிவாகின்றது. தேவதேவனான தன்னுடைய பெருமையையும் செய்கின்ற தொழிலின் சிறுமையையும் பாராமல் பாண்டவர்களுக்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது போனமை அடியார்க்குப் பரதந்தரனாய் இருக்கும் தன்மையில் உள்ள 'ருசி'க்கு வசப்பட்டிருந்தமையாலன்றோ; அடியார்களுக்குப் பரதந்தரனாக இருக்கும் இத்தன்மைதான் அவனை அடைவதில் உள்ள எளிமையை காட்டுகின்றது. எம்பெருமானின் இந்த எளிமைக் குணத்தின் மேன்மையில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த திருமங்கையாழ்வாரும்,

**'பெருநிலத்தார்,**
**இன்னார் தூதன் எனநின்றான்'[2]**

**'கோதுஇல் செங்கோல்**
**குடைமன்னர் இடைநடந்த**
**தூதா'[3]**

என்று பெருமையுடன் பேசுகின்றார். இச்சை காரணமாக எம்பெருமான் தன்னடியார்கள் திறத்தில் செய்யும்

---

1. ஸ்ரீவச. பூஷ-6 (புருடோத்தம நாயுடு பதிப்பு)
2. பெரி. திரு. 2. 2:3 3. டி 6. 2:9

தாழ்ச்சி எல்லாம் இவனுடைய ஏற்றத்திற்குக் காரண மாக அமைந்தன; இவை இவனுக்கு ஒளியையும் தரு கின்றன. நீர்மைக்கு எல்லை நிலமான கிருட்டிணா வதாரத்தில், பரத்துவத்திற்குச் சமமாகச் சொல்லக் கூடிய நிலைகளையெல்லாம் விட்டொழித்து,

**'மத்துறு' கடைவெண்ணெய் களவினில்**
**உரலிடை யாப்புண்டு**
**எத்திறம், உரலினோடு இணைத்திருந்து**
**எங்கிய எளிவே'.**[4]

என்று நம்மாழ்வாரும் இந்த எளிமைக் குணத்தில் ஈடு பட்டுப் பேசுகின்றார். இங்ஙனம் பேசும்போதே இந்த ஆழ்வார் "மூவாறு மாசம் மோகித்துக்" கிடந்தார் என்று 'ஆசாரிய ஹிருதயம்' குறிப்பிடுகின்றது. கூரத் தாழ்வானும் தனது 'அதிமானுஸ்தவம்' என்ற நூலில் இதனை எடுத்துக்காட்டுகின்றார்.

மதுரை (Muttra) இருப்பூர்தி சந்திப்பில்[5] தங்கும் அறையொன்றில் தங்கியிருக்கும் நம்முடைய மனத்தில் மேற்குறிப்பிட்டவாறு சிந்தனையோட்டம் நிழலிடு கின்றது. அதிகாலையில் எழுந்து நீராடி நல்லாடை புனைந்து சிற்றுண்டிக்குப் பிறகு வடமதுரைக்குப் புறப்படுகின்றோம் தோங்காவில். இந்த நகரம் இருப் பூர்தி நிலையத்திலிருந்து சுமார் 3 கி. மீ. தொலைவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடும் யமுனை நதிக்கரை யில் உள்ளது. இது கண்ணன் அவதாரம் செய்த திருத் தலம். முத்தி தரும் நகரங்கள் ஏழினுள் இதுவும் ஒன்று. கண்ணுக்கு மதுரமாயிருத்தலாலும், மது என்ற அசுரனை அழித்த இடமாதலாலும் இதற்கு மதுரை எனப் பெயர் வந்தது என்று கூறுவர்.

4. திருவாய்- 1. 3 :1

5: தில்லிக்கு மூன்னதாகவே சுமார் 170 கி. மீ. தொலைவிலுள்ளது இச் சந்திப்பு.

யமுனை நதியின் தென்கரையில் திருத்தலப் பயணிகள் வசதியாக நீராடுவதற்கு நல்லபடித்துறையொன்று அமைக்கப் பெற்றுள்ளது. இங்குள்ள பண்டாக்கள் பொய்யும் புனை சுருட்டுமாகக் கண்ணன் பிறப்பைப் பற்றிக் கூறும் செய்திகளை நம்ப வேண்டியதில்லை. கண்ணனைப் பற்றிய பழங்கால இடங்கள் யாவும் இஸ்லாமியர்களின் படையெடுப்பின் பொழுது அழிக்கப் பெற்றன. ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருக்கோயில்கள் இன்று ஒன்று கூட இல்லை. பிற்காலத்தில் எழுந்த கட்டடங்களும் பாழடைந்து கிடக்கின்றன. கண்ணனுக்குரிய கேசவ தேவர் மந்திர் என்ற திருக்கோயில் இன்று இல்லை. அந்த இடத்தில் ஒரு பெரிய மசூதியைக் காண்கின்றோம்.

இன்று இந்த மசூதியைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் ஒரு பெரிய கட்டடம் பலகோடி ரூபாய் செலவில் எழும்பியுள்ளது. இங்குக் கண்ணனுக்குத் தனிக்கோயில் மிக அழகான முறையில் பளிங்குக் கற்களால் கட்டப் பெற்றுள்ளது. இக்கோயிலுள்ள கிருஷ்ணனின் சிலை கண்டாரை ஈர்க்கும் பாங்கில் உள்ளது. இச்சிலை வடிவம் தான் ஆண்டாள் குறிப்பிடும் "மாயன்; வடமதுரை மைந்தன்"[6] என்று நினைந்து வழிபடுகின்றோம். இப் பெருமானைத்தான் ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய ஆழ்வார் பெருமக்களும் மங்களா சாசனம் செய்ததாகக் கற்பனை செய்து கொள்ளுகின்றோம்.

> **வடமதுரைப் பிறந்தாற்கு**
> **அருள்கொள் ஆளாய் உய்யல்அல்லால்**
> **இல்லை கண்டீர் அரணே.**[7]

[ஆளாய் - அடிமையாய்; அரண் - புகல்]

---

6. திருப் - 5
7. திருவாய், 9. 1 : 3

வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே
சரண்என்று உய்யப்போகல் அல்லால்
இல்லை கண்டீர் சதிரே[8]

[வண் புகழ்-சீலம் முதலிய குணங்கள்; சரண்-தஞ்சம்]

வடமதுரைப் பிறந்தாற்கு
எதிர்கொள் ஆளாய் உய்யல்அல்லால்
இல்லை கண்டீர் இன்பமே.[9]

[ஆளாய் - அடிமையாய்; இன்பம் - சுகம்]

வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே
சொல்லிஉய்யப் போகல் அல்லால்
மற்றொன்று இல்லை சுருக்கே.[10]

[சுருக்கு - சுருங்கச் சொல்லும் வழி]

வடமதுரைப் பிறந்தான்
குற்றமில் சீர்கற்று வைகல்
வாழ்தல் கண்டீர் குணமே.[11]

[சீர் - திருக்குணங்கள்; வைகல் - எப்போதும்]

வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே
வீழ்துணையாய் போம்இதனில்
யாதும் இல்லை மிக்கதே.[12]

[வீழ்த்துணை - ஆசைப்படும் துணை; மிக்கது - மேன்மையுடையது]

வடமதுரைப் பிறந்த
தாதுசேர்தோள் கண்ணன் அல்லால்
இல்லை கண்டீர் சரணே.[13]

[தாது - மாலை; சரண் - புகல்]

---

8. ஷை 9. 1 : 4
9. திருவாய் 9. 1 : 5
10. ஷை 9. 1 : 6
11. ஷை 9. 1 : 7
12. ஷை 9. 1 : 8
13. ஷை 9. 1 :9

என்று நம்மாழ்வார் பாசுரங்களில் ஆழங்கால் பட்டுக் கண்ணனைச் சேவிக்கின்றோம்.

இத்திருக்கோயிலின் அருகில் வாசுதேவர்—தேவகிக்குக் கம்சன் அமைத்த சிறையின் நினைவாக ஒரு சிறைக் கூடமும் நல்ல முறையில் சலவைக்கல்லால் அமைக்கப் பெற்றுள்ளது. கம்சவதம் நடந்த இடம், குவலயா பீடத்தின் மருப்பொசித்த இடம், கம்சவதமானதும் கண்ணன் சிரமபரிகாரம் செய்து கொண்ட யமுனைத்துறை (விச்ராந்தி கட்டம்) முதலியவை இங்குக் காணத்தக்கவை. கண்ணன் அவதரித்த பூமியிலும் விச்ராந்தி கட்டத்திலு முள்ள திருக்கோயில்களில் மாலையில் தொடங்கி நடைபெறும் பசனையையும், மக்கள் அதில் பரவசப்படுவதையும் சொற்களால் எடுத்துக் கூற முடியாது.

மதுரை நகரினுள் துவாரகை நாதர்கோயில், மதுரை நாதர்கோயில் என்ற இரு திருக்கோயில்கள் உள்ளன. இவை இரண்டும் அண்மையில் கட்டப்பெற்றவை. வடமதுரையில் பிறந்து, ஆயர்பாடியில் வளர்ந்து, வியக்கத்தக்க தனது செயல்களால் பெருமையுற்ற கிருஷ்ணனுக்கு ஒரு திருக்கோயிலை எழுப்புவது நியாயந்தானே. அங்ஙனமே, துவாரகை சென்று மன்னனாக மகுடம் சூட்டிக் கொண்டு அரசோச்சியதன் நினைவாக ஒரு திருக்கோயிலையும் எழுப்பியுள்ளனர் வடமதுரை மக்கள். துவாரகை நாதர் திருக்கோயில் கடைத்தெருவில் உள்ளது. இது வல்லபர் நிறுவிய சமயத்தைச் சார்ந்த (புஷ்டிமார்க்கம்) இலட்சுமி சந்த் என்ற சேட் ஒருவரால் அதிக பொருட் செலவில் கட்டப் பெற்றது. இந்த சேட்ஜியின் குடும்பத்தினர்தாம் பிருந்தாவனத்தில் ஆண்டாள்-அரங்கமன்னாருக்கு 'அரங்கமந்திர்' என்ற திருக்கோயிலை நிறுவுவதில் துணை புரிந்தவர்கள்.

துவாரகைநாதர் திருக்கோயில் கிருஷ்ணன் தனியாகக் காட்சி தருகின்றான்; தேவிமார்கள் அருகில் இல்லை; தேவி

மார்கட்குத் தனிக்கோயிலும் இல்லை. முற்பகலில் நான்கு முறையும், பிற்பகலில் நான்கு முறையும் இத்திருக் கோயிலில் வழிபாடுகள் உண்டு. இப்பகுதியில் மதுரை யைச் சுற்றி 168 மைல் சுற்றளவில் அமைக்கப் பெற்ற திருக்கோயில்களில் துவாரகைநாதர் திருக்கோயிலே செல்வச் செழிப்பில் திகழ்கின்றது. திருப்பதியை அடுத்து அதிகச் செல்வம் கொழிப்பது இத்திருக்கோயிலே என்று சொல்லப் பெறுகின்றது.

இங்ஙனம் பல செய்திகளை அறிந்தவண்ணம் கோவர்த்தனம்[14] என்னும் இடத்திற்கு ஏகுகின்றோம். கண்ணபிரான் பசுக்களுக்குப் புல்லும் நீரும் நல்கி வளர்த்த தனால் அவனுக்குக் கோவர்த்தனன் என்னும் திருநாமம் உண்டு. இந்தத் திருநாமத்தை இம்மலைக்கு இட்டு வழங் கினன். இதை நினைத்து பெரியாழ்வார் "தன்பேர் இட்டுக்கொண்டு தரணிதன்னில் தாமோதரன் தாங்கு தட வரை"[15] என்று போற்றுகின்றார். இம்மலை வடமதுரை யிலிருந்து சுமார் 20 கி. மீ. தொலைவில் உள்ளது. இந்த மலையும் கண்ணன் மாடுகள் மேய்த்த இடமாகும். இது மிக உயர்ந்த மலையன்று; அழகான ஒரு நீளமான சிறு குன்றே; குன்று மரங்கள் நிறைந்து அழகாகக் காட்சி தரு கின்றது. இதனை நினைந்துதான் பெரியாழ்வார்,

> **"குரவிற் கொடிமுல்லைகள் நின்று உறங்கும்**
> **கோவர்த்தனம்"[16]**

[குரவில்-குரவ மரத்தில்; கொடிமுல்லைகள்-முல்லைக் கொடிகள்]

ஒன்று இம்மலையை வருணித்தனரோ என்று கருதவேண் டியுள்ளது. இந்த மலையின் சுற்றளவு சுமார் 15 கி. மீ.

14. இந்தத் திவ்விய தேசம் திவ்யகவியின் 108 திருத் தலங்களில் ஒன்றாக அமையவில்லை.
15. பெரியாழ். திரு. 3 . 5 : 9
16. பெரியாழ். திரு. 3 . 5:11

இருக்கும் என்று சொல்லுகின்றனர். மலையின் இருபுறங்களிலும் சிற்றூர்களும் வேளாண்மைக்குரிய நிலபுலங்களும் காணப்பெறுகின்றன. வல்லபாச்சாரியார் மலையை வழிபட்டார் என்பது செவிவழிச்செய்தியாகும். "திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே"[17] என்று நம்மாழ்வார் கூறியுள்ளதை ஈண்டு நாம் சிந்திக்கின்றோம். வல்லபர் இந்தக் குன்றின்மீது ஸ்ரீநாதர் கோயிலை எழுப்பினார் என்றும், இஸ்லாமியர்களிடமிருந்து பாதுகாத்தற் பொருட்டு இதிலிருந்த இறைவன் திருமேனியை உதயபூர் அரசு எடுத்துச் சென்றதாகவும் கூறுகின்றனர். திருப்பதி மலைக்கோயிலைப்போலவே இக்குன்றின் மீதுள்ள கோயிலும் செல்வச் செழிப்புள்ளது. ஏராளமான திருத்தலப் பயணிகள் வந்து போகின்றனர்; காணிக்கை செலுத்துகின்றனர். குன்றினையும் வலம் வருகின்றனர்.

மலையடிவாரத்தில் இலக்குமி நாராயணர் கோயில் ஒன்று உள்ளது. இராமாநுசர் சம்பிரதாயப்படி வழிபாடு நடைபெறுகின்றது. இதனைத் தவிர அரிதேவர் கோவில் ஒன்று உள்ளது. இப்பகுதியிலுள்ள திருக்கோயில்களில் இது மிகப் பழமையானது. செந்நிறக் கற்களால் கட்டப்பெற்றுள்ளது. அக்பர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பெற்றிருக்கலாம் என்று தோன்றுகிறது. இதன் அருகிலுள்ள திருக்குளம் ஓர் ஆறுபோல் மிக நீண்டது; மிகவும் ஆழமானது. இதில் எப்பொழுதும் நீர் இருக்கும். இதன் நாலாபுறங்களிலும் படிக்கட்டுகள் உள்ளன.

கோவர்த்தனத்தைப் பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் ஆகிய ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். கண்ணன் திருவாய்ப்பாடியில் இருந்த பொழுது ஆயர்கள் வழக்கப்படி இந்திர வழிபாட்டுக்

---

17. திருவாய். 3 . 3 : 8

கென்று சமைத்த சோறு முதலியவற்றை இந்திரனுக்கு இடவொட்டாமல் கோவர்த்தன மலைக்கு இடுவித்து பின்பு தானே ஒரு தேவதை உருவத்துடன் அவற்றை முழுதும் அமுது செய்துவிட்டான். இந்திரன் பசிக் கோபத்தினால் மேகங்களை ஏவி ஏழுநாள் கல்மாரி பெய்வித்தான். கண்ணன் கோவர்த்தன மலையைப் பெயர்த்தெடுத்துக் குடையாகத் தூக்கிப் பிடித்துக் கோக்களையும், கோவலரையும் காத்தருளினன். இப் பேருதவியைப் பெரியாழ்வார் பெரிதாக மதித்து அவ்வரலாற்றை ஒரு திருமொழியில்[18] விரிவாக அருளி இனியராகின்றார். மலையடிவாரத்திலிருக்கும் நாம் இத் திருமொழியில் ஆழங்கால் படுகின்றோம். முதற் பாசுரத்தில் மலை எடுத்த வரலாறு கூறப்பெறுகின்றது,

> "அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும்
> தயிர்வாவியும் நெய்யளறும் அடங்கப்
> பொட்டத் துற்றி மாரிப்பகை புணர்த்த
> பொருமா கடல்வண்ணன் பொறுத்தமலை"[19]

[அட்டு-சமைத்து; குவிசோறு-குவிக்கப்பெற்ற சோறு; பருப்பதம்-மலை; தயிர்வாவி-தயிராகிய குளம்; நெய் அளறு-நெய்யாகிற சோறு; பொட்டி துற்றி-விரைவாக அமுது செய்து]

என்ற பாசுரப் பகுதியில் இந்த வரலாறு கூறப்பெற்றுள்ளதைக் காண்க.

இத் திருமொழிப் பாசுரங்களில் மலையின் வருணனையும், கண்ணன் மலை எடுத்த எளிமையும் கலந்து காணப் பெறுகின்றன. இவற்றில் ஆழ்வாரின் கற்பனை நயத்தைக் காணலாம். மலைக்காடுகளில் திரியும் ஒரு யானை கரை போன்று உயர்ந்துள்ள மேட்டு நிலத்தைத் தன் கொம்பு

18. பெரியாழ். திரு. 3. 5
19. டி 3. 5 : 1

களால் குத்துகின்றது; இதனால் ஒரு கொம்பு முறிந்து படு கின்றது. கொம்பு முறிந்த புண்வாயில் மதநீர் ஒழுகு கின்றது. தன் துதிக்கையை உயரத் தூக்கி அண்ணாந்து நிற்கும்பொழுது வானத்தில் காணப்பெற்ற இளம்பிறைச் சந்திரனைத் தான் இழந்த கொம்பாக மயங்கி அதனைப் பறித்துக்கொள்ள விருப்புகின்றது(5). மலையிலுள்ள பெண் யானை யொன்று தன் குட்டியை ஒரு சிங்கக் குட்டி நலியும்பொருட்டுச் சீறினபோது, தன் குட்டியைத் தனது நான்கு கால்களினுள்ளே அடக்கி மறைத்துக்கொண்டு, அச்சிங்கக் குட்டியை எதிர்த்துப் போர் புரிகின்றது(2). கொல்லும் வாயையுடைய சினங்கொண்ட புலிகள், முனிவர்கள் வாழும் தழைக்கூடில்களில் சென்று புக, முனிவர்கள் அப்புலிகளின் கழுத்தைச் சொறிந்து அவற்றை நின்றபடியே உறங்கச் செய்கின்றனர் (8). மலையிலுள்ள சில பெண் குரங்குகள் இலங்கையின்மீது பாய்ந்து அதன் சீர்கெடும்படி அழித்த சிறிய திருவடியின் புகழ் பாடித் தம் குட்டிகளை தம் அங்கையில் கொண்டு சீராட்டிக் கண்வளரச் செய்கின்றன (7). முசு என்ற ஒரு வகைச் சாதிக் குரங்குகள் தமது குட்டிகளைத் தம் முதுகில் கட்டிக் கொண்டுபோய் ஒரு மரக்கிளையினின்றும் மற்றொரு மரக்கிளைக்குத் தாவிக் குதித்தலைப் பாழாக்கு கின்றன (9). மலைவாழ் குறவர்கள் தமக்கு அன்பர் களான குறப்பெண்டிர் கொல்லையில் பரந்திருக்கக் கண்டு அவர்களின் பார்வையினால் அவற்றைத் தம் கொல் லையை மேய்ந்து அழிக்க வந்த மான்கள் எனக் கருதி அவற்றின்மீது அம்பெய்தி விரட்ட எண்ணித் தம் விற்களை வளைக்கின்றனர் (3). சில குறப்பெண்டிர் மடமான் கன்றுகளை வலையில் அகப்படுத்திப் பின்பு அவற்றைத் தம்முடையனவாகக் கொண்டு பஞ்சுச் சுருளின் நுனியினால் பாலை எடுத்து ஊட்டி வளர்க் கின்றனர் (1). மேகங்கள் மழை பொழிவது கடல் நீரினைக் குடங்களினின்றும் நீரைச் சொரிவதுபோல் காட்சியளிக்

கின்றது (4). எல்லாப் பக்கங்களிலும் பரவிப் பெருகும் தெளிந்த சுனைநீர் அருவிகள் கண்ணன் அணிந்த முத்துச் சட்டைபோல் காட்சி அளிக்கின்றது (6). அம்மலை முகடுகளில் வெண் மேகங்கள் தங்கியிருக்கும் நிலையினை நோக்கினால் அம்மலையின்முன் நெற்றி நரைவிட்டது போல் தோன்றுகின்றது (10).

இந்த மலையைக் கண்ணன் தூக்கின நிலையை ஆழ்வார் வருணிக்கும் நேர்த்தி தம் உள்ளத்தைச் கொள்ளை கொள்ளுகின்றது. ஏழுநாள் பொழிந்த கல்மாரியைத் தாங்காமல் 'அம் மைத்தடங்கண் மடவாய்ச் சியரும் ஆனாயரும் ஆநிரையும் அலறி'க் கண்ணனிடம் (3, சரண் புக, அவன் யானைக்குச் சோற்றுத் கவளத்தைத் திரட்டியெடுத்துக் கொடுக்கும் யானைப் பாகனைப்போல், ஒரு கையினை மலையின் வேர்ப்பற்றிலே செலுத்தி மற்றொரு கையினால் மலையின் மேலே பிடித்துத் தூக்கி னான் (4). கண்ணன் தன் திருத்தோள்களைக் குடையின் காம்பாகவும் தன்னுடைய செந்தாமரை மலர் போன்ற திருக்கையிலுள்ள ஐந்து விரல்களைக் குடைக்காம்படியி லுண்டாகின்ற கிளைக்கொம்புகளாகவும் கொண்டு மலையைக் குடையாகக் கவித்தான் (6). கண்ணன் ஏழு நாட்களிலும் தனியாக மலையைத் தாங்கியிருந்தும் அவனுடைய இயற்கையழகும் மாறவில்லை; அவன் வாட்டமும் அடையவில்லை; திருநகங்களும் நோவு எடுக்கவில்லை. இந் நிகழ்ச்சி ஓர் இந்திர சாலம்போல் நடைபெற்றது (10). இந்த ஆழ்வாரே ''குன்று எடுத்து ஆநிரை காத்த ஆயா, என்னை நமன் - தமர்கள் வந்து பற்றும்போது நீ வந்து காக்க வேண்டும்''[20] என்று வேண்டுகின்றார். காதல் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலிருக்கும் ஆண்டாள்,

20. பெரியாழ். திரு. 4. 19 : 9

"கற்றன பேசி வசவு உணாதே
காலிகள் உய்ய மழைத டுத்துக்
கொற்றக் குடையாக ஏய்தி நின்ற
கோவர்த் தனத்து என்னை உய்த்திடுமின்"[21]

[காலிகள் - பசுக்கள்; உய்ய - பிழைக்க]

என்று தன்னைக் கோவர்த்தன மலையருகே கொண்டு போய் விடுமாறு வேண்டுகின்றாள்.

நம்மாழ்வாரும் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த நிகழ்ச்சியை,

"உண்ண வானவர்கோனுக்கு ஆயர் ஒருப்படுத்த
அடிசில் உண்டதும்
வண்ண மால்வரையை எடுத்து மழைகாத்ததும்
..................................
எண்ணும் தோறும் என்நெஞ்சு எரிவாய்
மெழுகு ஒக்கும்"[22]

என்ற பாசுரத்தில் ஆழங்கால்பட்டு அனல் வாய்ப்பட்ட மெழுகுபோல் உருகுகின்றார். திருவரங்கப் பெருமான் மீது மோகித்த நிலையில் ஆழ்வார் பாசுரம் தாய்ப் பாசுரமாக வடிவெடுக்கையில்,

"கொழுந்து வானவர்கட்கு என்னும்; குன்றுஏந்தி
கோ-நிரை காத்தவன் என்னும்"[23]

என்று மகள் அநுபவமாக வெளிப்படுவதை எண்ணி நாம் அந்நிலையை எட்ட முயல்கின்றோம்.

இங்ஙனம் ஆழ்வார்கள் பாசுரங்களில் ஈடுபட்டு மெய் மறந்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

---

21. நாச். திரு. 12 : 8
22. திருவாய் 5. 10 : 5
23. ஷை. 7. 2 : 8

**செல்வம் உயிர்உடம்பு**
**சேர உரித்தாக்கி**
**வல்வினையின் நீங்குமின்**
**மாந்தர்காள் — தொல்லை**
**வடமதுரை யான்கழலே**
**வாய்த்த தஞ்சமென்று**
**திடமதுரை செய்தான்**
**திறந்து''**[24]

[தொல்லை - பழமையான; கழல் - திருவடிகள்; வாய்த்த - பொருந்திய; தஞ்சம் - அடைக்கலம்; திடம் அது - உறுதியாக; உரை செய்தான்- உபதேசித்தான்]

என்பது பாசுரம். ''மாணிடர்கள், கர்மம், ஞானம், பக்தி, பிரபத்தி முதலிய வழிகளையெல்லாம் கைவிட்டு, தனது திருவடிகளையே தஞ்சமாகப் பற்றும்படி உபதேசித்த கண்ணன் திறத்தில் உமது உடல், பொருள், உயிர், ஆகிய அனைத்தையும் ஒருசேர உரிமையாக்கி அப்பிரான் அருளால் இரு வினைத் தொல்லைகளினின்றும் நீங்கி உய்வு பெறுவீர்களாக'' என்று உலகத்தார்க்கு உபதேசிப் பதை நாமும் கேட்கின்றோம். சேஷபூதன் இழியும் துறை சேஷியின் திருவடிகளேயாதலால் 'கழலே வாய்த்த தஞ்ச மென்று' திடமாக உரைத்ததையும் சிந்திக்கின்றோம்.

கோவர்த்தனத்தைச் சேவித்த நாம் நந்த கிராமம், பர்சானா என்ற இடங்களையும் சென்று சேவிக்க எண்ணுகின்றோம்.

**நந்த கிராமம்:** கண்ணன் புகழால் நந்தன், யசோதை இவர்கள் புகழ் ஓங்கியது. இதனை நிலை நிறுத்தும் வகையில் ஒரு சிற்றூருக்கு நந்தன் பெயரை இட்டு வழங்கியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இந்த

24. நாற். திருப். அந்—104

ஊர் கோவர்த்தனத்திலிருந்து சுமார் 18 கி.மீ தொலைவில் உள்ளது; ஒரு சிறு குன்றின்மீது அமைந்துள்ளது இந்த ஊர். இங்குப் பாலகிருஷ்ணனுக்கு ஒரு திருக்கோயில் உள்ளது.

**பர்சானா:** நந்த கிராமத்திலிருந்து சுமார் 6 கி. மீ. தொலைவிலுள்ளது இச் சிற்றூர்; இங்குள்ள ஒரு சிறு குன்றின்மீது இராதைக்கு ஒரு திருக்கோயில் உள்ளது. இஃது 'இராதை கோயில்' என்றே இராதையின் பெயரில் வழங்கி வருகின்றது; தமிழர்களின் கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை விரும்பியது போலவே வடநாட்டுக் கிருஷ்ணன் இராதையை விரும்பினான் என்பதை நாம் அறிவோம்.

இதைத் தவிர இவ்வூரின் அருகில் ''சங்கேத பீகாரி'' என்ற ஒரு திருக்கோயில் உள்ளது. இரண்டு சிற்றூர்கட்கு இடையில் கிருட்டிணனும் இராதையும் சந்தித்தனர் என்றும், இந்தக் ''குறியிடத்தின்'' நினைவாகவே இக் கோயில் எழுப்பப் பெற்றது என்றும் அப்பகுதி மக்களின் செவிவழிச் செய்தியாகும். 'சங்கேதம்' என்றால் குறிப்பு என்பது பொருள். பீகாரி என்பது கண்ணனைக் குறிக்கும் குறியிடத்தின் நினைவாக எழுப்பப் பெற்றதால் 'சங்கேத பீகாரி' என்று இத்திருக்கோயில் பெயர் பெற்றது.

இங்ஙனம் பல்வேறு வகைகளில் பக்தி அநுபவம் எய்தப் பெற்ற நாம் கண்ணன் அவதார காலத்தில் இருப்பது போன்ற நினைவு ஏற்படுகின்றது. மன நிறைவுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

# 10. பிருந்தாவனத்தில் கண்ணன்*

வடமதுரை இருப்பூர்தி நிலையத் தங்கும் அறையில் உள்ள நாம் கண்ணன் சிறுவனாக இருந்தபொழுது அவன் விளையாடின இடங்கள், மாடு மேய்த்த இடங்கள், இடைப்பெண்களுடன சிறு குறும்புகள் செய்த இடங்கள், வளர்ந்தவனான பின்னர் அவர்களுடன் இராசக்கிரீடை செய்த இடங்கள் முதலியவற்றைச் சிந்திக்கின்றோம். இவைதாம் நம்மாழ்வாரின் அநுபவமாகப் பரிணமித்து அவர் தம் இறையநுபவத்திற்கு வித்திட்டன.

> ''பிறந்த வாறும் வளர்ந்த வாறும்
>     பெரிய பாரதம் கைசெய்து ஐவர்க்குத்
> திறங்கள் காட்டிவிட்டுச் செய்து போன
>     மாயங்களும்''[1]

என்ற பாசுரமும் அத்திருவாய்மொழியிலுள்ள வேறு சில பாசுரங்களும் நம் மனத்தில் குமிழியிட்டு எழுகின்றன. நாமும் நம்மாழ்வாரைப்போலவே எம்பெருமானின் குணாநுபவம் பண்ணவல்லராம்படிப் பண்ணியருள வேண்டும் என்று அவன் திருவடிகளில் சரண் புகுகின்றோம்.

ஒரு சமயம் நஞ்சீயர், ''ஆழ்வார்கள் யாவரும் கிருஷ்ணாவதாரத்தில் அதிகமாக ஈடுபாடு கொண்டிருப்

---

*இது திவ்விய கவியின் நூற் வரிசையில் சேர்க்கப்பெறவில்லை.

1. திருவாய் 5.10:1

பதற்குக் காரணம் என்ன என்று பராசரபட்டரைக் கேட்க, அதற்கு அவர், "ஒருவனுக்கு உண்டான துக்கம் சில நாட்கள் கழிந்தால் பொறுக்கலாம்; அணித்தானால் ஆறியிருக்கப் போகாதே அன்றோ? அப்படியே அல்லாத அவதாரங்களைப்போல் அன்றிக்கே, சமகாலமாகை யாலே, 'ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப் பெற்றிலோம் பாவியேம்! பல்லிலே பட்டுத் தெறிப்பதே!' என்னும் இழவாலே வயிறு எரிதலாலேயாயிருக்கும்' என்று அருளிச் செய்தார்." மேலும் அவர், இராமாவதாரத்தில் தகப்பன் சம்பரனைக் கொன்றவனாய் ஏக வீரனாய் இருப்பான் ஒருவன்; பிள்ளைகளோ ஆண் புலிகள். குடிதானே குறும்பரான பகைவர்களை அறுத்திருப்பதொரு குடி; இவையெல்லாம் மிகையாம்படிக் குணத்தாலே நாடுகளை யெல்லாம் (எல்லாரையும்) அடிமையாக்கிக் கொண்டிருப் பவர்கள்; ஆகையால் அத்தலையில் எதிரிகள் என்ற சொல்லும் இல்லை. இத்தலையில் அங்ஙன் அன்றிக்கே, தமப்பன் ஒரு சாது விருத்தன்; பிறந்தது கம்சனின் சிறைக் கூடத்திலே; வளர்ந்ததும் அவனகத்து அருகே. பிருந்தா வனத்திலே எழும் பூண்டுகளகப்பட அசுரமயமாயிருக்கும். இரட்சகரானவர்கள் (நம்பி மூத்தபிரான்) ஓர் அடி தாழ நிற்கில் பாம்பின் வாயிலே விழும்படியாயிற்று இவன்தன் படிகள் இருப்பன. அப்படியானால் வயிறு எரியாதே செய்வது என் இவர்கள்?" என்று அருளிச் செய்தார்.[2]

இங்ஙனம் மனம் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் பிருந்தாவனத்தைச் சென்று சேவிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு புறப்படுகின்றோம். பிருந்தாவனம் என்பதற்கு நெருஞ்சிக் காடு என்பது பொருள். கண்ணன் அவதரித்ததும் இவ்விடம் இந்நிலை மாறி வளம் கொழிக்கும் 'விரஜபூமி' (மேய்ச்சல் நிலம்) யாக மாறி விட்டது. வட இந்தியாவில் சத்திரப் பிரதேசத்திலுள்ள

2. திருவாய் 5.10 ஈட்டின் அவதாரிகை.

இந்த 'விரஜபூமி' 108 சதுரமைல் பரப்புடையது. இதில் பல புண்ணியத் தலங்களும் தீர்த்தங்களும் உள்ளன. இதன் நடுவில் தூய பெருநீர் யமுனை பெரு வெள்ளமிட்டுப் பாய்ந்து எங்கும் பசுமைக் காட்சி வழங்கும் மருத நில வளத்தை அளிக்கின்றது. விரஜ பூமியில் கண்ணன் திருவடி படாத இடமே இல்லை எனலாம். திருவாய்ப்பா (நந்த கோகுலம்), வடமதுரை (மதுரா), கோவர்த்தனம், இராதை அவதரித்த இராதாபர்காம் என்ற ஊர், கண்ணன் லீலைகள் புரிந்த பிருந்தாவனம் ஆகிய புனிதமான இடங்கள் யாவும் இந்த விரஜ பூமியிலுள்ளன.

கண்ணன் வளர்ந்த இடமான ஆயர்பாடியிலுள்ள நந்தகோபன் முதலான ஆயர்கள் கண்ணனுக்கு அங்கு அடிக்கடி நேரிட்ட பேரிடர்களை உற்பாதங்கள் எனக் கருதி 'மகாவனம்' எனப்படும் அவ்விடத்தை விட்டுக் கன்று காலி முதலிய எல்லாப் பொருள்களுடனும் பிருந்தாவனத் திற்குச் சென்று அங்குக் குடியேறினர். நெருஞ்சிக் காடாக இருந்த அவ்வனம் கண்ணன் திருவருளால் பசுக்கள் முதலானவை பெருகுவதற்கு ஏற்ப மிகச் செழிப்புற்றது. இங்குக் கண்ணன் ஆநிரைகளை மேய்த்துக் கொண்டும் பல திருவிளையாடல்களைப் புரிந்து கொண்டும் காலம் போக்கினன்.

வடமதுரையிலிருந்து பிருந்தாவனம் சுமார் பத்துக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. வடமதுரையிலிருந்து பிருந்தாவனத்திற்குப் பேருந்து வசதி உண்டு. தோங்காவில் இவ்வூருக்கு ஏகுகின்றோம். பிருந்தாவனம் கண்ணன் குழலூதி கோபியருடன் 'இராசக்கிரீடை' (குரவைக் கூத்து) நிகழ்த்திய இடமாகும். இங்குக் காளியன்மடு, கோபியரின் துகிலுரிந்த கட்டம், கேசி என்ற அசுரனைக் கொன்ற இடம் (கேசி கட்டம்), கோபியரின் பக்திப் பரவசத்தைக் கண்ட அக்ரூரர்

கண்ணீர் மல்க விழுந்து விழுந்து புரண்ட இடம், குழலூதிக் கோபியரின் உள்ளத்தைக் கவர்ந்த வனம் (பான்சி வனம்), மற்றும் சேவா குஞ்சம், பக்தவிலோசனம் முதலானவைகள் உள்ளன. இவற்றைக் கண்டு களிக்கின்றோம். சில நாட்களில் நள்ளிரவில் இன்றும் கண்ணனின் குழலோசை கேட்பதாக அங்குள்ளோர் கூறுகின்றனர்.

பிருந்தாவனத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கண்ணனின் பல திருக்கோயில்கள் உள்ளன. பெரும்பாலான திருக்கோயில்கள் வைணவத்தின் ஒரு பிரிவினரான சைத்தன்ய மார்க்கத்தினராலும், மற்றொரு பிரிவினராகிய நிம்பார்க்க மார்க்கத்தினராலும் எழுப்பப் பெற்றவையாகும். பிருந்தாவனத்தில் வங்காளிகள் அதிகமாகக் குடியேறியுள்ளனர். பக்தர்களும் பகவர்களும் ஆசாரியர்களும் இப்பூமியில் ஏதேனும் ஒரு பிறவி எடுக்க அவாக் கொண்டனர். இதயத்தில் ஆன்மா இருப்பது போல் 'விரஜபூமி'யின் இதயமான பிருந்தாவனத்தில் கண்ணன் என்றும் மகிழ்ந்து இனிது மருவியுள்ளான் என்று கூறுவர் பெரியோர்.

**அரங்கமந்திர் (ஸ்ரீரங்கஜி மந்திர்)**: இத்திருக்கோயில் யமுனைக் கரையில் நிமிர்ந்து நின்று காட்சி தருகின்றது. இது தமிழகப் பாணியில் அமைந்தது. இங்குப் பழைமையான பல திருக்கோயில்கள் இருப்பினும் அரங்கமந்திரே சிறந்த ஒரு திவ்விய தேசமாகத் திகழ்கின்றது. ஐந்து சுற்றுகளும் (பிராகாரங்கள்), ஐந்து கோபுரங்களும், ஐந்து மதில்களும் உடைய இத்திருக்கோயிலின் அமைப்பு திருவரங்கம், கா ஞ் சி பு ர ம் திருக்கோயிலமைப்பை ஒத்துள்ளது. திருவரங்கமே சிறிய அளவில் தோற்றம் தரும் முறையில் அமைந்துள்ளது என்று சொல்லலாம். திருக்கோயிலின் கடைசி வெளிச்சுற்றினுள் இத்திருக்

கோயிலின் கைங்கரியத்திற்காகச் சுமார் 30 வைணவக் குடும்பங்கள் தென்னாட்டினின்றும், சிறப்பாகக் காஞ்சிப் பகுதியினின்றும் வந்தவர்கள் குடியிருக்கின்றனர்.

அரங்கமந்திர் 1849-ல் (விக்ரம ஆண்டு) பிரதிஷ்டை செய்யப்பெற்றது. பாஞ்சராத்ர ஆகம விதிப்படி ஆறு காலத் திருவாராதனமும் திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. கருவறையில் ஆண்டாள், அரங்கமன்னார் சந்நிதியும் உட்பிராகாரத்தில் திருவேங்கடமுடையான், இராமன், திருவரங்கன் சந்நிதிகளும், ஆழ்வார், ஆசாரியர்களின் சந்நிதிகளும் உள்ளன. தமிழகக் கோயில்களில் இருப்பவை போன்ற வாகனங்களும் அழகிய தேரும் உள்ளன. சைத்ர கிருஷ்ண திருதியை முதல் பத்து நாட்கள் பெருந் திருவிழா (பிரம்மோற்சவம்) சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்திருக்கோயிலில் காலை மாலை வேளைகளில் நிகழும் ஆழ்வார்களின் அருளிச் செயல் முழக்கம் செவிக்கினிய விருந்தாக அமைகின்றது.

**கோவர்த்தனம் அரங்காச்சாரியார்:** மேற்குறிப்பிட்ட சிறப்புகளைச் செவ்வனே நடைபெறச் செய்து வடநாட்டில் தமிழ்ப் பிரபந்த முழக்கம் செய்த பெருமகனார் கோவர்த்தனம் அரங்காச்சாரியார்; ஸ்ரீபெரும்புதூருக்கும் காஞ்சிக்கும் இடையேயுள்ள அகரம் என்ற சிற்றூரில் 1809-ல் (ஐப்பசி புனர்வசு) பிறந்தார். இளமையிலேயே பெற்றோரை இழந்தார்; பாட்டனார் வாழ்ந்த திருவிடஎந்தையில் வளர்ந்தார். காஞ்சியிலும் ஸ்ரீபெரும்புதூரிலும் திகழ்ந்த பெரியோர்களிடம் கற்றுத் தென்மொழி வடமொழிகளில் வல்லவரானார். வைணவ சம்பந்தமான சமய நூல்களையும் கற்றுத் தெளிந்தார். வடநாட்டுத் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு கண்ணன் பிறந்து விளையாடின விரஜபூமிக்கு வந்து, அங்குள்ள புனிதமான இடங்களைச் சேவித்து கோவர்த்தனத்தை அடைந்தார். அச்சமயம் கோவர்த்தனத்தில் வைணவ ஆசாரிய பீடம்

இலக்குமி நாராயண மந்திரத்தில் இருந்தது. அங்குப் பீடாதிபதியாக இருந்த சீநிவாசாச்சாரியாரைப் பணிந்து அங்கேயே தங்கி அவரிடம் இரகசிய கிரந்தங்கள், ஸ்ரீபாஷ்யம், பகவத் விஷயம் முதலியவற்றைக் கற்றார். பின்னர் வாரணாசி சென்று அங்கும் கற்கவேண்டிய கலைகளையெல்லாம் கற்றுத் தேர்ந்தார். அப்போது கோவர்த்தன பீடாதிபதி வயது முதிர்ந்து உடல் தளர்ந்த நிலையிலிருந்தார். வாரணாசியிலிருந்த அரங்காசாரியாரை அழைத்துவரச் செய்து அவரைப் பீடாதிபதியாக்கிச் சில காலமிருந்து திருநாடு அலங்கரித்தார். சீடர்கள் யாவரும் இவரை ஆசாரிய பீடத்தில் அமர்த்திப் பட்டாபிஷேகம் செய்து வணங்கிவரலாயினர். கோவர்த்தனம் திரு அரங்க தேசிகன் என்ற திருநாமத்தாலும் இவர் வழங்கிவரலாயினர். அக்காலத்தில் இவருக்கு யானை, குதிரை, ஒட்டகம், வண்டிகள் முதலான பயணப் பெருமைகளும் இருந்தன. பெரும் புலவர்களான வடநாட்டவர் இருநூறு பேருக்குமேல் இவருடைய சீடர்களாகத் திகழ்ந்தனர்.

வடநாட்டில் வைணவ சமயத் தமிழ் மறைகளை வளர்க்க வழிகண்ட அரங்காச்சாரியார் தமிழிலும் மணிப்பிரவாள நடையிலும் உள்ள முக்கியமான நூல்களை வடமொழியில மொழிபெயர்த்தார். வடநாட்டிலுள்ள வடமொழிப் புலவர்கள் தமிழ் வைணவ நூல்களில் ஞானம் பெற இது பேரளவில் துணை செய்தது. திருவாய்மொழி —பகவத் விஷயம், ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானம், திருப்பாவை, திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு, முமுட்சுப்படி, ஸ்ரீ வசன பூஷணம், ஆசாரிய ஹிருதயம், தத்துவத் திரயம், அர்த்த பஞ்சகம், பிரபந்த பரித்திராணம், பரந்தபடி, நிகமனப்படி, வார்த்தாமாலை என்பவை வியாக்கியானங்களுடன் இவரால் மொழிபெயர்க்கப் பெற்றன. ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுக் காலத்தில் திருக்கோயில் நிர்மாண முதல், பிர

திஷ்டை, விழாக்கள் திருக்கோயில் ஆட்சி முறை, காலட்சேபம், மொழிபெயர்ப்பு போன்ற அற்புதப் பணிகளைத் தமிழ்மொழி நடையாடாத நாட்டில் குறைவறச் செய்த இப்பெருமகனாரின் அற்புதப் பணியினைத் தமிழகம் என்றும் போற்றும்.

இவர்தம் செயற்கரிய செயல்களைக் கண்டு சமயப் பேரறிஞர்களும், செல்வர்களும், வணிக மன்னர்களும் இவரடி பணிந்து சீடராயினர். இக்காலத்தில் இவர் வதரி திருத்தலப் பயணத்தை முடித்துத் திரும்புங்கால் 'சதபதம்' என்னுமிடத்தில் சில திங்கள் தங்கித் தவமியற்றிச் சித்தி பெற்றுக் கோவர்த்தனம் மீண்டார். அங்கிருந்த அடியார் கட்குச் சம்பிரதாய கிரந்தங்களைப் புகட்டிக் கொண்டிருந்தார். அவர்களுள் இவருக்கு வலக்கைபோல் அந்தரங்கரா யிருந்தவர் சடகோபாச்சாரியார் என்பவர். இவருடைய தூண்டுதலால் வடமதுரையிலிருந்த இலட்சாதிபதிகளான சேட்ஜி இராதாகிருஷ்ணன், கோவிந்ததாஸ் என்போர் அரங்காச்சாரியாரின் சீடர்களாயினர். சேட்ஜியின் தமையனாரான கோவிந்ததாஸ் சமணர். இவரும் சமண சமயத்தைத் துறந்து வைணவரானார். இம் முப்பெரும் புள்ளிகளின் பெருங்கொடையே அரங்கமந்திர் தோன்றுவதற்குப் பெரிதும் உதவியது.

ஆண்டாள் கண்ணனை மானசீகமாகக் கண்டு களித்துக் காதல் கொண்ட இடமாகிய பிருந்தாவனத்தில் ஆண்டாள்-அரங்கமன்னார் கோயில் அமைக்கத் திருவுள்ளம் பற்றினார் அரங்காச்சாரிய சுவாமிகள். இவருடைய விரும்பத்தை நிறைவேற்றி வைத்தவர் வைணவ சமயத்தில் ஊற்றம் பெற்ற சேட் ஜி இராதாகிருஷ்ணன் என்ற புனிதர், ஆண்டாள் திருவுளத்தில் கண்டதை அர்ச்சாவதாரத்தில் நிலைவேற்றிவைத்த அரங்காச்சாரியாரை இராமாநுசர் அம்சமாகவே போற்றுகின்றனர். திருமாலிருஞ்சோலை அழகருக்கு நூறுதடா அக்கார அடிசில் செய்து வைத்து

அன்னையாரின் விருப்பத்தை நிறைவேற்றியவரன்றோ எம்பெருமானார்? 1844-ல் தொடங்கப் பெற்ற திருக் கோயில் திருப்பணி 1849-ல் நிறைவு பெற்றது. பல இலட்சம் பொருட்செலவு செய்தும் தாம் உடனிருந்து பணிபுரிந்த இலட்சுமண சேட்ஜியின் குடும்பத்தினர் தமக் குத் திருக்கோயிலில் எவ்வித உரிமையும் வைத்துக் கொள்ள வில்லை. தன் முனைப்பற்ற இவர்களை இத்தகைய பணி களில் இறங்குவோர் எடுத்துக்காட்டாக கொள்வார் களாக. அரங்காச்சாரியார் தம் தென்னாட்டுத் திருத்தலப் பயணத்தில் வானமாமலைக்கு எழுந்தருளியபோது வான மாமலை சீயர் இவரைத் தழுவி அணைத்து, "தேவரீர் மண வாள மாமுனியோ?" என்று சொல்லிப் பாராட்டியதாக வரலாறு. இத்தகைய ஒப்புயர்வற்ற கைங்கரியங்களை நிறைவேற்றிய பெருமகனார் 1874-ல் (பங்குனி மாதம் சுக்ல தசமியில்) தமது அறுபத்தைந்தாம் அகவையில் திரு நாடு அலங்கரித்தார். அதன் பின்னர் மதுரமங்கலம் சீயர் என்னும் எம்பார் சீயர் பிருந்தாவனத்திற்கு எழுந்தருளிய போது அங்கிருந்த சீடர்களின் வேண்டுகோளின்படி சீபெரும்புதூருக்கு வந்து கோவர்த்தன சுவாமியின் சிலை யைச் செய்வித்து அதனைப் பிருந்தாவனத்தில் பிரதிட்டை செய்வித்தார்.

பிருந்தாவனத்தில் அரங்கமந்திர் ஏற்பட்ட பின்னர், அரங்காச்சாரியார் சுவாமியே கோயில் ஆட்சி முறையைப் பாங்காகக் கவனித்தார். இக்காலத்தில் கோவர்த்தன ஆசாரிய பீடம் பிருந்தாவனத்தில் ஏற்பட்டது. சுவாமி கள் காலமானதும் அவர்தம் ஒரே திருக்குமாராகிய சீநிவா சாச்சாரியார் ஆச்சாரிய பீடத்தில் அமர்ந்து பத்தாண்டுக் காலம் பாங்காக விளங்கினார். இவருக்குப்பின் இவர்தம் திருக்குமாரரான இரண்டாவது கோவர்த்தனம் அரங்காச் சாரியார் சுவாமி பீடாதிபதியாக நாற்பத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். இவருக்கு மகப்பேறு இல் லாததால் இவர்தம் பெண் வயிற்றுப் பேரராகிய மூன்றா

வது கோவர்த்தன அரங்காச்சாரிய சுவாமி பீடத்தே யமர்ந்து இப்போது திருக்கோயில் ஆட்சி முறையையும் சீடர் பரிபாலனத்தையும் சீரும் சிறப்புமாக நடத்தி வருகின்றார் (இவர் 1960—64-ல் திருப்பதி தேவஸ்தானம் கீழ்த்திசைக் கல்லூரியில் சிரோமணி பயின்றவர்). இவர்தம் ஆட்சித் திறமை, பன்மொழிப் புலமை, பக்தர்களுடன் பழகும் பாங்கு யாவரும் போற்றும் வண்ணம் அமைந்துள்ளன. இவர்தம் அரிய முயற்சியால் யாவரும் கண்டு மருளும் கண்ணாடி அறை அமைக்கப்பெற்றுள்ளது. முதல் கோவர்த்தனம் அரங்காச்சாரிய சுவாமிகள் தாம் திருநாடு அலங்கரிப்பதற்கு முன்பே ஆட்சிக் குழு (Trust Board) ஏற்படுத்தி அதற்குப் பீடாதிபதியே எல்லா உரிமைகளோடும் தலைவராக இருக்க வேண்டும் என்று நியமித்துள்ளபடியே இன்றும் திருக்கோயில் ஆட்சிமுறை நடைபெற்று வருகின்றது. திருக்கோயிலின் ஆதரவில் ஒரு வடமொழிப் பாடசாலையும், ஆயுர்வேத மருத்துவமனையும், ஒரு பெரிய நூலகமும் இயங்கி வருகின்றன.

**பழமையான கோயில்கள் :** கோவிந்த தேவருக்குரிய கோயில் சிவப்புநிறக் கற்களால் அமைந்தது. வங்காளிகளால் கட்டப்பெற்றது. மதன் மோகருக்குள்ள கோயில் அக்பரின் தளபதியாகிய மான்சிங் என்பவரால் கட்டப்பெற்றதாகச் சொல்லப்பெறுகின்றது. இரண்டிலும் கண்ணன் எழுந்தருளியுள்ளான்.

**புதிய கோயில் :** இது ஷாஜி கோயில் என்று வழங்கப்பெறுகின்றது. மிக அண்மைக் காலத்தில் கட்டப்பெற்றது. இது கண் கவர் எழிலுடன் திகழும் திருக்கோயிலாகும்; கண்ணனுக்கு உரியதான பழைய கோயில்களிலும் இந்தப் புதிய கோயிலிலும் சைதன்ய மார்க்க சம்பிரதாயம் அனுட்டிக்கப் பெறுகின்றது. வங்காளத்தில் தோன்றிய சைதன்ய இயக்கம் இங்கெல்லாம் வந்து பரவியுள்ளது.

**பங்கே பீகாரி கோயில் :** பங்கே பீகாரி என்பது கண்ணனுக்கு வழங்கும் பெயர். நிம்பார்க்கரின் இயக்கத்தின் ஒரு கிளை ஹரிதாஸ் முனிவர் என்ற இசைக் கலைஞரால் நிறுவப்பெற்றது. ஹரிதாஸ் முனிவர் அக்பரின் அரசவைப் பாடகராகிய **'தான்சென்'** என்பாரின் குருநாதர். ஹரிதாசருக்கும் இங்கு ஒரு கோயில் உண்டு. பங்கே பீகாரி கோயில் பிருந்தாவனத்தல் மிகவும் பெயர் பெற்றது.

**இராதாவல்லபர் கோயில்:** இக் கோயில் ஸ்ரீ ஹரிவம்சர் என்பவரால் கட்டப்பெற்றது. இவர் இராதா வல்லபரை இங்கு எழுந்தருளச் செய்துள்ளார். இங்குக் கண்ணன் இராதையுடன் சேவை சாதிக்கின்றான். மிக்க செல்வச் செழிப்புடன் நிகழ்கின்றது இத்திருக்கோயில்.

பிருந்தாவனத்திலிருக்கும் போதும் ஆயர்பாடி நிகழ்ச்சிகளாக ஆழ்வார் பெருமக்கள் அநுசந்தித்த கண்ணனின் பல சிறுச் சேவகங்கள் நம் மனதில் எழுகின்றன. அவற்றுள் சிலவற்றில் ஆழங்கால் படுவோம்.

**தேனுகாசுரன் வரலாறு :** தேனுகன் என்ற அசுரன் கம்சனின் ஏவலால் கழுதை வடிவம் கொண்டு காட்டுக் குள்ளே கண்ணனை நலிவதாக வந்தவன். ஒரு நாள் கண்ணபிரான் பலராமனோடும் வேறுசில ஆயர் சிறுவர் களோடும் ஆநிரை மேய்த்துக்கொண்டு கனிகள் கவினுறும்படி மிகுதியாகப் பழுத்து மணம் பரப்பிக் கொண்டிருந்த ஒரு பனஞ்சோலையை அடைந்தனர். பனம் பழங்களை விரும்பி உதிர்க்கத் தொடங்கினர். அப் பொழுது அச்சோலைக்குத் தலைவனும் கம்சனின் பரிவாரத்தில் ஒருவனுமான தேனுகன் சினங்கொண்டு கழுதை வடிவத்துடன் எதிர்த்துப் போர் செய்தான். கண்ணன் உடனே மிக எளிதாக அவனுடைய பின்னங் கால்கள் இரண்டையும் பற்றி அவ்வசுரக் கழுதையைச்

சுழற்றி உயிரிழக்கும்படி ஒரு பனைமரத்தின்மீது வீசி எறிந்து அவனை அழித்தனன். இந் நிகழ்ச்சியை,

**''தேனுகன் ஆவி போயுக அங்கோர்**
**செழுந்திரள் பனங்கனி உதிர**
**தானுகந் தெறிந்த தடங்கடல் வண்ணர்''[3]**

*[ஆவி - உயிர்; போய்உக தொலைந்து போக; உகந்து - மகிழ்ந்து]*

என்று திருமாலிருஞ்சோலை எம்பெருமானை அநுபவித்து மகிழ்கின்றார் திருமங்கையாழ்வார். இதனையே,

**''தேனுகன் ஆவி செகுத்துப் பனங்கனி**
**தான்எறிந் திட்ட தடம்பெருந் தோளினால்**
**வானவர் கோன்விட வந்தமழை தடுத்து**
**ஆனிரை காத்தான்''[4]**

*[செகுத்து - முடிக்க நினைத்து; தடபெருந்தோள் - அகன்ற பெரிய தோள்; வானவர்கோன் -இந்திரன்; விட - ஏவ]*

என்று அநுசந்தித்து அகம் மிக மகிழ்கின்றார் பெரியாழ்வார்.

**காளியனை அடக்கியது:** மற்றொரு நாள் கண்ணன் கன்றுகளை ஓட்டிக்கொண்டு ஒருவரும் சென்று வராத வழியே போகத் தொடங்கினான். ஆயர் சிறுவர் அவ்வழி ஏக வேண்டாம் என்றனர்: அவ்வழியில் யமுனை நதி மடுவொன்றில் காளியன் என்னும் ஐந்தலைப் பாம்பு தன் குடும்பத்துடன் இருந்து கொண்டு அம்மடுநீர் முழுவதையும் தன் நஞ்சினால் கொதிப்படையச் செய்து அணுகினவர்கள் அனைவரையும் பிணமாகச் செய்வதையும் எடுத்துக் கூறி அச்சுறுத்தினர். உடனே அந்த ஐந்தலை அரவைத் தண்டிக்கத் திருவுள்ளங் கொண்டனன்

3. பெரி. திரு- 9. 8 : 7
4. பெரியாழ். திரு- 2. 10 ; 4

கண்ணன். அம்மடுவிற்கு அருகிலுள்ள கடம்ப மரத்திலேறி அம்மடுவிற் குதித்து அந்நாகத்தின் படத்தின்மேல் ஏறி நடனம் ஆடி நசுக்கி அதன் வலியடக்கினன். மாங்கல்யப் பிச்சை கோரித் தன்னை வணங்கின நாக கன்னிகையரின் வேண்டுகோளின்படி அந்தக் காளியனைக் கடலில் சென்று வாழும்படி உயிரோடு விட்டருளினன். இதனைப் பெரியாழ்வார்,

**"காளியன் பொய்கை கலங்கப்பாய்ந் திட்டவன்**
**நீள்முடி ஐந்திலும் நின்று நடஞ்செய்து**
**மீள அவனுக் கருள்செய்த வித்தகன்"[5]**

என்றும்,

**"காயும்நீர் புக்குக் கடம்பேறி காளியன்**
**தீயபணத்தின் சிலம்பார்க்கப் பாய்ந்து ஆடி**
**வேயின் குழலூதி வித்தகனாய் நின்ற**
**ஆயன்"[6]**

[பணம்-படம்; வேய்-மூங்கில்]

என்றும், தம் பாசுரத்தில் கண்ணனின், தோள் வலி வீரத்தை அநுசந்தித்து மகிழ்கின்றார். திருமங்கையாழ்வாரும்,

**படஅர வுச்சி தன்மேல்**
**பாய்ந்துபல் நடங்கள் செய்து**
**மடவரல் மங்கை தன்னை**
**மார்பகத் திருத்தினானே.[7]**

[அரவு-பாம்பு; மடவரல்-மடமைக் குணம் வாய்ந்த; மங்கை-பெரிய பிராட்டியார்]

என்ற பாசுரத்தில் இந்நிகழ்ச்சியில் ஆழங்கால் படுவர்.

---

5. பெரியாழ். திரு 3. 9 : 7
6. ஷை 2. 1 : 3
7. பெரி. தீரு -4. 6 : 5

**பிரலம்பன் வரலாறு:** பிரலம்பன் ஓர் அசுரன். ஓர் ஆயர் சிறுவன் வடிவங்கொண்டு கிருஷ்ணன், பலராமன், ஏனைய ஆயச் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். ஒருவிதப் பந்தாட்டத்தில் தோற்றவர்கள் வெற்றியடைந்தவர்களைச் சுமந்து கொண்டு ஆநிரைகள் பிரிந்து சிதறிப் போகாமல் அவற்றை வலப்புறமாகச் சென்று மடக்க வேண்டும் என்பதும், அங்ஙனம் செல்லுங்கால் தாம் அமைத்துள்ள குறிகளைத் தொட்டுத் தாம் இருந்த இடத்திற்கே வத்து சேரவேண்டியது என்பதும் நிபந்தனை. இதில் பலராமனைப் பிரலம்பன் சுமந்து செல்லும் வாய்ப்பு வந்தது. அங்ஙனம் சுமந்து செல்லுங்கால் பிரலம்பன் தீய எண்ணத்தனாய்க் குறிகளைத் தாண்டிப் போனான். பலராமன் தன் ஆற்றல் சிறப்பினால் அவனுக்கு அதிகப் பாரமானான். உடனே பிரலம்பன் தன் உண்மையான அரக்க உருவத்துடன் வான்வழிச் செல்லத் தொடங்கினான். பலராமன் மடக்கிய தன் கையினால் அசுரன் தலையில் ஓங்கிக் குத்த, அசுரன் தலை பிளந்து உடலெங்கும் செந்நீர் பெருகக் கதறிக்கொண்டு பூமியில் விழுந்து உயிரொழிந்தனன். இந் நிகழ்ச்சியினையும் மேற் குறிப்பிட்ட தேனுகன் காளியன் நிகழ்ச்சிகளையும் ஒருசேரத் தொகுத்து,

> **"தேனுகன் பிலம்பன் காளியன் என்னும்**
> **தீப்பப் பூடுகள் அடங்க உழக்கிக்**
> **கானகம்படி உலாவி உலாவிக்**
> **கருஞ்சிறுக் கன்குழல் ஊதின போது."**[8]

[பிலம்பன்-பிரலம்பன்; தீப்பப் பூடுகள்-கொடிய பூண்டுகள்; உழக்கி-அழித்து; கானகம்படி-காட்டுக் குள்ளே; கரு சிறுக்கன-கரிய திருமேனியையுடைய சிறுபிள்ளையான கண்ணன்]

8. பெரியாழ். திரு- 3 . 6 :4

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கின்றார் பெரியாழ்வார். இங்ஙனம் பலராமனால் செய்யப்பெற்ற அசுர வதத்தைக் கண்ணன் செய்தருளினதாகவே அநுசந்திப்பது ஒற்றுமை நயம் பற்றியதாகும்.

**கேசியின் வாயைக் கீண்ட வரலாறு ;** ஒரு சமயம் கம்சனால் ஏவப்பட்ட கேசிகன் என்னும் அசுரன் குதிரையின் வடிவங்கொண்டு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படிக் கனைத்துத் துரத்திக்கொண்டு கண்ணனை நோக்கிப் பாய்ந்து வந்தான். அப்பெருமான் தமது திருக்கைகளை நன்றாகப் பெருக்கி நீட்டிக் குதிரையின் வாயிற்கொடுத்துத் தாக்கிப் பற்களை உதிர்த்து உதட்டையும் பிளந்து அதன் உடலையும் இரண்டாக வகிர்ந்து தள்ளிக் கொன்றனன். இந்த நிகழ்ச்சியால் கண்ணன் 'கேசவன்' என்ற திருநாமமும் பெற்றனன். இந்த நிகழ்ச்சியைத் திருமங்கையாழ்வார்,

> **மாவாயின் அங்கம் மதியாது கீறி**
> **மழை முதுகுன் றெடுத்து ஆயர்தங்கள்**
> **கோவாய் நிரைமேய்த் துலகுண்ட மாயன்,**[9]

[மா-கேசி என்னும் குதிரை; முதுகுன்று-கோவர்த்தனம்]

என்று வேறு சில நிகழ்ச்சிகளுடன் ஆழ்ங்கால்படுகின்றார். இன்னொரு பாசுரத்தில்,

> **மாவாய் பிளந்து மல்அடர்த்து**
> **மருதம் சாய்த்த மால்**[10]

என்று அநுசந்திக்கின்றார். ''மாவாய்ப் பிளந்த மகன்''[11] என்று இந்நிகழ்ச்சியை நினைந்து கண்ணனைப் போற்று

9. பெரி. திரு. 3. 2 : 8
10. ஷை 5. 1:3
11. இரண். திருவந் 23

கின்றார் பூதத்தாழ்வார். திருமங்கையாழ்வார் இந் நிகழ்ச்சியை,

**"சுரிந்திட்ட செங்கேழ் உளைப்பொங் கரிமாத்**
**தொலையப் பிரியாது சென்றெய்தி, எய்தா**
**திரிந்திட் டிடங்கொண டடங்காத தன்வாய்**
**இருகூறு செய்த பெருமான்"[12]**

[சுரிந்திட்ட- சுருண்டு நின்ற: செம்கேழ்-செந்நிறம்; உளை-பிடரி மயிர்; அரிமா-குதிரை வடிவினனான கேசி; பிரியாது-விடாது; எய்தாது-கிட்டிவராமல்; இரிந்திட்டு-அங்குமிங்கும் திரிந்து கொண்டு]

என்ற பாசுரத்தில் அநுசந்தித்து அகம் மிக மகிழ்கின்றார்.

**கன்றினால் விளவெறிந்தது :** கம்சனால் ஏவப்பெற்ற கவித்தாசுரன் விளாமரத்தின் வடிவமாய்க் கன்று மேய்க்கும் கண்ணன் தன் கீழ் வரும்போது மேல் விழுந்து கொல்வதாக எண்ணி வந்து நிற்கின்றான். அவ்வாறே வத்சாசுரன் என்பான் கிருட்டிணனை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவமாக வந்து காத்திருக் கின்றான். இதனை நன்கு அறிந்த கண்ணன் அக் கன்றின் கால்களைப் பற்றிச் சுழற்றி விளாமரத்தின்மீது வீசி எறிய, இருவரும் சிதைந்து தமது அசுர வடிவத்துடன் விழுந்து இறக்கின்றனர். இந் நிகழ்ச்சியினை ஆழ்வார் பெருமக்கள் நினைந்து பாசுரங்கள் அமைத்து அநுபவிக் கின்றனர். இங்ஙனம் முள்ளை முள்ளாற் களைவதுபோல அசுரனை அசுரனைக் கொண்டே களைந்த வரலாற்றைப் பெரியாழ்வார்,

**"கற்றினம் மேய்த்துக் கனிக்கொரு கன்றினைப்**
**பற்ற எறிந்த பரமன்"[13]**

என்று பேசி இனியராகின்றார். திருமங்கையாழ்வார், "கன்று அதனால் விளைவு எறிந்து கனி உதிர்த்த

12. பெரி. திரு. 10. 6:9
13. பெரியாழ். திரு. 2.5:5

காளை"[14] என்றும், "விளங்கனியை இளங்கன்று கொண்டு உதிர எறிந்து...உலகுக்கு உண்டகாளை"[15] என்றும் இந் நிகழ்ச்சியில் ஆழங்கால் படுகின்றார்.

பிருந்தாவனத்தில் இருக்கும்பேபது இருவகையாகக் கண்ணனிடம் அநுபவப்படுகிறோம். ஒன்று, சிறுவனாக—பாலகிருஷ்ணனாகவிருந்து மாடுகள் மேய்த்தது; மற்றொன்று, கண்ணன் இளைஞனாகஇருந்தபோது இடைப் பெண்களுடன் விளையாடியது. பெரியாழ்வார் அதிகமாக ஈடுபடடது குழந்தைக் கண்ணனிடமே. அந்தப் பாசுரங் கள் எல்லாவற்றிலுமே அசைபோடத் தொடங்கு கின்றோம். யசோதை நிலையில் இருந்து கண்ணன் செய்த சிறு குறும்புகளையெல்லாம் நம் அநுபவமாகக் கொள்ள முயல்கின்றோம். உண்மையான பிள்ளைத் தமிழ்ச் சுவையில் மூழ்கிவிடுகின்றோம்.

யசோதைப் பிராட்டி கண்ணனை நீராட்டிக் குழல் வாரிப் பூச்சூட்டிக் காப்பிட்டுத் தன் பக்கத்தில் படுக்க வைத்துத் தானும் உறங்கிப் பின்பு விடிய எழுந்து வீட்டு அலுவல்களைப் பார்க்கப் போகின்றாள். கண்ணனும் எழுந்து ஊரார் வீட்டில் சென்று பல தீம்புகளைப் புரி கின்றான். இடைப் பெண்கள் இவற்றை யசோதைப் பிராட்டியிடம் வந்து முறையிடுகின்றனர்[16]. ஒரு வீட்டில் புகுந்து கலத்திலுள்ள வெண்ணெய்முழுவதையும் விழுங்கி அக்கலத்தினைக் கற்பாறையினில் விட்டெறிந்து உடைக் கின்றான் (1). மற்றொரு வீட்டில் உருக்குவதற்காக அடுப் பின்மீது வைத்திருந்த வெண்ணெய் முழுவதையும் விழுங்கி விட்டு மட்கலத்தையும் உடைத்து விடுகின்றான் (3). காய்ச்சின பாலைச் சாய்த்துப் பருகுவதும் (6), அயலகத்தி லுள்ள பல்வேறு வகைப் பலகாரங்களை உண்பதுவும்

14. பெரி. திரு. 3.10:8
15. பெரியாழ். திரு. 3. 9: 7
16. ஷை 2. 9

(7, 9) உறிகளை ஆராய்வதும் (9) இவன் புரியும் தீம்புகள். இவன் செய்த சிறு சேவலகங்களை எல்லாம் பட்டியல் போட்டுக் காட்டியசோதை முலைப்பால் பருகஅனுமதிக்க முடியாது என்று கூறுவதாக அமைந்துள்ள பாசுரங்கள்[17] பன்முறை படித்து அநுபவிக்க வேண்டியவை. கண்ணனைக் கன்றுகள் மேய்க்கக் காடேற அனுப்பிவிட்டு அப் பிரிவைப் பொறுக்க மாட்டாமல் 'என் செயப் பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவமே (1) 'எற்றுக்கு என் பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவமே' (2) 'என் மணிவண்ணனைப் போக்கினேன் எல்லே பாவமே' (3) என்று யசோதை கழறியனவா அமைந்த பாடல்கள் கன்னெஞ்சத்தையும் கரைக்க வல்லவை.[18] இந்தப் பாசுரங்களில் கண்ணபிரானைக் காட்டில் போகவிட்ட கொடுமையைக் கூறி வயிறு எறித்துகொண்டே பகற்பொழுதையெல்லாம் ஒருவாறு போக்கினதாக ஆழ்வார் யசோதையின் நிலையிலிருந்து கொண்டு அநுபவிப்பதை நாமும் அநுபவித்து மகிழ்கின்றோம். மாலை நேரத்தில் கண்ணனை எதிர் கொண்டழைக்கும் யசோதை அவன் திருமேனியின் அணிகளைக் கண்டு மகிழ்கின்றாள்; பிறரையும் காணச் செய்து பெருமை அடைகின்றாள்.

> ''சீதக் குதம்பை ஒருகா தொருகாது
>   செந்நிற மேல்தோன் றிப்பூ,
> கோலப் பணைக்கச்சும் கூறை யுடையும்
>   குளிர்முத் தின்கோ டாலமும்
> காலிப் பின்னே வருகின்ற கடல்வண்ணன்
>   வேடத்தை வந்து காணீர்!
> ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கை
>   நானேமற் றாரும் இல்லை''[19]

17. பெரியாழ். திரு. 3.1
13. டை 3.2
19. டை 3.3: 1

[குதம்பை - சலங்கை; தோன்றிப்பூ - செங்காந்தள் பூ; கூறை - திருப்பரியட்டம்; பணைக்கச்சு - கச்சுப் பட்டை; கோடு ஆலம்-வளைத்த மாலை; காலி-கன்றுகள்]

என்று பாசுரத்தில் ஆழங்கால்பட்டு யசோதைப் பிராட்டியின் பெருமிதத்தை ஆழ்வார்வழி நின்று அநுபவிக்கின்றோம்.

ஒருநாள் கண்ணன் பிருந்தாவனத்தில் நின்று குழல் ஊத அக்குழலோசையின் அமுதாரையைச் செவிமடுத்த மானிடர் உட்பட மற்ற உயிர்களும் அடைந்த அநுபவத்தைப் பேசுகின்றார் ஆழ்வார். குழல் ஊதும் கண்ணன் நிலை இது :

**இடவ ணரை இடத் தோளோடு சாய்த்து**
**இருகை கூடப் புருவம் நெறித்தேறக்**
**குடவ யிறுபட வாய்கடைக் கூடக்**
**கோவிந்தன் குழல்கொ டூதின போது[20]**

[அணர் - தாடி; அது உடைய இடம் - மோவாய்க் கட்டை; நெறிந்து ஏற - நெறிந்து மேலே கிளர; (வயிறு) குடம் பட - குடம்போலக் குமிழித்துத் தோன்ற; வாய்கடை கூட - வாயின் இரண்டருகுங் குவிய]

கண்ணன் குழலூதும்போது அவனது மோவாய்க் கட்டையின் இடப்பக்கம் இடத்தோள் பக்கமாகத் திரும்புகின்றது; இரண்டு கைகளும் குழலோடு கூடுகின்றன; புருவங்கள் நெறிந்து மேலே கிளர்கின்றன; வயிறு குடம் போலக் குமிழ்த்துத் தோன்றுகின்றது; வாய் குவிகின்றது. வேறு மெய்ப்பாடுகளும் தோன்றுகின்றன:

**''சிறுவி ரல்கள் தடவிப் பரிமாறச்**
**செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்ப**
**குறுவெ யர்ப்புரு வம்கூட லிப்பக்**
**கோவிந்தன் குழல்கொ டூதின போது''[21]**

20. பெரியாழ். திரு 3, 6 : 2 21. ஷை 3. 6 :8

[தடவி - துளைகளைத் தடவிக்கொண்டு; பரிமாற - இங்குமங்கும் செல்ல; கோட - வக்கரிக்க; கொப்பளிக்க - குமிழ்க்க; கூடலிப்ப மேல் சென்று வளைய]

குழல் ஊதினபோது கண்ணனின் கைவிரல்கள் துளைகளை மூடவும் திறக்கவும் செயற்படுகின்றன; கண்கள் ஒருவகையாக மேல்நோக்கி வக்கரிக்கின்றன; திருப்பவளம் பூரிப்பாலே குமிழ்க்கின்றது; குறுவியர்வை அரும்பின புருவங்கள் மேல் கிளர்த்து வளைகின்றன.

கண்ணனின் குழலோசை ஆயர் மகளிரின் செவிக்கு எட்டியதும், அவர்கள் காம உணர்ச்சியால் உடல் இளைத்து மனம் உருகுகின்றனர். தம் இல்லத்திலுள்ள மாமியார் மாமனார் இவர்களையும் அலட்சியம் செய்து குழலூதும் இடத்திற்கு வந்து திரள்கின்றனர். கயிற்றில் பூக்களை அடரத் தொடுத்தாற்போல் வரிசையாக நின்று கண்ணன் முகத்தைக் கண்டதும் வெள்கி முகம் கவிழ்ந்து தரையைக் கீறி நிற்கின்றனர் (1). மயில்களையும், மான் பேடைகளையும் ஒத்த வேறு சில இடைப்பெண்கள் உடல் விகாரப்பட்டுத் தம் மலரணிந்த கூந்தல் முடி அவிழ்ந்து அலையவும், கட்டிய ஆடை நெகிழவும், நெகிழ்ந்த துகிலை ஒரு கையால் பற்றிக்கொண்டு கண்ணன் பக்கம் வந்து சேர்கின்றனர் (2).

குழலோசை உம்பர் உலகத்திற்கும் எட்டுகின்றது. மேனகை, திலோத்தமை, அரம்பை, ஊர்வசி முதலிய உம்பர் உலக நடன மகளிரின் நடையழகும் பாட்டழகும் கண்ணனின் நடையழகு, குழலோசை இவற்றின் முன் தோற்றமையால், இனி இவற்றில் ஈடுபடுவதில்லை என்று உறுதி சொல்கின்றனர் (4). ஏனைய மேலுக மாதர் தங்களிருப்பிடத்தில் நிற்கமாட்டாமல் கூட்டம் கூட்டமாகக் கண்ணன் இருக்கும் இடத்தை அடைகின்றனர். அவன் குழலோசை அவர்களை நீர்ப்பண்டமாக உருக்கு

கின்றது; கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கின்றது. கூந்தல் அவிழ்கின்றது; நெற்றி வியர்க்கின்றது (3). தும்புருவும், நாரதரும் கூட குழலோசையில் ஈடுபட்டுத் தமது வீணைகளை மறக்கின்றனர். கின்னர மிதுனம் என்று பேர் பெற்றவர்களும் தத்தம் கின்னர இசைக் கருவிகளை விட்டொழிக்கின்றனர் (5). வானத்தில் திரியும் கந்தர்வர் அனைவரும் அமுதம் போன்ற குழலோசையாகின்ற வலையில் சிக்கி வெட்கி அறிவிழந்து பாடுகையாகிய தொழிலையே கைவிடுகின்றனர் (6). வானுலக மாந்தர் யாவரும் தமது அவிசையும் மறந்து இடைச்சேரி வந்து திரண்டு கண்ணன் செல்லுமிடங்களுக்கெல்லாம் தாங்களும் பின்தொடரத் தொடங்குகின்றனர் (7).

கானிலுள்ள நிலைத்திணைகளும், இயங்கு திணைகளும் பெருமாற்றங்களை அடைகின்றன. கோவிந்தன் குழலோசையைக் கேட்டவுடனே தாவர இனங்களின் செயல்கள் இவை:

**''மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்;**
**மலர்கள் வீழும்; வளர்கொம்புகள் தாழும்**
**இரங்கும், கூம்பும்; திருமால் நிற்கின்ற**
**பக்கம் நோக்கி அவைசெய்யும் குணமே''**[22]

[மது - தேன்; கூம்பும் - குவிக்கும்]

பறவை, கறவைகளின் செயல்கள் இவை:

**''பறவையின் கணங்கள் கூடு துறந்து**
**வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்**
**கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்**
**கவிழ்ந்து இறங்கிச் செவிஆட்ட கில்லாவே.''**[23]

---

22. பெரியாழ்.திரு. 3. 6 : 10
23. ஷை 3. 6 : 8

[கணங்கள் - கூட்டங்கள்; படுகாடு - வெட்டி விழுந்த காடுபோல்; கறவை - பசுக்கள்; கவிழ்ந்து -தொங்கவிட்டு]

மான் கூட்டங்களின் செயல்கள் இவை:

**''மருண்டு மான்-கணங்கள் மேய்கை மறந்து**
**மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர**
**இரண்டு பாடும் துலுங்காப் புடைபெயரா**
**எழுது சித்திரங்கள் போல நின்றனவே''[24]**

[மருண்டு - அறிவிழந்து; சோர -நழுவி விழ; இரண்டு பாடும் - முன்பின் ஆகிற இரண்டு பக்கங்கள்; துலுங்கா - அசையாமல்; புடைபெயரா- அடியைப் பெயர்த்து இடமாட்டாமல்]

இளமைப் பருவத்துக் கண்ணனின் செயல்களில் ஆழ்வார்கள் ஆழங்கால்பட்டு அநுபவித்ததையும் நாம் சிந்திக்கின்றோம். மாடுகள் மேய்த்து வீடு திரும்பும் கண்ணன் தன்னை வகைவகையாக அணி செய்து கொண்டும் குழலூதிக் கொண்டும் தன்னேராயிரம் தோழன்மாருடன் பெரிய ஓலக்கமாகத் திரும்புகின்றான். கண்ணனின் கோலத்தைக் கண்ட ஆயர் பெண்கள் அவன் மீது காமமுற்ற வரலாற்றைப் பெரியாழ்வார் தம்மை அப் பெண்களாகப் பாவித்துப் பேசி இனியராகின்றார்.[25]

**''தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும்**
**தண்ணுமை எக்கம் மத்தளி தாழ்பீலி**
**குழல்களும் கீதமும் ஆகி எங்கும்**
**கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு''[26]**

ஆயர் பெண்கள் சாளரங்கள்தோறும் சென்று கிட்டி உலணையும் மறந்து தம் நெஞ்சைக் கண்ணனிடம் பறி

24. பெரியாழ். திரு. 3. 6 : 9
25. ஷை 3.4
26. ஷை 3.4 : 1

கொடுக்கின்றனர். ஒருத்தி "உங்கள் வளையல்களின்மீது கவனமாக இருங்கள்" என்கின்றாள் (2). ஒருத்தி கண்ணனை எல்லோரும் பார்ப்பதுபோல் பார்த்து, பிறகு சிறிது குறிப்பாக நோக்க, அவளைப்பற்றி அலர் தொடுக்கின்றனர் (3). ஒருத்தியின் துகில் அரையில் தங்க வில்லை; கையில் வளை நிற்கவில்லை; கொங்கை கிளர்ந்து குமைத்து குதுகலித்து அவள் கட்டுக்குள் அடங்கவில்லை (4). ஒருத்தி "மற்றொருவர்க்கென்னைப் பேசலொட்டேன்" என்கின்றாள் (5). இன்னொருத்தி "பந்து கொண்டானென்று வளைத்து வைத்துப் பவளமாய் முறுவலும் காண்போம் தோழி!" என்கின்றாள் (6). மற்றொருத்தி அவன் திருக்கோலத்தில் மெய்மறந்து நிற்கின்றாள் (7).

குலசேகரப் பெருமாள் ஊடல் கோபம் கொண்ட ஆயமகளிர்கள் கண்ணனை வெறுத்துரைக்கும் காட்சிகளைப் பேசி இனியராகின்றார்.[27] கண்ணபிரான் அவர்களுள் யொருத்திக்கு யமுனையாற்றின் மணலில் "குறியிடம்" அமைத்தான்; ஆனால் அங்கு அவன் போகத் தவறினான். அவள் மட்டிலும் மணலில் விடியுமளவும் காத்திருந்து ஏமாந்து வருத்தத்துடன் வீடு திரும்பினாள். மற்றொருநாள் கண்ணனைக் கண்டபோது அவள், "உன்னுடைய பொய்யான வார்த்தைகளைக் கேட்டு 'கூ மழைபோல் பனிக்கு ஊதல் எய்தி' நாணி நடுங்கி மணலில் காத்திருந்தேன். கனவிலும் பொய் சொல்லி அறியாத வசுதேவர் வயிற்றில் பிறந்த நீயும் தந்தையை ஒத்திருப்பாய் என்று நம்பிக் கெட்டேன் காண்!" என்கின்றாள் (1). வேறோர் இடைப்பெண், "என் கீழை வீட்டுப் பெண் தனியேயிருந்து தயிர் கடையா நிற்கையில் அவளுக்கு உதவும் பாங்கில் அவள் வீடு புக்கு நின் தலையிலிருந்த பூக்கள் அவிழ்ந்து அசையவும், முகம்

27. பெரு. திரு. 6

முத்துப்போல் வேர்க்கவும் திருப்பவளங்கள் துடிக்கவும் நீ அவளுடன் 'தயிர் கடைந்த' படியை அறிவேன். இன்றும் அங்கேயே தயிர் கடையப் போ; உனக்கு இங்கு என்ன வேலை?'' என்ற உள்ளுறைப் பொருள்படப் பேசுகின்றான் (2). மற்றோர் ஆய மங்கை, 'கருத்த மயிர் முடியையுடைய பெண் ஒருத்தியைக் கடைக் கண்ணால் நோக்கினாய்; வேறொருத்தியை மனத்தால் மருவினாய்; இன்னொருத்திக்கு 'வாக்கு' கொடுத்தாய்; மற்றொருத்திக்குக் 'குறியிடம்' அமைத்தாய்; பின்னர் புரிகுழல் மங்கையொருத்தியுடன் கலவி நடத்தினாய்! நீ வளர்வதோடு கூடவே உன் கள்ளம் கவடுகளும் வளர் கின்றன போலும்!'' என்று அவனைச் சாடுகின்றாள்; அவனைத் தீண்டுவதற்கும் அஞ்சுகின்றாள் (3). பிறிதொரு பெண், ''நான் அதிக ஆவலுடன் உன்னை எதிர்பார்த் திருந்தேன். நான் தூதாக அனுப்பிய வேலைக்காரியுடன் மிகு போகத்தை நன்கு உகந்தாய். அதுவும் உன் தீம்புக்குத் தகுந்ததுதான்'' என்கின்றாள் (4). இன்னொரு இடைக்குல நங்கை 'மின்னொத்த நுண் இடையாளொடு இருள் சூழ்ந்த வேளையில் பீதாம்பரத்தில் முக்காடிட்டுக் கொண்டு என் வீதி வழியாக நீ சென்றதை நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். வழியில் தென்பட்ட வேறொருத்தியிடம் கண்ணால் பேசிக் கையால் குறிப்புத் தந்ததையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அவர்களை விட்டு என்னிடம் ஏதுக்காக வந்தாய்? அவர் களிடமே செல்க!'' என்று கடிகின்றாள் (5). வேறொர் ஆயர்க் குலப் பெண், ''நான் உறங்கத் தொடங்கியதும் நள்ளிரவில் என்னைவிட்டு விலகிப்போய் அன்றிரவும் அதற்கு மறுநாளும் எல்லா மகளிரோடும் கலவி புரிந்து வந்தாய். இப்போது என்னருகில் வருவது ஏதுக்கு? அவர்களிடமே சென்று சேர்க'' என்று புலக்கின்றாள் (6). மற்றோர் இடையர்க் குல மாது, 'உன் மாயப் பேச்சு வலையில் இனி அகப்பட்டு ஏமாறோம். நீ

உகக்கும் மைஅரி ஒண் கண்ணினாரும் அல்லோம். எம் அகத்திற்கு இனி தனியே வருவதை நிறுத்தி விடுக. உன் திருமுக மண்டலத்தாலும் திருப்பவளத்தாலும் திருமுடியாலும் மயங்கி உன் பொய்யான வார்த்தைகளினால் ஒருநாள் பட்டபாடு போதும் அய்யா! உன் தேவிமார்களிடமே போய்ச் சேர்க.'' என்று கை கூப்புகின்றாள் (7). பின்னும் ஒரு கோபி, ''என்னைக் குறியிடத்திற்கு வருமாறு சைகை காட்டிவிட்டு நெடுநேரம் முல்லைப் பந்தலில் பதுங்கியிருந்த ஒருத்தியுடன் புணரப்புக்கு, பிறகு என்னைக் கண்டு நழுவினாய்; நீ ஓடிய போதிலும், ஒரு நாளாகிலும் என்னிடம் வருவாயாகில் நான் என் சினம் தீர்வன்'' என்கின்றாள் (8). இங்ஙனம் ஆழ்வார் அநுசந்தித்த நிகழ்ச்சிகளை நாமும் அநுசந்தித்துக் கிருஷ்ணாநுபவம் பெறுகின்றோம்.

இத்தகைய நிகழ்ச்சிகளில் திருமங்கை மன்னனு ஆழங்கால்பட்டு அநுபவித்ததையும் நினைக்கின்றோம். ஓர் ஆய்ப் பெண் தனியாகப் பந்தடித்துக் கொண்டுள்ளாள். கண்ணபிரான் அவளிடம் சென்று செய்த தீமைகளை முறையிடுகின்றாள் ஓர் இடைச்சி. ''பெண் பிள்ளையின் தந்தையார் வீடு வந்து சேர்ந்திலர். அன்னையாகிய நானும் வீட்டில் இருந்திலேன்; தோழியர் ஒருவரும் அவள் பக்கல் இலர்; என் மகள் தனியாகப் பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தாள்; கண்ணன் அவள் தனியிருப்பை நன்கு அறிந்து அடியொற்றி அவளிடம் சென்று பந்தைப் பறித்தனன்; அவளுடைய புடவையைக் கிழித்தான். தீம்பன் என்று பெயர் பெற்ற இவன், பல படிறுகளைச் செய்தனன் என்று சுருங்கச் சொல்லலாமேயன்றி அதிகமாக விவரிக்க முடியாது''[28] என்று யசோதைப் பிராட்டியிடம் முறையிடுகின்றாள். கண்ணபிரான் ஓர் ஆய்ப்

28. பெரி. திரு. 10.7:5

பெண்ணுடன் புணர்ந்து பிரிகின்றான். தான் சொன்னபடி குறித்த காலத்தில் திரும்பி வந்திலன். ஊடல் கொண்ட அந்த இடைப் பெண்,

''ஆனா யரும்ஆ
 னிரையும் அங்கொழியக்
கூனாய தோர்கொற்ற
 வில்லொன்று கையேந்திப்
போனார் இருந்தா
 ரையும்பார்த்துப் புகுதீர்,
ஏனோர்கள் முன்னென்
 னிதுவென் இதுவென்னா''[29]

[ஆன்ஆயர்-கோபாலர்; கூன்-வளைந்த]

என்று புலக்கின்றாள். ''ஆநிரைகளைக் காப்பதன்றோ உம் பணி? அப்பணியைவிட்டு இங்கு ஏன் வந்தீர்? பார்ப்பவர்கள் ஐயுறாவண்ணம் வேட்டைக்குப் போவது போல் வந்து நிற்கின்றீர். எங்களிடம் வருவது உமக்கு அத்தனை அவமானமாயிருக்கின்றதோ? போவோர் இருப்போரைக் கள்ளவிழி விழித்துப் புகுகின்றீர். இங்ஙனம் கூசி ஏதுக்கு வரவேண்டும்? உமது வருகையினால் பலன் இருப்பின் குற்றம் இல்லை; பழி கழிக்க வந்து போகின்றீர். உம்மிடம் அன்புடையார் ஒருவரும் ஈண்டிலர். வந்த வழி பார்த்துத் திரும்புவீராக'' என்கின்றாள்

நம்மாழ்வாரும் மகள் பாசுரத்தில் இந்தக் கண்ணன் ஆய்ச்சியர் ஊடல் நிலையை அநுபவித்து மகிழ்கின்றார்.

''நங்காய், உன்மீது அளவற்ற அன்புடன் அணுகி வந்துள்ள என்னைப் 'போகு' என்று உதறித் தள்ளுவது உனக்கு அறமா?'' என்கின்றான் கண்ணன்.

29. பெரி. திரு. 10.4:6

அதற்குப் பராங்குச நாயகி (நம்மாழ்வார்) "ஆமாம், என்மீது உனக்கு அளவு கடந்த அன்புதான். உன் அன்பை நீயே மெச்சிக்கொள்ள வேண்டும்" என்கின்றாள்.

"அம்மணி, இப்படியும் சொல்லலாகுமா? உன்னிடத்தில் எனக்கு அன்பு மிக உள்ளதென்பதில் இவ்வளவு ஐயமோ? எனது கண்ணிணையில் என் அன்பு முழுதும் உனக்குத் தெளிவாக வில்லையா?" என்று சொல்லிக் கொண்டே புன்முறுவல் கொண்ட திருப்பவளத்துடன் நெருங்கி வருகின்றான்.

அப்போது நாயகி, "உன் தாமரை புரை கண்ணிணையும் செவ்வாய் முறுவலும் ஆகுலங்கள் செய்ய அழிதற்கே நோற்றோம் யாம்"[30] என்கின்றாள்.

கண்ணன் வேறு சில சிறு குறும்புகள் செய்யப்புக, ஆயர் நங்கை முகத்தை மாற வைக்கின்றாள். கண்ணனோ அவளை விட்டான் இலன். பின்புறத்து அவளுடைய அளகபாரத்தைக் கண்டு "மயில்தோகை போன்ற நின் கூந்தற் கற்றையின் அழகுதான் என்னே!" என்கின்றான்.

இங்ஙனம் சில வருணனைகளைப் பேசிக்கொண்டு புல்லாங்குழல் ஓசையால் இவளை வசப்படுத்தலாம் என்று திருவுள்ளம் கொண்டு குழலூதுகின்றான்.

ஆயமங்கை அதற்கு மசிவாளா? "அப்பா, நான் அல்ல கூந்தலழகி. உன் திருவருளுக்குப் பாத்திரர்களான கூந்தலழகியர் திருவாய்ப்பாடியில் பலருள்ளனர். அங்குச் சென்று பசுக்களை மேயவிட்டுக்கொண்டு, இக்குழலோசையை ஆங்கு எழுப்புக. அவர்கள் திருவுள்ளம் உகப்பர்," என்று திசை திருப்புகின்றாள்.

30. திருவாய்—6.2:2. தாமரைபுரை - தாமரை போன்ற; இணை - இரண்டு; முறுவல் - புன்சிரிப்பு; ஆகுலங்கள் - துன்பங்கள்.

கண்ணனைப் பிருந்தாவனத்தில் கண்டதாக அமைந்த பாசுரங்கள் ஆண்டாளுக்கு அவன் சேவை தந்தருளின படியைக் கூறுவன. அச்சேவையை நேராகப் பேசாமல் "கண்ணபிரானைக் கண்டதுண்டோ?" என்று கேட்பாரும் "ஓ, நன்றாகக் கண்டதுண்டு" என்று விடையளிப்பாரு மாகப் பாசுரங்களை அமைத்துக் கண்ணன் அநுபவத்தில் ஈடுபடுகின்றாள் ஆண்டாள்.

"பட்டி மேய்ந்தோர் காரேறு
பலதே வர்க்கோர் கீழ்க்கன்றாய்
இட்டீ றிட்டு விளையாடி
இங்கே போதக் கண்டீரே?
இட்ட மான பசுக்களை
இனிது மறித்து நீரூட்டி
விட்டுக் கொண்டு விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே."[31]

[பட்டிமேய்தல்-காவலில்லாமல் திரிதல்; கார் ஏறு-கறுத்த காளை; இட்டீறிட்டு-பலவிதமான கோலாகலங்களைப் பண்ணி.]

என்பது பாசுரம். ஒன்பது பாசுரங்கள் இப்பாணியில் செல்லுகின்றன. கண்ணன்மீது தான்கொண்டுள்ள காதலுணர்ச்சியை உடனே கவனிக்காததனால், ஆண்டாள் அவனுக்குப் பட்டி மேய்ந்த காரேறு (1), குட்டேறு (2), மாலே செய்யும் மணாளன், ஏலப்பொய்கள் உரைப்பான் (3), வலையில் பிழைத்த பன்றி (5), தருமம் அறியாக் குறும்பன் (6), புறம்போல் உள்ளும் கரியான் (7) என்று அவனை ஏசி அநுபவிக்கின்றார் அன்னையார். கண்ணனை அடையக் காமனையும் சாமனையும் வேண்டிப் பட்டபாடெல்லாம் தீரக் கண்ணன் அன்னை யாருக்குக் காட்சி அளித்த இடம் பிருந்தாவனமேயாகும்.

31. நாச். திரு. 14 : 1

தான் பெற்ற பேற்றையெல்லாம் மேற்குறிப்பிட்ட பாசுரங்களில் உரையாடலாக அமைத்து அருளிச்செய் துள்ளதை நாம் அறிவோம்.

இங்ஙனம் பல்வேறு வகையில் ஆழ்வார்கள் கிருஷ்ணா நுபவம் பெற்றதை நாமும் பெற முயல்கின்றோம். மனம் இருப்பின் வழி பிறக்குமல்லவா? இங்ஙனம் கண்ணன் இருந்த காலத்தில் நாமும் இருப்பதாகக் கருதும் நிலையில், பரிபூரண பிரம்மாநுபவம் பெற்ற நிலையில், மனநிறை வுடன் பிருந்தாவனத்தினின்றும் நம் இருப்பிடம் திரும்பு கின்றோம்.

# 11. வண் துவராபதி மன்னன்

துவாரகையை நினைக்கும்போதே குசேலரின் வரலாறும் நம் நினைவுக்கு வருகின்றது. சிறந்த பக்தரான குசேலர் தம் மனைவியின் தூண்டுதலால் கண்ணனை நோக்கி வருகின்றார். இவர்தம் வருகையைக் காவலரால் அறிந்த கண்ணன் தானே அரியணையிலிருந்து இறங்கி வந்து, "திலகமண் தோய கண்ணன் திருவடி தொழு திட்டானே"[1] என்றவாறு குசேலரின் திருவடிகளில் வணங்குகின்றான். பின்பு தன்னுடன் அவரை அழைத்துச் சென்று அவர்தம் திருவடிகளைத் தன் மடிமீது வைத்து "இத் திருவடிகள் வெகுதூரம் நடந்து நொந்தனவே!" என்று பகர்ந்து கொண்டே அவற்றை மெல்லெனப் பிடிக்கின்றான். குசேலர் கண்ணன் செய்யும் உபகாரங்களுக்கு எல்லாம் தம் பாரதந்திரியத்திற்கு (பகவானுக்கு வசப்பட்டிருத்தல்) ஏற்ப இசைந்திருக்கின்றார்.

> "வழிநடந் திளைத்த வேஇம்
> மலரடி இரண்டும் என்று
> கழிமகிழ் சிறப்ப மெல்ல
> வருடினான் கமலக் கண்ணன்;
> பழியில்பல் உபசா ரங்கள்
> பண்ணவும் தெரியா னாகி
> ஒழிவது தவக்கு சேலன்
> ஒன்றும்பே சாதி ருந்தான்."[2]

---

1. குசேலோ பாக்கியானம்—404
2. ௸—410

என்ற பாடலால் இதனை அறியலாம். தம்மை அடிமை கொள்பவனைப் போன்று, தம்மிடம் கிட்டித்தாழ நின்று தம் ஆன்மாவை முற்றும் கவர்ந்து கொண்ட ஆச்சரியமான செயல்களை உடையவன் ஈசுவரன். இதனை "ஆட் கொள்வான் ஒத்து என்னுயிர் உண்ட மாயன்"[3] என்று நம்மாழ்வாரும் தெரிவிப்பர். மேலும் சற்றுத் தெளி வாகவே இந்த ஆழ்வார்,

> "திருவருள் செய்பவன் போல
> என்னுள் புகுந்து
> உருவமும் ஆருயிரும்
> உடனே உண்டான்."[4]

என்று விளக்குவர். "எம்பெருமான் என்னை அடிமை கொள்வான் போலே புகுந்து என் உடலையும் ஆன்மாவை யும் ஒக்கப் புசித்து நின்றானே! இஃது என்ன வியாமோகம் (கவர்ச்சி)!" என்று வியக்கின்றார். அடிமை கொள்ளுகை யையே திருவருள் செய்கையாக ஆழ்வார் திருவுள்ளம் பற்றியிருப்பது: "என்னிடத்தில் கைங்கரிய விருத்தி கொள்ளுகையாகின்ற திருவருளைச் செய்பவன்போல் உள்ளே புகுந்து அருளைத்தான் செய்யாது தான் பெற்றா னாயிரா நின்றான். 'வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்'[5] என்று யான் பாரித்திருந்தேன்; அவன் இங்ஙனே பாரித்துப் பேறு தலைகட்டப்பெற்றான். திருவிருத்தம் முதற் பாசுரத்தில் 'அழுக்குடம்பு' என்று தான் வெறுத்ததை அவன் விரும்பிப் புகுந்தான்" என்கின்றார். இங்கே இன்சுவை மிக்க நம்பிள்ளை ஈடு: "அவன் அங்கீ காரத்துக்கு முன்பு இவர் தேகத்தையே விரும்பிப் போந்தார்; அவன் இவரை அங்கீகரித்த பின்பு இவர் தம் தேகத்தை வெறுக்க அவன் இவருடைய தேகத்தை

3. திருவாய் 9.6:7
4. டை 9.6:5
5. டை 3.3:1

விரும்பப் புக்கான்; இவர்க்கு அவனோட்டை சகவாசம் ஸ்வரூப ஞானத்துக்கு உடலாய்த்து; அவனுக்கு இவரோட்டை சகவாசம் தேகாத்மாபிமாநத்துக்கு உடலாய்த்து'' என்பது. ஆருயிரும் உடனே உண்டான் என்கையாலே தேகமென்று ஹேயதா புத்தியும் (விடத்தக்கது என்ற அறிவும்) ஆன்மா என்று உபாதேயதாபுத்தியும் (எடுத்துக்கொள்ளத் தக்கது என்ற அறிவும்) இல்லாமல் இரண்டிலும் துல்யமான பிரதிபத்தியையே (நம்பிக்கை; ஈடுபாடு) கொண்டான் என்பது தெளிவாகும்.

இவ்விடத்தில் ஒரு குறிப்பு: 'ஓம்' என்ற பிரணவத்தினால் 'ஆன்மா பரமான்வாவிற்கே அடிமை' என்பது தெரிகின்றது. இந்தச் சீவன் அசித்தைப் போன்று ஈசுவரனுக்கே பயன்படுவதாக உள்ளான். தான் பிறர் பொருட்டே பயன்படுதலையே இயல்பாகக் கொண்டுள்ள அசித்தைப் போன்று 'உனக்கே நாம் ஆட்செய்வோம்.'[6] என்றுஆண்டாள் கூறியவாறு தன்னை எம்பெருமானுக்கே இன்ப மூட்டுமாறு (பயன்படுமாறு) விநியோகித்துக் கொள்ளவேண்டும்என்று பிரார்த்திக்கவும் செய்கின்றான். அஃதாவது, சீவான்மா ஈசுவரன் விருப்பத்தின்படியே செயலாற்றும் பரதந்திரன் என்பது குறிப்பு. இதனையே,

> **''போகதசையில் ஈசுவரன் அழிக்கும்போது நோக்க வேணும் என்று அறியாதொழிகை''[7]**

என்ற முமுட்சுப்படி குறிப்பிடுகின்றது. ஈசுவரன் சீவனாகிய தன்னுடன் கலந்து பரிமாறுங்கால் அவன் தன்மாட்டுக் கொண்டுள்ள பிரேமப் பித்தினால் தாழ நின்று பரிமாறித் தன்னுடைய சேஷத்துவத்தை (அடிமை நிலையை) அழிக்குங்கால், ''நம் சேஷத்துவத்தை நோக்கிக் கொள்ள

6. திருப்—29
7. முமுட்சு—92

வேண்டும்'' என நினைத்து சீவனாகிய தான் பின்வாங்கி அவன் போகத்தைக் கெடுக்காமலிருக்க வேண்டும் என்பது மேற்கண்ட முமுட்சுப்படியின் பொருளாகும். இதுவே பகவானுக்கே ஆனந்தம் ஏற்படுமாறு விநியோகிக்கப் படுகை எனச் சொல்லப்படுவதாகும்.

இதனை மேலும் விளக்குவோம். ஈசுவரன் சேதனனை வினியோகம் கொள்ளல் இரண்டு வகைப்படும். இவற்றுள் அவன் தலைவனாகவே இருந்து இவனை அடிமையாக வைத்துப் பரிமாறுதல் ஒருவகை. சில சமயம் அவன் இவனோடு கலந்து போகம் துய்க்கக் கருதுவான். அவ்வ மயம், ஈசுவரன் சேதநனை அடிமை கொள்பவன்போன்று, இவனிடம் நெருங்கி, இவன் மாட்டுத் தனக்குள்ள வேட்கை மிகுதியால், இந்தச் சீவான்மாவைத் தலைவனாக வைத்து தான் அடிமையாக இருந்து இழிதொழில் செய்து அவ் விதத்தில் சேதநனை வினியோகம் கொள்ளுதல் மற்றொரு வகை. குசேலருக்குக் கண்ணன் செய்த உபகாரங்கள் இந்த இரண்டாவது வகையில் அடங்கும்.

இந்த எண்ணங்கள் நம்மனத்தில் குமிழியிட்டவண்ணம் முத்திதரும் நகரங்கள் ஏழனுள் ஒன்றாகிய துவாரகைத் திருத்தலத் பயணத்தைத் தொடங்குகின்றோம். துவாரகை மேற்கிந்திய இருப்பூர்திப் பாதையில் ஜாம் நகருக்கும் ஒக் காவிற்கும் இடையிலுள்ள ஓர் இருப்பூர்தி நிலையம். ஒக்கா விலிருந்து 18 மைல் தொலைவிலுள்ளது. எல்லா வசதி களும் கொண்ட ஒரு சிறிய நகரம் இது. இருப்பூர்தி நிலை யத்திலிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவிலுள்ளது. நிலை யத்திலிருந்து தோங்கா என்ற குதிரை வண்டி கிடைக்கும். அதன்மூலம் நகருக்குச் செல்லுகின்றோம். வழியிலுள்ள இராமநுச கூடத்தில் தங்குகின்றோம். சாமான்களைப் பாதுகாப்பில் வைத்து விட்டுத் திருக்கோயிலை நோக்கிப் புறப்படுகின்றோம். கிருட்டிணன் திருக்கோயில் கடலுக்கு அருகில் கோமுகி நதி கடலுடன் கலக்குமிடத்தில் உள்ளது.

இந்த இடத்தில் நீராடுவதற்கு ஒரு சிறிய கட்டணம் செலுத்துதல் வேண்டும். நீராடி ஈர ஆடையுடன் கண்ணனைச் சேவிக்கின்றோம்; கண்ணனை மிக அருகில் நின்று சேவிப்பதற்கும் ஒரு சிறிய கட்டணம் உண்டு. இந்த மூர்த்தி நின்ற திருக்கோலத்தில் உள்ளது. இத்த மூர்த்தியைத்தான் திருமழிசையார் "துவரைக் கோனாய் நின்ற மாயன்"[8] என்று குறிப்பிடுவர். முழுப் பாசுரத்தையும் சிந்திக்கின்றோம்.

'சேயன் அணியன்
சிறியன் மிகப்பெரியன்
ஆயன் துவரைக்கோனாய்
நின்ற—மாயன் அன்(று)
ஓதிய வர்க்கதனைக்
கல்லார் உலகத்தில்
ஏதிலராம் மெய்ஞ்ஞானம்
இல்''

[அன்று-பாரதப் போர் நடந்த காலத்தில்; ஓதிய வாக்கு சரம சுலோகம்; ஏதிலர்-பகவத் விரோதிகள்]

பார்த்தசாரதி பாரதப்போர் நடந்த காலத்தில் பார்த்தனுக்கு உபதேசித்த சரம சுலோகத்தை—அந்தத் திருவாக்கைக்—கற்று உணர்ந்தவர்களே எம்பெருமானுக்கு அன்பர்களாவர்; கல்லாதவர்கள் பகைவர்களாவர்.

துவரைநாதனைத் திருமழிசையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் ஆகிய ஐந்து ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். கண்ணனை வணங்கிய பின்னர் எதிர்ப்புறத்திலுள்ள கல்யாண நாராயணின் திருக்கோயிலுக்கு வருகின்றோம். ஒரு காலத்தில இருந்த திருக்கோலத்தில் சேவை சாதித்த இந்த எம்பெருமான் இப்பொழுது நின்ற

8. நான். திருவந். 71

திருக்கோலத்தில் காட்சி அளிக்கின்றார். தாயார், கல்யாண நாச்சியார். எம் பெருமான் மேற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டவர். ஆழ்வார்களின் பாசுரங்களைச் சிந்தித்த நிலையில் இவரையும் தாயாரையும் வணங்குகின்றோம்.

நம்மாழ்வார் துவரை நாதனை "வண் துவராபதி மன்னன்"[9] என்று குறிப்பிடுவர். பெரியாழ்வார்,

"பல்லாயி ரம்பெருந் தேவிமாரொடு
பௌவம் எறி துவரை
எல்லாரும் சூழச் சிங்காசனத்தே
இருந்தான்."[10]

[பௌவம் எறி—அலைகள் வீசப்பெற்ற]

என்றும்,

"பதினாறாம் ஆயிரவர் தேவியார்
பணிசெய்யத் துவரை என்னும்
மதில் நாய கராகி வீற்றிருந்த
மணவாளர்"[11]

என்றும் போற்றிப் புகழ்வர். இப்படிப் புகழ்ந்தவர்.

"வடதடமும் வைகுந்தமும்
மதில்துவரா பதியும்
இடவகைகள் இகழ்ந்திட்டென்பால்
இடவகை கொண்டனையே"[12]

[வடதடம்-திருப்பாற்கடல்; இடவகைகள்-இடங்கள்; இகழ்ந்திட்டு-கைவிட்டு]

என்று திருப்பாற்கடல்; வைகுண்டம், துவரை போன்ற இடங்களையெல்லாம் துறந்து தன் மனத்தில் நிரந்தர

9. திருவாய்-5:3.6
10. பெரியாழ். திரு. 4. 1:6
11, ஷ்டி 4. 9:4
12. ஷ்டி 5. 4:10

மாகக் குடியேறினதை நினைந்து மகிழ்கின்றார். இன்னும் பாரதப் போருக்குக் "கள்ளப் படைத் துணையாக் கை செய்த வித்தகர்"[13] என்றும் சிறப்பிக்கின்றார். அன்றியும்,

> "நாழிகை கூறிட்டுக் காத்துநின்ற
> அரசர்கள் தம்முகப்பே
> நாழிகை போகப் படைபொருதவன்
> தேவகிதன் சிறுவன்
> ஆழிகொண் டன்றிரவி மறைப்பச்
> சயத்திர தன்தலையை
> பாழில் உருளப் படைபொருதவன்
> பக்கமே கண்டாருளர்"[14]

[கூறிட்டு - பங்கிட்டுக் கொண்டு; காத்து நின்ற - சயத்திர தனைக் காத்து நின்ற; முகப்பே - முன்னிலையில்; போக - முப்பது நாழிகையும் போயிற்று என்று தோற்றும்படியாக: ஆழி - சக்கரம்; இரவி- சூரியன்; பாழில் உருளப் பொருதவன் - பார்த்தன்].

என்று இரவியை ஆழிகொண்டு மறைத்த அருஞ்செயலை நினைந்து அநுபவிக்கின்றார்.

பெரியாழ்வாரின் திருமகளார் ஆண்டாள் கண்ணனை "துவராபதிக் காவலன்"[15] என்றும், "துவராபதி எம் பெருமான்"[16] என்றும் நினைந்து காதல் முறுகி எழுந்த தால் தன்னை,

> "சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்
> துவராபதிக்கு என்னை உய்த்திடுமின்"[17]

[சூடுயர் - தலை உயர்ந்து; உயர்த்திடுமின் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்]

---

13. ஷை 4. 1:7
14. ஷை 4. 1:8
15. நாச். திரு. 4 ; 8
16. ஷை. 9 : 8
17. ஷை. 12 ; 9

என்று தன்மீது பரிவுள்ளவர்களை நோக்கி வேண்டு கின்றாள். திருமங்கையாழ்வார் "முது துவரைக் குலபதி"[18] என்றும் "வண் துவரை நட்டான்"[19] என்றும் குறிப்பிடுவதுடன் நின்று விடுகின்றார்.

கிருட்டினன் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த துவாரகை கடலில் மூழ்கிவிட்டது என்பதைப் புராணங் களால் அறிகின்றோம். துவாரகை என்பது அகன்ற துவாரத்தையுடையது எனப் பொருள்படும். காலயவனன் என்பான் ஒரு பெருஞ் சேனையுடன் வடமதுரையை முற்று கையிட்டபோது அவனால் யாதவர்கட்கு என்ன தீங்கு நேருமோ என்ற கருத்தினால் கண்ணன் கடலிடையே இந்நகரை நிறுவி யாதவர்களைனவரையும் குடியேற்றி அரசாண்டதாக வரலாறு. இன்றுள்ள துவாரகை பிற் காலத்தில் நிறுவப்பெற்றதாகும். இந்தத் துவாரகையைத் தவிர, இங்கிருந்து சுமார் 50 கி. மீ. தொலைவிலுள்ளது 'பெட் துவாரகை' என்பது. இது ஒரு தீவு; படகின் மூலம் தான் இதனைச் சென்று அடைதல் வேண்டும். இங்கு இராஜஸ்தான் பாணியில் பல கட்டடங்கள் காணப்பெறு கின்றன. வழிகாட்டுவோர் இவற்றைக் கண்ணன் அரண் மனை, தேவிமார்களின் அரண்மனை என்று கூறி நம்மை மயக்குவார்கள். புராணங்களில் குறிப்பிட்டவாறு ஒவ்வொரு தேவிமார்க்கும் தனித்தனி அரண்மனைகள் இல்லாமையால் இவர்தம் கூற்றைக் கற்பனையாலும் ஒப்புக் கொள்வதற்கில்லை.

இங்ஙனம் பல செய்திகளை அறிந்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

> "திறந்திறமாத் தான்துய்க்கும்
> தீஞ்சுவையை நாடி

18. பெரி. திரு. 6. 6:7
19. ஷை 6. 8:7

**அறந்திறம்பிப் பாதகரோர்**
**ஐவர்—நறுந்துளவ**
**மாதுவரை யோனே!**
**மனத்துணையாக் கொண்டென்னைக்**
**காதுவரை யோமெய்**
**கலந்து''.[20]**

*[திறம் திறமா-விதம் விதமான; தீஞ்சுவை-இன் சுவைப் பொருள்கள்; நாடி-தேடி; அறம் திறம்பி-அறவழி தவறி; காதுவர்-இடைவிடாது வருத்துவர்; மெய்-உடல்.]*

என்பது பாசுரம், இதனை ஓதி உளங்கரைகின்றோம். ''மனம் ஆளும் ஒரைவர் வன்குறும்பராம்''[21] ஐம்புலன்கள் மனத்தைத் தமக்கு உற்ற துணையாகக் கொண்டு உடலின் உள்ளாகவே நன்கு கலந்திருந்து தத்தமக்குரிய பொருள் களை விரும்பி என் உயிரை வருத்திக் கொல்லுகின்றன; இவற்றை நின் அருளென்னும் தண்டாலடித்து அவற்றின் வலியொடுக்கி எனக்கு நற்கதி அளிக்க வேண்டும்'' என்று துவரைநாதனை வேண்டுகின்றார் அய்யங்கார். அவரைப் பின்பற்றி நாமும் அவனை இங்ஙனமே வேண்டி நம் இருப் பிடத்திற்குத் திரும்புகின்றோம். சில சமயம் அய்யங் காரின் திருப்பாசுரங்கள் நம்மாழ்வாரின் பெரிய திருவந் தாதித் திருப்பாசுரங்கள்போல் அமைந்து நம்மைப் பரவச மாக்குகின்றன.

20. நூற். திருப். அந்—105
21. பெரிய திருவந்—51

# 12. ஆயர்பாடி அணிவிளக்கு

வடமதுரை இருப்பூர்தி நிலையத்தில் தங்கியிருக்கும் நாம்,

> **கண்ணன் கழல் இணை**
> **நண்ணும் மனம்உடையீர்!**
> **எண்ணும் திருநாமம்**
> **திண்ணம் நாரணமே**[1]

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தை மனத்தில் அசை போடுகின்றோம். எம்பெருமான் கழலிணை என்று சொல்ல வேண்டிய இடத்து அவனுடைய வேறு திரு நாமங்களைக் கூறாமல் கண்ணன் என்ற திருநாமத்தை எடுத்துக்காட்டினமைக்குக் காரணம் என்ன? அடியார்கட்காகத் தூது சென்றும் திருத்தேர் கடவியும் எளியனாந் தன்மையைக் காட்டினவன் கண்ணன் அன்றோ? "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்"[2] என்று இவர் சொன்னதையே நினைந்து 'கண்ணன் கழலிணை' என்கின்றார். இவ்விடத்தில்,

> **"பிராட்டியும் அவனும் விடினும் திரு**
> **வடிகள் விடாது திண்கழலாயிருக்கும்"**[3]

என்ற முமுட்சுப்படியின் வாசகம் நினைவுகூர்தற்பாலது. சேதநன் உபாயமாய்ப் பற்றுதற்கு இன்றியமை

1. திருவாய்; 10.5:1
2. டிை. 10.4:1
3. முமுட்சு—146

யாதனவான எம்பெருமான் திருவடிகள்—கழல் இணைகள்—அவனிலும் பிராட்டியாரிலும் சிறந்தனவாகும். அவர்கள் கைவிடினும் இவை என்றும் விடாமல் உறுதியுடையனவாக இருக்கும். இதனைத் தம் திருவுள்ளத்தில் கொண்டே ஆழ்வாரும்,

> **"வண்புகழ் நாரணன்**
> **திண்கழல் சேரே"[4]**

என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். சேஷ பூதனுடைய சொரூபத்தை நோக்கினும் அவன் இறங்குந்துறை இறைவனின் திருவடிகளேயாகும். இதனைப் பிள்ளை உலக ஆசிரியர் ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவர்.

> **"சேஷிபக்கல் சேஷபூதன் இழியும் துறை,**
> **ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாப்**
> **போலே"[5]**

என்பது முமுட்சுப்படி வாசகம். பாலுண்ணும் பச்சைக் குழவி எங்ஙனம் தாயினுடைய மற்ற உறுப்புகள் யாவையும் விட்டுத் தான் உயிர் வாழ்தற்கிடனாய் உள்ள அவர் கொங்கையிலே வாய் வைக்கின்றதோ, அங்ஙனமே சேஷியாகிய ஈசுவரனைப் பற்றப் புகும் சேஷ பூதனும் எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டு, தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே பற்றுகின்றான். முற்கூறிய செயல் எவ்வாறு குழந்தைக்கு இயல்போ, அவ்வாறே பிற்கூறிய செயலும் சேதநன் செயலுக்கு இயல்பாய் அமைந்ததாகும்.

இறைவனுடைய திருப்பெயரைச் சொல்வதற்கு அதிகாரம் தேட வேண்டா; ருசியுடையார் எல்லாரும் அதிகாரிகள் ஆவர். எண்ணும் 'திருமந்திரம்' என்னாமல்

---

4. திருவாய்— 1.2;10
5. முமுட்சு—147

'நாமம்' என்றது இதற்கு ஓர் அதிகாரி நியமம், அங்க நியமம் வேண்டா; குழந்தை தாய் பேரைச் சொல்லுமாப் போலே சொல்ல அமையும் என்கைக்காக. 'அம்மே' என்கைக்கு எல்லாரும் அதிகாரிகளன்றோ? இடறி விழும் நிலையிலுள்ளவன் 'அம்மே' என்று சொல்வதைப் போலவே இதுவும். இவ்விடத்தில் ஒரு வரலாறு: "நஞ்சீயர் பராசர பட்டரை நோக்கி, 'திருநாமம் சொல்லும்போது பக்தியுடையனாய்க் கொண்டு சொல்ல வேணுமோ?' என்று கேட்க, அதற்கு அவர் 'கங்கையிலே முழுகப் போனவனுக்கு வேறு ஓர் உவர்க் குழியிலே முழுகிப் போக வேணுமோ?' என்று அருளிச் செய்தாராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியே ஆயிற்று வேண்டுவது; அவர்களே அதிகாரிகள்."[6]

கனத்த பேற்றுக்கு இவ்வளவு போதுமோ? என்று சிலர் ஐயுறக் கூடும் என்று நினைத்துத் 'திண்ணம்' என்கின்றார். 'நாராயண' என்றுகூடச் சொல்லாமல், 'நாரணமே' என்ற ஏகாரத்தாலே பிரணவம், நமஸ்ஸு, சதுர்த்தி (நான்காம் வேற்றுமை) ஒழியவும் இத்துணையே போதும் என்கின்றார். இவ்விடத்தில் நம் பிள்ளை ஈடு; "நாரணம் என்று இல்லாத மகாரத்தைக் கூட்டி உள்ளவற்றைக் குறைத்துச் சொல்லுகையாலே, அளத்தில் பட்டதெல்லாம் உப்பாமாப்போல இத்தோடே கூடினதெல்லாம் உத்தேசியம் என்றும், குறைந்தாலும் 'அங்கம் தப்பிற்று, ஸ்வரம் தப்பிற்று' என்று ப்ரஹ்ம ராச்சஸ்ஸாகப் போக வேண்டு[7] மவற்றைக் காட்டில் இதுக்குண்டான வாசி (பெருமை) சொல்லுகிறதாயிற்று."

இந்த எண்ணங்கள் நம் சிந்தனையில் குமிழியிட்ட வண்ணம் திருவாய்ப்பாடி போகச் சித்தமாகின்றோம். திருவாய்ப்பாடி கண்ணன் நந்தகோபன் வீட்டில் வளர்ந்த

6. திருவாய்— 10. 2 : 5 இன் ஈடு காண்க.
7. இவ்விடத்தில் நம்படுவான் சரிதத்தை நினைவு கூர்க.

இடமாகும். இத் திருத்தலம் யமுனையின் வடகரையி லுள்ளது. சுமார் இரண்டு கிலோ மீட்டர் அகலமுள்ள ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டும். இவ்வாறு சென்றால் 6 கி.மீ. தொலைவு. பாலத்தின் வழியாகச் செல்ல வேண்டுமாயின் சுமார் 9 கி.மீ. தொலைவு செல்ல வேண்டும். இங்ஙனம் செல்லுவதற்குப் பேருந்து வசதிகள் உண்டு; தோங்காவிலும் போகலாம். ஆயர்பாடி (கோகுலம்) ஒரு சிறிய ஊர்; வடமதுரையின் தென் கிழக்கில் உள்ளது. கிருஷ்ணன் தன் பிள்ளைப் பிராயத் தைக் கழித்த இடம்தான் இது என்பதற்கு யாதொரு வித மான அறிகுறியும் தென்படவில்லை. பண்டாக்கள் பழங் காலம் தொட்டே உள்ள இடங்கள் என்று காட்டுபவை நம்பத் தக்கவை அல்ல. இங்ஙனம் அடையாளங்களே இன்றிப் போனமைக்கு இஸ்லாமியர் படையெடுப்பால் பல இடங்கள் பாழானமையே காரணம் என்று கொள்ள லாம். மேலும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருக்கோயில்களும் இன்று இங்கு இருப்பனவாகத் தெரியவில்லை.

இங்குள்ள திருக்கோயில்கள் யாவும் வைணவத்தில் வல்லபர்கள் என்ற பிரிவைச் சார்ந்தவர்களால் கட்டப் பெற்றவை. திருக்கோயில்கள் யாவும் பாலகிருஷ்ணனுக் காகவே எழுந்தவை. இந்திக் கவிஞர் துளசிதாசரைப் போலவே, பிறவிக் குருடரான சூர்தாஸ் என்ற கவிஞரும் வல்லபாச்சாரியாரின் சீடர். இவரை இங்குள்ள நவநீத கிருட்டிணரின் திருக்கோயிலுக்கு இட்டுச் சென்றபோது, இவர் சந்நிதியில்தான் முதல் பாடலைப் பாடியதாகச் சொல்லப்பெறுகின்றது. இவரும் துளசிதாசரைப் போலவே புகழ்பெற்ற பெருங் கவிஞராவார். ஆயர் பாடியை நினைக்கும் போதே கண்ணன் விளைத்த சிறு குறும்புகளும் அதிமானுட சேஷ்டிதங்களும். அவனுக்குக் கம்சனால் விளைவிக்கப் பெற்ற பேரிடர்களும், அவற்றை வியத்தகு முறையில் அவன் சமாளித்த முறைகளும், இவை

ஆழ்வார்கள் மனத்தைக் கவர்ந்த நேர்த்தியும் இவற்றை அவர்கள் தம் பாசுரங்களில் குறிப்பிட்ட அழகும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. எல்லா வற்றையும் எடுத்துக்காட்ட இயலாவிடினும் ஒரு சில வற்றை மட்டிலுமாவது ஈண்டுக் குறிப்பிடுவோம். அவற்றில் ஆழங்கால்படுவது ஒருவித பகவதநுபவம் ஆகும் அல்லவா?

**வெண்ணெய் உண்ட வரலாறு :** இந்த வரலாறு பல நிகழ்ச்சிகளைக் கொண்டது. வெண்ணெய் களவு செய்கின்ற தன்னை யசோதைப் பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி வருத்துகின்றாள் என்று கண்ணன் இல்லத்திலுள்ள கயிறுகளையெல்லாம் துண்டு துண்டாக அறுத்து வைத்திடுவன். யசோதைப் பிராட்டி அவற்றை ஒன்றோடொன்று முடி போட்டு ஒரு கயிறு வடிவமாக்கி அதனைக் கொண்டு கண்ணனைக் கட்டுவள். முடிச்சுகள் உடலை உறுத்தி வருத்துமே என்றும் வருந்துவள். இதனை மதுர கவிகள்,

> **''கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்**
> **மண்ணிய பெருமாயன்.''[8]**

என்று அநுசந்திக்கின்றார். இவர் குருகூர் நம்பி நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வத்தை அறியாத குருபக்தர்.

பல சிறு துண்டுக் கயிறுகளை முடிபோட்டு ஒரு பெரிய கயிறாக்கினமைபற்றித் தாம்புக்குக் 'கண்ணி' என்ற அடைமொழி வந்தது. 'நுண், சிறு' என்ற அடைமொழிகள்தாம் பின் சுற்றளவிலும் நீட்டளவிலுமுள்ள சிறுமையைக் காட்டும். இப்படிப்பட்ட தாம்பினால் கட்டும்போது தன் உடலுக்கு நீளம் போதாத அச்சிறு கயிற்றினால் தன்னைக் கட்ட முடியாதபடித் தன்னைத் தப்புவித்துக் கொள்ளலாமாயினும் தனது சௌலப்பியம்,

---

8. கண்ணி நுண்—1

சௌசீல்யம், ஆச்ரித பாரதந்திரியம் முதலான சீலங்களை வெளியிடுவதற்கென்றே மானுடனாக அவதரித்திருக்கின்றமையினால், உடலோடு கட்டுண்டிருக்கை முதலான இவ்வகைகளால்தான் அத்திருக்குணங்களை விளங்கச் செய்து கொள்ள வேண்டுமென்று, ஒரு சுற்றுக்குப் போதாத தாம்பு இரண்டு மூன்று சுற்றுகளுக்கும் போதுமாறு உடலைச் சுருக்கிக்கொண்ட அற்புதம் 'கட்டுண்ணப் பண்ணிய' என்ற சொற்றொடர் நயத்தால் போதரும். 'கட்டுண்ட' என்னாது 'கட்டுண்ணப் பண்ணிய' என்றதனால் தன்னைக் கட்டுவதற்குத் தானே இசைந்து போந்தமையை நன்கு விளங்கச் செய்கின்றார். இதற்கு நஞ்சீயர் அருளிச் செயல்: ''ஆச்ரிதர் கையாலே கட்டுண்ணாவிடில் சீலத்துக்குப் போராது. அநாச்ரிதரைக் கட்டாவிடில் (சம்சாரத் தளையில் அழுந்தச் செய்யாவிடில்) பிரவாவத்திற்குப் (பெருமைக்குப்) போராது. ராஜாவானவன் எதிரிகளைக் கட்டிவைக்கையும் பும்ஸ்த்வம் (பெருமை); தன் மகிஷியின் (துணைவியின்) கையில் பூமாலையாலே கட்டுண்டு கிடக்கையும் பும்ஸ்த்வம்.'' பரமபுருடன் கர்ம வசியரான நம்போலியரைப்போல் பிறந்தவாறும், பசி உண்டாகி நவநீதம் முதலியவற்றை விரும்பியவாறும், அவற்றை இடுவார் இல்லாமல் களவு வழியிலே பெறுகையும், அவற்றைச் சடக்கென விழுங்கிவிட்டு மறைத்துக் கொள்ள மாட்டாமல் வாயது கையதாக அகப்பட்டுக் கொள்கையும், சம்சார பந்தங்களையெல்லாம் தவிர்க்க வல்லவனான தான் இந்தப் பந்தத்தைத் தவிர்த்துக் கொள்ள மாட்டதவனாகி ஏங்கி ஏங்கி அழுகையுமாகிற இவையெல்லாம் என்ன ஆச்சரியம் என்பார் 'பெருமாயன்' என்கின்றார். இவனுடைய மேன்மைக்கு எல்லை காண முடியாது என்பது இவற்றால் போதரும்.

நம்மாழ்வார் ஏனைய அவதாரங்களைவிட கிருஷ்ணாவதாரத்திலே அதிகமாக ஈடுபட்டவர். அதுவும்

வெண்ணெய் களவாடி ஆய்ச்சியர் தாம்பினால் உரலி னிடை ஆப்புண்டிருந்த நிலையை.

> ''மத்துஉறு கடைவெண்ணெய் களவினில்
> உரலிடை யாப்புண்டு
> எத்திறம், உரலினோடு இணைந்திருந்து
> ஏங்கிய எளிவே''[9]

என்று அநுசந்தித்து ஆறுமாதம் மோகித் திருந்தவராத லால் அந்தச் செயலை நினைந்து போற்றுகின்றார் மதுரகவிகள். 'அன்னையாய் அத்தனாய் தன்னை ஆண்டிடும் தன்மையான் சடகோபன் நம்பி'[10] என்று உறுதி கொண்டவரன்றோ இவர்? திருமங்கையாழ் வாரும் இந்த நிகழ்ச்சியை,

> ''உறிஆர்ந்த நறுவெண்ணெய் ஒளியாற் சென்றங்கு
> உண்டானைக் கண்டு, ஆய்ச்சி உரலோடு
> தறிஆர்ந்த கருங்களிறே போல நின்று [ஆர்க்க
> தடங்கண்கள் பனிமல்கும் தன்மை யானை''[11]

[ஆர்ந்த-நிரப்பிய: ஆய்ச்சி-யசோதைப் பிராட்டி; ஆர்க்க-கட்ட; பனிமல்கும்-நீர்நிரம்பிய]

என்று அநுபவித்துச் சிதிலமடைவர். பெரியாழ்வாரும் இந்தச் சிறு சேவகத்தை நினைந்து,

> ''பொத்த உரலைக் கவிழ்த்து அதன்மேல் ஏறி
> தித்தித்த யானும் தடாவினில் வெண்ணையும்
> மெத்தத் திருவயிறு ஆர விழுங்கிய அத்தன்''[12]

[பொத்த-அடியில் ஓட்டையாய் விட்ட; தடா-மிடா; ஆர்-நிரம்ப; அத்தன்-தலைவன்]

என்று அநுசந்தித்து அகம் மிக மகிழ்வர்.

---

9. திருவாய் 1.3:1
10. கண்ணிநுண்—4
11. பெரி. திரு. 2.10;5
12. பெரியாழ். திரு. 1.10:8

வெண்ணெய், தயிர் இவற்றைக் களவாடியுண்ட நிகழ்ச்சி பல்வேறு விதமாகச் சித்திரிக்கப் பெறுகின்றது. "தாரார்தடந் தோள்கள் உள்ளளவும் கைநீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கிய" கண்ணன் பிடிபடுகின்றான். "தாயெடுத்த சிறுகோலுக்கு உளைந்தோடித் தயிருண்ட வாய்துடைத்த மைந்தன்" அந்தத் தயிரை மறைப்பதாகத் துடைத்துக் கொள்ளத் தொடங்கி வாய் நிறையச் சுற்றிலும் பூசிக்கொள்வன்; பிறகு யசோதையால் அடிபட்டு அழுவன்; அஞ்சினாற்போல் நோக்குவன்; வாய் துடிக்கும்படி விக்கி விக்கி அழுவன்; இறுதியாக அஞ்சலி பண்ணுவன். இந்த நிகழ்ச்சிகளையும் இவை போன்ற பலவற்றையும் நினைந்து குலசேகரப் பெருமாள், தேவகி புலம்பலாக,

> **"முழுதும் வெண்ணெய் அளைந்தொட் டுண்ணும்**
> **முகிழ்இ ளஞ்சிறுத் தாமரைக் கையும்**
> **எழில்கொள் தாம்புகொண் டடிப்பதற்கு எள்கும்**
> **நிலையும், வெண்தயிர் தோய்ந்தசெவ் வாயும்**
> **அழுகை யும்அஞ்சி நோக்குமந் நோக்கும்**
> **அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப் பதுவும்**
> **தொழுகை யும்இவை கண்ட அசோதை**
> **தொல்லை யின்பத் திறுதிகண் டாளே"[13]**

[முகிழ்-தளிர்; எழில்-அழகு; அணிகொள்-அழகிய; நெளித்தல்-துடித்தல்; தொழுகை-கைகூப்புதல்]

என்ற பாசுரத்தில் அநுசந்தித்து அக மகிழ்கின்றார்.

**ததிபாண்டன் வரலாறு:** கண்ணபிரானின் அற்புதச் செயல்களில் ததிபாண்டனுக்கும் அவன் தாழிக்கும் வீடு பேறு அளித்த வரலாறும் ஒன்று. கண்ணன், இளம் பருவத்தில் ஒருநாள் வெண்ணெயைக் களவாடியதை

13. பெரு. திரு. 7:8

யசோதை நேரில் கண்டுகொண்டாள். பிள்ளையைத் தண்டிக்க எண்ணி அப்பிரானைப் பிடித்தற்கு ஓடினாள். கண்ணன் அதற்கு அஞ்சியதுபோல் நடித்துத் தாயின் கைக்கு அகப்படாமல் தப்பித் ததிபாண்டன் என்னும் இடையன் வீட்டில் புகுந்து கொண்டான். அவ்விடம் நோக்கி யசோதை விரைந்து வருதலறிந்து தன்மீது தயிர்த் தாழியைக் கவிழ்த்துச் சிறிது நேரம் ஒளித்து வைக்குமாறு வேண்டினன் கண்ணன். ததிபாண்டனும் அங்ஙனமே செய்து தாழியின் அருகில் இருந்தான். பிள்ளையைத் தேடிவந்த யசோதைப் பிராட்டி அங்கிருந்த ததிபாண்டனிடம் கண்ணன் வந்த செய்தியை உசாவ, அவன் "இங்கே கண்ணன் இலன்" என மறுமொழி தந்தான். "வீட்டுக்கு வரட்டும் ஒருகை பார்க்கிறேன்" என்று முணுமுணுத்துக்கொண்டு வீடு திரும்பினாள் யசோதைப் பிராட்டி.

அவள் ஏகினதும் ததிபாண்டன் கண்ணனை வெளிவிடாமல் தான் மூடிய தாழியின்மீது சடக்கென ஏறி உட்கார்ந்து கொண்டனன். உள்ளிருந்த பெருமான் தாய் சென்றுவிட்டமையால் தன்னை வெளிவிடுமாறு வேண்டினன். இடையனோ பல பிறவிகளில் செய்த பெருந்தவப் பேற்றால், அவனைச் சர்வேசுவரனாகக் கருதி, "எனக்குத் தேவரீர் வீடுபேற்றை நல்கினாலன்றி வெளியில் விடேன்" எனக் கூறித் தாழியை முன்னிலும் பலமாக அழுத்திக்கொண்டனன். கண்ணன் அவன்மீது கருணையுடையவனாய் "உனக்கு வீடுபேறு தந்தேன்; இனி என்னை வெளி விடுக" என்றனன். தனக்கு அருளிய பெறற்கரிய பேற்றுக்கு மகிழ்ந்தனனாயினும், வேறொரு சிந்தையுடையவனாய், மீண்டும் தாழியை அழுத்திக் கொண்டே இருந்தனன். கண்ணன் இடையனை நோக்கி "ஏன் காலம் தாழ்த்துகின்றாய்?" என்று வினவ, இடையன் "தேவரீர் திருவருள் அடைவதற்குக் காரணமாக இருந்த இத் தாழியைத் தனியே விட்டு நீங்கேன்; இதற்கும் யான் பெற்ற பேற்றினை அளித்தருள்க" என்

றனன். இடையன் தன்னிடம் காரியம் கொள்ளும் திறனுக்கு வியந்து "தாழிக்கும் வீடு தந்தேன்" என்று அருளிச் செய்தனன். ததிபாண்டனும் மூடிய அத் தாழியை நீக்கிக் கண்ணனை வெளியேறவிட்டு, தாழி யுடன் வீடுபேறடைந்தனன். இந் நிகழ்ச்சியைத் திரு வுளங்கொண்டு திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்,

**"சிந்திக்க நெஞ்சில்லை; நாவில்லை**
**நாமங்கள் செப்ப; நின்னை**
**வந்திக்க மெய்யில்லை; வந்திருபோது**
**மெய்ம்மா மலர்ப்பூம்**
**பந்தித் தடம்பொழில் சூழ்அரங்**
**கா! ததி பாண்டனுன்னைச்**
**சந்தித்த நாள்முத்தி பெற்றதென்**
**னோதயிர்த் தாழியு மே"[14]**

[சிந்திக்க-நினைக்க; செப்ப - உச்சரிக்க; வந்திக்க வணங்க; மெய்-உடம்பு; இருபோது-காலை. மாலை; தடம்-தடாகம்; சந்தித்த நாள்-சந்தித்த அன்று]

என்று பாசுரம் அருளிச் செய்தனர். "பண்டங்களைக் கொள்ளுதற்கன்றி உன்னைச் சிந்தித்ததற்கு உதவாத நெஞ்சையும், உள்ளவற்றை வெளியில் விடுவதற்கன்றி திருநாமங்களைச் செப்புவதற்குதவாத வாயையும், நின்னைத் தாழ்ந்து வணங்கத்தகாத மேனியையும் உடையதாய் அசித்தாயிருந்ததொரு பாண்டமும் வீடு பெறச் செய்தது உன் பெருங்கருணை எனின், இவை எல்லாம் உடைய சித்தாய் இருக்கும் எம்போலியர்க்கு அது வாய்க்காதது என்னோ?" என்று அய்யங்கார் அங்கலாய்க்கின்றனர். திருக்கோளூர் பெண்பிள்ளை யொருத்தி இராமனுசரை நோக்கி, "இங்குண்டு

14. திருவரங்க மாலை—53

என்றேனோ பிரகலாதாழ்வனைப்போலே; இங்கில்லை என்றேனோ ததிபாண்டனைப்போலே'' என்று கூறிய வார்த்தையையும் நினைக்கின்றோம். ஆசாரிய ஹிருதயத்திலும் அதன் வியாக்கியானத்திலும் இச் செய்தி வருகின்றது.

**மருதமரங்கள் முறிந்த வரலாறு:** குழந்தைப் பருவமுள்ள கண்ணன் துன்பத்துக்குள்ளாக்கும் பல திருவிளையாடல் களைச் செய்யக் கண்டு சினங்கொண்ட யசோதைப் பிராட்டி அவனைத் திருவயிற்றிற் கயிற்றினால் கட்டி ஓர் உரலில் பிணித்து விட்டாள். கண்ணன் அவ்வுரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்து அவண் இருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே எழுந்தருள, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப் பெற்றதனால் அம்மரங்கள் இரண்டும் முறிந்து விழுந்தன. உடனே முன் ஒருகால் நாரத முனிவரின் சாபத்தினால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன், மணிக்ரீவன் என்னும் குபேர புத்திரர்கள் இருவரும் சாபந் தீர்ந்து சென்றனர். இதனை, ''இருங்கைமா கரிமுனிந்து''[15] என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார் பல நிகழ்ச்சிகளுடன் சேர்த்து அநுசந்திக்கின்றார். நம்மாழ்வாரும் கண்ணனின் சிறு சேவகங்களை அநுபவிப்பதில் எல்லை கடந்த இன்பம் அடைகின்றார்.[16]

**வையம் ஏழும் கண்ட வரலாறு:** ஒரு நாள் கண்ணன் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தனன். கண்ணன் மண்ணைத் தின்றதாக பலராமன் மூலம் கேள்வியுற்ற யசோதைப் பிராட்டி ஓடிப்போய் கண்ணனை வாரி யெடுத்துக்கொண்டு இல்லத்தினுள் ஏகி, ''ஏன் மண்ணைத் தின்றாய்?'' என்று அச்சுறுத்தினாள். கண்ணனோ ''அம்மா நான் மண்ணைத் தின்னவில்லை;

15 பெரி. திரு. 2. 10:7
16. திருவாய் 6 . 4

அண்ணன் வேண்டுமென்றே கோள் சொல்லுகின்றான்; என் வாயைப் பார்'' என்று வாயைத் திறந்து காட்டினான். யசோதை அந்த வாய் வழியாகக் கண்ணனின் திருவயிற்றில் வையம் ஏழினையும் கண்டு வியப்புற்றாள். இவன் 'ஆயர் மகன் அல்லன்; அருந் தெய்வம்' என்று அறுதியிட்டனள். சிறிது நேரத்தில் அந்த மயக்க நிலை மாறித் தன்னுடைய மகனாகவே எண்ணிக் கொண்டாள். இந்த நிகழ்ச்சியைப் பெரியாழ்வார்,

> **''கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்**
> **பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்**
> **ஐய நாவழித் தாளுக்கு அங்காந்திட**
> **வையம் ஏழும்கண் டாள்பிள்ளை வாயுளே.''**[17]

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கின்றார். ஆனால் கண்ணனாகிய குழந்தையை நீராட்டி நாவழிக்க முயலுங்கால் இக்காட்சியைக் கண்டதாக அநுசந்திக்கின்றார். கண்ணன் பார்த்தனுக்கு ஞானக் கண்ணைக் கொடுத்துத் தன் பேருவத்தைக் காட்டினதைப்போல, யசோதைப் பிராட்டிக்குத் தன்னுடைய தெய்வத் தன்மையைக் காட்ட வேண்டுமென்ற பேரவாவினால் இங்ஙனம் செய்தனன் போலும். கண்ணன் முலைப்பால் உண்ணும் போது கொட்டாவி விடுவதுபோல் வாயைத் திறந்து தன் பேருருவம் காட்டினதாகவும் சில புராணங்கள் கூறும்.

**பூதனை வரலாறு :** ஒரு நாள் கம்சனால் ஏவப்பெற்ற பூதனை என்ற ஓர் அரக்கி அழகிய ஆயர் மகள்போல் வடிவங் கொண்டு வந்து கண்ணனுக்கு நஞ்சு தீட்டிய முலையூட்டினாள். கண்ணன் பாலையுண்டதுடன் பாதகியின் உயிரையும் உண்டான். பூதனை பெரிய அரக்கி உருவத்துடன் மலைபோல் பிணமானாள்.

17. பெரியாழ். திரு—1. 1:6

இதனைக் கண்ட ஆய்ச்சியர் யாவரும் வெருண்டு ஓடினர். யசோதைப் பிராட்டி மட்டிலும் கண்ணனை வாரியெடுத்து முலையூட்டினாள்.

"பேய்ச்சிமுலை உண்ணக் கண்டு
பின்னையும் நில்லாது என்நெஞ்சம்
ஆய்ச்சியர் எல்லோரும் கூடி
அழைக்கவும் நான்முலை தந்தேன்."[18]

என்று பெரியாழ்வார் இந்நிகழ்ச்சியைத் தம் பாசுரத்தில் அநுசந்திக்கின்றார். முன்னொரு பாசுரத்தில்,

"கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்
கருநிறச் செம்மயிர்ப் பேயை
வஞ்சிப்ப தற்குவி டுத்தான்
என்பது ஓர் வார்த்தையும் உண்டு."[19]

என்று இந்நிகழ்ச்சியைப் போற்றி மகிழ்கின்றார். திருமங்கையாழ்வார், "பேய்த்தாயை முலை உண்ட பிள்ளை தன்னை"[20] "இழை ஆடு கொங்கைத் தலை நஞ்சம் உண்டிட்டு"[21], "வஞ்சம் மேவி வந்த பேயின் உயிரை உண்ட மாயன்"[22] என்று இந் நிகழ்ச்சியை அநுசந்திக்கின்றார். நம்மாழ்வார் "பெய்யும் பூங்குழல் பேய் முலை உண்ட பிள்ளைத் தோற்றமும்"[23], "வஞ்சப் பெண்ணைச் சாவப் பால் உண்டதும்"[24] என்று இச்சிறு சேவகத்தில் ஆழங்கால்பட்டுத் தன்னையே மறக்கின்றார்.

**பகாசுரன் வரலாறு :** பகாசுரன் என்பவன் கிருஷ்ணனைக் கொல்லுமாறு கம்சனால் ஏவப்பெற்ற அசுரர்களில் ஒருவன். இவன் பெரியதொரு கொக்கின் வடிவங் கொண்டு வழக்கமாகக் கண்ணனும் அவன் தோழர்களும்

18. பெரியாழ். திரு. 2.4:3
19. டி 2. 8 : 6
20. பெரி திரு. 2. 5 : 4
21. டி 3. 8 : 5
22. டி 4. 8 : 2
23. திருவாய் 5. 10 : 3
24. டி 6. 4 : 4

மாலையில் கன்று காலிகளை ஓட்டிக்கொண்டு வீடு திரும்பும் ஓர் ஒற்றையடிப் பாதையருகில் காத்திருந்தான். அவ்வழியாக வரிசையாக வரும் கன்றுகளை ஒவ்வொன்றாக விழுங்கி விட்டான்; கண்ணனின் தோழர்களையும் ஒவ்வொருவராக கபளீகரம் பண்ணிவிட்டான். இறுதியாக வந்தவன் கண்ணன். அவனையும் அலகால் கொத்தி விழுங்கினன். உள்ளே சென்ற கண்ணன் அசுரன் வயிற்றில் நெருப்புபோல் எரித்தான். அசுரன் அதனைப் பொறுக்கமாட்டாமல் கண்ணனை உமிழவே, அவன் வெளியில் வருங்கால் தன் இரு கைகளாலும் இரண்டு அலகுகளையும் பிடித்துக்கொண்டு வெளியே குதித்துக் கொக்கினை இரு கூறாகக் கிழித்து அனைவரையும் விடுவித்தான். இச் செயலைத் திருமங்கையாழ்வார், "புள்வாய்ப் பிளந்த புனிதா!"[25] என்று அநுசந்தித்து அகமகிழ்கின்றார் "புள்ளின் வாய்க்கீண்டானை"[26] (கீண்டல்-பிளத்தல்) என்று ஆண்டாள் இந்த நிகழ்ச்சியில் ஆழங்கால்படுகின்றார். "இகல் கொள் புள்ளைப் பிளந்ததும்"[27] என்று இதனை அநுபவித்து மகிழ்கின்றார் நம்மாழ்வார்.

> **"பள்ளத்தில் மேயும் பறவை உருக்கொண்டு**
> **கள்ள அசுரன் வருவானைத் தான்கண்டு**
> **புள்இது என்று பொதுக்கோ வாய்கீண்டிட்ட**
> **பிள்ளை"[28]**

[பள்ளத்தில் மேயும் பறவை-கொக்கு; பொதுக்கோ-பொதுக்கென]

என்று பெரியாழ்வார் ஆழங்கால்படுவதையும் எண்ணி மகிழ்கின்றோம்.

**சகடாசுரன் வரலாறு :** ஒரு சமயம் யசோதைப் பிராட்டி குழந்தை கிருஷ்ணனை ஒரு வண்டியின் அடியில்

25. பெரி. திரு. 7 . 1 : 4
26. திருப். 13
27. திருவாய். 6. 4 : 6
28. பெரியாழ். திரு. 2. 5:4

விட்டு யமுனை நதிக்கு நீர் கொண்டுவரச் சென்றாள் கம்சனால் ஏவப்பெற்ற ஓர் அசுரன் சமயம் பார்த்திருந்து வண்டிச் சக்கரத்தின்மீது ஆவேசித்திருந்து வண்டியை உருண்டோடச் செய்து கண்ணனைக் கொல்லத் திட்டம் போட்டிருந்தான். கண்ணன் இதனை யறிந்து பாலுக்கு அழுவதுபோல் பாவனை செய்து காலைத் தூக்கிச் சக்கரத்தை உதைத்து வண்டியைச் சிதைந்தோடச் செய்தான். வண்டி சிதையும்போது அதில் ஆவேசித்திருந்த அசுரனும்—சகடாசுரனும்—மாண்டொழிந்தான். இந்தச் செயலை நினைந்து ஆழ்வார் பெருமக்கள் தம் பாசுரங்களில் கண்ணனை அநுபவித்துள்ளனர். பொய்கையாழ்வார் இத்திருவடியை ''சகடுதைத்த ஒண்மலர்ச் சேவடி''[29] என்று போற்றி மகிழ்கின்றார். திருமங்கையாழ்வார் இந்நிகழ்ச்சியுடன் வேறு சில நிகழ்ச்சிகளையும் சேர்த்து அநுபவிக்கின்றார்.

**''இருங்கைமா கரிமுனிந்து பரியைக் கீறி**
**இனவிடைகள் ஏழ்அடர்த்து மருதம் சாய்த்து**
**வருசகடம் இறஉதைத்து மல்லை அட்டு**
**வஞ்சகம்செய் கஞ்சனுக்கு நஞ்சு ஆனானை''[30]**

[இருண்ட-நீண்ட; கரி-யானை (குவலயா பீடம்); பரி-குதிரை (கேசி); சகடம்-வண்டி; மல்-மற்போர் வீரர்கள் (சாணூரன், முஷ்டிகன்)]

இதில் சகடாசுரனைக் கொன்ற நிகழ்ச்சியுடன் குவலயா பீடம் என்ற யானையைக் கொன்றது, குதிரை வடிவாக வந்த கேசி என்ற அசுரனை வதைத்தது, நப்பின்னைக்காக ஏழு ஏறுகளின் வலிவை அடக்கியது, இரட்டை மருத மரங்களை வீழ்த்தி நளகூபர மணிக்ரீவர்களின் சாபந் தீர்த்தது, சாணூரன், முஷ்டிகன் என்ற மல்லர்களைக்

29. முதல் திருவந். 100
30. பெரி. திரு. 2.10;7

கொன்றது ஆகிய வேறு ஐந்து சிறு சேவகங்களையும் சேர்த்து அநுபவித்து மகிழ்வதைக் காணலாம். கண்ணனின் ஆயர்பாடி நிகழ்ச்சிகள் எண்ணற்றவை. ஆழ்வார் பெருமக்கள் அனைவருமே இந்நிகழ்ச்சிகளில் ஆழங்கால் பட்டு அநுபவிக்கின்றனர். ஆயர்பாடியில் இருக்கும்போது நாமும் இந்த நிகழ்ச்சிகளை அநுபவித்து மயிர்சிலிர்க்கின்றோம்.

இந்த நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நினைவுக்கு வர, அதில் ஆழங்கால்படுகின்றோம்.

**"கலந்தமர ரோடும் கரைகண்டா ரோடும்**
**பொலிந்துதிரு நாட்டிருக்கப் போவீர்—மலிந்தபுகழ்**
**அண்டர்ஆய்ப்பாடி அமலர் அடியார் அடியார்**
**தொண்டராய்ப் பாடித் தொழும்."**[31]

[அமரர்-நித்திய சூரிகள்; கரைகண்டார்-முத்தர்கள்; பொலிந்து-சிறப்புற்று;குலுந்து திருநாடு-பரமபதம்; மலிந்த-நிறைந்த; அண்டர்-இடையர்; அமலர்-கண்ணபிரான்; அடியார்-பாகவதர்கள்; தொண்டராய்-அடிமைப்பட்டவராய்; தொழும்-வணங்குவீர்]

என்பது பாசுரம். கண்ணனாகத் திருவவதரித்து விளையாடின இடமாகிய திருவாய்ப்பாடியிலுள்ள அடியாரின் அடியார்க்கு அடியவராகி அவர்தம் திருக்குணங்களைப் பாடித் துதித்தால் அதன் பயனாக நித்தியருடனும், முத்தருடனும் ஒருசேரக் கலந்து பேரானந்தம் அநுபவிப்பதற்கு வாய்ப்பு உண்டாகும் என்ற அய்யங்காரின் உபதேசத்தில் மனம் அழுந்திய நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்-

31. நூற். திருப். அந்—106

# 13. பாற்கடல் கிடக்கும் பதுமநாபன்

''பாலாழி நீகிடக்கும்
பண்பையாம் கேட்டேயும்
காலாழும் நெஞ்சழியும்
கண்சுழலும்—நீலாழிச்
சோதியாய்! ஆதியாய்!
தொல்வினைஎம் பால்கடியும்
நீதியாய்! நிற்சார்ந்து
நின்று.''![1]

[பால்ஆழி-திருப்பாற்கடல்; ஆழும்-தடுமாறும்; நீல் ஆழி-நீலக்கடல்; சோதி-நிறம்; சார்ந்து நின்று-அணுகி]

என்று திருப்பாற் கடலில் பள்ளி கொண்டிருக்கும் எம் பெருமானை அநுபவிக்கின்றார் நம்மாழ்வார். ''நின்னை அடியேன் நேரில் கண்டதில்லை. நீ திருப்பாற்கடலில் கிடந்திருக்கும் திருக்கோலத்தைச் சாத்திரம் அறிந்த பெரியோர்களின் வாயிலாகக் கேட்ட அளவிலேயே 'இப் படியும் ஓர் அழகு உண்டோ!' என்று ஈடுபட்டுக் கால், நடை தாராமல் ஆழ்ந்து போகின்றன; நெஞ்சு நீர்ப்பண் டமாகக் கரைந்து அழிந்து போகின்றது; கண்கள் ஒரு பொருளையும் பார்த்து அறிய முடியாதபடி சுழலத் தொடங்குகின்றன'' என்று கூறுகின்றார். இந்தப்

1. பெரி திருவந்—34

பாசுரத்தால் எம்பெருமான் சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார் என்பது தெரிகின்றது. எம்பெருமானின் திருநாமம் க்ஷீராப்திநாதன் (திருப்பாற்கடல் நாதன்). தெற்கு நோக்கிய திருமுகமண்டலங் கொண்டு புயங்க சயனத்தில் (பாம்பணை மேலான்) காட்சி தருகின்றார். தாயார், கடல் மகள் நாச்சியார். இந்த எம்பெருமானை மானசீகமாகத்தான் சேவிக்கவேண்டும்.

திருப்பாற்கடல் நாதனைப்பற்றிச் சாத்திரம் என்ன கூறுகின்றது? இவன் வியூக நிலை[2] எம்பெருமான். வியூகமாவது, லீலாவிபூதியில் (இவ்வுலகில்) அதன் படைப்பு, அளிப்பு, அழிப்பு இவற்றை நடத்துவதற்காகவும், சமுசாரிகட்கு வேண்டியவற்றை ஈந்து, வேண்டாதவற்றைப் போக்கி அவர்களைக் காத்தற் பொருட்டும், தன்னை இடையறாது நினைப்பவர்க்கு (உபாசிப்பவர்கட்கு) அவர் தம் தளைகளைப் போக்கித் தன்னை வந்து அடைவதற்குக் காரணமான பேரருளைச் சுரப்பதற்காகவும் வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன் என்ற பெயர்களுடன் இருக்கும் நிலையாகும். இவற்றுள் வாசுதேவ ரூபமான பரத்துவத்தில் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்ற ஆறு குணங்களும் நிறைந்திருக்கும். ஏனைய மூன்றில் அவரவர் மேற்கொண்ட செயலுக்குத் தக்கவாறு ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு குணங்கள் விளக்கமாக இருக்கும். சங்கர்ஷணரானவர் ஞானம், பலம் என்ற இரண்டு குணங்களையுடையவர்; இவர் பிரகிருதிக்குள் உருமாய்ந்து கிடக்கும் உயிர்த் தத்துவத்திற்குத் தலைவராக நின்று அதனைப் பிரகிருதியினின்றும் வேறாக்கிப் பிரத்யும்ன நிலையையும் அடைந்து வேதம் முதலிய சாத்திரங்களை வெளியிடுவதையும் உலக

2. இறைவன் இருக்கும் இருப்பைப் பரந்துவம், வியூகம், விபவம். அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்று ஐந்து வகையோடு இருப்பதாக வைணவ நூல்கள் பேசும்.

அழிப்பையும் செய்பவராக இருப்பார். பிரத்தியும் நரானவர் ஐசுவரியம், வீரியம் என்ற குணங்களோடு கூடி ஞானத்திற்கு ஊற்றுவாயான மனம் என்ற தத்துவத் திற்குத் தலைவராக நின்று சாத்திர முறைப்படி ஒழுக வேண்டிய தர்மோபதேசத்தையும் சுத்த வர்க்க சிருஷ்டி யையும் செய்ய வேண்டியவராக இருப்பார். அநிருத்தரானவர் சக்தி, தேஜஸ் என்ற இருகுணங் களோடும் கூடி உலகப் பாதுகாப்பிற்கும் உயிர்கள் ஈடே றுவதற்குத் தகுதியான தத்துவ ஞானங்களைக் கொடுத் தற்கும், காலப் படைப்பிற்கும் , மிச்ரவர்க்க சிருஷ்டிக்கும் உரியவராக இருப்பார்.

இந்த நான்கு வியூகங்களும் ஒவ்வொன்றும் மும்மூன் றாகப் பன்னிரண்டு கிளை வியூகங்களாகப் பிரியும், வாசு தேவர் கேசவன், நாராயணன், மாதவன் என்று மூன்றாக வும்; சங்கர்ஷணர் கோவிந்தன், விஷ்ணு. மதுசூதன ராகவும்; பிரத்யும்னர் திரிவிக்கிரமன், வாமனன், சீதர னாகவும்; அநிருத்தர், இருடிகேசன், பத்மநாபன், தாமோ தரனாகவும் பிரிவர். இவர்கள் பன்னிரண்டு ஆதித் தர்களாக நின்று பன்னிரண்டு திங்கள்களின் தலைவர் களாகப் பன்னிரண்டு திசைகளில் வீற்றிருப்பர். இவர் களின் அறிகுறியாகத்தான் வைணவர்கள் தமது திருமேனி யில் திருமண் காப்பினை (புண்டரத்தை) இட்டுக்கொள் வர். இவர்கள் மரணமாகும் வரையிலும் திருமேனியைக் காப்பர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. திருவாய் மொழியிலுள்ள பன்னிரு திருநாமப் பாட்டும்[3], தேசிகப் பிரபந்தத்திலுள்ள 'பன்னிரு நாமம்''[4] என்ற சிறு பிரபந்த மும் இந்தப் பன்னிரு எம்பெருமான்களைப் பற்றியவை. திருமண் தரித்துக் கொள்ளும்போது இந்தப் பாசுரங் களை அநுசந்திப்பது வழக்கம். இதனால் இறைவன்

3. திருவாய் 2. 7
4. தேசிகப் பிரபந்தம்—'பன்னிரு நாமம்' (206-292)

திருவடிப்பேறு கிட்டும் என்பது வைணவர்களின் நம்பிக்கை.

திருப்பாற்கடல் என்ற திருத்தலம் வடதுருவத்திற்கும் அப்பால் உள்ளதாகச் சொல்லப் பெறுகின்றது. மனிதர் கட்கு எட்டாத இடம் இது; வட கடலைச் சேவித்தே மன நிறைவு பெற வேண்டியதுதான். சூக்கும உடலைக் கொண்டவர்கள்தாம் இந்த இடத்திற்குச் சென்று அடைதல் முடியும்; தேவர்கள், பண்டைய முனிவர்கள், யோகியர் இவர்களைப் போன்ற பிறர் இந்த இடத் திற்குச் செல்லுதல் கூடும். நான்முகன், தேவர்கள் இவர் களின் குறைகளைக் கேட்டு அவற்றைத் தீர்ப்பதற்காகவே பரமபதநாதன் வியூக நிலையில் இங்கு எழுந்தருளி யுள்ளான். அடியார்கள் பொருட்டு அவதாரங்கள் எடுக் கும் இடமும் இதுதான். இந்தப் பாற்கடலைக் கடைந்து தான் அமுதம் பெற்றுத் தேவர்கட்கு வழங்கினான் எம் பெருமான்; பெரிய பிராட்டியார் பிறந்த இடம் இது தான்; அவரை இறைவன் ஏற்றான்.

பாலோடை (Milky way) என வழங்கப்பெறும் விண்மீன்களின் கூட்டத்தைத்தான் பண்டையோர் பாற் கடல் என வழங்கியதாகவும் சொல்லப்பெறுகின்றது. இப் பாற்கடலின் தனிச் சிறப்பு இன்றும் அறிவியலறிஞர் களிடையே ஒரு புதிராகவே உள்ளது. பேரண்டத்தில் வேறெங்கும் நடைபெறாத ஒரு திருக்கூத்து இங்கு நடை பெற்று வருவதாகக் கருதுகின்றனர் அவர்கள். மற்ற இடங்களிலெல்லாம் ஒரு பொருள் உருமாறி வேறொரு பொருளாகுமேயொழிய சூனியத்திலிருந்து ஒரு பொருள் உண்டாவதில்லை. ஆனால், பாலோடை மாத்திரம் இதற்கு விதிவிலக்காகும் என்பதை அறிவியலறிஞர்களின் கருத்தாகும். வெறும் பாழிலிருந்து அதாவது இன்மை யினின்று நீரிய அணுக்கள் (Hydrogen atoms) பாலோ டையில் எட்படியோ படைக்கப் பெறுகின்றன. இது விளங்

காப்புதிராக இருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர். இந்த இடத்திலேயே பதுமநாபனின் கொப்பூழில் நான்முகன்தோன்றி உலகினையும் பிறவற்றையும் படைத்தான்.

இந்தத் திருப்பாற்கடல் எம்பெருமானை முதலாழ்வார்கள் மூவரும், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார் பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய ஒன்பதின்மர் மங்களாசாசனஞ் செய்துள்ளனர். "வரை மேல் மரகதமே போலத் திரை மேல் கிடந்தான்"[5] என்று பொய்கையாழ்வாரும், "பாற்கடலான்"[6] "மாகடலான்"[7] என்று பூதத்தாழ்வாரும், "பாற்கடல் உளான்"[8] என்று பேயாழ்வாரும் இந்த எம்பெருமானைக் குறிப்பிடுகின்றனர். பெரியாழ்வார்,

**"அரவத்து அமளியி னோடும்**
**அழகிய பாற்கட லோடும்**
**அரவிந்தப் பாவையும் தானும்**
**அகம்படி வந்து புகுந்து"[9]**

*[அரவம்-படுக்கை; அமளி-படுக்கை; அரவிந்தப் பாவை-தாமரை மலரில் வாழும் பிராட்டியார்; அகம்படி-உடம்பு]*

என்றும்,

**பனிக்கடலிற் பள்ளிக்கோளை**
**பழகவிட் டோடிவந்துஎன்**
**மனக்கடலில் வாழவல்ல**
**மாயமணாள நம்பீ.[10]**

*[பனி-குளிர்ந்த; கடல்-திருப்பாற்கடல்; பள்ளிகோளை-பள்ளி கொள்ளுதலை; பழகவிட்டு-பழகியதாகவிட்டு]*

5. முதல் திருவந்—25
6. இரண் திருவந்-3
7. ஷை—28
8. மூன் திருவந்-31
9. பெரியாழ். திரு. 5.2;10
10. ஷை 5. 4; 9

என்றும் குறிப்பிடுவர். இரண்டிலும் தன் வியூக நிலையை விட்டு அந்தர்யாமித்துவ நிலையை மேற்கொண்டதைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். இந்த ஆழ்வாரின் ஒரு மகளான திருமகளார்,

''பாற்கடலுள்
பையத் துயின்ற
பரமன் அடிபாடி'[11]

என்று பேசுவர். திருமங்கையாழ்வார் ''பாற்கடலாய்!''[12] ''கடல் கடந்த கனியே''[14], ''பாற்கடல் கிடந்தாய்'' என்றெல்லாம் கூப்பிட்டழைப்பர். மேலும், இந்த ஆழ்வார் இந்த எம்பெருமானை ''அரவு அணை வேலைக் கிடந்தாய்' [15] ''பாற்கடல் கிடந்த பரமனார்''[16], ''கடல் கிடந்த கருமணி''[17], 'அறிதுயில் அலைகடல் நடுவே, ஆயிரம் சுடர்வாய் அரவு-அணைத் துயின்றான்''[18], ''பரவை துயில் ஏறு''[19] ''வங்கம்மலி தடங்கலுள் அநந்தன் என்னும், வரி அரவின் அணைத் துயின்ற மாயோன்''[20] என்பன சொற்றொடர்களால் நமக்கு இனங்காட்டுவர்.

நம்மாழ்வார் திருப்பாற்கடல் நாதனைப் ''பாற்கடல் சேர்ந்த பரமன்''[21] ''அலை கடல் பள்ளி அம்மான்''[22] 'தொடுகடல் கிடந்த எம்கேசவன் [23] என்றெல்லாம் இனங்காட்டுவர். இன்னும் தெளிவாக இவர்,

''ஏகமூர்த்தி இருமூர்த்தி
மூன்றுமூர்த்தி பலமூர்த்தி
ஆகி''[24]

---

11. திருப்—5
12. திருநெடுந்-5
13. திருநெடுந்-15
14. பெரி. திரு. 1.6;6
15. ஷை 3.5:2
16. ஷை 4.10;4
17. ஷை 5.6:1
18. ஷை 5.7:6
19. ஷை 7.3:6
20. ஷை 7.8:1
21. திருவாய் 37.;1
22. ஷை 5.3:7
23. ஷை. 10.9;7
24. ஷை 4.3;3

என்று இந்த எம்பெருமானைக் காட்டுவர். ஏகமூர்த்தி என்பவர் பரவாசுதேவர்; இருமூர்த்தி என்பவர்கள் பரவாசுதேவர், வியூக வாசுதேவர்; மூன்றுமூர்த்தி சங்கர்ஷணர், பிரத்யுத்னர், அநிருத்தர்; பலமூர்த்தி "எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்"[25] என்றபடி பல அவதார மூர்த்திகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

இந்த ஆழ்வார் வியூகநிலை எம்பெருமானை மிக அழகான உவமையாலும் எடுத்துக் காட்டுவர்.

> **"மாநீர் வெள்ளி மலைதன் மேல்**
> **வண்கார் நீல முகில்போல**
> **தூநீர்க் கடலுள் துயில்வானே"[26]**

[மாநீர்-ஆழ்ந்த நீர்; வண்கார்-அழகிய கார்காலம்; முகில்-மேகம்: தூநீர்க்கடல்-வெளுத்த பாற்கடல்]

திருப்பாற் கடலில் திரு அனந்தாழ்வான் மீது எம்பெருமான் திருக்கண் வளர்வதானது ஆழ்ந்த நீர்க்குள்ளே அழுந்தினதொரு வெள்ளிமலையின்மீது காளமேகம் படிந்தாற்போன்றுள்ளது என்கின்றார்.

இங்ஙனம் இந்த எம்பெருமான்மீது ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யப்பெற்றுள்ள திருப்பாசுரங்களில் ஆழங்கால் பட்டு இந்த எம்பெருமான்களை அநுபவிக்கின்ற நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர, அதனையும் அநுசந்திக்கின்றோம்.

> **"தொழும்பாய நான்நல்ல**
> **சூதுஅறிந்து கொண்டேன்**
> **செழும்பாய அலைமுத்தம்**
> **சிந்தி—முழங்கும்**

25. திருவிருத்-1
26. திருவாய் 8. 5 : 4

திருப்பாற் கடலான்தாள்
சேர்ந்தார் அடிசேர்ந்து
இருப்பாற்கு அடலாம்
இடர்."[27]

[தொழும்பு-அடிமை; சூது-உளவு; செழும்பாய அலை-செழித்துப் பாய்கின்ற அலைகளில்; முழங்கும்-ஒலிக்கின்ற; தாள்-திருவடிகள்; சேர்ந்தார்-சேர்ந்த அடியவர்கள்; இடர்-பிறவித் துன்பங்கள்; அடல் ஆம்-ஒழித்தல் எளிதில் கூடும்]

இதில் "பாகவதர்களின் திருவடிகளை ஆச்சிரயித்தலே பிறவித் துன்பங்கள் யாவும் எளிதில் ஈரேறுதற்குரிய உபாயம் என்பதை யான் அறிந்து கொண்டு கடைப் பிடிக்கலானேன்" என்கின்றார். எளிய செயலால் பெரும் பேறு கிடைக்கக் கூடிய வழியாதலின் "நல்ல சூது" என்று குறிப்பிட்டார். நாம் இருந்த இடத்திலிருந்தே அநுபவிக்கக் கூடிய எம்பெருமானாதலின் பயணத்தால் ஏற்படும் சிரமம் ஏற்படவில்லை.

27. நூற். திருப். அந்—107

# 14. வைகுண்ட நாதன்

வைகுண்டத்தைத் திருநாடு என்றும், பரமபதம் என்றும், நலம் அந்தம் இல்லதோர் நாடு[1] என்றும், நித்திய விபூதி என்றும் வழங்குவர் வைணவப் பெருமக்கள். ஆழ்வார்கள் 'பெருநிலம்', 'பெருவிசும்பு' 'உம்பர் உலகு', 'விண்ணகம்' 'நாரணன் உலகு', 'இன்ப வீடு', 'அமரர் உலகம்', 'வானோர் கடிநகர்' என்றெல்லாம் பன்னி உரைப்பர். இந்த விளக்கம் வைணவ ஆகமங்களிலும் வேறு வைணவ நூல்களிலும் நுவலப் பெறும் நித்திய விபூதி பற்றிய விளக்கத்துடன் ஒத்துள்ளது[2]. இந்த உலகின் ஆநந்தம் அளவிறந்து ஒப்பற்றதாக இருக்கும் பான்மையது. இங்குத் திவ்விய கற்பகச் சோலைகள், நானாவித மலர்கள் நிறைந்த திவ்விய பூங்காக்கள், திவ்விய இள மரக்காக்கள், திவ்விய செய்குன்றங்கள், நீராடும் திவ்விய தடாகங்கள் முதலியவை நிறைந்து இருக்கும். இங்கு மிகவும் இடமகன்ற நிரதிசய ஆனந்தமயமான திருமாமணி மண்டபம் ஒன்றுண்டு. உபய விபூதியிலுள்ளவர்களும் ஒரு மூலையில் அடங்கும்படியான மிக விசாலமானது. இங்குள்ள பொருள்கள் யாவும் சுத்த சத்துவத்தாலானவை. இங்குக் காலம் நடையாடாது; காலை-மாலை, பகல்-இரவு, இன்று-நேற்று என்ற நிலைகள்

---

1. திருவாய் 2. 8 : 4
2. Subbu Reddiar, N : Religion and Philosophy of Nalayiram—p. 585.

இங்கு இல்லை; முன்-பின் என்ற நிலைதான் உண்டு. வீடுபேறு அடைவதற்கேற்ற உபாயங்களைக் கையாண்டு அவன் திருவருளைப் பெற்ற முமுட்சுகள்தாம் இந்த நீள் விசும்பினை அடைதல் முடியும். இவர்கள் இப்பூவுல கிற்குத் திரும்பி வருதல் இல்லை. பிரளய காலத்தில் இவர்கட்கு அழிவு இல்லை. இறைவன் திருவுளப்படி எந்த உருவத்தையும் இவர்கள் மேற்கொள்வர்.

பரமபத நாதன் வீற்றிருக்கும் இடம் இந்த மண்டபத் தில்தான். இவன் வீற்றிருக்கும் சீரிய சிங்காசனம் அற்புதமான கோப்புடையது; பன்னிரண்டு இதழ்களை யுடைய நானா சக்திமயமான திவ்விய பொற்றாமரைப் பூவின்மீது விசித்திரமான கட்டிலைக் கொண்டது. இந்தக் கட்டிலின்மீது பல்லாயிரம் சந்திரர்களை உருக்கி வார்த்தாற்போல் குளிர்ந்த தன்மையையுடைத் தான திருமேனியையுடையனாய கல்யாண குணங்கட்கு அந்தமில்லாமையினால் அநந்தன் என்ற திருநாம முடையவனாய், எல்லாவித அடிமைத் தொழில் புரிபவர்கட்கெல்லாம் உபமான நிலமாயிருத்தலால் சேஷன் என்னும் திருநாமமுடையவனாகிய திரு அனந் தாழ்வானாகிய படுக்கையில் வெள்ளிமலையின் உச்சியில் பல்லாயிரம் பகலவன் உதித்தாற்போல் இருக்கும் ஆயிரம் பணாமுடி மண்டலமாகிய சோதிமண்டலத்தின் நடுவில் வீற்றிருப்பன். அருள்தேவியான பெரிய பிராட்டியார் வலப் பக்கத்திலும், பொறைத் தேவியான பூமிப் பிராட்டியாரும் ஆநந்த தேவியான நீளாப் பிராட்டி யாரும் இடப்பக்கத்திலும் இருப்பர். இவனை அனந்தன், கருடன், விஷ்வக்சேனர் முதலான நித்திய சூரிகளும், இவ்வுலகத் தளைகளினின்றும் விடுபட்ட முக்தரும் அநுபவித்தற்கு உரியனாய் இருப்பன்.

இந்த எம்பெருமான் சத்தியம், ஞானம், ஆனந்தம், ஆனந்தம் இவற்றின் சொரூபமாக இருப்பவன். இடத்

தாலும் காலத்தாலும் அளவிடப் பெறாதவன்; எங்கும் நிறைந்திருப்பவன். மூன்றுவித சேதந அசேதந பரிணாமரூபமான வேறுபாட்டின் குறைகள் (விகார தோஷங்கள்) தட்டாதவன். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு வகைப்பட்ட பலன்களையும் உயிர்கட்கு நல்கி அவற்றின் புகலிடமாக இருப்பவன். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் முதலிய மங்கள குணக் கூட்டங்களால் அலங்கரிக்கப் பெற்றவன். அவனிடம் இக் குணங்கள் ஆதல் அழிதலின்றி எப்பொழுதும் நிறைந் திருக்கும். இவற்றைத் தவிர, வாத்சல்யம், சௌசீல்யம் சௌலப்பியம் முதலிய எண்ணற்ற குணங்களையும் கொண்டவன். இவ்வுலகினைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றின் காரண பூதன். சிறார் வீடுகட்டி அழிக்குமாப் போலே இவை யாவும் இவனுக்குத் தன் இச்சையாலே உண்டாகும் கேவல விளையாட்டேயாகும்.

இறைவனுக்கு உருவம் உண்டு. அது திவ்விய மங்கள விக்கிரகம் எனப்படும்.

> **''கண்கள் சிவந்து பெரியவாய்,**
> **வாயும் சிவந்து கனிந்துள்ளே**
> **வெண்பல் இலகுசுடர், இலகு**
> **விலகு மகர குண்டலத்தன்,**
> **கொண்டல் வண்ணன், சுடர்முடியன்,**
> **நான்கு தோளன், குனிசார்ங்கன்**
> **ஒண்சங்கு கதைவாள் ஆழியான்**
> **ஒருவன்''[3]**

[கனிந்து - பழுத்து; உள்ளே - அகவாயிலே; இலகு - விளங்குகிற; இலகு விலகு - மிக விளங்கி அசைகின்ற; கொண்டல் - மேகம்; குனி வளைந்த; ஒண் சங்கு - அழகிய சங்கு; ஆழி - சக்கரம்]

3. திருவாய். 8. 8 : 1

என்ற பாசுரப் பகுதியில் இறைவனின் திருமேனி காட்டப் பெறுகின்றதை அறியலாம். வேதாந்த தேசிகரின் 'தயா சதகத்தில்' இந்த எம்பெருமானின் திருக்கோலம் நன்கு காட்டப் பெறுகின்றது. இடக்கால் தொங்கிய நிலையிலும், வலக்கால் மடிந்த நிலையிலும் இருக்கும். வலக்கை வலது முழங்காலிலும், இடக்கை அனந்தாழ்வான் உடலில் தாங்கிய படியும் இருக்கும். பின்புறத்திலுள்ள இரண்டு கைகளில் திருவாழியும் திருச்சங்கும் பொலிவு பெறும்.

வைகுண்ட நாதனைப் பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்ற ஆறு ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். பருவுடலுடன் பரம பதத்தை அடைய முடியாததால், இந்த எம்பெருமானை மானசீகமாகத்தான் சேவிக்க வேண்டும். இவன் தெற்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். தாயார், பெரிய பிராட்டியார், "விண்ணகத்தாய்!"[4] என்று பொய்கையாழ்வாரும், "வைகுந்தம் உறைவார்"[5] என்று பேயாழ்வாரும், "வான் இருந்து...... ஆதிதேவன்"[6] என்று திருமழிசையாரும், "வைகுந்தக் குட்டன் வாசுதேவன்"[7] என்று பெரியாழ்வாரும் இவனைக் குறிப்பிடுவர். நம்மாழ்வார் "அவன் மேவும் வைகுந்தம்"[8] என்றும், "வானத்து இருக்கும் தேவபிரான்"[9] என்றும், "விண்மீது இருப்பாய்"[10] என்றும் இந்த எம்பெருமானை இனங்காட்டுவர்

நம்மாழ்வார் ஒரு திருவாய் மொழிப் பாசுரத்தில் வைகுண்ட நாதனை அநுசந்திக்கின்றார்.

---

4. முதல் திருவந்—68
5. மூன் திருவந்—61
6. திருச்சந் விருத்—18
7. பெரியாழ். திரு. 3. 6 : 3
8. திருவாய். 4. 1 : 1
9. டி 5. 3 ; 9
10. டி 6. 9 : 4

**''தானோர் உருவே தனிவித்தாய்**
**தன்னின் மூவர் முதலாய**
**வானோர் பலரும் முனிவரும்**
**மற்றும் மற்றும் முற்றுமாய்த்**
**தானோர் பெருநீர் தன்னுள்ளே**
**தோற்றி அதனுள் கண்வளரும்**
**வானோர் பெருமான் மாமாயன்**
**வைகுந் தன்எம் பெருமானே.''[11]**

[தான் - ஒருவனாகி நின்ற தான்; ஓர் உரு - ஓர் உருவமுடையவன்; தனி - தனித்த காரணன்; வித்து - உபாதான காரணம்; மூவர் - பிரமன், சிவன், இந்திரன்; பலர் - சேதநர்; மற்றும் - மானிடசாதி; மற்றும் - விலங்கு, பறவை; முற்றும்-எல்லாம்; தான்-சங்கல்ப்பத்துடன் கூடிய தான்; வானோர்-நித்திய சூரிகள்; மாமாயன்-ஆச்சரியமான செயல்களையும் குணங்களையுமுடையவன்; வைகுந்தன்-பரமபதநாதன்.]

பாசுரத்தில் ஆழங்கால்படுவோம். 'தானோர் பெருநீர்... வானோர் பெருமான்' என்பதில் சமஷ்டி சிருஷ்டியும் (தொகுதியான படைப்பும்), 'தானோர் உருவே...முற்று மாய்' என்பதில் வியஷ்டி சிருஷ்டியும் (வேறு வேறு படைப்புகள்) சொல்லப்பெறுகின்றன. சாந்தோக்கிய உபநிடத வாக்கியத்தில் (6.2:1) 'சதேவ', 'ஏகமேவ', 'அத்விதீயம்' என்ற மூன்று சொற்றொடர்கள் உள்ளன. இவை முறையே துணைக் காரணம், முதற் காரணம், நிமித்த காரணம் தவிர வேறு இன்மையைக் காட்டு கின்றன. இந்த மூவகைக் காரணங்களும் எம்பெருமானே என்று கொள்ளவேண்டும். அதுபோலவே, இப்பாசுரத்தில் 'தான், ஓர், தனி' என் மூன்று சொற்கள் (முதல் அடியில்) உள்ளன. இவற்றுள் 'தான்' என்பதனால் முதற்காரணம்

11. திரு 1.5:4

இன்மையும், 'ஓர்' என்பதனால் துணைக் காரணம் இன்மையும், 'தனி' என்பதனால் நிமித்தகாரணம் இன்மையும் பெறப்படுகின்றன. மூன்று காரணமும் இறைவனே என்பது அறுதியிடப் பெறுகின்றது. இதனை மேலும் விளக்குவோம். சூக்கும சித்து அசித்தோடு கூடியிருக்கின்ற தன்மையால் முதற்காரணமும், சங்கல்பத்தோடு கூடியிருக்கின்ற தன்மையால் நிமித்த காரணமும், ஞானம் சக்தி முதலிய குணங்களோடு கூடியிருக்கின்ற தன்மையால் துணைக்காரணமும் ஆக மூன்று காரணங்களும் இறைவனே ஆவான் என்பது தெளிவாகின்றது. கம்பநாடனும் இக்கருத்தினையே,

> ''உற்றொரு தனியே தானே
> தன்கணே உலகம் எல்லாம்
> பெற்றவன்''[12]

என்ற பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளது ஈண்டு ஒப்பு நோக்கி உணரத் தக்கது. ''தானே தன்னந் தனியே சங்கற்பித்துத் தன்னுள்ளே உலகங்களையெல்லாம் தந்தவனான பரம்பொருள்'' என்பது இதன் கருத்து. ஏழு நாட்கள் தவமியற்றியும் வருணன் வாராதது கண்டு இராமன் சினங்கொள்ளலானான் என்று குறிப்பிடுமிடத்தில் இக்குறிப்பு வருகின்றது. இக்கருத்தையே வேறொரு முறையில் விளக்குவர் திருமழிசையாழ்வார்.

> ''தன்னுள்ளே திரைத்துஎழும்
> தரங்கவெண் தடங்கடல்
> தன்னுள்ளே திரைத்துஎழுந்து
> அடங்குகின்ற தன்மைபோல்
> நின்னுளே பிறந்துஇறந்து
> நிற்பவும் திரிபவும்
> நின்னுளே அடங்குகின்ற
> நீர்மைநின்கண் நின்றதே''[13]

12. கம்ப. யுத். வருணனை—63 13. திருச்சந்.விருத்—10

[திரைத்து-கிளர்ந்து; தரங்கம்-அலை; அடங்குதல்-சாந்தமாதல்; நிற்பவும்-நிலைத்திணைப் பொருள்களும்; திரிபவும்-இயங்குதிணைப் பொருள்களும்; நின்னுளே-உன் சொரூபத்திற்குள்ளே; நீர்மை-தன்மை; நின்கண்ணே-உன் பக்கலில்; நின்றது-உள்ளது.]

அலை எறிவு ஒய்ந்து கிடந்த கடல் காற்று வீசுதால் எங்கும் அலையெறியப்பெற்று, மீண்டும் காற்று ஒய்ந்ததும் அவ்வலையெறிவு அடங்கிக் கடல் சாந்தமாவது போல, பகவத் சங்கல்ப்பம் உண்டாகும்போது நிலைத்திணைப் பொருள்களும் இயங்குதிணைப் பொருள்களும் உள்ள பிரபஞ்சங்கள் தோன்றுதலும், அஃது இல்லாத பொழுது அவை அழிதலுமான நிலைகளையடைந்து இறுதியாக எம்பெருமானிடமே சேர்கின்றன என்பது ஆழ்வார் தெரிவிக்கும் கருத்தாகும்.

மீண்டும் நம்மாழ்வார் பாசுரத்திற்கு வருவோம். ''தன்னில் மூவர்...முற்றுமாய்'' தன்னுடைய சங்கல்ப்பமாகிற சொரூபத்திலே மூவராக நின்றவர்கள் பிரமன், சிவன், இந்திரன். இவர்களுடன் தேவர்கள், சனகாதி முனிவர்கள், நிலைத்திணைப் பொருள்கள், இயங்குதிணைப் பொருள்கள், இன்னமும் சொல்லப் பெறாதவைகள் ஆகியவற்றை உண்டாக்குகைக்காக, 'மூவர் முதலாய வானோர்பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றும் தன்னில் ஆய்' என்று கொண்டு கூட்டி பிரமன், சிவன், இந்திரன் முதலான தேவர்கள் முதலான எல்லாமும் தானேயாகி என்றும் உரைக்கலாம். கப்பும் கிளையுமான மரம் ஒரு சிறிய விதையினுள் சூக்குமமாக உள்ளது என்ற கொள்கைப்படி காரிய நிலையில் பருஉருவ நிலையில் தெரிகின்ற எல்லாப் பொருள்களும் காரண நிலையில் சூக்கும உருவமாக உள்ளனவாதலின், இங்ஙனம் சொல்லுவதில் தவறு இல்லை. இதனால் முன் இரண்டு அடிகளிலும் எம்பெருமானுடைய காரண நிலை கூறப்பெற்றதாகக் கொள்ள வேண்டும்.

"தானோர் பெருநீர்.........கண் வளரும்" இப்படிப் படைப்பதில் ஒருப்பட்ட தான் தனக்கும் கண் வளர்ந்தரு ளுகைக்குத் தகுதியாகப் பரப்பையுடைத்தான ஒரு பெருங் கடலைத் தன் பக்கல் நின்றும் உண்டாக்கி அதனுட் கண் வளரும். இப்படிப் பெருங்கடலில் சாய்ந்தருளுகின்றவன் தான் யார்? என்னில்: "இவன் நித்திய சூரிகட்குத் தலைவன். ஆச்சரியமான குணங்களையும் செயல் களையும் உடையவன். திருநாட்டைக் கொலுவீற் றிருக்கும் இடமாக உடையவன். அவன் என் தலைவன்" என்கின்றார்.

இங்ஙனம் வைகுந்த நாதனைப்பற்றிய திருப் பாசுரத்தில் ஈடுபட்டிருக்கும் நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

**"இடருடையேன் சொல்ல**
**எளிதோ பிரமன்**
**அடரும் விடையோற்கும்**
**அரிதே—தொடரும்**
**கருவைகும் தம்பிறவிக்**
**கட்டறுத்து மீளாத்**
**திருவைகுந் தம்பெறுவார்**
**சீர்"[14]**

[இடர்-துன்பம்; பிரமன்-நான்முகன்; அடரும்-போர் செய்யும்; விடையோன்-எருதை வாகனமாக உடைய சிவன்; தொடரும்-தொடர்ந்து வரும்; கருவைகும்-கருவில் நுழைவதற்குக் காரணமான; தம் பிறவி கட்டு-தமது பிறவித் தளை; அறுத்து-ஒழித்து; மீளா-திரும்பிவருதலில்லாத; பெறுவோர்-அடையப் பெறுபவர்களின்; சீர்-சிறப்பு]

'திருமாலோடும் சேர்த்து எண்ணப்படும் நான்முகன், சிவன் ஆகிய இருவராலும் வைகுந்த உலகினை அடைந்த முக்தர்களின் பெருமையைச் சொல்ல முடியாதென்றால் சமுசாரத்தில் உழலும் அறிவுக் கேடனான என்னால் எவ்வாறு சொல்ல முடியும்?" என்கின்றார் திவ்வியகவி.

14. நூற்.திருப்.அந்—108

## பின்னிணைப்பு—1

## ஆழ்வார்கள் மங்களா சாசனப் பாசுரங்கள்

| தலம் | பாசுரங்கள் | பக்கம் |
|---|---|---|
| *1.* வேங்கடம் | : முதல்.திருவக்.26,37,38, 39,40,68,76,77,82,99 (10) இரண். திருவந். 25,28,33,45 46, 53, 54, 72, 75 (8) மூன். திருவந். 14,26,30, 32, 39, 40, 45, 58, 61, 62, 63, 68, 69, 70, 71, 72, 73, 75, 89 (19) நான். திருவந். 34, 39-48 90 (12) திருச்சந். 48, 60, 81 (3) பெரி. திருவந் 68 (1) திருவிருத். 8, 10, 15, 31, 60, 67, 81, (7) திருவாய். 1.8:3; 2.6:9.10; 2.7:11; 3.3 (11); 3.5:8; 3.9:1; 4.5:11; 6.6:11; 6.9:5; 6.10 (11); 8.2:1; 9.3:8: 10.5:6; 10.7,8 (35) பெரு. திரு. 4 (11) பெரியாழ். திரு. 1.5:3; 1.9:8; 2.6:9; 2.7:3; 2.9:6; 3.3:4; 5.4:1 (7) நாச். திரு. 1:1; 1:3; 4.2; 5:2: 8(10), 11:5; 10.8 (16) | 1 |

| | | | |
|---|---|---|---|
| | | பெரி. திரு. 1.8(10); 1.9 (10); 2.1(10); 3.5:9; 4.3:8; 4.7:5; 5.3:4; 5.5:1; 5.6:7; 6.8:1: 7.1:3; 7.3:5; 7.10:3; 8.2:3; 9.7:4; 9.9:9; 10.1:2: 10.9:2: 10.10:5; 11.3:7; 11.5:10 (58) திருக்குறுந் 7; திருநெடுந் 16; சிறி. திரு. 39: பெரி. திரு. 62 (4) | |
| 2. | சிங்கவேழ்குன்றம்: | பெரி. திரு. 1.7 (10) | 22 |
| 3. | அயோத்தி | பெரு. திரு. 8:6,7; 10:1, 8(4) பெரியாழ். திரு. 3.9:6, 8, 10; 3.10: 4, 8; 4.7:9 (6) பெரி. திரு. 10.3:8 (1) | 37 |
| 4. | நைமிசாரணியம்: | பெரி. திரு. 1.6 (10) | 46 |
| 5. | சாளக்கிராமம் : | பெரியாழ். திரு. 2.9,5; 4.7:9 (2) பெரி. திரு. 1.5 (10) | 55 |
| 6. | பதரியாச்சிரமம்: | பெரியாழ். திரு. 4.7:9 (1) பெரி. திரு.1.3(10); 1.4(10) சிறி. திரு. 39 (1) | 66 |
| 7. | கண்டம் கடிநகர்: | பெரியாழ். திரு. 4.7(11) | 79 |
| 8. | திருப்பிரிதி : | பெரி. திரு. 1.2 (10) | 89 |

9. வடமதுரை : திருவாய். 7.10:1; 8.5:6; 97
9.1:3 to 11
பெரியாழ். திரு. 3.6:3;
4.7:3; 4.10:8
திருப். 5
நாச். திரு. 4:5,6; 6:5;
7:3; 12:1
பெரி. திரு. 6.7:5; 6.8:10;
9.9:6
சிறிய திருமடல். 39.

10. துவாரகை : நான். திருவந். 71 138
திருவாய். 5.3:6
பெரியாழ். திரு. 4.1:6;
4.7:8; 4.9:4; 5.4:10
நாச். திரு. 4:8; 9:5; 12:9

11. திருவாய்ப்பாடி : பெரியாழ். திரு. 2.2:5;
2.3:7; 3.4:10
நாச். திரு. 12:2: 13:10
பெரி. திரு. 1.8:4; 5.5:5;
5.9:8

12. திருப்பாற்கடல் : முதல். திருவந். 25
இரண். திருவந். 3, 28
மூன். திருவந். 11, 31,
32, 61
நான். திருவந். 3, 36
திருச்சந்த. 17, 18, 23,
28, 29, 48, 81, 92,
95, 110
திருவிருத். 79
பெரி. திருவந். 34, 77
திருவாய். 2.5:3: 2.6:5

3.6:3: 3.7:1; 4.3:3;
5.3:7; 6.9;5; 8.1:8;
8.2:8; 8.5:4; 8.7:10;
10.7:8: 10.9:7
பெரு. திரு. 2:8:
பெரியாழ். திரு. 4.10:5;
5.1:7; 5.2:10: 5.4:9; 10
திருப்பாவை. 2
நாச். திரு. 2:3, 5:7
பெரி. திரு. 1.6:6: 1.6:9:
1.8:2; 3.5:2; 4.10:4;
5.4:2; 5.6:1; 5.7:6;
7.1:3; 7.3:6; 7.4:7;
7.8:1; 8.9:2; 8.10:7;
9.6:2; 9.9:1; 10.1:3;
11.5:9
திருநெடுந். 9, 15

13. திருநாடு : முதல். திருவந். 68, 77
மூன். திருவந். 61
நான். திருவந். 95
திருச்சந்த. 48
திருவிருத். 35
பெரி. திருவந், 68
திருவாய். 3.10:5: 4.4:1;
5.3:9; 6.9:5: 8.2:8;
9.8:7; 10.7:3
பெரியாழ். திரு. 3.6:3;
4.7:9; 5.4:10
பெரி. திரு. 7.3:5

**குறிப்பு :** பிருந்தாவனம், கோவர்த்தனம் என்ற இரண்டு திவ்விய தேசங்கட்கு ஆழ்வார்களின் மங்களா

சாசனம் உள்ளது. ஆனால் திவ்விய கவியின் 108 திருத்தலங்களில் இவை சேர்க்கப் பெறவில்லை. ஆனால் **பிருந்தாவனத்தில் கண்ணன்** (கட்டுரை) என்ற ஒரு கட்டுரை இந்நூலில் சேர்க்கப் பெற்றுள்ளது. அதில் பிருந்தாவனம், கோவர்த்தனம் பற்றிய பாசுரங்கள் விளக்கம் பெறுகின்றன. இவை இரண்டையும் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் நேரில் சேவித்தவை.

# பின்னிணைப்பு—2

## 108. வைணவத்திருத்தலங்கள்

ஈரிருப தாம்சோழம்; ஈரொன்ப தாம்பாண்டி;
ஓர்பதின்மூன் றாம்மலைநாடு ஓரிரண்டாம்—சீர்நடுநா(டு)
ஆறோ(டு) ஈரெட்டுத் தொண்டை, அவ்வடநா(டு)
கூறுதிரு நாடகக் கொள்[1] [ஆறிரண்டு

—பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்

### சோழநாட்டுத் திருப்பதிகள் —40

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையி
லேணாட்டுப் பெண்ணை இருபத்து நான்காதம்
சோணாட்டுக் கெல்லைஎனச் சொல்[2]

1. திருவரங்கம் பெரிய கோயில்
2. திருவுறையூர்
3. திருத்தஞ்சை
4. திருவன்பில்
5. திருக்கரம்பனூர்
6. திருவெள்ளறை
7. திருப்புள்ளம் பூதங்குடி
8. திருப்பேர் நகர்
9. திரு ஆதனூர்
10. திருவழுந்தூர்
11. திருச்சிறு புலியூர்
12. திருச்சேறை
13. திருத்தலைச் சங்க நாண் மதியம்
14. திருக்குடந்தை
15. திருக்கண்டியூர்
16. திருவிண்ண நகர்
17. திருக்கண்ணபுரம்
18. திருவாலி
19. திருநாகை
20. திருநறையூர்
21. திருநந்திபுர விண்ணகரம்
22. திருவிந்தளூர்
23. திருச்சித்திரகூடம்
24. திருக்காழிச் சீராம விண்ணகரம்
25. திருக்கூடலூர்
26. திருக்கண்ண மங்கை

---

1. நூற். திரு. அந். 6

2. ஒரு பழம் பாடல்.

27. திருக்கண்ணங்குடி
28. திருக்கவித்தலம்
29. திருவெள்ளியங்குடி
30. திருமணி மாடக் கோயில்
31. திரு வைகுந்த விண்ணகரம்
32. திரு அரிமேய விண்ண கரம்
33. திருத்தேவனார் தொகை
34. திருவண் புருடோத் தமம்
35. திருச் செம்பொன் செய்கோயில்
36. திருத்தெற்றியம் பலம்
37. திருமணிக் கூடம்
38. திருக்காவளம்பாடி
39. திருவெள்ளக்குளம்
40. திருப்பார்த்தன் பள்ளி

குறிப்பு: 30—40 (11 திருத்தலங்கள்) "திருநாங்கூர்த் திருப்பதிகள்" என வழங்கப்பெறும்.

### பாண்டி நாட்டுத் திருப்பதிகள்—18

**வெள்ளா ரதுவடக்கா மேற்குப் பெருவழியாம்**
**தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளாரா**
**வாண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்**
**பாண்டிநாட் டெல்லைப் பதி.[3]**

1. திருமாலிருஞ்சோலை மலை
2. திருக்கோட்டியூர்
3. திருமெய்யம்
4. திருப்புல்லாணி
5. திருத்தண்காலூர்
6. திருமோகூர்
7. திருக்கூடல்
8. ஸ்ரீவல்லிபுத்தூர்
9. திருக்குருகூர்
10. திருத்தொலை வில்லி மங்கலம்
11. ஸ்ரீவரமங்கை
12. திருத்தென் திருப்பேரை
13. ஸ்ரீவைகுண்டம்
14. திருப்புளியங்குடி
15. திருவரகுணமங்கை
16. திருக்குளந்தை
17. திருக்குறுங்குடி
18. திருக்கோளூர்

3. ஒரு பழம் பாடல்

## மலைநாட்டுத் திருப்பதிகள்—13

**வடக்குத் திசைபழநி வான்கீழ் தென்காசி**
**குடக்குத் திசைகோழிக் கூடாம்—கடற்கரையில்**
**ஓரமோ தெற்காகும் உள்ளெண் பதின்காதம்**
**சேரநாட்டிற் கெல்லையெனச் செப்பு.**[4]

1. திருவனந்தபுரம்
2. திருவெண்பரிசாரம்
3. திருக்காட்கரை
4. திருமூழிக்களம்
5. குட்டநாட்டுத் திருப்புலியூர்
6. திருச் செங்குன்றூர்
7. திருநாவாய்
8. திருவல்லவாழ்
9. திருவண் வண்டூர்
10. திருவாட்டாறு
11. திருவித்துவக்கோடு
12. திருக்கடித்தானம்
13. திருவாறன் விளை

## நடுநாட்டுத் திருப்பதிகள்—2

1. திருவயிந்திபுரம்
2. திருக்கோவலூர்

## தொண்டை நாட்டுத் திருப்பதிகள்—22

**மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்**
**ஆர்க்கும் உவரி அணிகிழக்குப் —பார்க்குளுயர்**
**தெற்குப் பினாகி திகழிரு பதின்காதம்**
**நற்றொண்டை நாடெனவே நாட்டு.**[5]

1. திருக்கச்சி-அத்திகிரி
2. திருஅட்டபுயகரம்
3. திருத்தண்கா
4. திருவேளுக்கை
5. திருப்பாடகம்
6. திருநீரகம்
7. திருநிலாத்துண்டம்
8. திருவூரகம்
9. திருவெஃகா
10. திருக்காரகம்
11. திருக்கார்வனம்
12. திருக்கள்வனூர்
13. திருப்பவள வண்ணம்

---

4. ஒரு பழம் பாடல்

5. ஒரு பழம் பாடல்

14. திருபரமேச்சுர விண்ணகரம்
15. திருப்புட்குழி
16. திருநின்றவூர்
17. திருஎவ்வுளூர்
18. திருநீர்மலை
19. திருஇட எந்தை
20. திருக்கடல் மல்லை
21. திருவல்லிக்கேணி
22. திருக்கடிகை

## வடநாட்டுத் திருப்பதிகள்—12

1. திருவேங்கடம்
2. திருச்சிங்கவேள் குன்றம்
3. திருஅயோத்தி
4. திருநைமிசாரணியம்
5. திருச்சாளக் கிராமம்
6. திருவதரியாச்சிரமம்
7. திருக்கங்கைக் கரைக் கண்டம்
8. திருப்பிரிதி
9. திருவடமதுரை
10. திருத்துவாரகை
11. திருவாய்ப்பாடி
12. திருப்பாற்கடல்

## திருநாட்டுத் திருப்பதி—1

1. திருநாடு

இதுவே வைகுந்தம்; பரமபதம். திருமாலின் ஐவகை நிலைகளுள் பரத்துவம் விளங்கும் தானம்.

**குறிப்பு :** இந்த 108 திருப்பதிகளைப் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் குடும்பத்துடன் சேவித்து 1. வட நாட்டுத் திருப்பதிகள். 2. தொண்டைநாட்டுத் திருப்பதி கள், 3. பாண்டிநாட்டுத் திருப்பதிகள், 4. மலைநாட்டுத் திருப்பதிகள், 5. சோழநாட்டுத் திருப்பதிகள் (பகுதி-1) 6. சோழநாட்டுத் திருப்பதிகள் (பகுதி-2) என்ற 6 நூல் களை வெளியிட்டுளார். இவற்றில் திருப்பதிகதிகள் செல்லும்வழி, திருப்பதிகளில் தங்கும் வசதிகள், ஆழ்வார் பாசுரங்களின் அநுபவம், ஆங்காங்கே ஒரு சில வைணவத் தத்துவக் கருத்துகள் முதலியவை விளக்கப்

பெற்றுள்ளன. திருத்தலப் பயணிகட்கும் ஆழ்வார் பாசுரங்களை அநுபவிக்க விரும்புபவர்கட்கும் பயன்படும் நூல்கள் இவை. இறையநுபவம் வேண்டுவார்க்குச் சிறந்த கையேடுகள். பயணம் செய்ய வாய்ப்பு இல்லாதவர்களும் இருந்த இடத்திலிருந்து கொண்டே கற்பனையாகப் பயணம் செய்வது போன்ற அநுபவமும் இறையநுபவமும் ஒருங்கே பெறலாம்.

## பேராசிரியர்

## டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுத நூல்

**இலக்கியம் :**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியத்தில்—அறம், நீதி, முறைமை
18. புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்:ஒரு கண்ணோட்டம்)
19. பாவேந்தர் -பாரதிதாசன்: ஒரு கண்ணோட்டம்
20. திருக்குறள் தெளிவு

**சமயம், தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள் :**

21. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
22. சிலநோக்கில் நாலாயிரம்
23. வைணவமும் தமிழும்
24. சைவ சமய விளக்கு
25. ஆன்மிகமும் அறிவியலும்
26. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
27. கலியன் குரல்
28. கீதைக் குறள் (பதிப்பு)
29. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
30. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
31. கீதைப் பொழிவுகள்
32. கண்ணன் துதி
33. இராமர் தோத்திரம்

**(ஆ) திருத்தலப் பயண நூல்கள் :**

34. மலைநாட்டுத் திருப்பதிகள்
35. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
36. பாண்டி நாட்டுத் திருப்பதிகள்
37. வடநாட்டுத் திருப்பதிகள்
38. சோழநாட்டுத் திருப்பதிகள் -முதற் பகுதி (த. அ. ப. பெற்றது)
39. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (ஷை)
40. தம்பிரான் தோழர்
41. நாவுக்கரசர்
42. ஞானசம்பந்தர்
43. மாணிக்கவாசகர்

**திறனாய்வு :**

44. பாட்டுத் திறன்
45. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
46. அகத்திணைக் கொள்கைகள்
47. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
48. கண்ணன் பாட்டுத் திறன்
49. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
50. பாரதியம் (த. அ. ப. பெற்றது)
51. குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு
52. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
53. ஆழ்வார்கள் ஆரா அமுது
54. விட்டு சித்தன் விரித்த தமிழ்
55. பரகாலன் பைந்தமிழ்
56. சடகோபன் செந்தமிழ்
57. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை.
58. பாவேந்தரின் பாட்டுத்திறன்

**வரலாறு, தன் வரலாறு :**


59. நினைவுக் குமிழிகள் - முதற் பகுதி
60. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
61. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
62. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
63. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
94. வேமனர்
65. குரஜாட
66. சி. ஆர். ரெட்டி
67. தாயுமான அடிகள்
68. பட்டினத்தடிகள்
69. வடலூர் வள்ளல்
70. பிரதிவாதி பயங்கரம்
71. மலரும் நினைவுகள்

அறிவியல் :


72. மானிட உடல்
73. அணுவின் ஆக்கம்
74. இளைஞர் வானொலி
75. இளைஞர் தொலைக்காட்சி
76. அதிசய மின்னணு
77. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
78. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
79. அம்புலிப் பயணம்
80. தொலை உலகச் செலவு
81. அணுக்கரு பௌதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
82. இல்லற நெறி
83. வாழையடி வாழை
84. அறிவியல் விருந்து (தமிழ் வள. கழ. பரிசு பெற்றது)
85. தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும்
86. வானமண்டலக் காட்சி

ஆராய்ச்சி :

87. கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி
88. வைணவச் செல்வம் (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)
89. வடவேங்கடமும் திருவேங்கடமும்
90. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
91. Studies in Arts and Sciences : (61st Birth Day Commemoration : Volume)
92. Collacted Papers.




வேங்கடம் வெளியீடுகள்
AD-13 (PLOT. 3354)
அண்ணா நகர் – சென்னை-600 040



**VENKATAM PUBLICATIONS**
AD-13 (PLOT. 3354)
ANNA NAGAR - MADRAS-600 040.

# இந்நூலாசிரியரைப் பற்றி. . .



பிறப்பு : 27 - 8 - 1916

75-அகவையைக் கடக்கும் இந்த நூலாசிரியர் பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி. ஏ., எம்.ஏ., பிஎச். டி., பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும், (1941-1950), பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950-60), பதினேழு ஆண்டுகள்திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும், (1960-77) பணியாற்றி ஓய்வுபெற்றவர். 1978-இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 பிப்ரவரி-1979 ஜூன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச். டி.) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம்பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (15), சமயம் (23), திறனாய்வு (15), அறிவியல் (16), ஆராய்ச்சி (6), வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு (13)—என்று 93 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழகஅரசு பரிசுகளும்; அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசும்-ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் பண்ணுருட்டி வைணவ சபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீசடகோபன் பொன்னடி' என்ற விருதையும் இவர்தம் தமிழ்ப் பணியைப் பாராட்டித் தமிழக அரசு திரு. வி. க. விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.